கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

ஓம்

# சைவநீதி

## SAIVANEETHI



ஈழத்துத் திருத்தலம்

பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் ஆலயம்
Pannalai Varaththalam KatpakaVinayagar Temple

கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

பொங்கல் விழா மலர்-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Real Estate Purchase, Sale, Mortgage
காணி, நிலம், வீடு வாங்குதல், விற்றல், அடமானம் வைத்தல்

Family Law - Divorce, Separation
குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து பிரிவு

Business - Purchase, Sale, Incorporation
வர்த்தக ஸ்தாபனம் கொள்முதல், விற்பனை

Immigration - Refuge Matters, Sponsorship, Appeal
குடிவரவு அகதி விவகாரம், உறவினர் சேர்க்கை, மேன்முறையீடு

Power of attoney - Affidavits, Statutory Declarations, Last Will
தத்துவப் பத்திரம் சத்தியக்கடுதாசி, உயில்

**இலங்கை, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்று கனடாவிலும் சட்டவல்லுனராகப் பயிற்சி பெற்று பதிவு பெற்ற தமிழ் வழக்கறிஞர்.**

**தி. ஜெகதீசன்**

Barrister, Solicitor and Notary Public (ONTARIO)

**Tel: Off: 416 - 266 - 6154 | Res: 416 - 449 - 0358 | Fax: 416 - 266 - 4677**
**2620 Eglinton Ave. E., # 201 Scarborough, On., M1K 253**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே சிவம்

# சைவநீதி



## கனடா இந்து மாமன்றம்
## CANADA HINDU MAAMANTRAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம். வருக! இதுவே நுழைவாயில்! சென்று பொருள் கொணர்க!

## பொருட் பதிவேடு

| பொருள் | தருநர் | பக்கம் |
|---|---|---|
| 1. பஞ்சபுராணம் | | 1 |
| 2. தலைவர் செய்தி | திரு. தம்பையா ஸ்ரீபதி | 3 |
| 3. செயலாளர் செய்தி | திரு. வே.நந்தீஸ்வரர் | 5 |
| 4. மலராசிரியர் குரல் | திருமதி. மனோன்மணி தனபாலசிங்கம் | 7 |
| 5. பன்னாலை - வரத்தலம் அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயம் | பண்டிதர் சி.அப்புத்துரை | 9 |
| 6. தமிழன் கண்ட முருகன் | திரு. மா.க.ஈழவேந்தன் | 13 |
| 7. Holy Servants of Lord Siva | Dr. Shan A. Shanmugavadivel | 21 |
| 8. மூவர் தமிழ் | முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் | 22 |
| 9. தமிழ் மாலை | திரு. நா.க.சிவராமலிங்கம் | 29 |
| 10. தயாமூலதன்மம் | மைதிலி தயாநிதி | 31 |
| 11. An Analysis on Radhakrishnan's Ideas on World | Prof.N.Gnanakumaran | 35 |
| 12. இறைவழிபாடும் இளையோர் மேம்பாடும் | விமலா பாலசுந்தரம் | 41 |
| 13. கவலைக்கு மருந்து | கவிஞர் கந்தவனம் | 45 |
| 14. மாணிக்கவாசகரும், அவர் பாடியருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் | கலாநிதி.எஸ்.சிவநாயகமூர்த்தி | 51 |
| 15. God As Guru | Dr. K. Ganesalingam | 55 |
| 16. இறையருள் | பசுந்தீவு கோவிந்தன் | 59 |
| 17. "சிவன்" எனும் சிந்தனை | கலாநிதி நா.சுப்பிரமணியன் | 62 |
| 18. சைவ சமய நூல்கள் நல்கும் நன்னெறி | திருமதி. மங்களாம்பாள் பரஞ்சோதி | 67 |
| 19. மாரியம்மன் வழிபாடு | திரு. துரை நமசிவாயம் | 70 |
| 20. Destiny, Simply Explained | Palendira Swaminathan | 73 |
| 21. திருமந்திரம் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள் | திருமதி. கலையரசி சின்னையா | 75 |
| 22. ஆலயமும் பிரார்த்தனையும் மனிதப் பிறவியின் உயர் நோக்கத்தை நிறைவு செய்கின்றன | சாம்பசிவ-சோமாஸ்கந்த குருஜி | 80 |
| 23. அரசனும் ஆண்டியும் | திரு.குமார் புனிதவேல் | 85 |
| 24. A Different Perspective on Hindu Religious Sects By T.M.P.Mahadevan – A Critical Analysis | T. Selvamanoharan | 88 |
| 25. சிவனே முழுமுதற் கடவுள் | திரு.தில்லையம்பலம் சிவயோகபதி | 92 |
| 26. மார்கழி மாதம் மங்கையர் மாதம் | திரு.சி.நம்பியாரூரன் | 95 |
| 27. Maari: The Goddess of Infectious Diseases and Drought | Dr. Bala Sivakadadcham | 98 |
| 28. வைகுந்த ஏகாதசி | அமிர்தி புவனேந்திரா | 100 |
| 29. சேக்கிழார் தமிழ் | நீலா நகுலேசபிள்ளை | 103 |
| 30. இந்து மதமும் இன்தமிழ் மொழியும் நின்று நிலைக்குமா? | திரு.கனக மனோகரன் | 108 |
| 31. தொல்காப்பியர் காலச் சமயமும் அதன் படிமுறை வளர்ச்சியும் | செல்வநாயகி ஸ்ரீதாஸ் | 114 |
| 32. மாணவர் ஆக்கங்கள் | | 122 |
| 33. 2015 Kids Contest Winners | | 134 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

* திருமணம்
* திருமணப் பதிவு
* கடைதிறப்பு வைபவம்
* புண்யாக வாசனம்
* பூப்புனித நீராட்டுவிழா
* பூமாலை
* ஆண்டாள் மாலை
* சடைநாகம்
* தலை நகை முழுவதும்



* முத்து மணவறை
* தலைப்பாகை
* பந்தல் அலங்காரம்
* கல்யாண பூசைப் பொருட்கள்
* முத்துச் சப்பரம்
* ஆலயத் திருவிழா
* ஆலய வைபவங்கள்

ஆகிய அனைத்துக்கும் எப்போதும் எம்முடன்
தொடர்புகொள்ளுங்கள் - **Tel: 416 266 3333**

**628 E Birchmount Road, Scarborough, Ontario. M1K 1P9**

ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய
தொலைபேசி இலக்கம் 416 291 8500


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# பஞ்சபுராணம்

**தேவாரம் :**

அந்தணா ளனுன் அடைக்கலம் புகுத
அவரைக் காப்பது காரணமாக
வந்த காலன் தன் ஆருயிரதனை
வவ்வினைக் குன்றன் வன்மை கண்டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன் மற் றென்னடி யாயென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும் பொழில்திருப் புன்கூருளானே!

**திருவாசகம் :**

ஆடுகின்றிலை கூத்துஉடையான் கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாத மலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை துணை இலி பிண நெஞ்சே!
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை செய்வது ஒன்று அறியேனே.

**திருவிசைப்பா :**

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தரு திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியுங் கொன்றையுந்
துன்னு பொற் குழல்திருச் சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரி கின்ற
தவள வண்ணனை நினைதொறு மென்மனம்
தழல் மெழு கொக்கின்றதே.

**திருப்பல்லாண்டு :**

நிட்டையிலா உடல் நீத்தென்னை ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டும் திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த்திக்கு என்அகம் நெகஊறும் அமிர்தினுக்கு ஆலநிழற்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

**திருப்புராணம் :**

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லை வந்தருளி யென்னை வழித் தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக் கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி என்ன.

**திருப்புகழ் :**

இருவினையின் மதிம யங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே.

(திருச்சிற்றம்பலம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

## SRI GANESHA DURGA TEMPLE OF MISSISAUGA



**தேவஸ்தானம் திறந்திருக்கும் நேரம் வாரத்தில் ஏழு நாட்களும்**

காலை 9.00 மணிமுதல் பகல் 1.00 மணிவரை
மாலை 6.00 மணிமுதல் - 9.00 மணி வரை

**பூஜை நேரங்கள்**

காலை : 10.00 மணி
பகல் : 12.00 மணி
மாலை : 7.00 மணி

**விசேட தினங்களில் பூஜை நேரம் மாற்றி அமைக்கப்படும்.**

ஆலயத்தில் திருமணங்கள், கணபதி ஹோமம், நவக்கிரக சாந்தி, சர்ப்ப சாந்தி, பிதிர் தர்ப்பணம் என்பவற்றை நிறைவேற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும். மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:
ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர், சிவாகம கிரியா பூஷணம் சிவஸ்ரீ
பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள் (ராஜன் குருக்கள்)
(கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு, புங்குடுதீவு -10ம் வட்டாரம்)
(ஆலயப் பிரதம குரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர், அறங்காவலர் சபை)

**7220 Tranmere Drive, Mississauga, On., L5S 1L6**
Tel: 905 405 0011/ 905 501 0011
ganeshadurga@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் செய்தி

## நினைவு நல்லது வேண்டும்!

அண்மைக் காலங்களில் பல நாடுகளிலும் மதத்தின் பெயரால் பல அசம்பாவிதமான செயல்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதனை செய்திகளிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இன்னும் பல ஊடகங்கள் மூலமாகவும் பார்த்தும், படித்தும் மனம் மிகவும் வேதனை கொள்கிறது. உலகம் முன்னேற்றப் பாதையில் நாகரீக வளர்ச்சியில் உயர்ந்து செல்லுகின்றது என்று பேச்சளவில்தான் இருக்கின்றது. ஆனால், நடைமுறையில் அப்படியாகத் தெரியவில்லை.

மதம் என்பது இரண்டு பொருள்களைக் குறிக்கும். ஒன்று ஆணவம். மற்றையது கருணை. கருணையை ஆணவம் வென்றதாக வரலாறு இல்லை. எனவே, மதம் என்பது கருணையின் மறுபெயர். இந்து மதம் மட்டுமல்ல, எல்லா மதங்களினதும் அடிப்படைத் தத்துவம் இதுதான். ஆணவத்தின் ஒரு பக்கம் கேலி. அதன் விளைவுதான் அண்மையில் பாரிஸ் நகரத்தில் நடந்த அனர்த்தம். கருத்துச் சுதந்திரத்தினைப் பேணுவதற்காக உலகத் தலைவர்கள் கைகோர்த்து நடந்ததைப் பாரீசில் கண்டோம். ஆனால், கருத்துச் சுதந்திரத்தின் பெயரால் மதங்களைக் கேலிசெய்வதையும், அவமரியாதை செய்வதையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று, அன்றைய தினம் கலந்துகொண்ட தலைவர்களில் யாரும் ஒருவராவது கைநீட்டிச் சொன்னதைப் பார்க்கவும் இல்லை; கேட்கவும் இல்லை. எங்கு சுதந்திரம் இல்லையோ அதனைப் பெறுவதற்காகப் போராடுவதும், எங்கு சுதந்திரம் இருக்கின்றதோ அதனை அங்கு மதித்து நடக்க வேண்டும் என்பதனையும் நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இதைத்தான் சமயங்கள் எல்லாம் நமக்கு சமயம் கிடைக்கும்போதெல்லாம் எடுத்துச் சொல்கின்றன.

"கருணை பொங்கும் உள்ளம் அது கடவுள் வாழும் இல்லம்
கருணை மறந்தே வாழ்கின்றான் கடவுளைத் தேடி அலைகின்றான்" - கண்ணதாசன்

சுபம்

தம்பையா ஸ்ரீபதி
கனடா இந்து மாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் செய்தி

1994ஆம் ஆண்டு கனடா இந்துமாமன்றம் ஆரம்பிக்கப்பட்டு, இன்று இருபத்தோராவது ஆண்டில் காலடி வைத்துள்ளோம். சைவசமயத்தையும், தமிழ் மொழியையும் இளம் சமுதாயத்தினர் மத்தியில் புத்துணர்வுடன் கொண்டுவருவதற்காக வருடாவருடம் பண்ணிசை, சமயப் பேச்சுப் போட்டிகள், சமய அறிவுப் போட்டிகள் நடாத்தி, மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி, ஊக்குவித்து வருகிறோம். இந்த வகையில், கனடா இந்து மாமன்றம் “சர்க்கரைப் பொங்கல்” விழாவை இனிய சுவையுடன் இன்று உங்களுக்குத் தருகிறது.

இன்றைய விழாவில் நாம் உலகெங்கும் சைவமும் தமிழும் நீதியும் தழைத்தோங்க “சைவநீதி” எனும் மலரை வெளியிடுகிறோம். இம்மலரை, கடந்த இருபது ஆண்டுகளாக வெளியிட்டுவருகிறோம். சரித்திரப் பிரசித்திபெற்ற ஆலயங்களின் கோபுரங்கள், இம்மலரின் முன் அட்டையை அலங்கரித்து வருகின்றன. இம்முறை, பன்னாலை வரத்தலம் அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய கோபுரம் முன் அட்டையில் இடம் பெறுகிறது. இம்மலரில் பல சைவப் பெரியார்களால் தமிழ், ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட பல கட்டுரைகளை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறோம். இக்கட்டுரைகளை வீடுகளில் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு வாசித்து, அவற்றில் உள்ள விடயங்களைச் சொல்லிக் கொடுக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் நாள் நடாத்தப்பட்ட சமயப் போட்டிகள், பேச்சு, பண்ணிசைப் போட்டிகளில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றி சிறப்பித்தார்கள். இன்றைய தினம், நாம் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், பங்குபற்றிய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கிறோம்.

இன்றைய விழாவில் பிரதம விருந்தினராக டாக்டர் பொன் சிவாஜி அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக றொறன்ரோ மாநகரசபை உறுப்பனர் ஜிம் கரிஜியானிஸ் அவர்களும், றொறன்ரோ பாடசாலைகள் சபை உறுப்பினர் பார்த்தீபன் கந்தவேல் அவர்களும் கலந்து சிறப்பிப்பது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது.

பெற்றோர்களாகிய நீங்கள் செய்யும் இறைபணி இந்த நாட்டில் எமது சமயம், கலை, கலாச்சாரங்கள் தழைத்தோங்க வழிசெய்யும் என நம்புகிறோம்.

இவ்வினிய “சர்க்கரைப் பொங்கல்” விழாவை சிறப்புடன் நடாத்த உதவிய அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

உங்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்.

வே.நந்தீஸ்வரர்
கனடா இந்து மாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் ஆற்றல் மிக்க
சட்டத்தரணி

# தம்பையா சிறீபதி

கனடிய வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு

# Thampiah Sripathy

Barristers, Solicitors & Notaries Public

- குடிவரவுச் சட்டம், அகதி மனுக்கள், ஸ்பொன்சர், மேன்முறையீடுகள்
- காணிகள், வீடுகள் வாங்குதல் - விற்றல், ஈடுகள் பதிதல்
- வியாபர ஸ்தாபனங்கள் பதிவுசெய்தல், வாங்குதல்
- குடும்பச் சட்டம் சம்பந்தமான விடயங்கள், விவாகரத்து, பராமரிப்பு, பாதுகாவல்
- குற்றவியல் சட்டம் சம்பந்தமான விடயங்கள்
- தத்துவப் பத்திரங்கள், இறுதி விருப்பாவணங்கள், சத்தியப் பத்திரங்கள் தயாரித்தல்

**Tel: 416.751.4500 Fax: 416.759.4510**
2425 Eglinton Ave. East, Suite 211
Toronto, Ontario. M1K 5G8
(Eglinton & Kennedy)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியர் குரல்

சைவத் தமிழ் அன்பர்கள், ஆதரவாளர்கள், சைவநீதி சஞ்சிகை வாசக அபிமானிகள் அனைவருக்கும் இந்து மாமன்றத்தின் சார்பில் பொங்கல் வாழ்த்தையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டும், பொங்கலும் மலரும்போது, சைவநீதி மலரும் மணம் கமழத் தொடங்கும். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கிணங்க, சீரிய சமய அறிவும், பழுத்த, ஆழ்ந்த அனுபவமும் மிக்க பெரியார்களின் கருத்துக்கள் நிறைந்த சஞ்சிகை சைவநீதி. சமயம் மனிதனுள் ஆழ்ந்து கிடக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்தும். எதிர்காலச் சந்ததியினரும் சமய உணர்வு உள்ளவர்களாக வளர்ந்து நல்லொழுக்கமுள்ள பண்பான வாழ்க்கைக் கோட்பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டும். சைவநீதி மலரைப் பெற்று எல்லோரும் பயன்பெறுவீர்களாக.

இறைவன் விரும்பி உறையும் உள்ளம் கள்ளம் கபடமற்ற தூய உள்ளமே. உலகில் யாருடைய இதயம் தயையுடன் கூடியிருக்கிறதோ, எவரது வாக்கு சத்தியத்தினால் அலங்கரிக்கப்படுகிறதோ, எவரது உடல் பிறர் நலனுக்காகச் சேவை செய்து உழைக்கின்றதோ அத்தகையவர்கள்தான் தூய உள்ளம் படைத்தவர்கள். இவர்களினால்தான் பல அறச் செயல்களைச் செய்ய முடியும். பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவது, பிறரின் துன்பத்தைக் கண்டு அவர்களின் துயர் துடைப்பது, ஏழை, எளியோர், நோயாளிகள், வயோதிபர்கள் எல்லோருக்கும் ஆதரவளிப்பது, அறிவுப்பசி கொண்டோருக்கு அறிவுத்தானம் வழங்குவது போன்றன எல்லாம் அறச் செயல்களாகும். எம்மால், இயன்றவரை பிரதிபலன் கருதாது செய்ய வேண்டிய இடங்களில் நமது கடமையைச் செய்து வருவது மனிதப் பண்பாகும். இவர்களிடத்தேதான் நாம் இறைவனைக் காணமுடியும்.

அழுக்காறு, அகந்தை, அவா, வெகுளி, சுயநலம் என்பன மனத் தூய்மையை மாசுபடுத்தும் காரணிகளாகும். கிணற்றில் நீர் நிறைந்திருக்கும்போது, பாதாளத்தில் இருக்கும் பொருட்கள் கண்ணிற்குப் புலப்படாது. நீரின் அளவு குறையும் போது, அடியில் இருக்கும் பொருட்கள் தெளிவாகத் தெரியும். மனதில் மாசு இருக்கும்வரை, இறைவனின் நினைவு மனதில் பதியாது. ஆதலால், அதனை அகற்றியே ஆகவேண்டும். உடலின் புற அழுக்கைப் போக்குவதற்கு நாங்கள் எத்தனையோ முயற்சிகளைச் செய்கின்றோம். அதேபோல மனத்தின்கண் உள்ள மாசையும், உலகப் பற்றுக்களையும் அகற்றுவதற்கு தினமும் காலையிலும், மாலையிலும் இறைவனை உள்ளன்புடன் வழிபாடு செய்துவரவேண்டும். அப்போது, அம்மாசு படிப்படியாகக் குறைந்து, இறைவனின் திருவருள் கிடைக்கப்பெறும். இதனால், இவ்வுலகில் எல்லாச் செல்வங்களையும் பெற்று, பெருவாழ்வு வாழ்வதோடு, மனிதப் பிறவியின் பயனாக பேரின்ப நிலையைப் பெறமுடியும். மனித வாழ்க்கையில் அகமும் புறமும் துக்கமும் கலந்துதான் வருகிறது. கஷ்டத்தில் இருக்கும்போதுதான் சுகத்தின் அருமை தெரியும்.

"நல்லகுருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல கொல்லவல்ல
பொல்லாப் பிணியைப் போக்கவே."

இது இறைவனால் நடாத்தப்படும் பரீட்சை. இறைவனின் கருணையை அறியாதவர்கள் அவரை நிந்திப்பதுண்டு. பாடசாலைகளில் பரீட்சைகள் வைத்து, அதில் தேர்ச்சியடைந்தால்தான் மாணவர்கள் மேல் வகுப்புகளுக்குச் செல்ல முடியும். இறைவனால் நடாத்தப்படும் பரீட்சையைக் கண்டு, துவண்டுவிடாமல், இறை வழிபாட்டில் ஈடுபட்டு மானிடப் பிறவியின் பயனைப் பெற்று உய்வோமாக.

சைவநீதி மலருக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, தொடர்ந்தும் பல கட்டுரைகளை அனுப்பி வைக்குமாறு அன்பர்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வாழ்க சைவநீதி! நன்றி. வணக்கம்.

திருமதி. மனோன்மணி தனபாலசிங்கம்
கனடா இந்து மாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



சர்க்கரைப் பொங்கல் இனிதே பொங்கட்டும்!

# யசோ சின்னத்துரை

கனடிய சட்டத்தரணி



2100 ELLSMERE ROAD, SUITE 202
(MARKHAM & ELLSMERE)
SCARBOROUGH,ON M1H 3B7

Tel: 416 265 3456
Fax: 416 265 2770

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னாலை - வரத்தலம்
# அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயம்

அட்டைப்படக் கட்டுரை

கலாபூஷணம் பண்டிதர் சி.அப்புத்துரை

## பூர்வீகம்

யாருடைய கவனிப்புமின்றி பன்னாலை வரத்தலம் என்னுமிடத்தில் நின்றதொரு வன்னிமர நீழலில் அமர்ந்திருந்த விநாயகரை, ஒரு மூதாட்டி நீண்டகாலம் தமக்குத் தெரிந்த முறையில் அர்ச்சித்து, வழிபட்டு வந்திருக்கின்றார். பெருமான் சந்நிதியிற் கண்ணப்பர் வழிநின்று, செய்யவேண்டிய, நடைபெற வேண்டிய கருமங்களையெல்லாம் குறையின்றி நிறைவு செய்துவந்த அந்த அம்மையார் 'கற்பகம்' என்னும் பெயரை உடையவர் என அறிகின்றோம். கற்பகம் என்னும் பெயரையுடைய அம்மையாரால் அர்ச்சிக்கப்பட்ட விநாயகர் 'கற்பக விநாயகர்' என அழைக்கப்பெற்றார் என்பதொரு கர்ணபரம்பரைக் கதை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

புராணங்களிற் கற்பகம் எனும் சொல் விநாயகர் என்னும் பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'பரங்கிரிவாழ் கற்பகம்' என்பது திருப்பரங்கிரிப் புராணத்திற் காணப்படும் ஒரு தொடர். தேவலோக கற்பக தரு போன்றதொரு நிலையை உணரவைக்கும் முறைமையைக் 'கற்பகம் என வினை கடிதேகும்' என்னும் திருப்புகழ் தொடர் எண்ண வைக்கின்றது. 'அற்புத நிறைந்த கற்பகக் களிறு' எனும் அகவற் பகுதியும் தில்லைவனக் கற்பகக் குஞ்சரம் எனும் சிதம்பர புராணப் பகுதியும், களிறு, குஞ்சரம் எனுஞ்சொற்கள் விநாயக பரத்துவத்தை அடையும்வகை 'கற்பகம்' முன்னே அடைமொழியாக்கப்பட்டதென்று உணரவைக்கின்றன.

மாருதப்புரவீகவல்லியால் அமைக்கப்பெற்ற இரண்டாவது அமைப்பு இதுவென வரலாறு கூறுகின்றது. இந்த இடத்து நின்றதொரு வன்னிமர நீழலில் ஆதியில் விநாயகர் பிரதிட்டை செய்யப்பட்டார் என அறிகின்றோம். இப்போதுள்ள கர்ப்பக்கிருகத்திற்குத் தென்கிழக்கில், மடைப்பள்ளிக்கு அண்மையாக இப்பொழுது நிற்கும் வன்னிமரத்திற்குப் பக்கலிலேயே அந்த வன்னிமரமும் நின்றுளது. காலப்போக்கில், அது பட்டுவிட்டதென்றும், புதியதொன்று முளைத்து வளர்ந்துள்ளதென்றுஞ் சொல்லுகின்றார்கள். வன்னிமர நீழலிலமர்ந்த விநாயகரை இப்போதுள்ள இடத்திற்கு மாற்றஞ் செய்தவர் யாரென்றோ, எப்போது மாற்றஞ் செய்யப்பட்டதென்றோ, ஏன் மாற்றஞ் செய்யப்பட்டதென்றோ தெரியவில்லை.

## வரத்தலப் பதி

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி அம்பனைச் சந்தியைக் கடந்து பிரதான வீதிவழியாக நானூறு மீற்றர்வரை செல்ல வீதியோரத்தில் வடக்குப்புறமாக ஒரு கிணறு இருக்கின்றது. அந்த இடத்தில் நின்று வடமேற்காக நோக்கின் வரத்தலப்பதி விநாயகராலயத்தைக் கண்டானந்திக்க முடியும். அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலிருந்து ஒரு சிறிய பாதை கோயிலை நோக்கிச் செல்கின்றது. கிணற்றடியிலிருந்து மேலும் இருநூறு மீற்றர்வரை மேற்கே செல்ல ஒரு அகலமான ஒழுங்கை வடக்குப்புறம் ஆலய மருங்கு செல்கின்றது. பன்னாலைக் கிராமசேவையாளர் பிரிவில் மருதநிலப் பாங்கரில் அமைந்திருக்கும் இந்த ஆலயம் பழம்பெருமை வாய்ந்தது.

## ஆலய அமைப்பு

கிழக்கு நோக்கியவாறமைந்திருக்கும் இந்த ஆலயம், கர்ப்பக் கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம், தம்ப மண்டபம், வசந்தமண்டபம் என்னும் மண்டபங்களை உடையது. மகாமண்டபத்தில், வடக்குப்புறத்தில் எழுந்தருளிக்கான அமைப்பு உண்டு. தம்ப மண்டபத்தில் மூஷிகம், பலிபீடம், கொடிக்கம்பம், என்பன அமைந்துள்ளன. கொடிக்கம்பத்தின் முன்னே மூலாதார கணபதியைப் பார்க்கின்றோம். வெள்ளிக் கவசத்தையுடைய கொடிக் கம்பத்தின் வடக்கில், அண்மையாக நவக்கிரகப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. பிரதான வாயிலில் 36 அடி உயரமான ஒரு வாயிலில் இராஜகோபுரம் கட்டப்பட்டுள்ளது. 21 அடி உயரமான மணிக்கோபுரம் இராஜகோபுரத்தின் வடக்கிலுள்ளது. மணிக்கோபுரத்தின் கீழ்ப்பகுதியில் நாகதம்பிரானும், அதற்கு வடக்கே சந்தான கோபாலரும், தெற்கே வைரவரும் எழுந்தருளுகின்றனர். உள்வீதியின் தென்கிழக்கில் மடைப்பள்ளி, களஞ்சிய அறை என்பனவும், வடகிழக்கில் வசந்த மண்டபம், யாகசாலை என்பனவும் அமைந்துள்ளன. திருமஞ்சனக் கிணறு கர்ப்பக்கிருகத்திற்கு வடகிழக்கில் அர்த்தமண்டபத்துக்கு அண்மையாக உள்ளது.

1872இல் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்பன கட்டப்பட்ட நிலையில், முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இந்த ஆலயத்தின் முதலாவது அர்ச்சகர் என இதுவரை கிடைத்த தகவல்கள் உணர்த்தும் பிரம்மஸ்ரீ ம.பிள்ளையார் பட்டர் இத்திருப்பணி வேலைகளுக்கும், முதற் கும்பாபிஷேகத்திற்கும் தலைமை தாங்கியுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இரண்டாவது கும்பாபிஷேகம் 1912இல் நடைபெற்றுள்ளது. இந்தியாவிலிருந்து வந்து வடலியடைப்பில் வாழ்ந்த பிரம்மஸ்ரீ அ.அருணாசல சாஸ்திரியார் இக்கும்பாபிஷேகத்திற்குத் தலைமைக் குருவாக இருந்திருக்கின்றார்கள். இந்தவேளை, தம்பமண்டபம், இராஜகோபுரம் என்பவற்றின் திருப்பணி வேலைகளும் நிறைவுற்றிருந்தன. 1956.07.09 ஆனி புநர்பூச நட்சத்திரத்தில் மூன்றாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. புத்தூர் சிவஸ்ரீ மார்க்கண்டேயக் குருக்கள் வைத்தியநாதக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெற்றுள்ளன. மீண்டும் நான்காவது முறையாகச் சுன்னாகம் சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் 1977.04.06 நள வருடம் பங்குனி மாதம் 24ஆம் நாள் சுவாதி நட்சத்திரத்தில் நடைபெற்றுள்ளது.

## கொடியேற்று விழா

10 அடி உயரமான கொடிக்கம்பம் 1914இல் அமைக்கப்பட்டது. ஆனால், ஆலய நிர்வாகத்திற்கும், உள்ளூரவர்களுக்குமிடையே தோன்றிய கருத்து வேறுபாடு காரணமான மனக்கசப்பினால், கொடியேற்றுவிழாவோ, உற்சவமோ நடைபெறவில்லை. தொடர்ந்து நைமித்திய விழாக்கள் நடைபெறுவதும் தடைப்பட்டது. அந்த ஆண்டில் மட்டும் ஒருமுறை மகோற்சவம் நடைபெற்றபின், தடை ஏற்பட்டதென்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துமுண்டு. 1997.09.02 பிங்கள வருடம் ஆவணி 17 வெள்ளிக்கிழமை இந்த ஆலய முதற் கொடியேற்றுவிழா புத்தூர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்களாலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## நைமித்திய விழாக்கள்

ஆவணி அமாவாசைத் தினத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு 12 தினங்கள் மகோற்சவம் நடைபெறும். பதினோராம் நாள் தேர்த்திருவிழா நடைபெறும். ஆவணி விநாயக சதுர்த்தி, ஐப்பசிச் சுக்கிரவாரங்கள், மார்கழித் திருவாதிரை, தைப்பூசம் ஆகிய வேளைகளிலும் சுவாமி வீதியுலா வருவதுண்டு. வருடப்பிறப்பு, ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனி, நவராத்திரி, விநாயக சஷ்டி, பெருங்கதை, திருவெம்பாவை, சிவராத்திரி என்னுங்காலங்களிலும் விசேட வழிபாடுண்டு. மகோற்சவ தீர்த்தத் தினத்தன்று நண்பகல் அன்னதானம் நடைபெறும் முறைமையுமுண்டு. இத்தேவையைக் கவனிக்கவென்று வைத்திலிங்கம் பொன்னையா தலைமையில் ஓரன்னதான சபை இயங்குகின்றது.

## மூர்த்திகள்

மூலமூர்த்தி விநாயகர் கருங்கல் விக்கிரகம். 18 தேவாங்குல உயரமுடையது. பத்மாசனத்தில் வீற்றிருப்பது போன்ற அமைப்பு. மாருதப்புரவீகவல்லியாற் பிரதிட்டை செய்யப்பெற்ற விக்கிரகம் பற்றிய விளக்கத்தைப் பெறமுடியவில்லை. பரிவார மூர்த்திகளாய வைரவர், நாகதம்பிரான், சந்தான கோபாலர், நவக்கிரகம் என்போருக்குத் தனித்தனி தூபிகளோடு கூடிய அமைப்புக்கள் உண்டு. கருங்கல்லில் வடிக்கப்பட்ட விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. பெரியதும் சிறியதுமான இரண்டு எழுந்தருளிகள், பஞ்சமுக விநாயகர் என்பன ஐம்பொன்னாலானவை.

## பக்தி இலக்கியம்

வரத்தலம் கற்பக விநாயகர் திருவூஞ்சற் பாடல்களை மேற்படி ஆலய ஆதீன முதல்வராய வித்துவான் பிரம்மஸ்ரீ சபாபதி ஐயர் சிவானந்தையர் அவர்கள் வேண்டுகோட்படி, அளவெட்டி வேலுப்பிள்ளை கனகசபைப் புலவர் பாடியுள்ளார்கள். சைவசித்தாந்தத்துட்பொருளைப் பொதிந்து, காப்புச் செய்யுளுடன் பதினொரு பாடல்களைக் கொண்ட இத்திருவூஞ்சலைப் பாடிய புலவர், சைவச் சூழலில் பிறந்து, சைவச் சூழலில் வாழ்ந்த கத்தோலிக்கராவர்.

அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்கள் பாடிய வரத்தலம் ஸ்ரீ கற்பக விநாயகர் திருப்பதிகம், காப்புச் செய்யுளுடன் பதினொரு பாடல்களையுடையது. கவிஞர் செல்லையா கதிரேசர்பிள்ளை இயற்றிய வரத்தலப்பதி ஸ்ரீ கற்பக விநாயகர் இரட்டை மணிமாலை, காப்புச் செய்யுளுடன் இருபத்தொரு பாடல்களை வெண்பாவுங் கட்டளைக் கலித்துறையுமாகக் கொண்டுள்ளது. அருட்கவி சீ.விநாசித்தம்பி பாடிய வரத்தலம் ஸ்ரீ கற்பக விநாயகர் பரத்துவமாலை, காப்புச் செய்யுளுடன் முப்பத்தேழு பாடல்களையுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cash Point®
The Buck Starts Here!

WORLDWIDE MONEY TRANSFERS

CURRENCY EXCHANGE CHEQUE CASHING

TEL: 416 284 7000
FAX : 416 284 4562

3852 Finch Ave. E.

Scarborough ON M1T 3T9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் கண்ட முருகன்

மா.க.ஈழவேந்தன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் (இலங்கை)
நாடுகடந்த தமிழீழ அரசின் கனடாப் பேராளர்

## ஏதுக்களால், எடுத்துரைக்க முடியாதவன் இறைவன்



ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கு சோதித்தாலும் எளிதில் அகப்படாதவன் ஆண்டவன். அவனை இன்ன தன்மையன், இந்நிறத்தவன், இவ்வண்ணத்தன் என்று எழுதிக்காட்ட முடியாது. இத்தகைய இறைவனுக்கு ஒரு நாமமோ ஒரு உருவமோ இல்லை. எனினும் வாழையடி வாழையாக வந்த அடியார் திருக்கூட்டம் அவனுக்குப் பல பெயர் சூட்டியும் பல வடிவம் அமைத்துமே அமைதியும் உள்ள நிறைவும் பெற்றுள்ளனர். இப்பேருண்மையைத் தான் தேன் கலந்த வாசகம் தந்த வான் கலந்த மணிவாசகர்.

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்று பாடி இன்பம் காண்கிறார். ஆயிரம் திருநாமம் பாடி அமைதி காண்போம்.

## ஆயிரம் திருநாமம் பாடி அமைதி காண்போம்

ஒரு உருவமோ ஒரு வடிவமோ ஒரு பெயரோ அற்ற இதே இறைவன் தான் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் நோக்குடன் அடியவர்கள் வேண்டும் வடிவிற் சூட்டும் பெயரில், காட்சியளித்து அருள்புரிகிறான். இதை "நானாவித உருவாய் நமையாள்வான்", "பல பல வேடம் ஆகும் பரதன் தாரிபாகன்" என்று தேவாரப்பாடல்கள் தெரிவிக்கின்றன.

## முருகன் உணர்த்தும் பொருள்

எம் ஆண்டவன் பூண்ட வடிவங்களுள் முருகன் வடிவமும் ஒன்றாகும். இந்த வடிவம் தனிச்சிறப்பு வாய்ந்தது. தமிழரின் தனியுடைமையாக அன்று தொட்டு இன்றுவரை நிலவுகிறது. முருகன் தமிழனின் தனித் தெய்வமாக விளங்குகிறான் என்பதற்குத் தமிழகத்தில் முருகன் கோயில்கள் பல இருப்பதுபோல், இந்தியத் துணைக் கண்டத்தின் ஏனைய பகுதிகளில் பரவாது இருப்பது சான்றாய் விளங்குகின்றது. அத்துடன் முருகன் என்ற பெயரும் தூய தமிழ்ப் பெயராகும். இதில்வரும் முருகு எனும் சொல் அழகு, இளமை, தெய்வீகத் தன்மை போன்ற பொருட்களைக் குறித்து நிற்கின்றது. முருகன் என்றும் இளையவனாய், அழகனாய் விளங்குகிறான் என்பதையே "என்றும் இளையாய் அழகியாம் ஏறூர்ந்தான் ஏறே" என்று நக்கீரர் தன் திருமுருகாற்றுப்படையில் நயம்பட நவில்கிறார். அவர் கூற்றுக்கு வழிமொழி கூறுவதுபோல் "ஆயிரம் கோடி காமர் அழகெலாம் திரண்டு ஒன்றாக மேயினை எனினும் செவ்வேள் விமலாம் சரணம் தன்னில் தூயநல் எழிலுக்கு ஆற்றாது" என்று கச்சியப்பர் தனது கந்தபுராணத்தில் கழறுகிறார்.

## முருகனின் ஏனைய செந்தமிழ்ப் பெயர்கள்

மற்றும் முருகனுக்கு வழங்கப்படும் ஏனைய செந்தமிழப் பெயர்களாகிய வேள், குழகன், சேயோன், ஆறுமுகன்,பன்னிருகையன், சேவற்கொடியோன், மயிலூர்தி, வள்ளிமணாளன், குருபெயர்க்குன்றன், குன்றோன், சூர்மார்ப்படிந்தோன், குன்றத் திருமால், பிள்ளைப்பெருமாள், நல்லபெருமாள், ஆகிய பெயர்கள் தமிழுக்கும் அவனுக்கும் உள்ள நெருங்கிய உறவை உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேர் பொன்.அருணாசலம் அறையும் கருத்து

வேறு சொற்களில் விளம்பின் தமிழ்ச் செல்வாக்கு எங்கெல்லாம் நிலவுகிறதோ, அங்கெல்லாம் முருகனுக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டுப் போற்றப்படுகின்றான். முருகன் தமிழ் இனத்தின் தமிழ்மொழியின் தமிழ் இலக்கியத்தின் காவலனாக கனிந்த அன்போடு போற்றிப் புகழப்படுகிறான். இதை ஈழத்து மூத்த அறிஞர்களில் ஒருவரான சேர்.பொன்.அருணாசலம் அவர்கள் தன் கட்டுரையொன்றில் அழகுற ஆணித்தரமாய் பின்வரும் முறையில் எடுத்து மொழிகிறார்.

"Murugan is the guardian deity of the Tamils" (தமிழனின் காவல் தெய்வம் முருகன்)

## ஐவகை நிலங்களும் ஐவகைத் தெய்வங்களும்

ஐவகை நிலங்களாக தான் வாழ்ந்த தமிழ் நிலத்தை பகுந்த தமிழன் ஒவ்வொரு நிலத்திற்கும்ஒவ்வொரு தெய்வத்தை எழுந்தருளச் செய்வதில் இன்பம் கொண்டான். அந்த வகையில், குறிஞ்சி நிலக் கடவுளாக முருகனைக் கொண்டான். இந்தக் குறிஞ்சி நிலக் கடவுளுக்குக் குறிஞ்சிக்கிழவன், குறிஞ்சிக் குமரன் எனவும் பெயர்கள் இடப்பட்டன.

## சங்கநூல் சாற்றும் முருகன்

எட்டுத்தொகை நூல்களில் அகநானூறு, ஏழாவது தொகை நூலாக விளங்குகிறது. இந்நானூற்றைப் பாண்டியன் வேண்டுகோட்கேற்பப் பிள்ளைப்பெருமாள் வடிவேற்ற முருகனே தொகுத்து அருளினார் என்பது மரபுவழிச் செய்தியாகும். மற்றும் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாக விளங்கும் 70 பாடல்கள் கொண்ட "ஓங்கு பரிபாலன்" என்ற பாராட்டைப் பெற்ற பரிபாடலைத் திருமாலுக்கு எட்டுப் பாடலும், காடுகிளான் என்ற தெய்வத்திற்கு ஒரு பாடலும், வைகையாற்றுக்கு 26 பாடலும், மதுரைக்கு 4 பாடலும் ஒதுக்கப்பட்டிருக்க, செவ்வேளுக்கு 31 பாடல் ஒதுக்கப்பட்டிருப்பது அன்று தமிழகத்தில் முருக வழிபாடு பெற்றிருந்த முதன்மையையும், சிறப்பையும் எடுத்துக் காட்டுகிறது. மற்றும் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய செய்யுள் முருகன் புகழ் பாடுவதாகவே அமைந்துள்ளது. பாரதம் பாடிய பெருந்தேவனாரே இதனைப் பாடியுள்ளார்.

## சிலம்பும் சிந்தாமணியும் செப்பும் முருகன்

சங்கநூல்களில் முருகன் பெருமையைச் சாற்றுவது போலவே ஐம்பெருங்காப்பியங்களில் சிறப்புப்பெற்ற சிலப்பதிகாரமும், சீவகசிந்தாமணியும் கூட முருகன்பற்றிய சிறப்புமிகு குறிப்புகளைத் தருகின்றன. குன்றாடும் குமரன்பற்றியும், அவனின் கைவேல்பற்றியும், குரவை கூத்துப்பற்றியும் சிலம்பு செப்பிநிற்க, சீவகசிந்தாமணியோ சீவகனின் வீரத்தை முருகப் பெருமான் கீரமுஞ்சிய மலையைத் துளைத்தற்கு உவமை காண்கிறது.

## திருமூலர் கண்ட திருமுருகன்

அருளுறும் திருமந்திரம் தந்த திருமூலரும்
ஆறுமுகத்தின் அதிபதி நான் என்றும்
கூர்சமயக் குருபரன் நான் என்றும்
தெரிநர் தெற்கு திருஅம்பலத் துள்ளே
வேறின்றி அண்ணல் விளங்கி நின்றானே"

என்ற பாடல் வாயிலாக ஆறுமுகம் தாங்கிய முருகனின் அருட்திறமை எடுத்துக் கூறியதோடு, ஆறுமுகத்திற்கும் சிவனுக்கும் பெயரில் வேறுபாடு இருக்கிறதேயன்றி, அவர்கள் இருவரும் ஒருவர்தான் என்று கூறிச் செல்கிறார்.

## ஞானசம்பந்தர் கண்ட முருகன்

"கருகுகுழல் மடவார் கூடிக்குறிஞ்சியது பாடி
முருகனது பெருமை பகர் முருகுன்று அடைவோமே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று முருகன் புகழ் பாடுவதைக் காண்கிறோம். இது ஞானசம்பந்தர் அவர்கள் தனது தேவாரப் பாடலில் சிவனுக்குப் பல பிள்ளைகள் இருப்பினும் கந்தன் எனும் முருகனையே செல்லப்பிள்ளையாகக் கருதி உவகை எய்துகிறார் என்பதை "பெற்றும் உகந்தது கந்தனையே" என்ற வரியின் வாயிலாக எடுத்துச் சொல்லும் கருத்து சுவை மிக்கதாகும்.

## நாவுக்கரசர் கண்ட முருகன்

தாண்டவ வேந்தன் என தமிழ் உலகம் உவந்து போற்றும் நம் நாவுக்கரசரும், தன் தென்கடம்பைத் திருக்கரக் கோவில் பதிகத்தில் அவர் முருகனை 'நம்கடம்பன்' என தனியுரிமை காட்டியிருக்கும் வரியின் வாயிலாக எடுத்துச் சொல்லும் கருத்து சுவை மிக்கதாகும்.

"நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கரம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே"

## நம்பியாரூரன் கண்ட முருகன்

தம்பிரான் தோழராய் விளங்கிய நம் நம்பியாரூரரும் காளியபுரத்திலுள்ள திருஓரகாந்தம் தளியெனும் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் இனிய இயல்புகளைப் பாடுகையில்,

திங்கள்தங்கு சடையின் மேலாற் திரைகள்வந்து புரளவீசும்
கங்கையாள் வாய்திறவாள் கணபதியேல் வயிறுதாரி
அங்கவேலோன் குமரன்பிள்ளை தேவியார்க் கோற்தட்டி ஆளார்
உங்களுக்கு ஆட்செய மாட்டோம் ஓணகாந்தம் தளிஉளீரே" என்று தீமைகளை அழித்து நன்மைகளை அளிப்பவன் முருகன் என்பதை ஏற்றமுற எடுத்துக் காட்டுவதைக் காண்கிறோம்.

## சேக்கிழார் கண்ட செவ்வேள்

செந்தமிழ்க் காப்பியம் தந்த சேக்கிழார் கூட செவ்வேளின் சிறப்பியல்புக்கு தன் சிந்தையைப் பறிகொடுத்ததினால் சுந்தரர்பற்றி தான் வரைந்த வரலாற்றில், சுந்தரரின் சுந்தர வடிவைக் கண்டு பரவையார் சொக்கித் திளைத்த காட்சியைப் பின்வரும் முறையில் சுவைபட செப்பிச் செல்கிறார்.

"முன்னே வந்து எது தோன்றும் முருகனோ? பெருங்கொலியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சியதோ?
மின்னே செஞ்சலை அண்ணன் மெய்யருள் பெற்றுடையவனோ
என்னே என்மனம் திரிந்த இவன் யாரோ என நினைந்தார்"

இப்பாடலில் வரும் "முன்னே வந்து எது தோன்றும் முருகனோ" என்ற சொற்றொடர் அழகும் இளமையும் மிக்க முருகனோடு ஆரூரர் வடிவம் ஒப்பிடப்படுகின்றதென்பதை உணர்த்தி நிற்கிறது.

## எண்ணிக்கையில் ஏற்றம் பெற்ற முருக அடியார்கள்

தமிழ்கூறும் நல்லுலகில் முருகன் புகழ் பாடிய புலவர்களின் எண்ணிக்கை பலநூறாகப் பெருகியுள்ளது. அவர்களில் நக்கீரர், கச்சியப்பர், அருணகிரிநாதர், குமரகுருபரர், சம்பந்தசரணாலயர், சிதம்பரசுவாமிகள், பாம்பன் சுவாமிகள் ஆகியோர் எம் எண்ணத்தில் இடம்பெறத் தக்க ஏற்றமிகு புலவோர் ஆவர்.

## தாயுமானாரும் வள்ளலாரும் வாழ்த்திய முருகன்

மற்றும் "கந்தரனுபூதியேற்றுக் கந்தரனுபூதி சொற்று எந்தையருள் நாடி இருக்கும் நாளென்னாளோ" என்ற அருணகரி புகழ் பாடிய தாயுமானவரும், திருத்தணிகை முருகன்மீதும், சென்னை கந்தர்கோட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரன்மீதும் உள்ளம் உருக்கும் பாடல்கள் பாடிய வடலூர் வள்ளலாரும் என்றும் எம் நினைவில் இருக்கத் தக்கவர்கள்.

## அறிஞர் வாழ்த்திய முருகன்

அத்துடன் 19ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்து மறைந்த "முருகன் அந்தாதி" பாடிய ஞானியார் அடிகளையும், "திருவொற்றி முருகன் மும்மணிக் கோவை" பாடிய மறைமலையடிகளாரையும், "முருகன் அருள்வேட்டை", "முருகன் அல்லது அழகு" என்ற பாடல், உரைநூல்களைத் தந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க.வையும் நாம் மறக்கமுடியாது. இவர்களைப் போன்றே "அறிவாகிய கோயிலிலே அருளாகிய தாய்மடிமேல் பொறிவேலுடனே வளர்வாய் அடியார் புதுவாழ்வுறவே புவிமீது அருள்வாய் முருகா முருகா முருகா" என்று பாடிய, பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியையும், "சுப்பிரமணிய அமுது" பாடிய அவன் தாசன் பாரதிதாசனையும் யாம் என்றும் நினைவில் கொள்ளல் ஏற்புடையது.

## ஈழத்துப் புலவர்கள் பாடிய முருகன்

ஈழத்தைப் பொறுத்தவரை தமிழ் வளர்த்த தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் கதிர்காமக்கந்தன் மீதும், கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் நல்லூர்க் கந்தன் மீதும், விளங்கு தமிழ் தந்த வித்துவான் வேந்தனாரும், அதே நல்லூர் முருகன் மீது பாடிய பாடல்கள் நம் நினைவலைகளில் மோதத்தான் செய்கின்றன. மற்றும், ஈழத்துத் தமிழர் வாழ்வில் தனக்கெனத் தனியிடம் பெற்றுள்ள கவிஞர் காசி ஆனந்தன் பாடியுள்ள முருகன் அருள் வேண்டும் பாடல்கள் ஈழத்தமிழ் இலக்கிய உலகில் தனியிடம் பெறுபவையாகும்.

## நக்கீரரின் முதன்மை இடம்

முருகன் புகழ்பாடியோரின் பெரும் பட்டியல் மேலே தரப்பட்டிருப்பினும் "முருக இலக்கியத்தை" முதலிற் படைத்த தனிச்சிறப்பை "பொய்யற்ற கீரன்" என்று கச்சியப்ப சிவாச்சாரியாரால் புகழ்ந்து பாடப்படும் திருமுருகாற்றுப்படை தந்த நக்கீரர் பெறுகிறார். ஏனைய பிற தெய்வங்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்கெல்லாம் தலங்கள், சேத்திரங்கள் என்ற பெயர் பெற, முருகன் எழுந்தருளும் இடங்களுக்கு மட்டும் "படைவீடுகள" என்று பெயர் பெற்றதற்குக் காரணம் முருகன் வீரர்களுக்கெல்லாம் ஒரு பெருவீரனாக விளங்குவதனாலேயாகும். இத்தகைய மாட்சிமை மிக்க நிலையை முதன் முதலில் முருகனுக்கு ஏற்படுத்திய பெருமை நல்லிசைப் புலவர் நக்கீரருக்கே உரியது.

## கச்சியப்பர் கண்ட கந்தன்

நக்கீரரின் நல்வழியில் வந்து எண்ணத்தினாலும், எண்ணிக்கையாலும் ஏற்றமிக்க அரும் படைப்பாகிய கந்தபுராணத்தை எம்முளமெல்லாம் கொள்ளை கொள்ளும்முறையில் எமக்கு அளித்தவர் காஞ்சிபுரம் தந்த கச்சியப்ப சிவாச்சாரியார் ஆவார். அவரின் நூலின் திறத்தினை தெய்வீகத்தன்மையினை இங்கு விரித்துக் கூறின் மிகப்பெருகும் என்ற அஞ்சுவதனால் விடுபட்டுள்ளது. இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குரியவர்.

## அருணகிரிநாதர் கண்ட முருகன்

அடுத்து எம் நினைவில் வருபவர் "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்று பாடிய அருணகிரிநாதராவார். 15ஆம நூற்றாண்டுக்குரிய இவர் பாடிய பாடல்கள் பல்லாயிரம் ஆகும். இவர் பாடிய நூல்களில் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்பு, கந்தரந்தாதி, வேல்விருத்தம் என்பவையாகும். இவற்றில் பொதுமக்கள் நாவில் நலம்புரியும் புகழைப்பெற்று விளங்கும் நூல் திருப்புகழாகும். பதினாயிரம் திருப்புகழ் பாடல்களை இவர் பாடினார் என்பது மரபுவழியால் ஏற்றுக்கொள்ளப்படினும் இன்று எமக்கு ஏறக்குறைய 1250 பாடல்கள்தான் கிடைத்துள்ளன.

கிளி கொத்திய பழம் சுவை உடையதென்பதற்கமைய அருணகிரி என்ற கிளி கொத்திய கந்தரனுபூதி எனும் நூல் தத்துவ உலகில் தனிச்சிறப்புடன் விளங்குகிறது. சுகப்பிரமம் எனும் கிளிகொத்திய பாகவதத்தை ஒத்த சிறப்பு இதற்கு உண்டு என்பதும் ஒப்புநோக்கிய ஆய்வாளர்களின் கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமரகுருபரர் கண்ட குமரர்

அருணகிரிநாதரை அடுத்து முருகன் புகழ் பாடியதனாற் தமிழ் இலக்கிய உலகிற் தனி இடம்பெற்று விளங்குபவர் குமரகுருபர அடிகளாகும். 17ஆம் நூற்றாண்டுக்குரிய இவர் பல அரிய படைப்புகளைத் தம் இலக்கிய உலகிற்கு உகந்து அளித்துள்ளார். அவற்றுள் முருகன் புகழ்பாடுபவையாகத் "திருச்செந்தூர் கந்தன் கலிவெண்பா", "வைத்தீஸ்வரன் கோயில் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்" ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

## தமிழனாய்ப் பிறந்த முருகன்

சிவன் சவுந்தர பாண்டியனாகவும் உமை தடாதக தேவியாகவும், முருகன் உக்கிர குமாரனாகவும் முறையே மதுரையிற் பிறந்தது தமிழின் மீது அவர்களுக்கு இருந்த எல்லையற்ற காதலே காரணம் என்று பொருள் குறிக்கும் முறையிற் -

"தமரநீர்ப் புவனம் முழுதும் ஒருங்கு ஈன்றாள்
தடாதகா தேவி என்று ஒரு பேர்
தரிக்கவந்ததுவும் தனிமுதல் ஒருநீர்
சவுந்தர மாறன் ஆனதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும் தண்தமிழ் மதுரம்
கூட்டுண எழுந்தவேட்கையால் எனில்
இக் கொழிதமிழ்ப் பெருமையார் அறிவார்!
தமரம் யாழ்மிற்ற நறவு கொப்பளிக்கும்
பனிமலர்க் குழலியர், பளிக்குப் பால்நிலா
முன்றில் மூணிலா முற்றின்
பந்தரிற் கண்இமை ஆடாது
அமரர் நாதியரோடு அம்மனை ஆட
ஐயம்நுண் நுசுப்பு அள வல என்று
அமரரும் மருளும் தெளிதமிழ்க்கூடல்
அடல்அரா அலங்கல் வேணியனே!" என்று மதுரைக் கலம்பகத்தில் வரும் பாடல் குமரகுருபரனின் எல்லையற்ற தமிழ்ப் பற்றிற்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாய் மிளிர்கிறது.

## அகத்தியருக்கு அருந்தமிழ் அறிவுறுத்தியவர்

தமிழுக்கு இலக்கணம் தந்து தமிழை வளம்படுத்தியவர் அகத்திய முனிவர் என்பது மரபு வழியாக எம்மவர் ஏற்றுள்ள செய்தியாகும். இம்மரபு வழிச் செய்தி "தமிழ் எனும் அளப்பரும் சலதி தந்தவன் அகத்தியன்" என்று கம்பர் வாழ்த்தும் வாழ்த்துரையால் மேலும் வலிவு பெறுகிறது. இத்தகைய அகத்தியர் சிவனோடு ஒப்பவைத்து எண்ணத்தக்க பெருமை மிக்கவர். அவரின் அகம் மகிழவும் இரு செவிகள் குளிரவும், தமிழ் அறிவை முருகன் அவருக்கு ஊட்டினார் என்பதை -

"சிவனைநிகர் பொதியவரை முனிவர் அகம்மகிழ இரு
செவிகுளிர இனிய தமிழ் பகர்வோனே" என்று அருணகிரிநாதர் அகம் குளிர்ந்து பாடுகையில் எம் உள்ளம் உறும் உவகைக்கு எல்லைதான் உண்டோ?

## சிவனுக்குச் செந்தமிழ் செப்பியவர்

வள்ளி மணவாளனாகிய நம் குமரன் குடமுனிவன் செவியில் செந்தமிழ் ஓதியதோடு நிறைவு பெறாத நினையிற் கொன்றை மலர்மாலையணிந்த முழுமுதற் பொருளாகிய சிவபெருமானுக்கே தன்னைப் பெற்ற அப்பனுக்கே கொஞ்சிப்பேசித் தமிழின் தகமையை அறிவித்தார் என்பதை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொன்றைச் சடையர்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே"

என்று மேலும் ஒருபடி சென்று அருணகிரிநாதர் அறையும் கருத்து எம் நெஞ்சையள்ளும் கருத்தாக ஔிவிடுகிறது.

## இறையனார் அகப்பொருளின் ஆழம் கண்டவர்

அருந்தமிழ் முனி அகத்தியர்க்கும், எம்மையாளும் ஆண்டவனுக்கும் அருந்தமிழின் ஆற்றலை அழகுற எடுத்துக் கூறிய நம் முருகன், பாண்டியன் வளர்த்த பைந்தமிழில் தோன்றிய "இறையனார் அகப்பொருள்" எனும் நூலுக்குப் புலவர் பலர் உரை புகன்ற நிலையிலும், உருத்திர சன்மர் என்ற பெயருடன் தோன்றிய முருகன், இவை அனைத்தையும் தனித்தனியே ஆராய்ந்து இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் நவின்ற உரையே நல்லுரையென முடிந்த முடிவை வழங்கினார் என்பதை

"வழுதியர் தமிழின் ஒருபொருள் அதனை வழிபட மொழியும் முருகேசர்" என்று அருணகிரிநாதர் நமக்கு வழங்கும் செய்தி சிந்தை நிறைவோடு ஏற்கத்தக்க சிறப்புமிக்க செய்தியாக ஏற்றம் பெற்று விளங்குகிறது.

## தமிழில் உயர் சமர்த்தர்

நம் முருகன் அருந்தமிழ்ப் பற்றினால் ஆட்கொள்ளப்பட்டவனாய் விளங்கியதோடு, அருந்தமிழ் ஆய்விலும் உயர்ந்து விளங்குகிறான் என்பதை "அலகில் தமிழால் உயர் சமர்த்தனே போற்றி" என்று வெற்றிப் புன்னகையுடன் அருணகிரிநாதர் பாடுவதில் இருந்து அறிகிறோம்.

"புலமையும் ஆய்வும் பெற்று ஞானம் ஊறும் செங்கனிவாயுடை முருகனே! நாள்தோறும் செந்தமிழ் நூல்களை ஓதி உய்ய அருள்புரிய வேண்டும் என்பதை -

"செந்தமிழ் நாளும் ஓதி உயர்ந்திட ஞானம் ஊறும்
செங்கனி வாயில் ஒருசொல் அருள்வாயே"

என்று அருணகிரிநாதர் 15 ஆம் நூற்றாண்டில் விடுத்த வேண்டுகோள் தன் வாழ்வு வளம் பெறமட்டும் விடுத்த வேண்டுகோள் அல்ல; மாறாகத் தமிழராகிய எம் சார்பிலும் விடுத்த வேண்டுகோள் என்பதை உய்த்து உணர்வோமாக.

## தமிழைத் தேடி அலைந்த முருகன்

"ஓசையொலியெல்லாம் நிறைந்து உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனாய் விளங்குபவன் ஆண்டவன். ஆகவே அவனுக்கு உலகமொழிகள் அனைத்தும் தெரியும். அந்த மொழிகளுள் ஒன்றாகிய தமிழும் அவனுக்குத் தெரியும் என்பது உட்பொருள் தெளிவு. இறைவனுக்குத் தமிழ் தெரியும் என்பதற்கு மேலாக, தமிழிலே அவனுக்குத் தனி ஈடுபாடு - ஏன் தீராத காதல் என்று கூடக் கூற முடியும். "பழமறைகள் அவனைத்தேடி பின் தொடர்கையில், அவன் தமிழைத்தேடி அலைந்தான்; ஆராய்ந்தான்" என்று தமிழ் அடியார்கள் அறைகின்றனர். அருள் ஊறும் திருமந்திரம் தந்த திருமூலர் "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று தான் மொழிந்துள்ளார். "நம்மை மண்மேற் சொற்றமிழ் பாடுக" என்று தான் அன்று இறைவன் நம்பியாரூரருக்குக் கட்டளையிட்டார் என்று சேக்கிழார் தன் செந்தமிழ்க் காப்பியத்திற் செப்புகிறார். இறைவன் எட்டாம் நூற்றாண்டிற் சுந்தரருக்கு இட்ட கட்டளையைக் காலம் கடந்த நிலையில் 20 ஆம் நூற்றாண்டிலாவது நிறைவேற்ற நாம் தயங்கலாமா? கடவுளுக்குத் தமிழ் தெரியுமா என்று வேறு யாரும் கேட்டாலும் கவலையில்லை. ஆனால், தமிழன் இந்தக் கேள்வியை விடுக்கலாமா? அப்படி தமிழ் தெரியாத கடவுள் இருப்பின் அவருக்குத் தமிழ் நாட்டிலோ, தமிழ் ஈழத்திலோ அல்லது தமிழன் வாழுகின்ற எந்த நாட்டிலோ இடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வேளைச் செந்தமிழில் வழுத்திடுக

அருணகிரிநாதர் கூட முருகன் வடிவு தாங்கிய இறைவனை -

"அம்புவி தனக்குள் வளர் செந்தமிழ் வழுத்தி உனை அன்பொடு துதிக்க அருள்வாயே" என்று தான், உள்ளம் குழைந்து வேண்டுகிறார்.

இப்பாடலில் வளர் செந்தமிழால் முருகனை வழுத்த அவர் விரும்பினாரேயன்றி, வடமொழியால் வழுத்த விரும்பவில்லை என்பது தெற்றெனத் தெரிகிறது. ஆகவே இந்நிலையிலும் எம் அறிவை அடகு வைத்துக் "கடவுளுக்குத் தமிழ் தெரியுமா?" என்ற பொருள் அற்ற வீண் கேள்வியைக் கேட்காது நம் தம்பிரான் விரும்புவது நம் தமிழ் முருகன் விரும்புவது உள்ளம் உருக்கும் தமிழ் வழிபாடே என்பதை உய்த்துணர்ந்து இன்பத் தமிழால் இறைவனைப்பாடி அன்பைப் பெருக்க முயற்சி எடுப்போமாக.

தமிழன் தன்னை உணரவேண்டும். தமிழுக்காக உருகும் ஆண்டவனை அருந்தமிழ் முருகனை தமிழில் வழிபட்டு உள்ளம் உருகி, உய்யும் வழிகாணத் தெரியாத தமிழன் - அரசியல் வானில் அருந்தமிழ் அப்புறப்படுத்துப்பட்டதையிட்டு அங்கலாய்ப்பதில், ஆறாது அழுவதில் என்ன பொருள் உண்டு. தமிழன் தன்னை உணராத போது தமிழனுக்கு வாழ்வில்லை. இது பொய்யா மொழி என்பதை மெய்யடியார்கள் உணர்வார்களாக.

## வீரம் வேண்டின் வேலனை வழிபடுக

சுருங்கக் கூறின், வீழ்ச்சியுற்ற தமிழன் எழுச்சியுற - விசை ஒடிந்த தேகத்தில் வன்மை பெறக் கீழ்ச்செயல்கள் முற்றாக நீங்கிய நிலையில் மேன்மை எண்ணங்களால் எம் வாழ்வை மேம்படுத்த வெற்றி வேலும், ஆறுபடைவீடும் தாங்கிய முருகவேளுக்கு முடிதாழ்த்தி, முத்தமிழால் அவனை வழுத்தி முடிவிலா இன்பம் காண்போமாக.

### கந்தரனுபூதி

ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானை சகோதரனே. (1)

உல்லாச நிராகுல, யோக, இதச்
சல்லாப விநோதனும் நீ அலையோ
எல்லாம் அற, என்னை இழந்த நலம்
சொல்லாய், முருகா சுரபூ பதியே. (2)

வானோ? புனல் பார் கனல் மாருதமோ?
ஞானோதயமோ? நவில் நான் மறையோ?
யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே.(3)

வளைபட்டகை மாதொடு, மக்கள் எனும்
தளைபட்(டு), அழியத் தகுமோ? தகுமோ
கிளைபட்(டு) எழுசூர் உரமும் கிரியும்,
தொளைபட்(டு) உருவத் தொடு வேலவனே. (4)

மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகம் ஆறும் மொழிந்து மொழிந்திலனே
அகம், மாயை, மடந்தையர் என்(று), அயரும்
சக மாயையுள் நின்று தயங்குவதே. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FREE Classes to Become an Insurance Advisor



- Life Insurance
- Critical Illness Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- RESP, RRSP, Investments
- Long Term Care Insurance
- Group Benefits
- Health & Dental plans
- Disability Insurance

**Become an Insurance advisor with Life100 and earn more**

**A winning partnership**

Professionalism | Intergrity | High Standards

**Sritharan Thurairajah** CLU, CHS

Charted Life Underwriter, Certified Health Insurance Specialist

MDRT Member of Million Dollar Round Table

Direct: **416.918.9771**

Business: **416.321.2500**

Web: www.life100.ca, E-mail: info@life100.ca

Life100

INSURANCE & INVESTMENTS INC.

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Holy Servants of Lord Siva

Dr. Shan A. Shanmugavadivel

The **Periya Puranam** is a great epic depicting the lives of the sixty three holy devotees of Lord Siva known as the Nayanmar who lived in Southern India. The Nayanmar had been instrumental in the revival of worship of Lord Siva from the other alien faiths between 6$^{th}$ and 9$^{th}$ centuries CE.

Periya Puranam was added as the last section to the twelve sacred books of Tamil Saivite canon namely "Thirumurai". Sekkizhar who authored this great puranam was the chief minister of Chola king, Kulothunga Chola II, during the 12$^{th}$ century. This work is one of the masterpieces of Tamil Saiva Literature though it is considered to be an extension of earlier works of Saint Sundarar and Nambiyandar Nambi.

At the time Sekkizhar worked on the stories of servants of Lord Siva devotional hymns called Thevaram, Thiruvasagam and other collections were available and were sung in temples and homes in the Tamil land. All the saints in this epic poem were men and women who have actually lived and attained salvation in their times. They are not mythical. They belong to different castes and came from different trades ranging from kings to ordinary workers. Their stories speak about their bakthi movement that restored the Saiva religion and language from the prevailing Jain and Buddhist faiths. Bakthi or Pathi in Saivism is unconditional love towards Lord Siva and establishing a pathway for union with God. Sekkizhar's Peryia Puranam depicts the unconditional love of the saints very clearly.

Most of us are familiar with at least a few songs of this poetic work. But we know enough about the the stories of great Saiva Saints namely Appar, Sampanthar and Sundarar. In the past few years my interest for Periya Puranam has resulted in studying the original works of Sekkizhar to understand the selfless devotion of the Saiva Nayanmar to Sivaperuman.

Alastair Mc Glashan was a Christian scholar writes in his translation of Periya Puranam that many examples of selfless devotion to God by Saiva Saints made a powerful impact on him. Sekkizhar's original text of the story of Ilaiyankudi maran Nayanar stimulated his interest and prompted him to work on the translation of entire book.

Mc Glashan was an Anglican priest who after studying classics at Oxford and theology at Cambridge taught for ten years at a seminary in South India, followed in the footsteps of other great western scholars like Pope and Caldwell. He did a valuable contribution by the first full-length English translation of this major Tamil epic poem that ever published in the West.

He claims the completed work of his as a labour of love for one Lord who rules over earth and heaven by whatever name he is known.

Reference: The History of the Holy Servants of the Lord Siva – Alastair Mc Glashan, Trafford Publishing (Trafford.com/ 05-2812)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவர் தமிழ்

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

தமிழ் மொழியில் தோன்றிய பக்தி இலக்கியங்களில் மூவர் பாடிய பாடல்கள் தனித்துவமானவை. 'முத்தமிழ்' எனச் சிறப்புப் பெற்றிருந்த தமிழ் 'மூவர் தமிழ்' எனவும் சிறப்பாக அழைக்கப்பட்டதைப் பிற்காலத்து ஔவையார் பாடல் பதிவுசெய்துள்ளது.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்." (நல்வழி: 40)

'மூவர் தமிழ்' என்ற தொடரில் மூவர் என்பது சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் மூன்று திருத் தொண்டர்களையுமே குறிப்பதாகும். இம்மூவரும் பாடிய அருட்பாடல்கள் தமிழ்மொழியின் சிறப்பையும் ஆற்றலையும் விளக்கிநிற்பவை. சம்பந்தர் பதினாறு ஆண்டு இந்த உலகில் வாழ்ந்து தமிழால் பாமாலை சாத்தியவர். சுந்தரர் பதினெட்டு ஆண்டு இவ்வுலகில் இறைவன் புகழ் பாடியவர். சம்பந்தரும் அப்பரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள். சுந்தரர் அவர்களுக்குக் காலத்தாற் பிந்தியவர். இம்மூவரும் தமிழிலே பாடியவை தேவாரம் எனச் சிறப்பாக அழைக்கப்பட்டன. 'தே' என்பது இறைவன் எனப் பொருள் தருவது. வாரம் என்பது உரிமை அல்லது அன்பு எனப் பொருள் தருவது. எனவே 'தேவாரம்' என்பது இறைவன்மீது கொண்ட அன்பையும் உரிமையையும் புலப்படுத்துகின்ற தமிழ்ப் பாடல்களாகும்.

'மூவர் தமிழ்' என்ற சிறப்பைத் தேவாரங்கள் பெற்றமைக்கு முக்கிய காரணம் வடமொழியிலே இறைவன் பெருமை பேசும் பாடல்கள் இருந்தபோது தமிழ் மொழியிலும் இறைவன் பெருமையை மூவரும் பாடியமையே. அவற்றைப் பொது மக்களும் வாய்மொழி நிலையில் அறிய வாய்ப்பு ஏற்பட்டது. தலங்கள் தோறும் மூவரும் சென்று பல ஆயிரக் கணக்கான பாடல்களைத் தமிழிலே பாடினர். அதனால் தமிழ்மொழி வழிபாட்டு மொழியாகப் பயன்படுத்தப்பட்டது. இப்பாடல்கள் சோழர் காலத்தில் தில்லையிலே ஏட்டு வடிவிலே கண்டு எடுக்கப்பட்டு நம்பியாண்டார் நம்பி என்பவரால் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவர் தொகுத்த பன்னிரண்டு திருமுறைகளில் மூவரும் பாடிய தேவாரங்கள் முதல் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. மூவருடைய பாடல்களும் தேவாரம் என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்பட்டாலும் பிற சிறப்புப் பெயர்களும் வழங்கப்பட்டுள்ளன. சம்பந்தர் பாடல் 'திருக்கடைக்காப்பு' என்றும், அப்பர் பாடல் 'தேவாரம்' என்றும், சுந்தரர் பாடல் 'திருப்பாட்டு' என்றும் வழங்கப்பட்டன. திருமுறை வகுப்பில் சம்பந்தருடைய பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும், அப்பருடைய பாடல்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகவும், சுந்தரருடைய பாடல்கள் ஏழாம் திருமுறையாகவும் அமைக் கப்பட்டுள்ளன. மூவரும் பல திருக்கோயில்களுக்குச் சென்று வழிபட்டுப் பாடல்களைப் பாடியுள் ளனர். இவர்கள் பாடிய தேவாரங்களில் இப்போது கிடைத்தவற்றைத் தொகுத்து (1988) ஸ்ரீகாம கோடி ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது. இத்தொகுப்பில் அடங்கியுள்ள விவரம் வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திருக்கோயில் அமைவிடம் | | சம்பந்தர் | | அப்பர் | | சுந்தரர் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதிகம் | கோயில் | பதிகம் | கோயில் | பதிகம் | கோயில் |
| 1 | சோழநாட்டில் காவேரிக்கு வட கரையில் உள்ள கோயில்கள் | 138 | 54 | 79 | 33 | 22 | 21 |
| 2. | சோழநாட்டில் காவேரிக்கு தென் கரையில் உள்ள கோயில்கள் | 149 | 100 | 132 | 66 | 35 | 27 |
| 3. | ஈழநாட்டுக் கோயில்கள் | 02 | 02 | ----- | ----- | 01 | 01 |
| 4. | பாண்டிநாட்டுக் கோயில்கள் | 24 | 13 | 05 | 04 | 05 | 05 |
| 5. | மலைநாட்டுக் கோயில்கள் | ----- | ------ | ----- | ---- | 01 | 01 |
| 6. | கொங்கு நாட்டுக் கோயில்கள் | 04 | 04 | 01 | 01 | 04 | 04 |
| 7. | நடுநாட்டுக் கோயில்கள் | 23 | 15 | 27 | 09 | 12 | 10 |
| 8. | தொண்டைநாட்டுக் கோயில்கள் | 31 | 25 | 24 | 09 | 13 | 12 |
| 9. | துளுவ நாட்டுக் கோயில்கள் | 01 | 01 | 01 | 01 | ----- | ----- |
| 10. | வடநாட்டுக் கோயில்கள் | 06 | 05 | 05 | 02 | 03 | 03 |
| 11. | பொதுத் திருப் பதிகங்கள் | 07 | ------ | 37 | --------- | 04 | ---- |
| | தொகுப்பு நிலை | 385 | 129 | 311 | 125 | 100 | 84 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவர் பாடிய பாடல்களில் தமிழ்மொழியின் பயன்பாடு அக்காலத்தில் மக்களை நெறிப்படுத்துவதற்குப் பெரிதும் உதவியது. குறிப்பாக அப்பரும் சம்பந்தரும் வாழ்ந்த காலகட்டத்தில் பிற சமயங்களின் செல்வாக்குப் பரவத் தொடங்கியிருந்தது. மக்கள் சைவசமய வழிபாட்டு நடைமுறைகளை விளங்கிக்கொள்வதற்கு வடமொழியை அறியவேண்டியிருந்தது. கோயில்களிலே உறைகின்ற தெய்வங்களைப் பற்றிய தெளிவை உணரமுடியாதிருந்தது. இந்நிலை மூவரும் தமிழ் மொழியிலே தலங்களைப் பதிகங்களில் பாடியபோது மாற்றமடைந்தது. பதிகம் என்னும் பத்துப் பாடல்கள் கொண்ட அமைப்பு முறையைப் பயன்படுத்தி மூவரும் பொதுமக்களை வழிபாட்டிலே ஈடுபடுத்தினர். இம்மூவருக்கும் வழிகாட்டியாய் காரைக்காலம்மையார் விளங்கினார். தமிழ்மொழியிலே 'விருத்தம்' என்னும் பாவின வகையை முதன்முதலில் அம்மையாரே பயன்படுத்தியவராவார். அவர் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிக அமைப்பைப் பின்பற்றியே மூவரும் பதிகங்களைப் பாடினர்.

முதல் ஏழு திருமுறைகளிலும் அடங்கிய பாடல்கள் பொதுமக்களுக்குப் பல்வேறு விடயங்களைப் பற்றிய தெளிவை நல்கின. அவற்றை வருமாறு குறிப்பிடலாம்:

1 இறைவன் கோல அழகைக் காணவைத்தல்
2. திருக்கோயிற் சூழலின் சிறப்பை உணர்த்தல்
3. வழிபாட்டு நடைமுறை பற்றிய தெளிவை ஏற்படுத்தல்
4. இறைவன் அருட்செயல் பற்றிய அறிவூட்டல்.
5. அடியார் வரலாறும் வாழ்வும் அறியவைத்தல்
6. உடல் நலிவும் பிணியும் தீர வழி கூறல்.
7. பண்ணிசையால் பெறும் மகிழ்வை ஊட்டல்.
8. இசைக்கருவிகளின் பயன்பாட்டை விளக்கல்.
9. ஆடற்கலை பற்றி விளக்கம் நல்கல்.
10. இயற்கை அழகை அறிய வழிகாட்டல்.
11. வினைப்பயன் பற்றி விளக்கல்
12. தமிழ்மொழியின் சிறப்பையும் ஆற்றலையும் உணர்த்தல்.

இவற்றுள் தமிழ் மொழியின் சிறப்பும் ஆற்றலும் தேவாரங்களில் எவ்வாறு உணர்த்தப்பட்டுள்ளன என்பதையே இக்கட்டுரை விளக்கவுள்ளது.

சம்பந்தரும் சுந்தரரும் தமிழ்மொழியிலே பாடிய பாடல்களைத் 'தமிழ் மாலை' எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளனர். சம்பந்தர் மறை ஓதும் சூழலிலே பிறந்து வளர்ந்தவர். மூன்று வயதிலே ஞானம் பெற்று தமிழிலே இறைவன் திருக்கோலத்தைப் பாடும் அருள் பெற்றவர். அவர் தான் பாடும் பதிகங்களில் பதினோராவது பாடலிலே சிறப்பாகத் தமிழ்மொழி பற்றிய குறிப்பைப் பதிவு செய்துள்ளார். சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

"பூம்பொழில் திகழ்பொற்பதி பூந்தராய் போற்றுதும் என்று
ஓம்பும் தன்மையன் முத்தமிழ் நான்மறை
ஞானசம்பந்தன் **ஒண்தமிழ் மாலை** கொண்டு
ஆம்படியிவை ஏத்தவல்லார்க்கு அடையா வினையே."

"மின்னார் இடையாள் உமையாளோடும் இருந்த விமலனை
தன்னார் வம்செய்த தமிழின் விரகன் உரைத்த **தமிழ்மாலை**
பன்னாள் பாடியாடப் பிரியார் பரலோகந் தானே"

"குறைவிலா ஞானமேவு குளிர்பந்தன் வைத்த **தமிழ்மாலை** பாடுமவர்போய்
அறைகழல் ஈசனார் ஆளும்நகர் மேவியென்றும் அழகா இருப்பது அறிவே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞானசம்பந்தன் **நற்றமிழ்மாலை** நன்மையால் உரைசெய்து நவில்வார்
ஊனசம் பத்தத்துறு பிணிநீங்கி உள்ளம் ஒருவழிக் கொண்டு
வானிடை வாழ்வார் மண்மிசைப் பிறவார்"

"நறைவளரும் பொழில்காழி நற்றமிழ் ஞானசம் பந்தன்
மறைவளரும் **தமிழ்மாலை** வல்லவர் தந்துயர் நீங்கி
நிறைவளர் நெஞ்சினராகி நீடுலகத் திருப் பாரே"

திருக்கோயில் வழிபாடு மனம், மொழி, உடலாற் செய்யப்படவேண்டும். மொழியால் இறைவனை வழிபடுவதற்குத் தமிழ் மொழியிலே பாமாலை பாடித் தந்தவர் சம்பந்தர். அதனால் அந்தப் பாமாலையைத் 'தமிழ்மாலை' எனச் சிறப்பான பெயரால் குறிப்பிட்டுள்ளார். கோயிலுக்கு வழிபடச் செல்வோர் பூமாலை கட்டி எடுத்துச் செல்வர். அவர் உடல்மூலம் பணிசெய்து வழிபடும் சிறப்புப் பெற்றவர். அதேபோன்று இறைவனைப் பற்றிச் சம்பந்தர் பாடிய ஒண்தமிழ்மாலையைப் பாடுகின்றவர் வாக்கினால் வழிபடும் தொண்டராவார். உள்ளத்திலே தமிழ்மாலையை நினைப்பவர் மனத்தால் வழிபாடு செய்யும் பேறு பெற்றவராவார். உடல், உளம் இரண்டும் நலம்பெறும் தமிழ்மாலையை எல்லோரும் இறைவனுக்குச் சார்த்தி வழிபடலாம்.

சுந்தரர் வாழ்ந்த காலம் வழிபாட்டில் தமிழ்மொழி சிறப்பிடம் பெற்றிருந்த காலம். சம்பந்தரும் அப்பரும் திருக்கோயில்களுக்கு நேரே சென்று பல்லாயிரக் கணக்கான சொல்மாலைகளைப் புனைந்திருந்தனர். அந்த வழிபாட்டு நடைமுறையையே சுந்தரரும் தொடர்கிறார். சம்பந்தருடைய தமிழ்ப் பணியைச் சுந்தரர் வியந்து பாடியுள்ளார்.

நாளும்இன் னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந் தனுக்கு உலகவர்முன்
தாளம்ஈந்து அவன்பா டலுக்குஇரங்கும் தன்மையாளனை என்மனக் கருத்தை
ஆளும்பூ தங்கள்பாட நின்றாடும் அங்கணன்தனை எண்கணம் இறைஞ்சும்
கோளிலிப் பெருங்கோயில் உள்ளானை கோலக்காவினிற் கண்டுகொண் டேனே.

சம்பந்தருடைய தமிழ்மொழியைப் பரப்புவதற்குக் கையாண்ட புதிய வழிமுறையைச் சுந்தரர் சுட்டிக் காட்டியுள்ளார். ஒரு மொழி மக்களிடையே செல்வாக்குப் பெறுவதற்கு அந்த மொழியின் இனிமை நன்குணர்த்தப்பட வேண்டும். சம்பந்தர் ஒவ்வொரு நாளும் கோயிலுக்குச் சென்று இனிய தமிழ் மொழியிலே இறைவனைப் பாடியபோது மக்கள் அவரோடு வழிபாட்டில் கலந்துகொண்டனர். திருக்கோலக்கா என்னும் திருத்தலத்தில் உலகத்தவர் முன்னிலையில் சம்பந்தர் பொற்றாளம் பெற்றதை சுந்தரர் பாடலில் பதிவுசெய்துள்ளார். இன்னிசையாகத் தமிழ்மொழி பரப்பப்பட்டது. இறை வழிபாட்டில் இசையும், இசைக்கருவிகளும் இசைக்கப்படத் தமிழ்மொழி இசைத்தமிழாக வளரலாயிற்று.

சுந்தரருடைய பதிகங்களிலும் 11ஆவது பாடல் தமிழ்மொழியின் சிறப்பை விளக்குவதாக அமைந்துள்ளது. சில எடுத்துக்காட்டுகள் வருமாறு.

"கலைமலிந்த தென்புலவர் கற்றோர்தம் இடர்தீர்க்கும் கருப்பறியலூர்
குலைமலிந்த கோட்டெங்கு மட்டுஒழுகும் பூஞ்சோலைக் கொகுடிக்கோயில்
இலைமலிந்த மழுவானை மனத்தினால் அன்புசெய்து இன்பம்எய்தி
மலைமலிந்த தோளூரன் வனப்பகை அப்பன் உரைத்த வண்தமிழ்களே"

"உளம்குளிர் தமிழூரன் வன்தொண்டன் சடையன் காதலன் வனப்பகையப்பன்
நலம்கிளர் வயல்நா வலர்வேந்தன் நங்கை சிங்கடி தந்தை பயந்த
பலம்கிளர் தமிழ்பாடவல் லார்மேல் பறையுமாம் செய்த பாவங்கள்தானே"

"உரையினார் மதயானை நாவலாரூரன் உரிமையால்
உரைசெய்த ஒண்தமிழ்கள் வல்லார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையினர் வகைஞாலம் ஆண்டவர்க்கும் தாம்போய்
வானவர்க்கும் தலைவராய் நிறபர்அவர்தாமே"
"வாழவல்ல வன்றொண்டன் வண்தமிழ்மாலை வல்லார்போய்
ஏழுமா பிறப்பற்று எம்மையும் ஆளுடையாரே"

தமிழ்மொழி வழிபாட்டுமொழியாக மக்களிடையே நிலவவேண்டும் எனச் சுந்தரரும் எண்ணிச் செயற்பட்டதை மேற்காட்டிய எடுத்துக்காட்டுகள் நன்கு விளக்குகின்றன. அவர் தன்னைத் 'தமிழூரன்' என்றே குறிப்பட்டுள்ளார். இன்னும் தமிழைப் பலம்கிளர் மொழியெனக் கூறியுள்ளார். ஒரு மொழிக்கு இறைவன் பெருமையை எடுத்துரைக்கும் ஆற்றல் இருக்குமாயின், அது பெரும் ஆற்றல் படைத்த மொழியாக உலகில் நிலைத்து நிற்கும். இலத்தீன் மொழி, அராபிய மொழி, பிராகிருத மொழி, பாளி மொழி, சமஸ்கிருத மொழி என்பன இறை வழிபாட்டை மக்களுக்கு எடுத்தியம்பும் மொழிகளாக உள்ளன. தமிழ்மொழியும் சைவசமயத்தை மக்களுக்குத் தெளிவாக உணர்த்தும் மொழியாக சுந்தரர் காலத்தில் நிலைபெற்றிருந்தது. சுந்தரர் தன்னுடைய பாடல்களையும் 'தமிழ் மாலை' என்றே குறிப்பிட்டுள்ளார்.

"ஆரூரன் தமிழ்மாலைகள் பாடும் அடித்தொண்டர்
நீர்ஊர் தருநிலனோடு உயர்புகழ் ஆகுவர்தாமே"

என்னும் அடிகள் இதற்குச் சான்றாக உள்ளன.

அப்பரது பாடல்களில் தமிழ்மொழி பற்றிய குறிப்பு சற்று வேறுபட்ட நிலையில் காணப்படு கிறது. சைவசமயத்தை விட்டு சமணசமயத்தைத் தழுவி வாழ்ந்தவர் அப்பர். பின்னர் சூலைநோய் வாய்ப்பட்டு மீண்டும் சைவசமயத்திற்குத் திரும்புகிறார். திருவீரட்டானம் என்னும் திருத்தலத்தை வழிபட்டபோது அவர் தமிழ்ப்பாமாலை பாடும் ஆற்றல் பெறுகிறார். கொடிய சூலை நோயைத் தீர்க்கும்படி இறைவனிடம் தமிழால் இறைஞ்சுகிறார். அப்போது தான் தமிழை மறக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

"சலம்பூவொடு தூபமறந் தறியேன் தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்
நலந்தீங்கினும் உன்னைமறந் தறியேன் உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்"

சம்பந்தர் தொடக்கிவைத்த தமிழ்மொழியால் இறைவனைப் பாடும் மரபு அப்பராலும் தொடரப்பட்டது. இன்னும், இசைப்பாடல்களால் மட்டுமன்றி உரைமாலையாலும் இறைவன் அடிதொழுதகை அப்பர் பாடலிலே பதிவுசெய்துள்ளார்.

"உரைமாலை எல்லாம் உடைய அடி உரையால் உணரப்படாத அடி
வரைமாதை வாடாமல் வைக்கும் அடி வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும் அடி"

இதன்மூலம் இறைவன் பேராற்றலைத் தமிழ்மொழியிலே எடுத்துரைக்கும் வழிபாட்டு நடைமுறையும் இருந்ததை அறியமுடிகிறது.

சம்பந்தர் பாடல்களில் தமிழ்மொழியின் சிறப்பு பல்வேறு அடைமொழிகளால் உணர்த்தப்பட்டுள்ளது. அவர் தன்னை 'நற்றமிழ் ஞானசம்பந்தன்' என்றும் 'தமிழ் விரகன்' என்றும் பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார்.

"கல்லுயர் மாக்கடல் நின்றுமுழங்கும் கரைபொரு காழிய மூதூர்
நல்லுயர் நான்மறை நாவின் நற்றமிழ் ஞானசம்பந்தன்"

சம்பந்தருடைய பிறப்பும் வாழ்வுச் சூழலும் வடமொழிப் பயிற்சிக்கு உகந்ததாக இருந்தன. வேதங்களைக் கற்கும் வாய்ப்புப் பெற்றவர். ஆனால் பிற சமயங்களான சமணமும் பௌத்தமும் மக்கள் மனத்தை திரிபுபடுத்துவதை அறிந்து மக்களின் மொழியான தமிழ் மொழியிலே இறைவழிபாட்டைச் செய்ய முனைந்தார். தமிழ்மொழியின் சிறப்பைத் தனது பதிகங்களில் பதிவுசெய்தார். தமிழால் வழிபடுவதால் அடையும் பயனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு விளக்கினார். அவர் பாடல்களிலேகூறிய விளக்கம் அவரது காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு மட்டுமன்றி அன்றைய காலத்து மக்களுக்கும் ஏற்றதாக உள்ளது. பின்வரும் பாடல்கள் அதற்குச் சான்றாகவுள்ளன.

"கழியார் சீரோதம் மல்கும்கடற் காழியுள்
ஒழியாது கோயில் கொண்டானை உகந்துஉள்கி
தழியார் சொல்ஞான சம்ாந்தன் தமிழ்ஆர
மொழிவார் கண்மூ வுலகும் பெறுவார்களே"

"கண்ணு மூன்றுடை யாதி வாழ்கலிக் காழியுள்
அண்ணலந் தண்ண ருள்பேணி ஞானசம்பந் தன்சொல்
வண்ண மூன்றுந் தமிழிற் தெரிந்திசை பாடுவார்
விண்ணு மண்ணு விரிகின்ற தொல்புக ளாரே"

வழிபாட்டு நடைமுறைகளில் வடமொழிப்பயன்பாடு மிக்கிருந்த காலத்தில் சம்பந்தர் தமிழ்மொழியை மக்கள் வழிபாட்டில் பயன்படுத்தப் பணி செய்தார். தமிழ்மொழியின் சிறப்பையும் பேராற்றலையும் யாவரும் அறியும் வண்ணம் பல அடைமொழிகளை இணைத்தார். அவருடைய பதிகங்களில் பதினோராவது பாடலின் இறுதியடியில் இந்த அடைமொழிகள் இணைந்துள்ளன. இங்கு சில எடுத்துக்காட்டுகள்.

"ஒருநெறிய மனம்வைத் துணர்ஞான சம்பந்த னுரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே"

"நலமார் திருஞான சம்பந்தன் சொன்ன
குலமார் தமிழ்கூ றுவர் கூர்மையரே"

"செப்பரிய தண்டமிழால் தெரிந்த பாடலிவை வல்லார்
எப்பரிசி லிடர்நீங்கி இமையோர் உலகத் திருப்பாரே"

"நண்ணிய ஞானசம் பந்தன் வாய்மை
பண்ணிய அருந்தமிழ் பத்தும் வல்லார்
நடலையலை இன்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம்"

"தார்மிகுந்த வரைமார்பன் சம்பந்தன் உரைசெய்த
சீர்மிகுந்த தமிழ்வல்லார் சிவலோகஞ் சேர்வாரே"

"நண்ணிய புகலியுண் ஞானசம் பந்தன்
பண்ணிய செந்தமிழ் பத்தும் வல்லார்
புண்ணியர் சிவகதி புகுதல் வண்ணமே"

இவற்றைவிடச் சம்பந்தர் பேசுந்தமிழ், நற்றமிழ், ஞானத்தமிழ், கலைமலிதமிழ், ஒண்தமிழ், இன்தமிழ், இன்புறுந்தமிழ், வண்தமிழ், பந்தமார்தமிழ், சங்கமலி செந்தமிழ், கசிவாற்ற தமிழ், வடமார் தமிழ், சந்துலாந்தமிழ், சொற்றமிழ், இசைமலி தமிழ், சந்தமார் தமிழ் எனப் பல அடைகளையும் பயன்படுத்தியுள்ளார்.

மூவர் தமிழில் முதல் தமிழாக இருப்பது சம்பந்தரது பாடல்களே. தமிழ்மொழியை இறைவனைப் பாடச் சிறந்த மொழியாக இனங்காட்டிய காரைக்காலம்மையாரைத் தொடர்ந்து திருக் கோயில் வழிபாட்டில் இனிய பாடல்களைப் பாடியவர் சம்பந்தர். தமிழின் இனிய ஒலி சேர்ந்த பாமாலையைத் தந்தவர். 'ஒலிகெழு மாலை' என அவரே குறிப்பிட்டுள்ளார். கலைஞானம் பெற்ற சம்பந்தர் வேத ஒலியை வழிபாட்டில் கேட்டு வாழ்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவரது வீட்டு மொழி அவர் தாய் பயிற்றிய தாய்மொழியாகிய தமிழ்மொழியே. மூன்று வயதில் அவர் முதலில் கண்ட இறைவன் இறைவியின் திருக்கோலத்தைத் தான் முதலில் அறிந்த மொழியான தமிழ் மொழியிலே பாடுகின்றார். இதேபோன்று அப்பரும் தாய்மொழியாம் தமிழிலேயே பாடுகிறார். பிறமொழியாற்றலைப் புறந்தள்ளி விடுகிறார். சுந்தரரும் இறைவன் திருக்கோலத்தைப் பாடும்போது தமிழ்மொழியிலே பாடுகிறார்.

ஆனால் மூவரும் தமிழில் தமது பக்தி உணர்வை வெளிப்படுத்தும்போது அவரவர் இயல்புக் கேற்ப தனித்துவமுடையவராகவும் விளங்குகின்றனர். வயதுநிலையால் உணர்வுநிலையில் வேறுபாடு இருப்பதைப் பாடல்களில் காணமுடிகிறது. எனினும் திருக்கோயிற் சூழலை மூவருமே சிறந்த சொற் கோலங்களைப் புனைந்துள்ளனர். மூவருடைய கோயில் பற்றிய கோலங்களைப் படிக்கும்போது அவற்றை அகக் கண்ணிலே காணமுடியும். மனித மனங்களிலே பக்தியை ஊற்றெடுக்கச் செய்யும் அருட்பாக்கள் இன்றும் நம்மை இறைவழி செல்லவைக்கும். 'பக்தியின் மொழி தமிழ்' என்ற சிறப்பைத் தமிழ் மொழி பெறுவதற்கும் மூவர் தமிழும் ஒரு முனைப்பான திருப்பணியாக அமைந்தது. தமிழிலக்கிய வளர்ச்சிப் போக்கில் பக்திநெறிக் காலம் என ஒரு காலத்தை வகுப்பதற்கும் மூவர்தமிழ்ப் பாடல்கள் காரணமாயமைந்தன. பண்டைத்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படையிலே முருகன் உறையும் திருத்தலங்களும் முன்னரே பாடப்பட்டிருந்தன. ஆனால் அத்தமிழ் கற்றோரால் மட்டுமே விளங்கிக்கொள்ளக் கூடிய செய்யுள் நடையாக இருந்தது. பின்வந்த மூவர்தமிழ் எளிதில் மக்கள் படிக்கக்கூடிய தமிழ்நடையாக அமைந்திருந்தது. எளிமையான சொல்மாலைகளாக அவை விளங்கின. மேலும் இந்த மூவரில் இருவர் இளமைக் காலத்தில் இசைத்தமிழ் மாலை இயற்றிய தனிச்சிறப்புடையவர்கள். சம்பந்தரும் சுந்தரரும் பாடிய பாடல்கள் இளையோரை இறைவழிபாட்டில் ஈர்க்கும் ஆற்றல் பெற்றவை. இளமையில் இருவரும் பெற்றிருந்த தமிழ்மொழியாற்றல் இறைவன் உறையும் திருக்கோயிற் சூழல்களையும் திருக்கோலங்களையும் சொற்சித்திரங்களாக அமைப்பதற்குப் பெரிதும் துணைநின்றது. இவ்விருவருடைய தேவாரங்களிலும் இளமையுணர்வும் அழகும் ஏற்ற சொல்லாற்றலால் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்மொழி உலகமொழிகளிடையே செம்மொழி என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. அந்தச் சிறப்போடு பக்தி உணர்வைப் புலப்படுத்துவதற்கு ஏற்றதொரு மொழியாகவும் இனங்காண்பதற்கு மூவர் பாடிய தேவாரங்களும் காரணமாக அமைந்தன. பிற்காலத்தில் திருக்கோயில் பற்றிப் பாடும் தமிழ்க் கவிஞர்களுக்கு மூவர்தமிழ் ஒரு வழிகாட்டியாய் உள்ளது. இறைவனைப் பாடுவதற்கு ஒரு கவிமரபைக் காட்டியவர்கள் இம்மூவரும் எனில் மிகையாகாது. இறைவனோடு நம்மைத் தொடர்புறுத்த தமிழ் ஏற்ற மொழியென எடுத்தியம்பிய இவர்கள் வழிநின்று பலர் பாவாரம் பாடுகின்றனர். நமது மொழியால் இறைவனை வழிபடுவதே மிக எளிமையான வழிபாடு என்பதை உணரச்செய்தவர்களும் இவர்களே. எனவே மூவர் தமிழ் பற்றி எல்லோரும் அறியச்செய்ய வேண்டும். கூட்டுவழிபாட்டு நிலையில் மக்களை ஒன்றிணைக்கத் தேவாரங்களைப் பயன்படுத்த வேண்டும். இசையோடு இணைவது மட்டுமன்றி மூவர்தமிழ் ஆடலோடு இணையும் ஆற்றல் பெற்றது. ஆடவல்லானின் அடி தொழும் அடியார் தேவாரங்களைப் பாடியும் ஆடியும் முற்காலங்களிலே வழிபட்டனர். இன்று இளையவர்களை இறைவழிபாட்டிலே ஈடுபடுத்த ஆடலும் பாடலுமே ஏற்றவை. மூவர் தமிழால் அவர்கள் இறைவன் பெருமைகளை உணர்வதோடு தமிழ்மொழி ஆற்றலையும் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாலை

திரு.நா.க.சிவராமலிங்கம்

இயற்கையின் எழிலினை எடுத்தியம்பும் மணம்மிகு மலர்களை எளிய நாரினால் தொடுப்பது மலர் மாலையாகும். ஆலயங்களிலுள்ள திருவுருவங்களுக்குச் சூட்டப்படுவதும், ஆரணங்குகள் சூடிக்கொள்வதும், புதுமணத் தம்பதியர் சூட்டிக்கொள்வதும், விழாக்களில் பிரமுகர்களுக்கு அணிவிப்பதும் மலர் மாலையாகும். மாலை மங்கலமான பொருள். இது அமங்கல நிகழ்வுகளிலும் இடம்பெறுவதுண்டு. ஆரம், அலங்கல் என்பனவும் மாலையைக் குறிப்பனவாகும். பாக்கள் ஒரு தொகுதியாக இருப்பது பதிகம் எனப்படும். பத்துப் பாட்டுக்களைக் கொண்டது பதிகம். இது பாமாலை எனப்படும். மலர் மாலையிலும் பார்க்க பாமாலையையே பரமன் உவக்கின்றான் போலும். மலர் மாலை வாடிவிடும்; பாமாலை நிலைத்திருக்கும். எனவேதான் நாயன்மார்கள் பரம்பொருளை பாமாலை சூட்டிப் பரவினர். மூவர் தமிழ், அவர்கள் பாடிய திருமுறைகள், திருப்பாக்கள் பலவற்றை உள்ளடக்கியுள்ளன. தமிழ் பக்தி மொழி. எனவே, பல அருட்பாமாலைகள் அதில் உள்ளடங்கியுள்ளன. இசை இறைவனோடு நம்மை இசைவிப்பது. இதனால்தான் ஓதுவார்கள் ஆலயங்களில் திருமுறைப் பாடல்களை காதலாகி, கசிந்து கண்ணீர் மல்கி ஓதுகின்றார்கள். இறைவனே ஓசை, ஒலி எலாம் ஆனான் எனப்படுகின்றான்.

கவினையும், பொலிவினையும் தருகின்ற மலர்மாலை காதல் உண்டாவதற்கும் காரணமாகின்றது. தான் சூடி மகிழ்ந்த பூமாலையை நாராயணனுக்குச் சூட்டி மகிழ்ந்ததால் "சூடிக் கொடுத்த சுடர்க்கொடி" என ஆண்டாள் போற்றப்பட்டாள். இங்கே காதலை வளர்க்க மலர்மாலை உதவியுள்ளதைக் காண்கின்றோம்.

"தமிழோடிசை பாடல் மறந்தறியேன்", "சொல்லு நா நமச்சிவாயவே" என்பன திருமுறைகளைப் பாட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. பக்தியை ஏற்படுத்தி, வளர்க்க பாமாலைகள் பக்கபலமாக இருந்துள்ளன. இறை காதலை அவை இறுக்கமாக்கியுள்ளன. இறைவன் இசைப் பிரியன். பூவும், நீரும் இறை வழிபாட்டிற்கு போதும் என்றாலும், இசையும், கானமும் பக்திப் பயிர் வளர்வதற்கு வகை செய்துள்ளன. அதனால்தான் இறைவனைப் புகழ்ந்து பாடுங்கள் என்கின்றார் அப்பர் பெருமான்.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
        நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு
        பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடி
        சங்கரா சய போற்றி போற்றி யென்றும்
அலைபுனர்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
        ஆரூரா என்றென்றே அலறா நில்லே!

இறைவனை அலங்காரம் செய்த பின்னரே அருந்தமிழ்ப் பாடல்கள் இடம் பெறவேண்டும் என்பதே அப்பர் பெருமான் கருத்தாகும். பூமாலை முதன்மை பெறுகின்றது. பாமாலை அதனை ஒட்டி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பரமனைப் பாடுவார் எல்லோர்க்கும் அடியேன்" என்று ஒருபடி மேலே சென்று, அடியவர்களை அரன் எனப் போற்றுகின்ற அருள் நிலையைக் காட்டுகின்றார் சுந்தரர். இறைவனோ, தொண்டருள் அடக்கம். தொண்டர் தம் பெருமை சொல்லுதற்கரிது.

பக்தராய்ப் பணிவர்க ளெல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார டியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே!

இறைவன் இசையின் வடிவமாக இருக்கின்றான் என்பதனால், இசையின் பெருமை இயம்புதற்கரிது. அதனை ஆளுடைய பிள்ளையார் அழகுற அருளியுள்ளார்.

பண்ணும் பதமேழும் பலவோசை தமிழவையும்
உண்ணின்ற தொர் சுவையும் முறுதாளத் தொலி பலவும்
மண்ணும் புனலுயிரும் வருகாற்றும் சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம் மிழலையே.

மனிதப் பிறவி எடுத்த நாம், மன்றில் ஆடுபவனை தேவாரம் பாடிப் பரவ வேண்டும். ஏனெனில், திருமுறைகளைப் பாடுபவர்களை ஓதுவார்களை, அவை நன்னெறிக்கு உட்படுத்தும். எனவே, நலஞ்செயும் நாதனை நாத்தழும்பேறப் பாடுமின்; தினமும் ஒரு தேவாரம் இறைநினைவுடன் பண்ணுடன் பாடுங்கள். இந்த ஆரம் எந்நேரமும் உங்களுக்கு உதவும். பரம்பொருளுக்கு பூமாலையும் சூட்டுங்கள்; பாமாலையும் சூட்டுங்கள். கரம் குவித்து வணங்குங்கள். உரம் பெற்று வரம் பெறுவீர்கள்.

தமிழ் மாலையாம் திருமுறைகள் உங்களைத் தலைநிமிர்ந்து வாழவைக்கும்.

"பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடிநைந்து நைந்து நெக்கு நெக்கு உருக வேண்டும்"

என்ற பரவச நிலையில் பரமன் காட்சியும் கிடைக்கலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயாமூலதன்மம்

மைதிலி தயாநிதி

இக்கட்டுரை பொதுசகாப்தம் ஏழாம் நூற்றாண்டினைச் சார்ந்த அப்பர் என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசு நாயனாரின் தேவாரத்தில் இடம் பெற்றுள்ள தயாமூலதன்மம் என்ற சொற்பிரயோகம் பற்றி ஆராய்கிறது. கிடைக்கப்பட்ட (அல்லது கிடைத்தவற்றுள் தெரிவு செய்யப்பட்டிருக்கக்கூட இருக்கலாம்) அப்பரின் பக்தி ஆக்கங்கள் பன்னிருதிருமுறைகளில் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக வகுக்கப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றுள், நெடுந்தாண்டகம் எனும் யாப்பில் புனையப்பட்ட 99 தாண்டகப் பதிகங்களைக் கொண்ட ஆறாம் திருமுறையில் மட்டும், அதுவும் இரண்டு இடங்களில் மட்டுமே (6.20.6 6.40.6), தயாமூலதன்மம் எனும் சொற்பிரயோகம் இடம்பெறுகின்றது.

தயாமூலதன்மம் (தயாமூலதர்ம:) என்ற தொகைச் சொல்லை தயாவாகிய அடிப்படையான தர்மம் அல்லது தயாவை அடிப்படையாகக் கொண்ட தர்மம் எதுவோ அது என்று விரிக்கலாம். தயாமூலதன்மம் என்பது உயிர்களிடத்துக் கருணை என்ற கொள்கையினை அடிப்படையாகக் கொண்ட சமணசமய தத்துவமாகும். அத்தொடரினை சிவனின் பெருங்கருணையினை ஆதாரமாகக் கொண்ட தர்மம், அதாவது பக்திநெறி என அப்பர் தன் தேவாரங்களில் மீள்வாசிப்புச் செய்திருக்கின்றார் என்பதே இக்கட்டுரை கூறவரும் விடயமாகும். அவ்வகையில் தயா என்ற வடசொல்லினை இறைவனின் பெருங்கருணையினைச் சுட்டுவதற்கு முதன்முதலில் தமிழில் பயன்படுத்தியவரும் அப்பரே எனலாம்.

குறிப்பிட்ட அர்த்தத்தில் சமணசமயத்தில் வழங்கப்பட்ட ஒரு மொழித்தொடரினை, தனது திருத்தாண்டகத்தினை வாசிப்போர் பிறிதொரு பொருள் எடுத்துக்கொள்ளக் கூடிய வகையில் அப்பர் கையாண்டுள்ளார். தயாமூலதன்மம் என்பதில் தயா என்ற ஆ ஈறு கொண்ட பெண்பால் வடசொல் எவ்விதமாற்றமும் இன்றி அப்பர் திருத்தாண்டகத்தில் வருகிறது. மேலும், இது வடசொற்கள் எவ்வாறு தமிழில் இடம் பெறல் வேண்டும் என்ற இலக்கணவிதிகளுக்கு அமைவானதாக இல்லை. அதேசமயம், பக்தி (பத்தி), சாஸ்திரம் (சாத்திரம்), கோத்ரம் (கோத்திரம்) முதலாய வடசொற்கள் யாவும் தமிழ்ப்படுத்தப்பட்டே தேவாரங்களில் வருகின்றன என்பது கவனிக்கத்தக்கது. அதேபோன்று தர்ம என்ற சொல் தன்மம் என்று அப்பர் திருத்தாண்டகத்தில் இடம் பெறுகிறது. தன்மம் என்பது மணிமேகலை காவியத்தில் பௌத்த தன்மத்தைக் குறிக்கின்றது. தயாமூலதன்மம் எனும் தொடரில் வரும் தன்மத்தினை அறம் என்றோ அன்றேல் நெறி என்றோ கூறலாம். சிவனின் கருணையாற்றான் தான் சிவன் மீது பக்தி பூண்டதாய் அப்பர் பலவிடங்களில் குறிப்பிட்டுள்ளார். எனவே தன்மம் சிவனின் கருணையினை ஆதாரமாகக் கொண்ட பக்தி நெறி என்று கூறலாம்.

தயா எனும் வடசொல், சங்க இலக்கியங்களிலோ, அறநூல்களிலோ அன்றி சைவத்திருமுறைகளிலோ பெரிதும் பயின்று வரும் சொல் அன்று. சென்னை ஆசிய நிறுவனம் வெளியிட்ட சங்க இலக்கியச் சொல்லடைவில் இப்பதம் இடம்பெறவில்லை. அப்பருக்கு முந்தைய காலத்தவையான திருக்குறள் முதலான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலோ அன்றிச் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களிலோ இது இடம்பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. அப்பர் காலத்திற்கு மிகப் பிற்காலத்தில் எழுந்த தமிழ் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு நூல்களிலும் இத் தொடரைக் காண்பதரிது. தயா என்ற சொல்லை அப்பரின் திருத்தாண்டகம் தவிர்ந்த திருமுறை நூல்களான திருவாசகம், திருமந்திரம், கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி எனும் நூல்களில் காணக் கூடியதாக உள்ளது. இரக்கம் அல்லது கருணை என்ற கருத்தில் தயா என்பது இந்நூல்களில் குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் இறைவன் தயாபரன் என்றும் விளிக்கப்படுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயா எனும் கிளவி மூலம் இறைவனின் பெருங்கருணையைக் சுட்டும் இந்நூல்கள் அப்பரின் காலத்திற்குப் பிற்பட்டவை.

சமணசமயத்தில் ஜீவதயா அல்லது உயிர்களிடத்து இரக்கம் கொள்ளல் என்பது மிக அடிப்படையான கொள்கையாகும். இதுவே சமணத்தின் மிகப்பிரதான தத்துவமான அகிம்சை என்னும் கொல்லாநெறி விரதத்தின் உயிர்நாடியாக விளங்குகிறது. அகிம்சை தத்துவம் காரணமாக சமணம் விலங்குகளைப் பலியிடும் வேதவேள்விகளை எதிர்க்கின்றது. விலங்குகளுக்குப் பதிலாக உயிரற்ற பிரதியீடுகளைக் கொண்ட வேள்விகளையும் கூட அது ஏற்றுக்கொள்வதில்லை. சமணத்தின் பிரபலமான கதையொன்றில் யசோதரன் என்பவன் பெண் தெய்வத்திற்கு மாவிலாலான இளம்சேவலையே பலி கொடுத்தானாயினும் நரகம் செல்லவேண்டி நேரிடுகிறது. இங்கு அவன் செயலில் அகிம்சையைக் கடைப்பிடித்தவனாகத் தோன்றினும், அவன் மனத்தில் பிற உயிரைக் கொல்லும் எண்ணம் இருந்ததை மாவிலாலான விலங்குப் பிரதியீடு காட்டுவதால் அவன் நரகம் புகுகின்றான். இவ்வாறு மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் அகிம்சை நெறியினைப் பின்பற்றுவதற்கு தயா –உயிர்களிடம் கருணை- ஆதாரமாகின்றது.

தயா என்பது சமணத்திற்கு மட்டுமன்றி, பௌத்தத்துடனும், விசேடமாக மகாயான பௌத்தநெறியுடன் தொடர்புடைய கருத்தாக்கம் என்பது கவனத்தில் கொள்ளவேண்டியதொன்றாகும். ஆனால். தயாமூலதன்மம் என்ற தொடர் பௌத்தநூல்களில் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவில்லை. பௌத்த காவியம் மணிமேகலை அருள் என்ற தமிழ்ப் பதத்தை தயா என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்துகிறது. எனவே, தயாமூலதன்மம் என்பதை அப்பரின் சமணசமய வாழ்க்கை அநுபவத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஒரு தொடராகத்தான் கொள்ளமுடியும்.

அப்பர் சமணமதம் சார்ந்திருந்தமைக்கான அகச்சான்றுகள் அவர் பாடல்களில் காணப்படுகிறன. எடுத்துக்காட்டாக, அவர் திருவாரூர்ப் பழமொழிப் பதிகத்தில் (4.05) தான் சமணர் உபதேசம் கேட்டு (சமண் நீசர் சொல்லே கேட்டு), உறி தூக்கியும், கண் எரியுமாறு தலைமயிரைக் கையாலே வருத்திப் பறித்தும் (கண்ணழலத் தலை பறித்து), பிச்சையைக் கையிலேற்று உண்டும் (இருகை ஏற்றிட உண்ட ஏழையான் கையிலுண்டு), பலர் ஏளனச் சிரிப்புக்கு வெட்கப்படாமலும் (பதியொன்று நெடுவீதிப் பலர்காண நகை நாணாது), பெண்களைக் கண்டாலே ஓடிச்சென்று கதவடைத்தும் (காவிசேர் கண்மடவார்க் கண்டோடிக் கதவடைக்கும்) என சமணசமயத் துறவொழுக்கம் பூண்டிருந்தமை பற்றிக் கூறியுள்ளார்.

ஜைனமதம் கூறும் தயாமூலதன்மம் என்பது அப்பர் தேவாரம் பிரதிபலிக்கும் பக்திமார்க்கத்திற்குப் புறம்பானது என்றே கருத வேண்டி இருக்கின்றது. தயாவிரதிகளான சமணத்துறவியரின் மயிற்பீலி கொண்டு செல்லும் வழக்கம் அப்பரினால் பெரிதும் பாராட்டப்படவில்லை. அகிம்சை விரதம் பூண்ட சமணத்துறவியர் பூமியில் வாழும் ஜந்துக்கள் தாம் நடக்கும்போது நசிந்து உயிர் துறவாமலிருக்க அவற்றைக் காப்பாற்றும் நோக்குடன் மயிற்பீலியினால் நிலத்தினை மென்மையாகக் கூட்டிச்செல்வர். இது அகிம்சை விரதத்தினை இம்மியளவேனும் பிசகாது கடைப்பிடிக்கும் முறைகளுள் ஒன்றாகும். இவ்வாறு மயிற்பீலியுடன் அகிம்சையினைப் பெருநோன்பாக் கருதி ஒழுகிய சமணத் துறவியரான அறிவிலிகள் இச் செயல் மூலம் யாது பயன் பெற்றார் என்று வினவுகிறார்.

பீலிகை இடுக்கி நாளும் பெரியதோர் தவமென் றெண்ணி
வாலிய தறிகள் போல மதியிலார் பட்ட தென்னே (4.39.2)

மேலும் மயிற்பீலி இடுக்கும் சமணர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்தி உய்வித்தான் என்று சிவனைப் பற்றிக் கூறுகின்றார்.

குண்டர் பீலிகள் கொள்ளுங் குணமிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிண்ட ரோடெனை வேறு படுத்துயக் கொண்ட நாதன் (5.44.9)

எனவே, ஆவுரித்துத் தின்றுழலும் புலையராக இருப்பினும் அவர்கள் சிவனடியார்களாக இருப்பின், அவர்களே நாம் வணங்கும் கடவுளர் என்று முழங்கும் அப்பர் தயா என்பதை சமணசமயம் பயன்படுத்தும் பொருளில் வழங்கியிருக்கமுடியாது என்பது தெளிவு.

இனி, தயாமூலதன்மம் எனும் சொற்தொடர் இடம்பெறும் அப்பரின் இரு பாடல்களினையும் நோக்குவோம்.

குலங்கொடுத்துக் கோள்நீக்க வல்லான் றன்னைக்
குலவரையன் மடப்பாவை இடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னுந்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே 6.20.6

பொருள்: அடியவர் குடிக்கு உரியவனாகச் செய்து, தீங்குகள் அகற்ற வல்லவன், இமவான் மகளை இடப்பாகத்தில் கொண்டவன், மும்மலங்களினைப் போக்கித் தனது பேரருளாகிய தீர்த்தத்தில் ஆட வைத்தவன், வேதமோதும் அந்தணன், பிறைச்சந்திரன் தவழும் சிவந்த முடியினை உடையவன், பொய்ம்மை அகற்றி, இறைகருணையினை (தயா) ஆதாரமாகக் கொண்ட (மூல) பக்திநெறி (தன்மம்) எனும் உண்மைவழி ஒழுகிப் பணிந்தவர்களுக்கு நன்மை செய்யும் தலைவன், நள்ளாறு எனும் தலத்தில் எழுந்தருளியிருப்பவன். அத்தகையவனை நான் எண்ணி உய்ந்தேன்.

மேற்படி பாடலில் தயாமூலதன்மம் என்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலம் கொடுக்கும் நம்பி என்பதில் தயா என்பது இறை காருண்யத்தைக் குறிக்கின்றது. சிவன் தன்னைச் சார்ந்தவர்க்கே நலம் புரிபவன் எனும் அப்பர் கருத்தினை இதற்கு ஆதாரமாகக் காட்டலாம்.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறு நல்கு வான்நலன் 4.11.6

மேலும், சமண, பௌத்த தத்துவங்களைக் கவனத்தில் கொள்ளாதவரையே சிவன் விரும்புவன் என்று அப்பர் கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது.

வெற்றரைச் சமண ரோடு விலையுடைக் கூறை போர்க்கும்
ஒற்றரைச் சொற்கள் கொள்ளார் குணங்களை யுகப்பர் போலும் 4.68.9

அடுத்த திருத்தாண்டகம் திருமழபாடி இறைவனை நோக்கிப் பாடியது:

சினந்திருத்துஞ் சிறுப்பெரியார் குண்டர் தங்கள்
செதுமதியார் தீவினைக்கே விழுந்தேன் தேடிப்
புனந்திருத்தும் பொல்லாத பிண்டி பேணும்
பொறியிலியேன் றனைப்பொருளா வாண்டு கொண்டு
தனந்திருத்து மவர்திறத்தை யொழியப் பாற்றித்
தயாமூல தன்மவழி யெனக்கு நல்கி
மனந்திருத்தும் மழபாடி வயிரத் தூணே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றென்றே நானரற்றி நைகின் றேனே. 6.40.6

பொருள்: சினந்து பிறரைத் திருத்தும், சிறுமைக்குணம் கொண்ட (ஆனால்) தம்மைப் பெரியார் போலக் காட்டிக் கொள்பவர் (சிறுப்பெரியார்) சமணர்கள் அந்தப் பொல்லாத அறிவுடையவர்களின் பாவச்செயல்களில் நானும் ஈடுபட்டேன். மலைசார்ந்த புன்னிலத்தில் தேடித் தேடி தீய பிண்டிமரத்தினைக் கவனமாக வளர்க்கும் அறிவிலி ஆனேன். அத்தகைய என்னை ஒரு பொருளாக மதித்து, அடிமையாக ஆட்கொண்டு, பெண்கள் பற்றிய எண்ணத்தினை என் மனதிலிருந்து அகற்றி, சிவகருணையினை (தயா) ஆதாரமாகக் கொண்ட (மூல) பக்தி நெறியினை (தன்மம்) எனக்குக் காட்டி, என் உள்ளத்தினைச் செம்மைபடுத்திய மழபாடி தலத்தில் எழுந்தருளியிருக்கும் திண்ணிய பற்றுகோடே! (தூணே!) இவ்வாறெல்லாம் (உனை நினைத்து) நான் பிதற்றி நெஞ்சம் உருகுகின்றேன்.

இப்பாடலில் அப்பர் தம்மை நல் வழிப்படுத்த முயலும் சமணரையும், சிவனையும் ஒப்பிடுகின்றார். சிறுப்பெரியார், செதுமதியார் என்ற சொற்றொடர்கள் மூலம் சமணர் அற்பகுணத்தினராயும், தம் தவ ஒழுக்கத்திற்கு ஒவ்வாத சினத்தொடு பிறரைத் திருத்துபவர்களாயும் சித்திரிக்கப்படுகின்றனர். இதற்கு எதிரிடையாக சிவன் வர்ணிக்கப்படுகின்றான் - தவறான வழியிற் சென்ற அப்பர் உள்ளத்தினை, தனது காருண்யத்தினை அடிப்படையாகக் கொண்ட பக்தி வழி மூலம் நல்வழிப்படுத்தியவன்.

மேலும், சமணத் துறவியர் செய்கைகளினைப் பின்பற்றித் தானும் சமணமதத்திற்குப் புனிதமான பிண்டி மரத்தினைப் பேணுபவராயினேன் என்று அப்பர் கூறுகிறார். பிண்டி என்பது மன்மதனின் ஐந்து புஷ்ப பாணங்களுள் ஒன்று. இதனை இங்கு காமத்தின் அடையாளமாகவும் கொள்ளலாம். எனவே, வெளிப்பார்வைக்கு அப்பர் சமணமதத்தினராய், புனித பிண்டிமரம் பேணுபவராக இருப்பினும் அவர் மனம் அக்காலம் ஒருமுகப்பட்டதாய் இருக்கவில்லை. இவ்வகையில் அவரும் “சிறுப்பெரியார்” போலத்தான் விளங்கினார். சிவனின் கருணை அப்பரின் இவ் உள்ளக் குற்றத்தை நீக்கிற்று (தனந்திருத்து மவர்திறத்தை யொழியப் பாற்றித்) மனதைத் திருத்தியது. ஆனால் சமணர் இறைவன் கருணைக்கு (தயா) ஆளாகாமையினால் அவரைப் பிறிதோரிடத்தில் திருந்தா அமணர் (4.94.10) என்று குறிப்பிடுகிறார்.

தயாமூலதன்மம் என்று இவ்விரு திருத்தாண்டகங்களிலும் குறிப்பால் உணர்த்தப்படுவது சிவன் கருணையினை ஆதாரமாகக் கொண்ட பக்திநெறியாகும். பக்தி நெறிக்குத் தன்னை இட்டுச் சென்றவன் சிவனே என்று அப்பர் குறிப்பிடுகின்றார் (பத்திக்கே வழிகாட்டி 6.84.7).சிவனே தன்னிடம் பக்தி பூண்டு, வணங்கிப் பாமாலை பாடவைத்தவன் என்றும் மொழிகின்றார்.

பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித் தானை 6.54.3

இன்னோர் இடத்தில் பக்தி நெறியின் தோற்றுவாய் இறைவன் கருணையே என்பதை இன்னொரு விதமாகக் கூறுகின்றார்:

காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே 6.95.3

இதையே மாணிக்கவாசகரும் சிவபுராணத்தில் “அவன் அருளாலே அவன் தாள் வணங்கி” என்றார். சிவனின் தயை இன்றி மானிடர்க்குப் பக்தி கைகூடாது. அதற்குத் தன் வாழ்க்கையினையே தனது பதிகங்களில் எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளார் அப்பர்.

(அமரர் பேராசிரியர் செல்வா கனகநாயகத்திற்கு சமர்ப்பணம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Analysis on Radhakrishnan's Ideas on World

Prof.N.Gnanakumaran
Department of Philosophy, University of Jaffna, Jaffna. Sri Lanka

In the modern times, Indian Philosophy has been interpreted by several Contemporary thinkers in the tradition of the ancient Philosophy. Most of the Contemporary thinkers of India belong to the Vedantic tradition. Due to the awareness of the needs of the present century and the influence of the western Philosophical ideas, most of the contemporary thinkers were led to interpret or take a view slightly different from the traditional explanation. Especially, Sarvepallai Radhakrishnan is influenced by the western thoughts and tries to interpret the world of the traditional Vedanta to make it acceptable to the modern period. He himself made it know in 'the fragment of a confession' that "my approach to the problem of philosophy from the angle of religion as distinct from that of science or of history was determined by my early training." Radhakrishnan is a devout but not a rigid follower of Sankara's Vedanta. To meet the needs and demands of the modern world he has re formulated the Vedanta of Sankara in accordance with the changed context. He believes that only the new approach fulfills the new requirements of the modern world.



Man can not live or think without making assumptions about himself and about the world in which he lives. In fact, according to Radhakrishnan, 'Philosophy is an attempt to explain the world to which we belong'. Radhakrishnan, like Sankara, believes that the absolute is the only ultimate reality. True to the spirit of the changing trends in contemporary Indian Philosophy, Radhakrishnan conceives the empirical world as real and spiritual. He takes an idealistic view when he tackles the problem of world. His way of presentation of his interpretation makes an advancement from the traditional view. The job of Philosophy is not to deal with facts which is the work of science, but to give us a vision of meaning and purpose of life, of existence and of the universe. As Radhakrishnan asserts, 'throughout the history of Indian thought the ideal of a world behind the ordinary world of human strivings, more real and more intangible, which is the true home of the human spirit has been haunting the Indian race'.

Indian thought employs the words, Samsara or jakat to indicate the dynamic character of the universe. Continuity and change are the two characteristic features of the material or physical world. Discarding the ancient conception of matter as atomic, inert and indivisible substance, Radhakrishnan incorporates the scientific view of matter and draws our attention to two significant contributions in it. First matter is a system of energy; it is dynamic,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

changeable and not an inert reality. Secondly the nature as constituted of cosmic waves of energy is an interconnected system. Thus Radhakrishnan develops the dynamic and energic view of the universe.

Radhakrishnan normally identifies the distinction between the universe as apprehended by the scientist and as apprehended by the mystic. Radhakrishnan holds fast to the view that, 'the truth of the universe is not a mathematical equation or a kinematical system or a biological adjustment or an ethical individualism but a spiritual organism'. 'In truth the pulse of the spirit throbs through nature'. The materiality or actuality of the universe does not contradict its spirituality, on the other hand the letter comprehends the former. In other words, spirit is not opposed to matter for it includes matter but the universe as apprehended by the mystic brings us closest to Reality. As such seeing the universe as spirit is seeing it whole while seeing it as matter is seeing it partially. 'The universe seems to be alive with spirit, aglow with fire, burning with light'. As the Chandogya Upanishad declares, we will see spirit, 'above, behind, before, to the right and to the left. Integral experience will show that the universe is spirit. 'Spirit is the reality of the cosmic process'. It is the transcendent absolute that manifests itself as the creative power of the universe. To him matter is creative energy which renders possible the creation of forms and types. He rightly observes, space, time and material are abstractions from the concrete fact which is a set of events. They exist together in concrete reality.

Radhakrishnan feels much at home with the view that nature conceals and symbolizes a deeper order. He is keenly alive to the primacy of spirit over matter. But this does not mean that all things are of such stuff as ideals are made. The basic claim is merely that the universe is not a blind process but a teleological one. Bernard Phillips aptly remarks, 'that the realm of the physical is not self sustaining and that is the creation or manifestation of a spiritual order is the central tenet of his metaphysics. Radhakrishnan clearly steers between these two extremes. He recognizes the indissoluble links that bind spirit with nature without disputing the superiority of the former. He does not accept spirit and nature as two ultimate principles. They are opposite yet are complementary poles of all existence. The dualism between the two can not be abolished by making nature a form of spirit as in Hegel or spirit a form of nature as in Marx. The right attitude to nature is repeatedly expressed by him in such utterances, 'Man is bound up with nature; the human spirit is wedded to the material organism. Contact with the body, instead of being a tainting of the purity of the soul, is just the condition necessary for fulfilling its nature. How are we to account for the world? The most articulate expression of his viewpoint, we find in his address at the sixth International congress of Philosophy (1926) ' we are not so much in need of a keen analysis of particular problems as those of essence and existence, sense and perspectives or a pragmatic insistence on methodology and on the futility of metaphysics, interesting as they all are, but philosophy in the large sense of the term, a spiritual view of the universe, board based on the results of sciences and aspirations of humanity.

Radhakrishnan declares his faith in the hidden harmonies of the universe because they are to it matters of logical demonstration. He asserts that the world exists by the sustaining presence and activity of God. Without this presence and activity it would collapse in to a nothingness. He believes that the world has no intrinsic value and no independent reality of the kind that materialists or naturalists want to attribute. but at the same time Radhakrishnan strongly denies that maya implies that world is illusion or unreal and is mere shadow. He holds Deussen responsible for

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the spread of erroneous view which creates a complete misrepresentation of the Indian thought. This view, he claims, is foreign to the Upanishads as well. Radhakrishnana's statement in his commentary on the Bhagavad Gita also exposes that maya does not imply that world is an illusion or is non- existent absolutely. It is a delimitation distinct from the unmeasured and the immeasurable. Therefore, maya is a feature of the central reality, neither identical with nor different from it.

The physical world is there bound in space, time and cause. The negative attitude towards the world is discarded. The positive approach to the world reaches to its zenith in the philosophy of the modern thinkers who develop the philosophy of humanism. Radhakrishnan finds the principal categories of the world of experience as self contradictory. 'They have no real existence yet they are not non- existent. The world is there and we work in it and through it. We do not and can not know the why of this World. It is this fact of its inexplicable existence that is signified by the word maya. The doctrine of maya as propounded by Sankara is supposed to repudiates the reality of the world and thus make all ethical relations meaningless. Dasgupta hints at the same difficulty when he observes, 'How the 'many' of the world can arise out of 'one'- the self- and in what sense the reality of the world can be regarded as spiritually grounded, remains a question which has never been explained in the Upanisads'.

Radhakrishnan and Sankara utilized the doctrine of maya in different ways relating to the status of the world. Radhakrishnan attempts to give a rational and acceptable explanation to the concept of the absolute, world and soul. In doing so, he uses the concept of maya. Maya does not imply illusion. In the lucid words of Radhakrishnan, 'the word, maya is not a deceptive façade of something underlying it, since the supreme is the basis of the world, the world cannot be unreal. Maya has a standing in the world of reality. Maya as well as the world are real, according to him. At the same time he holds that Sankara is not an illusionist. Sankara, is rightly credited with the systematic formulation of the doctrine of maya, tells us that the highest reality is unchangeable. He warns us, however, against the temptation to regard what is not completely real as utterly illusory. The world has empirical being which is quite different from illusory experience.

Radhakrishnan never fails to point out that maya should not be taken as a value judgment, but only as a logical concept of inexplicability. Further more, he says that the world is not illusion but appearance only. This preserves the conception of God as a true creator and at the same time does not rob action of it's spiritual significance. Radhakrishnan puts up a spirited defense even to Sankara's version of the doctrine of maya. In a fitting reply to the charge that the doctrine of maya repudiates the reality of the world, that the world of nature becomes unreal and human history illusory, he pleads that the sprit in which Sankara treats maya does not entail the illusory character of the empirical world, human history and human endeavour, thus the manifold universe is not an illusion. Radhakrishnan himself makes the distinction between illusion and unreality when he declares that "unreal the world is; illusory it is not".

Radhakrishnan is keenly aware of the difficulty involved in explaining the concept of maya, yet he does not evade the issue and is in no mood to tread the beaten path and rightly expounds his viewpoint thus, 'It is for Sankara a mixture of truth and illusion. It partakes of the characteristics of both being and non-being while Sankara refuses to

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

acquiesce in the seeming reality of the actual he does not dismiss it as unreal phantasmagoria. It is not determinable either as real or as unreal. But Radhakriahnan tries to transform what is neither being nor non-being into what is both being and non-being. To him the world is a derived being. To mark the distinction between Absolute being and dependent being, we call the latter, maya, when the Absolute is taken as pure being, its relation to the world is inexplicable, anirvacaniya. Without the background of being, there can be no world. The relation between the two can not be logically explicated. This inexplicability of the logical relationship does not repudiate the existence of world. The similes of the appearance of snake in the rope and of silver in the shell, that we often come across bear witness to the fact of one-sided dependence of the world on the Absolute. 'The purpose of these analogies is not the relationship is such that world exists without any change in the being of the Absolute. Radhakrishnan clearly subscribes to the realistic view of the world, he makes a realistic approach and successfully counteracts the charge leveled by certain critics that it is illusory in character. He performs the difficult feat of converting maya into the creative principle accounting for history of the universe and individual souls etc. Prof.Sundram points out that Radhakrishnan's interpretation of Sankara has gained the reputation of 'somehow accommodating' the world in reality of Brahman. In the collection The Philosophy of S.Radhakrishnan, while replying to his critics, he states that 'In my writings I have interpreted the doctrine of maya so as to save the world and give it a real meaning'. Hence he boldly reinterprets Sankara himself. He shows ingenuity and displays ample imaginative freedom with the result that the Vedanta doctrine of maya is given a transformation which is partly Hegelian and partly Bergsonian and in an even more pronounced way Whiteheadian. According to Radhakrishnan, maya should be taken only as a logical concept of inexplicability, whereas Sankara uses maya to save the reality of Brahman. Therefore, he uses the concept of maya to save the reality of the world from the concept of illusion. The doctrine of maya, according to Radhakrishnan, is not an educative principle, but a means of covering improvable faith in pseudo-academic manner.

According to Radhakrishnan, the world is not an illusion. It is not nothingness for to is willed by God. The reality of the world is not in itself, but it is in the thought and being of the creator. The world is derived being. The world and its objects do not present any problem to him for he succeeds in maintaining that all objects of this world are to be regarded as appearances in reality, though not of it. Metaphysically it can be said that the universe is the outcome of the evolutionary process of the spirit. E1se where he mentions that maya is the name of the negative principle which lets loose the universal becoming, thereby creating endless agitation and perpetual disquiet. The world-process is not so much a translation of immutable being as its inversion. Radhakrishnan repeatedly denies that the doctrine of maya is a doctrine of the unreality of the world or that it makes all moral relations meaningless.

Radhakrishnan holds a realistic view of the world. He uses the concept of maya as an explanation of the relation of the apparent to the real. Like Sankara, he postulates the entire world in Brahman. At the same time, maya, in his interpretation, is a statement of fact. Without maya our empirical life in the world is not possible. All objects of this world are said to be appearance in reality. Radhakrishnan clearly states that ignorance, avidya or maya produces the world appearance. It cannot be said to be existent or non-existent; sad-asad- anirvachaniya and it ceases when Brahman is know. It is true that in our ordinary experience are perceive multiplicity and the Vedic injunctions imply the existence of plurality. The scriptural texts which speak of Brahman as the one and only reality have greater validity than those

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

which imply the existence of plurality. Even according to Sankara the wórld is not non- existence; it is not absolutely real. Brahman with maya or sakthi as power is the cause of the world. The world has a relative empirical existence. He repeatedly states that this world is not an illusion, it is not nothingness for it is willed by God and therefore is real. In her 'Concept of maya', Ruth Rayna also puts forward the view that may is the anti-thesis of vidya and the maya is not to translated as illusion. Without contradicting the basic principles of Sankara Radhakrishnan has given the concept of maya a new significance by putting together the various aspects of the concept. He explains the need for a new interpretation for "our times are different, our habits of thought, the mental background, to which we relates our experience, are not quite the same as those of the classical commentators. The chief problem facing us today is the reconciliation of mankind. Due to this attitude, Lawrence Hyde, in his article in the book 'The Philosophy of S.Radhakrishnan' maintains that Radhakrishnan's standpoint regarding the concept of maya is much nearer our own than that of Sankara... The world is not an illusion, but an appearance. He adopts a liberal and positive attitude in explaining the doctrine of maya. . No one treats life as an illusion or to be indifferent to the world's welfare. He maintains that the Brahman, when viewed not merely as Absolute being but as Eternal creativity, the creative power is called maya. We know that without the background of 'being' there cannot be any world appearance. The relation between Brahman and the unreal world cannot be logically, explicated. This inexplicability of the logical relationship does not repudiate the existence of the world. It does not imply that the world is not, but it appears to be. At the same time Radhakrishnan clearly states that all logical explanations of the relation between the world and Brahman are unsatisfactory because it is ultimately a riddle and is indefinable.

Radhakrishnan espouses the belief that the empirical world is between being and non-being, that it is not ultimate but neither it is nothing or illusion. Maya is taken to be the concept which was devised to express the ultimate mystery in the relationship between the Absolute and the empirical world and the reason for the existence of the empirical world and its creation by the Absolute. Radhakrishnan is never tired of repeating that we can not answer the question 'Why?' and that the concept of maya expresses this ultimate mystery. 'An idealist view finds that the universe has meaning, has value. Ideal values are the dynamic forces, the driving power of the universe. The world is intelligible only as a system of ends. To Radhakrishnan the 'why' and 'how' of the existence if the empirical world and individuals are a mystery expressed in terms of the doctrine of maya, a doctrine which does not entail the illusory character of the world, although it does entail the non-ultimate and dependent status of the empirical.

Radhakrishnan gives a spiritual interpretation to the modern theory of evolution. He holds that spirit is the goal of evolution. He examines the various explanations of the cosmic process put forth by Naturalism, Holism, Emergent Evolution and Ingressive Evolution. All these theories, according to Radhakrishnan, are vulnerable to certain defects and as such does not approve of them. Though he is aware of the truth involved in them yet he is much more favourabley inclined towards the last explanation- that of Whitehead. Radhakrishnan remarks, 'Every occurrence is a mystery... physical science fails if it attempts to transform a miracle in to an equation'. In the cosmic evolution the different stages are not apposed as good and evil. It is an evolution from one stage to another within a unity. He emphasizes that, 'the world process is not an incessant fluctuation comparable to a surging sea. It is a movement with a direction and a goal'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Radhakrishnan tries to assimilate the theory of scientific evolution with his Advaita philosophy. He makes a distinction between God and the Absolute. Process belongs to God but the Absolute is above process. But then God and Absolute are identical. Repeatedly he affirms that the Absolute is the pre cosmic nature of God and God is the Absolute from the cosmic point of view. The universe is actually the overflowing and one mode of the self- realization of the Absolute. Thus whitehead's 'ingressive evolution', with which Radhakrishnan agrees to a great extent, paves the way for a satisfactory explanation in revealing or claiming that 'God is the ground and the goal of the whole evolutionary scheme'. But we must not lose sight of the fact that god is not entirely free from the process for 'God in whitehead's scheme is affected by the process of reality. His nature finds completion only in terms of the world process. Radhakrishnan accords a spiritualistic interpretation to the modern theory of evolution. He affirms that spirit is the goal of evolution. We should not overlook this important truth and get involved in mechanical explanations which prove of no avail. Hence he puts his view succinctly thus, 'Evolution is no explanation. It does not say why the process should have ever occurred, why life should occur at all?'

Radhakrishnan declares frankly that these various interpretations of the cosmic process, dominated by the scientific spirit, are agreed in thinking that the temporal process gives meaning to our existence. They are also aware of the truth that strictly scientific principles can not account for or explain the complex world of perpetual change. He urges that, 'our search for the reality of the world, for the structure of the cosmos, reveals the presence of something invisible and eternal which is working within the visible and the temporal world. Science cannot deal with the why of the temporal process as a whole. The meaning of the mystery, the origin and the end of the world can not be scientifically apprehended. It is a fact that they require to be investigated metaphysically only. Thus invariably we are led to the conclusion that the historical world of becoming is incapable of explanation from within itself. Radhakrishnan rightly undertakes the task of showing that an idealist is not obliged either to ignore or to make light of physical facts in order to maintain the theory of the Absolute. In his interpretation of the world, we hear the echo of the same truth over and over again to which he is never tried of reiterating. Nature will reply to the insistent call of 'spirit'.

## சைவத் தமிழ் அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

அடுத்த வருடம் புத்தம் புது மலராய் சைவநீதி மலர் வெளிவந்து, நறுமணம் வீசி பொலிவுடன் விளங்க சைவசமய சம்பந்தமானதும் பலதரப்பட்ட மக்களுக்கும் பயன்தரக்கூடிய வகையிலும் உள்ள ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேற்படி ஆக்கங்கள் சைவநீதி மலரில் ஏற்கனவே வெளிவராதவையாக இருப்பது அவசியம். இவை தமிழிலோ ஆங்கிலத்திலோ கட்டுரைகள் ஆகவும், கவிதைகள் ஆகவும் வினா விடைகளாகவும், அல்லது கதைகளாகவும் அமையலாம்.

ஆக்கங்கள் ஒவ்வொன்றும் தரமானதாகவும் மலரின் 2 பக்கங்களுக்குள் அடங்குவதாகவும் இருத்தல் வரவேற்கத்தக்கது. இவற்றை கணனி மூலம் அச்சிட்டோ திருத்தமான கையெழுத்துப் பிரதியாகவோ 01.10.2015 க்கு முன்னர் அனுப்பி வைக்கவும். மாணவர்களின் ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன.

விலாசம்:

**114, Joycedale street,**
**Markham ON. L3S 3J2**
canadahindumaamantram@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவழிபாடும் இளையோர் மேம்பாடும்

விமலா பாலசுந்தரம் - M.A.

இறைவழிபாடே பிறவிப்பயனை அடைவதற்கு அவசியமானது என்பதை 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே திருவள்ளுவர் திருக்குறளில் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்".

தமிழரது பண்பாட்டு வரலாற்றில் இறை வழிபாடு உன்னதமாகப் போற்றப்படுகிறது. பண்டைக் காலந்தொட்டு உலகெங்கும் பரந்து வாழும் அனைத்துச் சமூகத்தினரும், பண்பாட்டுக் குழுவினரும் தத்தமது கடவுளரை வழிபட்டு வந்துள்ளனர். பூர்வீககால மக்கள் மலைச் சாரல்களிலே உள்ள குகைகளில் தாம் வழிபடும் தெய்வ உருவங்களை வரைந்து அல்லது செதுக்கி வழிபட்டு வந்தமைக்கான சான்றுகள் குகை ஓவியங்களாகக் கிடைத்துள்ளன. இவை பல்லாயிரம் ஆண்டுப் பழைமை மிக்கவை. பண்டைத் தமிழர் ஆடியும் பாடியும் தம் இறை வழிபாட்டை மேற்கொண்டனர். முருகன். சிவன், கொற்றவை, திருமால் ஆகியோருக்கான கோயில்கள் சங்க காலத்தில் முதன்மை பெற்றிருந்தமைக்கு சங்க இலக்கியங்கள் சான்றாகின்றன. அக்கோயில்கள் செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் என்பவற்றால் அமைக்கப்பட்டிருந்தன.

இறை வழிபாடு சமூக முக்கியத்துவம் வாய்ந்தது. களப்பிரர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்தில் (கி.பி 250-கி.பி.500) சமணமும், பௌத்தமும் தளைத்து வளர்ந்ததோடு, பாளி மொழியும் பிராகிருதமொழியும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இந்நிலையில் பல்லவ மன்னா் தமிழ் நாட்டைக் கைப்பற்றியதும் தமிழ் மொழியையும், சைவ வைணவ சமயங்களையும் வளர்ப்பதில் ஈடுபட்டனர். ஆலய வழிபாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, பெரியதும் சிறியதுமாகிய பல ஆலயங்களைத் தமிழ் நாட்டின பல பாகங்களிலும் அமைத்தனர். தொடர்ந்து வந்த சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள் ஆகியோர் தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கான கோயில்களைக் கட்டினார்கள். அவற்றில் இராஜராஜேஸ்வரமும் திருவரங்கமும் முறையே சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் பெருமை தரும் கோயில்களாகும். பல்லவர்காலக் கோயில்கள் யாவும் நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் போற்றிப் புகழ்ந்து பாடப்பட்டவையாகும் இக்கோயில்கள் அனைத்தும் தமிழ் நாட்டில் இன்றுவரை இறை வழிபாட்டைப் பேணிக்காத்து வரும் திருத்தலங்களாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்லவர் காலத்தைப் பக்தி இலக்கிய காலம் என்பர். தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்த சமண சமயங்களை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதற்கும், அதற்கு உதவியாக மக்களைத் திரட்டுவதற்கும் பக்திப் பாடல்கள் பயன்பட்டன. கடவுளர் மீது ஆர்வலர்களாகிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் உள்ளம் உருகி வழிபாடு செய்து பாடியவையே பக்திப் பாடல்கள் ஆகும். சைவப் பெரியார் நால்வரும், பன்னிரு ஆழ்வார்களும் இக்காலத்தில் தோன்றி சமய உணர்வை ஊட்டும் பக்திப் பாடல்களைப் பாடினர். தேவாரம் திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலான பாடல்கள் சைவத்தையும் வைணவத்தையும் புத்துயிர் பெறச்செய்யும் வகையில் பெரிதும் பயன்பட்டவையாகும். தொடர்ந்து வந்த காலப் பகுதிகளில் வாழ்ந்த பட்டினத்தடிகள், அருணகிரிநாதர் முதலாக இருபதாம் நூற்றாண்டில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் உட்பட பலரும் பக்திப் பாடல்களுக்குப் புதுமெருகு கொடுத்து வளர்த்தனர்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் கோயில்களை மையமாகக்கொண்டு நடத்திய பக்தி இயக்கத்தின் மூலம் இறை வழிபாடு தமிழ் நாட்டில் பெரிதும் வளர்ச்சி பெறுவதாயிற்று. இறை வழிபாடு பக்தி மயமாக அமைய வேண்டும் என்ற அடிப்படையில் நாயன்மாா்கள் தம் பக்திப்பாடல்களைக் கருவியாகக்கொண்டு செயற்படுத்திக் காட்டினா். "காதலாகிக் கசிந்து கண்ணீா் மல்கி" ஆராதித்து இறைவனை வழிபட வேண்டும் என்பது திருஞானசம்பந்தர் கூறும் அறிவுரையாகும். இறை வழிபாட்டில் ஒழுங்கும் எளிமையும் பக்தியும் ஒருங்கே அமைய வேண்டும். பூசைகள் எளிமையாக நடத்தப்பட வேண்டும் என்பதைத் திருநாவுக்கரசர், "சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்." எனத் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டு முறையை மக்களுக்கு எடுத்துரைத்தார். மூவர் தேவாரங்களிலும் கோயிலோடு இணைந்த இறை வழிபாடு, சமூகத் தொண்டுகளோடு இணைந்து அமைய வேண்டும் என்ற கோட்பாடே காணப்படுகிறது.

இறைவனை அடைய எளிய வழி பக்தி நெறியாகும். இப்பக்தி நெறிக்கு உறுதுணையாக இருப்பவை திருமுறைகளும், திவ்வியப் பிரபந்தங்களும் ஆகும். சமய குரவர் நால்வரும் தாம் இறைவனிடம் கண்டு அனுபவித்த பேரின்பத்தை இசையோடு பாடத்தக்க பாடல்களாக அருளித் தந்துள்ளனர். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், முதலானவை பன்னிரு திருமுறைகளில் அடங்கும். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூன்று நாயன்மார்களும் அருளிச்செய்த பாடல்கள் தேவாரம் எனப்படும். இசைநயமும், தமிழினிமையும் கொண்டவை இத்தேவாரப் பதிகங்கள். தேவாரங்களில் இறையருள், திருவைந்தெழுத்து, திருநீறு, சிவனின் வடிவங்கள், முதலானவை பற்றிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இம்மூவர் பாசுரங்களும் முதல் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தர் பாடிய முதற்பாடல் 'தோடுடைய செவியன்' என்று தொடங்குகிறது. இறைவன் அம்மை அப்பராக நின்று பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றான் என்பதை இப்பாடற் பதிகம் உணர்த்துகின்றது. அத்தோடு, இறைவனின் ஐந்தொழில்கள், மும்மலங்கள், முதலான சைவசித்தாந்தக் கருத்துக்கள் சம்பந்தரின் தேவாரத் திருப்பதிகங்களில் காணப்படுகின்றன. சம்பந்தர் குழந்தையாக நின்று பாடியமையால் இவரது பாடல்கள் தந்தை முன் மகன் உரிமையோடு பேசுவது போல் அமைந்துள்ளன. சம்பந்தர் பாடற் பதிகங்களில் முதல் ஏழு பாடல்களில், ஆலயங்கள் அமைந்துள்ள சூழலில் காணப்படும் இயற்கையை அழகாக வர்ணித்துப் பாடியிருப்பதைப் பதிகங்கள் தோறும் கண்டுகொள்ளலாம். சான்றாக திருவீழிமிழலைப் பதிகத்தில் அவர் இயற்கையை வருமாறு பாடுவர்:

"தேங்கொள் பூங்கமுகு தெங்கிளங் கொடிமாச்
செண்பகம் வணபலா இலுப்பை
வேங்கைபூ மகிழால் வெயிற்புகா வீழி
மிழலையான் எனவினை கெடுமே"

இயற்கையோடு இணைந்து இறைவழி வாழ்ந்து பேரின்பம் அடையத் துணையாக நிற்பவை சம்பந்தர் பாடல்கள். கிரகநிலை தீயதானால் தீமை விளையும் என்பது நம்பிக்கை. சம்பந்தர் நல்லவர்க் கில்லை நாளும் கோளும் என்பதை கோளறு பதிகத்தில் அழகாகப் பாடியுள்ளார்

'வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி...... '

என்பது அப்பதிகத்தின் முதற்பாடல் அடியாகும். இப்பதிகத்தைத் தினந்தோறும் பாடுவது பயன் தருவதாகும். இவரது தேவாரப் பதிகங்கள் முதன் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசு சுவாமிகளின் (அப்பரது) தேவாரத் திருப்பதிகங்கள் வாழ்வின் நிலையாமையை உணர்த்தி, நிலையான சிவனடிக்குப் பக்தர்களை அழைத்துச் செல்லும் தன்மையானவை. அவை நான்காம் ஐந்தாம் ஆறாம் திருமுறைகளாக உள்ளன. மானிட வாழ்க்கையில் உயர்வு, தாழ்வு என்ற வேறுபாடு எதுவுமின்றி அனைவரும் சிவனடியார்களாக வாழ வேண்டும் என்பதை அப்பர் சுவாமிகளின் பாடல்கள் உணர்த்துகின்றன. இவரது பாடல்களில் உலகியல் உண்மைகளும், சைவசித்தாந்தக் கருத்துகளும் நிறைந்துள்ளன. இறைவனின் திருவுருவத்தை அகக்கண்ணில் நிறுத்தி ஆண்டவன் முன் அடிமைபோல் நின்று வேண்டுவதாக அமைந்த அவரது பாடல்கள் இலக்கிய நயம் செறிந்தவையாகும். அப்பர் சுவாமிகள் முதலில் பாடியது 'கூற்றாயினவாறு' எனத் தொடங்கும் பதிகமாகும். தனது பிறவியில் பல கொடுமைகளைச் செய்திருந்தும் இறைவன் தன்னை ஏற்றுக் கொண்டான் எனப்பாடுகிறார். மனிதன் வாழ்க்கையில் தவறுகள் செய்வது தவிர்க்க முடியாததுதான். ஆயினும் அதனை உணர்ந்து திருந்துமிடத்து இறைவன் அருள்பாலிப்பான் என்பதை அவரது பாடல்கள் உணர்த்துகின்றன. நாவுக்கரசருக்குச் சமணர் பல துன்பங்களைச் செய்தனர். அவரை சுண்ணாம்பு நீற்றறையில் அடைத்த பொழுது அவர், இறைவனைத் துதித்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

எனத்தொடங்கும் பதிகத்தைப் பாடி இனிதே வெளியே வந்தார் என்பர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனின் பெயரைப் பித்தன் என உச்சரித்தார். அவர் முதலில் பாடிய பதிகம் 'பித்தா பிறை சூடி' எனத் தொடங்குகிறது. பித்தன் என்ற சொல் பைத்தியம் பிடித்தவனைக் குறிப்பதோடு, பெருங்கருணை கொண்டவன் என்பதையும் குறிப்பதாகும். இறைவன் உயிர்களின்மேல் பெருங்கருணை கொண்டவன் என்பதை பித்தா என்ற சொல் குறிப்பதாக அமைகிறது. இறைவனை என்றும் மறவாது நினைக்கும் தன்மை அவருக்குக் கிடைத்திருப்பதை 'எத்தால் மறவாதே நினைக்கின்றேன்' என்ற தொடர் மூலம் அறியமுடிகிறது. இவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் ஏழாந் திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ளன. மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ளன. மனதை நெகிழச் செய்து பக்தி உணர்வை ஊட்டும் தன்மையன திருவாசகப் பாடல்கள். சிவபரம்பொருளை பக்தியினால் அடையலாம் என்பதைத் திருவாசகம் உணர்த்துகின்றது.

நாயன்மார் நால்வரும் பல்வேறு யாப்பு முறைகளையும் பண்டைத் தமிழரது பண்ணிசை மரபுகளையும் தமது பக்திப் பாசுரங்களிலே கையாண்டு தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். பண்டைத் தமிழரது பண்ணிசை மரபுகள் தேவாரப் பதிகங்களில் பேணப்பட்டுள்ளமையை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒன்பதாம் திருமுறையாக உள்ள திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவை சேந்தனார், கருவூர்த்தேவர் முதலானோரால் அருளிச் செய்யப்பட்டவையாகும். இவை இசைப்பாடல்களாக அமைந்து, இறைவனின் பெருமையைப் பாடுகின்றன. அடுத்ததாக, திருமூலரால் பாடப்பெற்ற திருமந்திரம் பத்தாம் திருமுறையாக உள்ளது. திருமந்திரம் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றைக் கொண்டது. காரைக்கால் அம்மையார் முதலான பலரின் பாடல்கள் பதினோராம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சேக்கிழார் பெருமான் பாடிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகத் தரப்பட்டுள்ளது. சிவனடியார்கள் பாடிய திருமுறைப் பாடல்களும், பன்னிரு ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களும் பண்ணிசையோடு பாடி இறைவனை வழிபட உகந்தவையாகும்.

இறைவனின் அருட்சக்தி எல்லாவற்றையும் ஆலயம் தன்னுள்ளடக்கி, இறைவனை மக்களுக்குக் காட்டும் இடமாகக் கருதப்படுகிறது. இறைவன் எங்கும் நிறைந்தவர். எல்லாம் வல்லவர். இறைவன். சோதி மயமானவன். ஒளிவளர் விளக்குப் போன்றவர் இறைவன். சோதியாய் சுடரொளியாய் விளங்கும் இறைவனை ஆலயம் தன்னுள் இழுத்துள்ளது. இறைவனின் திருவருளை கோயிலிலுள்ள திருவுருவங்களின் ஊடாகத் தரிசிக்கக்கூடிய இடமே ஆலயம் ஆகும். இறைவன் உறையும் இடம் கோயில் என்பது காரணப் பெயராகும்.

வேற்றுமை அகன்று தூய உணர்வுடன், ஒற்றுமைப்பட்டு, ஒன்றுபட்ட சமூகமாக மக்கள் வாழ வழிகாட்டும் இடமே கோயில்கள். மக்களிடையே அன்பும் ஒற்றுமையும் வளர கூட்டு வழிபாடு, பஜனை என்பன உதவியாகின்றன. திருமுறைப் பாடல்களும் திவ்வியப் பிரபந்தப் பாடல்களும், பிற்காலத்தில் வெளிவந்த பக்திப்பாடல்களும் பஜனைகளில் பண்ணோடு பாடுவதற்கு உகந்தவையாகும். நாம் புலம்பெயர்ந்து வாழும் இந்நாட்டில் பாடசாலைகளில் நம் பிள்ளைகளுக்கு சமயக் கல்வி கற்பிக்கப்படுவதில்லை. தனியார் நடத்தும் சில தமிழ் வகுப்புக்களில் சமய அறிவு புகட்டப்படுகிறது. தத்தம் பண்பாட்டைப் பேணி வளர்ப்பதற்கான எல்லா வாய்ப்புக்களையும் கனேடிய அரசு இந்நாட்டில் வாழும் மக்கள் அனைவருக்கும் வழங்கியுள்ளது. இங்கு பல இசை ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு இசை கற்பித்து வருகின்றனர். ஆலயங்களில் விழாக் காலங்களில் இம்மாணவர்கள் அழைக்கப்பட்டு பக்திப் பாடல்களைப் பாடுகின்றனர். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களுடன் அவ்வாலயத்திற்கு வருகை தரும் அடியார்களும் இணைந்து அதனை ஒரு பஜனையாக நடத்தி வந்தால் காலப்போக்கில் விசேட தினங்களிலாவது ஆலயங்களில் இசையோடு இணைந்த கூட்டு வழிபாடும் பஜனையும் இடம்பெற வாய்ப்பாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் பிள்ளைகளை ஆலயங்களுக்கு அழைத்துச் செல்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். ஆலய வழிபாட்டுடன் தொடர்பான சிறுசிறு விளக்கங்களையும், அங்கு கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகளையும் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தல் பெற்றோரது கடமையாகும். சமய சம்பந்தமான அடிப்படை அறிவினை அவர்கள் பெற்றக்கொள்ளுதல் அவசியமாகும். செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்கள் அனேகமாக சைவமக்களால் தூய்மையாகக் கடைப்பிடிக்கப்படும் தினங்களாகும். இத்தினங்களிலாவது பிள்ளைகளுடன் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்துவருவதன் மூலம், எதிர்கால சந்ததியினரை நல்வழியில் நெறிப்படுத்துதல் இலகுவாகிடும். அத்தோடு வாரத்தில் ஒருமுறை அல்லது மாதத்தில் ஒரு தடவையாவது ஆலயங்களில் பெற்றோரும் பிள்ளைகளும் பக்தர்களோடு சேர்ந்து, பஜனை, கூட்டுப்பிரார்த்தனை என்பவற்றை நடத்தவேண்டும். சமயம் சம்பந்தமான சிறு சிறு விளக்க உரைகளை பிள்ளைகள் விளங்கிக்கொள்ளும் வகையில் பெரியோர் அவர்களுக்கு எடுத்துரைக்கலாம். இதனால் இளந்தலைமுறையினர் சமய அறிவைப் பெறுவதோடு ஒழுக்கமுள்ளவர்களாகவும் நற்பண்புடையவர்களாகவும் வளர வாய்ப்பாகின்றது.

பஜனை, கூட்டுப் பிரார்த்தனை என்பவற்றில் பங்கு பற்றுவதோடு, ஆலய வழிபாடு பற்றிய தெளிவான விளக்கங்களையும் அறியும்போது பிள்ளைகளுக்கு இறை வழிபாட்டில் ஈடுபாடு மேலோங்குவதோடு, பொதுநல சேவைகளிலும் அவர்கள் நாட்டம் கொள்வார்கள். மாணவர் இறை நம்பிக்கையுடையவராக வளரும்போதே ஆரோக்கியமான சமுதாயம் உருவாகும் என்பது பாரதியாரின் நம்பிக்கை. இதனாலேயே "பள்ளித் தலமனைத்தும் கோயில்கள் செய்வோம்" எனப் பாடினார். இறைவழிபாட்டை ஒழுங்காக மேற்கொள்ளும்போது சமூகத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் மேலோங்குவதோடு, எமது இளந்தலைமுறையினரின் எதிர்காலமும் சீரும் சிறப்புமுடையதாக அமையும்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'

### திருப்புகழ்

திமிர வுததி யனைய நரக
    செனன மதனில் ...... விடுவாயேல்
செவிடு குருடு வடிவு குறைவு
    சிறிது மிடியு ...... மணுகாதே
அமரர் வடிவு மதிக குலமு
    மறிவு நிறையும் ...... வரவேநின்
அருள தருளி யெனையு மனதொ
    டடிமை கொளவும் ...... வரவேணும்
சமர முகவெ லசுரர் தமது
    தலைக ளுருள ...... மிகவேநீள்
சலதி யலற நெடிய பதலை
    தகர அயிலை ...... விடுவோனே
வெமர வணையி லினிது துயிலும்
    விழிகள் நளினன் ...... மருகோனே
மிடறு கரியர் குமர பழநி
    விரவு மமரர் ...... பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைக்கு மருந்து

கவிஞர் கந்தவனம்

சமயம் என்று வந்துவிட்டால், அது ஆன்மீகத்தோடு தொடர்புடையது, பற்றறுத்தல், துறவு பூணுதல் சம்பந்தமானது என்று இந்தக் காலத்து இளைஞர்கள் கருதுகின்றார்கள். சமயம் வாழ்க்கை நிலையாமை பற்றிக் கூறுகின்றது என்பது உண்மைதான். குதிரைக்குக் கடிவாளம் போடுவது அதனைச் சாகடிப்பதற்கு அல்ல. அதன் வேகத்தைக் கட்டுப்படுத்தி, அதனை வழிப்படுத்துவதற்கு. அதுபோல, மக்களின் அதிகார வேகத்தை, அநீதி அக்கிரமம் சார்ந்த வேகத்தைத் தணிப்பதற்கு வாழ்க்கை நிலையாமையைச் சமயவாதிகளும் நீதிநூல் ஆசிரியர்களும் நினைவுபடுத்தும் பணியில் ஈடுபட்டிருக்கிறர்கள். ஈடுபட்டும் வருகின்றார்கள். உதாரணமாக, அவ்வைப் பிராட்டியார்,

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகள் அந்தப் பணம்

என்று கூறுகின்றபொழுது, பாடுபட்டு உழைத்துத் தேடிய செல்வத்தைத் தானும் அனுபவியாது பிறருக்கும் கொடுத்து உதவாது பதுக்கி வைத்திருப்பவர்களைத் திருத்தவே வாழ்க்கை நிலையாமையை நினைவுபடுத்துகின்றார். பணத்தைப் பதுக்கிவையாதீர். அதனை நன்கு அனுபவித்து, மற்றவருக்கும் கொடுத்துச் சீரோடும் சிறப்போடும் வாழுங்கள் என்ற அறிவுரையைத்தான் அவ்வைப் பிராட்டியார் வலியுறுத்த விழைகின்றார்.

எமக்குக் கிடைத்த இந்தப் பிறப்பு, அரிய பிறப்பாகிய மானிடப் பிறப்பு வாழ்வதற்குரியது; வாழ்ந்து அனுபவிக்கப்பட வேண்டியது. திருஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்றார்:

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாது மோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல.ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பொருந்தகை இருந்ததே.

என்ன சொல்கின்றார்? வாழலாம் என்கின்றார்; நல்லவண்ணம் வாழலாம், எப்பொழுதும் வாழலாம் என்கின்றார்; நல்ல கதிக்கும் குறைவில்லை என்கின்றார். ஆனால் ஒரு நிபந்தனை. மிகவும் கவனமாக ஒரு சொல்லை இடையிலே வைக்கின்றார். 'எண்ணில்' என்பது அது. நினைத்தால் .... மனம்வைத்தால் மட்டுமே வாழலாம், வாழ்ந்து நல்ல கதியை அடையலாம்.

மனம்போல் வாழ்வு என்பார்கள். வாழ்வுக்கும் தாழ்வுக்கும் மனம் காரணமாக இருக்கின்றது.

சில பேருடைய மனம் எதற்கு எடுத்தாலும் சஞ்சலப்படுகின்ற மனமாகவே இருக்கும். இந்தச் சஞ்சலத்துக்கும் பல வகையான காரணங்கள் இருக்கும். ஒன்று அச்சம், இரண்டு சந்தேகம், மூன்று அளவுக்கு மீறிய ஆசை அல்லது எதிர்பார்ப்பு, நான்கு பொறாமை என்று இக்காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றுக்கு அப்பால், தனிமனிதன் ஒருவனுடைய சத்தியை மீறிய காரணங்களும் உள்ளன. போர், விபத்து, நீர், நிலம், நெருப்பு, காற்று, முதலிய இயற்கைச் சத்திகளால் நேரக்கூடிய அழிவுகள், திருட்டு, நோய் என்று இவையும் பலவகைப்படும்.

துன்பங்களைச் சமாளிப்பதுதான் வாழ்க்கை.

அப்படிக் சமாளிக்கின்றவர்களைத்தான் இன்பங்கள் எதிர்பார்த்திருக்கின்றன. எடுத்ததற்கெல்லாம் கவலைப்படுகின்ற மனம் உறுதியற்ற மனம். அடிக்கடி சாத்திரம் பார்க்கின்ற மனம் இந்த மனந்தான். குறிப்புச் சாத்திரத்திலும் குருவிச் சாத்திரத்திலும் கைரேகைச் சாத்திரத்திலும் நம்பிக்கையுள்ள இந்த மனத்துக்கு மிகவும் முக்கியமான ஒரு நம்பிக்கை இல்லை.

அதுதான் தன்னம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாது மோர் குறைவில்லை

என்று எவ்வளவு நம்பிக்கையோடு திருஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்றார் பாருங்கள்.

வாழ்க்கையை நல்ல வண்ணம் வாழ்வதற்கு நம்பிக்கை அவசியம். தன்னம்பிக்கையோடு வேண்டியவர்களை நம்பும் நாகரிகமும் வேண்டும். இன்றைய உலகம் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் உலகம்; ஒருவரை ஒருவர் நம்பி வாழவேண்டிய உலகம்.

எல்லாவற்றிலும் மேலான ஒரு நம்பிக்கை கடவுள் நம்பிக்கை. எல்லாம் வல்ல இறைவனை நம்பினால் தன்னம்பிக்கை தன்னாலே வந்துவிடும். மனக்கவலை தன்னாலே மறைந்துவிடும். மனக்கவலைக்கு ஒரே மருந்து இறைவழிபாடுதான் என்கிறார் வள்ளுவர் பெருமான்.

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

மனக்கவலைக்கு அடிப்படையான ஒரு காரணம் அறியாமை. எம்மை இயக்குவது நாமல்ல, எமக்கு மேலாகவுள்ள ஒரு சக்தி என்னும் உண்மையை அறியாமை. அந்தச் சக்தியிலே, பரம்பொருளிலே நம்பிக்கை வைத்துவிட்டால் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாண்டிநாட்டுக்குச் செல்ல வேண்டும். அதனை அப்பர் பெருமானுக்குச் சொல்லி விடைபெறுகின்றார். சம்பந்தர் குழந்தைப்பிள்ளை. அப்பர் பெருமான் வயதில் முதிர்ந்தவர்; அனுபவசாலி. அறிவுரை ஒன்று சொல்கின்றார்.

'தேவரீர் அறியாததல்ல. பாண்டி நாட்டில் சமணர் ஆதிக்கம் நிலவுகிறது. அவர்கள் பொல்லாதவர்கள். தாங்களோ சிறுபிள்ளை. மேலும் தங்கள் கிரக பலன்களும் இப்பொழுது சரியில்லை. அதனாலே இந்தப் பயணத்தைப் பின்போட்டால் நல்லது' என்றார்.

அதுகேட்ட பிள்ளையார் 'சிவபிரான் என் சிந்தையில் உள்ளான். அதனால் எனக்கு எவ்வித தீங்கும் நேரமாட்டாது' என்று கோளறு பதிகத்தைப் பாடி அப்பர் பெருமானிடம் அனுமதி பெறுகின்றார்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கும் மிகவே.

'சிவபெருமான் உமாதேவியாரோடு என்னுள்ளத்திலே எழுந்தருளி இருக்கின்ற காரணத்தினாலே கிரகங்கள் எல்லாம் எனக்கு நல்லவையாகவே அமையும்' என்று அவர் கூறும் நம்பிக்கையைக் கவனித்தல் வேண்டும். இந்த நம்பிக்கை, அதாவது, கடவுள் எம்மைக் கைவிடமாட்டார் என்னும் நம்பிக்கை வாழ்வை வளப்படுத்துகின்ற ஒரு நம்பிக்கை. 'எல்லாம் நல்லபடியே நடக்கும்' என்று எதனையும் சாதகமாகச் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டுகின்ற நம்பிக்கை. இந்த நம்பிக்கையிலே தான்,

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே

என்று அப்பர் பெருமான் பாடுகின்றார். இந்த நம்பிக்கையிலேதான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்

என்று பாடுகின்றார் சுந்தரமூர்த்தி நாயனார். இந்த நம்பிக்கையிலேதான்,

உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்

என்று மணிவாசகப் பெருமானின் 'திருவெம்பாவை'யிலே கன்னிப் பெண்கள் பாடுகின்றார்கள்.

இவர்கள் எல்லாம் என்ன சொல்கிறார்கள்?

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்கிறார்கள். எனவே சமயம் என்பது நிலையாமையையும் துறவறத்தையும் எவருக்குமே விளங்காத, யாருமே காணாத தேவலோகத்தையும் பற்றிக் கூறுகின்ற ஒரு நெறி மட்டுமல்ல; அது வயது வந்தவர்களுக்கும் வேலையில்லாதவர்களுக்குமேயுள்ள ஒரு நெறியல்ல.

மிகவும் முக்கியமாக, சைவ சமயம் எல்லோரையும் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டுகின்ற சமயம். பொருள் ஈட்டி, அறஞ்செய்து, இன்பந்துய்க்கும் வண்ணம் தூண்டுகின்ற சமயம். அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு உறுதிப்பொருள்களிலே வீடு நான்காவதாகவே வைக்கப்பட்டுள்ளது. வீடு பேறுதான் முடிவான நோக்கமாயினும் அதனை அடைவதற்கு வையகத்திலே வாழ்வாங்கு வாழவேண்டும் என்பதனைச் சைவம் வலியுறுத்துகின்றது. வாழ்வாங்கு வாழ்தலாவது எப்படியும் வாழலாம் என்றில்லாது இப்படித்தான் வாழவேண்டும் என்கின்ற கட்டுப்பாடான வாழ்வு. நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ விடுகின்ற நல்வாழ்வு; அறிவுபடைத்த மனித குலத்துக்குரிய நாகரிக வாழ்வு.

எனினும் துன்பங்கள் எம்மாலும் பிறராலும் இயற்கைச் சக்திகளாலும் ஏற்படவே செய்யும். அவற்றைக் கண்டு அஞ்சவேண்டாம் என்று சமயம் அறிவுறுத்துகின்றது.

சிலர் கடவுளைக் கும்பிட்டாலும் துன்பங்கள் வருகின்றனவே என்று விரக்தியடைந்து கடவுளையே வெறுக்கிறார்கள்; திட்டுகிறார்கள். இது பாதகமான போக்கு. சைவ சமயத்திற் பாதகமான போக்குக்கு இடமில்லை. எதையும் சாதகமாகவே அணுகுதல் வேண்டும்.

கடவுளை ஒழுங்காக வணங்குகின்றவர்கள் தமக்குத் துன்பங்கள் வருகின்ற பொழுதெல்லாம் கடவுளே தம்மைச் சோதிக்கின்றார் என்று கருதி அந்தச் சோதனையிலே சித்தியடைய முயலுதல் வேண்டும்.

அது என்ன சோதனை?

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் உல்லாசபுரியில் வாழ்கிறார்கள், காலையும் மாலையும் கடவுளை வணங்கும் எமக்குத்தான் துன்பங்களா, சோதனைகளா, என்று சிலர் கேட்கலாம். இவர்கள் ஒன்றைச் சிந்திக்கவேண்டும். பாடசாலையில் படிக்கின்ற பிள்ளைகளுக்குத்தான் பரீட்சை வைக்கமுடியும். பள்ளிக்கூடத்திற் பதியப்படாதவர்களுக்குப் பரீட்சை வைக்கும் வழக்கம் எங்கணும் இல்லை. பள்ளிக்கூடத்திற் பதிந்திருந்தாலும் கூடப் பள்ளிக்கூடத்துக்கு வராதவருக்கும் உரிய பாடநெறியை ஒழுங்காகப் படித்து முடியாதவருக்கும் பரீட்சை வைக்கமுடியாது.

சிவனுடைய பள்ளிக்கூடத்திலே சேர்ந்தவர்கள் சிவனடியார்கள். சிவனடியார்கள் எல்லாம் சிவன் செயல் என்றிருப்பவர்கள். துன்பம் வருங்காலத்து இறைவனிடம் சென்று முறையிடுகின்ற அன்பாளர்கள். இறைவன் மீது ஆராத அன்பு மிகுந்தவர்களாதலால் இடர்கள் வரினும் அவனை வெறுத்து ஒதுக்கும் இயல்பு அவர்களிடம் இல்லை. அறவே இல்லை. திருஞானசம்பந்தப் பெருமானின் நிலைப்பாட்டைப் பாருங்கள்:

இடரினும் தளரினும் எனது உறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதி யனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார். திருநாவுக்கரசு நாயனாருக்குச் சூலைநோய் வந்தது. வைத்தியங்களால் எதுவும் பயனில்லை என்ற நிலையில்,

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
        கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
        பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
        குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
        வீரட் டானத் துறையம்மானே

என்று இறைவனிடம் தஞ்சம் புகுந்து தமது நோயைத் தீர்த்துக்கொள்கிறார்.

சுந்தரமூர்த்தி நாயனாருடைய மனக்கவலை சற்று வித்தியாசமானது; வியப்பானதுங்கூட. குண்டையூர்க் கிழவர் சுந்தரமூர்த்தி நாயனார் பொருட்டுப் பரவையாருக்குப் பல காலமாக நெல் அனுப்பிவந்தார். அந்த நெல்லுக்கு ஒரு முறை தட்டுப்பாடு வந்தது. அது குறித்துக் குண்டையூர்க் கிழவர் கவலை கொண்டார். அதனை உணர்ந்த சிவபெருமான் நெல்லை மலைபோலக் குவித்தருளினார். அதனைக் கொண்டுசெல்வதற்கு உதவிவேண்டும் என்று குண்டையூரார் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு முறையிட்டார். சுந்தரமூர்த்தி நாயனார் 'சிவபெருமான்தானே நெல்லைத் தந்திருளினார். அதனைக் கொண்டு செல்வதற்கும் அவரிடமே உதவியைக் கேட்போம்' என்று பக்கத்தில் உள்ள சிவாலயத்தையடைந்து அங்கு எழுந்தருளி இருக்கும் கோளிலிநாதரிடம் வேண்டுகின்றார்:

நீள நினைந்தடியேன் உமை
        நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்
        வாடி வருத்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை
        யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
        அட்டித் தரப்பணியே.

இந்த வரலாறுகள் எல்லாம் எமக்குப் புகட்டும் பாடம் இறைவழிபாட்டால் நாம் எதையும் சாதிக்கலாம் என்பது. இந்த நம்பிக்கைக்குக் குறுக்கே நாம் முன்பு செய்த தீவினைகள் வந்து நிற்கலாம். அவற்றின் தாக்கத்தைத் தணிப்பதற்கும் இறைவழிபாடு இன்றியமையாதது.

**நமச்சிவாய மந்திரம்.**

மனக்கவலையையும் மற்றுமுள்ள தீங்குகளையும் போக்குவதற்கு மிகவும் எளிமையானதும் சக்திவாய்ந்ததுமாய இறைவழிபாடு நாதன் நாமம் ஆகிய நமச்சிவாய மந்திரத்தை உச்சரித்தல்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

நல்லாராயினும் தீயாராயினும் நமச்சிவாய மந்திரத்தை ஓதிவரின் அவர்களது எல்லாத் தீங்கையும் அது நீக்கும் என்கிறார் திருஞானசம்பந்தப் பெருமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு நாயனார்,

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின்று அறுப்பது நமச்சி வாயவே.

இடுக்கண்பட்டு இருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோம் அல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளி னால்முற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

என்றெல்லாம் நமச்சிவாயத் திருப்பதிகத்திலே நமச்சிவாய மந்திரத்தின் மகிமையைப் பலவாறு போற்றுகின்றார்.

மந்திரம் என்றால் நினைப்பவரைக் காப்பது என்று பொருள். கவலைகளைக் களையவும் தீங்குகள் வராது காக்கவும் நமச்சிவாய மந்திரத்தை ஓதுதல் வேண்டும். அதன் முழுப்பயனைப் பெறுவதற்கு அதனை முறையாக ஓதுதல் வேண்டும். மனச் சுத்தத்துடனும் மதுபானமும் மாமிச போசனமும் இல்லாத உடற்சுத்தத்துடனும் சிவசிந்தனையுடனும் ஓதுதல் வேண்டும். அமர்நீதியார், திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், தண்டியடிகள், புகழ்ச்சோழனார் என்போர் தமது சோதனைக் காலங்களில் ஐந்தெழுத்தை ஓதி அருள்பெற்ற வரலாற்றைத் திருத்தொண்டர் புராணம் தெரிவிக்கின்றது. ஆபத்துக்காலத்திலே மந்திரமாகவே ஓதத்தக்க தேவாரம் இது:

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. - அப்பர் சுவாமிகள்.

நமச்சிவாய மந்திரம் வாசக மந்திரம் எனப்படும். வாசக மந்திரமாவது அருகில் உள்ளவரும் கேட்கும் வகையில் உச்சரித்தல். சிவாயநம மந்திரம் மானச மந்திரம் எனப்படும். அதாவது மனத்தினாலே சிந்தித்திருத்தற்குரிய மந்திரம்.

சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை — உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்

என்பது அவ்வைப் பிராட்டியார் வாக்கு. சிவமூல மந்திரத்தையும் அதன் பொருளையும் சிறப்பையும் எல்லாம் முறையாக ஒரு குருவிடம் கேட்டுச் சிவதீட்சை பெறுதல் சைவ சமயத்தவர் கடனாகும்.

### திருநீறு

தீங்குகளைப் போக்குவதற்கும் தவிர்ப்பதற்கும் சிவ சின்னமாகிய திருநீறு அணிதலும் சிறந்தவொரு சாதனமாகும். திருநீறு ஞானாக்கினியினாலே மலங்கள் சுட்டெரிக்கப்பட்ட தூய நிலையிலே விளங்கும் சிவப்பேற்றுக்கு அறிகுறி. இதனைச் சிவமூல மந்திரத்துக்கு நிகராகவே வைத்துப் போற்றுகின்றார் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்:

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

வேதத்தில் உள்ளது நீறு வெம்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் திருநீற்றும் பதிகத்தைப் பாடியவாறே, திருநீற்றைத் தமது திருக்கரத்தினாலே எடுத்துப் பாண்டிய மன்னனுடைய மேனியிலே தரித்து, அவனுடைய வெப்பு நோயைத் தீர்த்தருளினார் ஞானசம்பந்தப் பெருமான். அத்தனை தெய்வீக சக்தி திருநீற்றுக்கு உண்டு. நாமும் எமக்கு இடையூறுகள் ஏற்படும் காலத்தில் இப்பதிகத்திலேயுள்ள தேவாரம் ஒன்றையோ முழுவதையுமோ பாடித் திருநீற்றை அணிந்துவரின் உற்ற பயன் பெறுவது உறுதி.

தேவாரங்கள் சக்திவாய்ந்தவை, ஆபத்துக்கு உதவ வல்லவை. அவற்றைக் காலையும் மாலையும் முறைப்படி ஓதித் துன்பங்களையும் போக்கி இன்புற்று வாழ்வோமாக.

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை யில்லதோர் அடிமை பூண்டேனுக்கே.

## ஸ்ரீ காஞ்சி பெரியவர் பொன் மொழிகள்

### உயிர்களுக்கு இதமானதே ஸத்யம்

நம் சாஸ்திரங்களில் அவரவருக்கான அனுஷ்டானங்களைச் சொல்வதற்கு முன் ஒவ்வொரு ஜீவனுக்கும் இருக்கவேண்டிய எட்டு ஆத்ம குணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இதில் முதலாவதே அஹிம்சைதான். ஸத்யத்துக்கும் இலக்கணம் கொடுக்கும்போது, வெறுமனே நடந்ததை நடந்தபடி வாயால் சொல்வது மட்டுமல்ல, எது ஜீவராசிகளுக்கு இதமாக பிரியமானதாக இருக்கிறதோ அதுவே ஸத்யம் என்று சொல்லியிருக்கிறது.

### அன்னதானம்

தனக்கென்று ஒன்றுமே வைத்துக்கொள்ளாமல் தானம் பண்ண வேண்டும். ஒருத்தர் கஷ்டத்தில் இருக்கும்போது அவர் என்ன ஜாதி என்ன மதம்? நல்லவரா, கெட்டவரா என்று ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிராமல், நம்மாலான உபகாரத்தைப் பண்ண வேண்டும். 'யார்க்கும் இடுமின், அவர் இவர் என்னன்மின்' என்றே திருமந்திரத்தில் சொல்லியிருக்கிறது. அன்னதானத்துக்கு என்ன விஷேசம் என்றால் இதிலேதான் ஒருத்தரைப் பூர்ணமாகத் திருப்திப்படுத்த முடியும்.

### தீப தத்துவம்

தீபத்தின் ஒளி எப்படி வித்தியாசம் பார்க்காமல் பிராமணன், பஞ்சமன், புழு, கொசு, மரம், நீர்வாழ் – நிலம் வாழ் விலங்கினங்கள் மீது படுகிறதோ அப்படியே நம் மனதிலிருந்து அன்பு, ஒரு தீபமாக, எல்லோரையும் தழுவுவதாக பிராகாசிக்க வேண்டும். இந்த உத்தமமான சிந்தனையில் தான் சொக்கப்பானை, அண்ணாமலை தீபம் என்றெல்லாம் நம் பூர்வகர்கள் ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள்.

### அஹங்கார நாசம்

வைத்துக் கொண்டு அனுபவிப்பதைவிட, கொடுத்து அனுபவித்தால் அதுவே பரம ஆனந்தத்தை தருகிறது. மஹாபலி வாரி வாரிக் கொடுத்தான். ஆனால், தாம் கொடுக்கிறோம் என்ற அஹங்காரத்தை அவன் பகவானுக்குப் பலி கொடுக்கவில்லை. இதனால் பகவானே அவனிடம் இந்த அஹங்கார நாசத்துக்கு அடையாளமாகத் தலையிலே கால் வைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசகரும், அவர் பாடியருளிய திருவாசகமும், திருக்கோவையாரும்

கலாநிதி. எஸ்.சிவநாயகமூர்த்தி



ஆதியும் அந்தமுமில்லாத சைவசமயம், சமண சமயத்தவர்களாலும், பௌத்த சமயத்தவர்களாலும், வைணவ சமயத்தவர்களாலும், அச்சமயங்களைச் சார்ந்த மன்னர்களாலும், பின்னர் ஆட்சி புரிந்த இஸ்லாமியர், போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர் போன்ற அன்னிய நாட்டவர்களாலும் பல சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்துவந்த போதிலும் இன்றும் தனித்துவம் குறையாது தலைநிமிர்ந்து நிற்கிறதென்றால் அதற்குக் காரணமாக விளங்கியவர்கள் காலத்திற்குக்காலம் தோன்றிய நாயன்மார்களும், ஞானிகளும், சைவப் பெரியார்களுமேயாவர். அந்தவரிசையில் இடம் பெறும் மாணிக்கவாசகர் முழுமுதற் கடவுளான சிவபிரானிடமே ஞானதீட்சைபெற்றார். அவர் பாடிய திருவாசகமும், திருக்கோவையாரும் தேனினும் இனிமையானவை. **"திருவாசகத்துக்கு உருகாதவர் ஒருவாசகத்திற்கும் உருகார்,"** என்னும் சான்றோர் மொழி இதன் சிறப்பை உணர்த்துவதாகும்.

பன்னிரு திருமுறைகளில் எட்டாந்திரு முறையாக விளங்குபவை திருவாசகமும், திருக்கோவையாருமாகும். தேனூறு வாசகங்கள் அறுநூறும்,திருக்கோவை நானூறும் எனவரும் செவ்வந்திப் புராணத் தொடர், எட்டாந் திருமுறையிலுள்ள மொத்தப்பாடல்களின் எண்ணிக்கை ஆயிரம் என்பதை அறியத்தருகிறது. திருவாசகத்தில் அறுநூறு பாடல்களும் திருக்கோவையாரில் நானூறு பாடல்களும் உள்ளன. எட்டாந்திருமுறையை இயற்றியவர் மாணிக்கவாசக சுவாமிகள். இவர் உள்ளமாகிய நிலத்தினைப் பக்தியால் உழுதவர். ஞானத்தை வித்திட்டு, சிரத்தை நீர்ப்பாய்ச்சி, கள்ளப் பொறியாம் களை களைந்து சிவானந்தம் விளைத்தவர். இவர் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் ஆதிசைவ மரபில் தோன்றியவர். இவரது இயற்பெயர் திருவாதவூரர். தந்தையார் சம்புபாதாசாரியர், தாயார் சிவஞானவதி. இவரது வரலாறு திருவாலவுடையார் திருவிளையாடற் புராணம், திருவுத்தரகோசமங்கை புராணம், திருப்பெருந்துறைப் புராணம், கடம்பவன புராணம் முதலிய பல நூல்களில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. மாணிக்கவாசகரை மணிவாசகர், வாதவூரடிகள். திருவாதவூரர், ஆளுடையஅடிகள், திருவாதவூரளி பெருந்துறைப்பிள்ளை முதலிய பல பெயர்களாலும் குறிப்பிடுவர். எட்டாந் திருமுறையிலுள்ள திருவாசகம் திருவருள் பெற்ற நிலையில் விளைந்த வாக்குகளாகும். திரு என்பது திருவருளையும், வாசகம் என்பது வாக்கையும் குறிக்கும். இத்திருவாசகம் ஐம்பத்தொரு பதிகங்களையும் 656 பாடல்களையும் கொண்டுள்ளது. இதில் வெண்பா, கலிவெண்பா, ஆசிரியம், கட்டளைக் கலித்துறை, கலிவிருத்தம், கலித் தாழிசை முதலிய பல்வேறு பாக்களும், பாவினங்களும் உள்ளன. திருவாசகப் பாடல் அனைத்தும் முதிர்ந்த பக்குவ நிலையில் விளைந்த அனுபவப் பாடல்களாகும். எனவே ஒவ்வொரு பாடல்களும் சுவை நிறைந்தனவாகவே விளங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே- எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன்

இப்பாடல் திருவாசகத்தின் சிறப்பையும் பெருமையையும் எடுத்துக் கூறுகின்றது.

இறைவன் உயிர்கட்கெல்லாம் தாயாகவும் தந்தையாகவும் இருந்து அருள் புரிகின்றான். இறைவன் ஈடு இணையற்ற மணிபோன்றவன். ஆயினும் அன்பர்களின் அன்பு என்னும் வலைக்குள் அகப்பட்டு அவர்கட்கு ஆராஅமுதமாகிய இன்பக் கருணையைப் பொழிபவன். என்று இறைவனின் பெருங்கருணைத் திறத்தை மாணிக்கவாசகர் அழகாகப் பாடியுள்ளார்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபதமளித்த என்
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவது இனியே

எல்லா உயிர்களுக்கும் தாயாகவும், தந்தையாகவும் உள்ளவனே! ஒப்பில்லாத மணியே! அன்பு என்னும் கடலில் விளைந்த அருமையான அமுதே! பொய்யான உலக வாழ்க்கையைப் பெருக்கி, மெய்யான வாழ்க்கைக்குரிய பொழுதினைச் சுருக்குகின்ற பரிசுத்தமில்லாதவனாகிய எனக்கு, செம்மையேயாகிய சிவபதத்தைக் கொடுத்து அருளிய செல்வமே! சிவபெருமானே! இப்பிறவியிலேயே உன்னை உறுதியாகப் பிடித்தேன். நீ என்னைவிட்டு எங்கே போவாய்! எனக்கேட்டு சிவபிரானின் பெருங்கருணைத் திறத்தினை விளக்குகின்றார். திருப்பெருந்துறையிலுள்ள சிவனைநோக்கி அவரிடம் பெற்ற பேறுகளுக்கு என்ன கைமாறு செய்வேன் எனப் பாடுகிறார்.

தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்
எந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடல் இடங்கொண்டாய்
யான் இதற்கு இலனோர் கைம்மாறே!

தந்தது உன்னை, கொண்டது என்னை இதில் யார் கெட்டிக்காரர்? முடிவில்லாத ஆனந்தத்தை உன்னிடம் யான் பெற்றேன். நீ என்னிடம் எதனைப் பெற்றாய்? என் மனத்தையே கோயிலாகக் கொண்ட எம் பெருமானே! திருப்பெருந்துறையிலுள்ள சிவபெருமானே! என் தந்தையே, ஈசனே! என் உடம்பை நீ இடமாகக் கொண்டாய். நான் இதற்கு பதிலாக எந்தப் பதில் உதவியும் செய்ய முடியாதவனாய் இருக்கின்றேன். இவ்வாறு சிவபிரானின் கருணையையும், பெருமையையும் எல்லாப் பாடல்களிலும் வியந்து போற்றியிருப்பதைக் காணலாம். இறைவன் ஒருவன்; அவனே சிவப்பரம்பொருள். அவனே எந்நாட்டவர்க்கும் இறைவன் என்னும் உண்மையை -

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அடிகள் உணர்த்தி நிற்கின்றன. திருவாசகத்தில் காணப்படும் சில பகுதிகள் புதுமையும், சிறப்பும் பெற்று விளங்குகின்றன. அக்காலத்தில் மகளிர் விளையாடும் விளையாட்டுக்களைக் கண்டு ,அம்மானை ஆடல், பொற்சுண்ணம் இடித்தல், தும்பியூதல், தெள்ளேணம் கொட்டுதல், கழலாடுதல், பூவல்லி கொய்தல், தோணாக்க மாடல், பொன்னூஞ்சல் ஆடல், முதலிய விளையாட்டுப் பாடல்களாக அமைந்துள்ளவை மிகவும் இனிமை பயப்பனவாகும். எட்டாந் திருமுறையிலுள்ள மற்றொரு நூல் திருக்கோவை யாராகும். மாணிக்கவாசகரால் பாடப்பட்ட இந்நூல் கோவை என்னும் சிற்றிலக்கிய வகையில் அமைந்தது. திரு,ஆர் என்னும் சிறப்புக்குறித்த அடைமொழியும்,விகுதியும் பெற்றுள்ளதால் கோவை இலக்கியங்களில் இது பெற்றிருக்கும் தனிச்சிறப்பு விளங்குகின்றது. திருக்கோவையார் சிற்றின்பப் பொருளை வெளிப்படையாக விளக்குவதாயினும், பேரின்பப் பொருளை உள்ளுறையாகக் கொண்டு விளங்குகிறது. இந்நூல் விளக்கும் பேரின்பப் பொருளைத் திருக்கோவையார் உண்மை என்னும் நூல் முறையாகத் துறை தோறும் நமக்கு அறிவுறுத்துகிறது.

மாணிக்கவாசகர் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கியமையால், அரிமர்த்தன பாண்டியன் அவரை அழைத்து, தென்னவன் பிரம்மராயன் என்னும் பட்டம் அளித்துத் தன்னுடைய முதலமைச்சராக அமர்த்திக் கொண்டான். குதிரைப்படையைப் பெருக்க விரும்பிய பாண்டியன், முதலமைச்சரான மாணிக்கவாசகரைக் குதிரை வாங்கிவர அனுப்பினான். சிவனையே நாடும் சிந்தை படைத்த அவ்வமைச்சர் திருப் பெருந்துறையில் குருந்த மரத்தடியில் முனிவர் உருவில் இருந்த இறைவனிடம் உபதேசம் பெற்று உலகியல் மறந்தார். குதிரை வாங்கும் பணத்தைச் சிவப் பணிக்கே செலவிட்டார். இதனால் கோபங்கொண்ட பாண்டியன் அவரைச் சிறையில் இட்டான். அன்றிரவே இறைவன் நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி கொண்டு வந்து பாண்டியனிடம் விட்டுச் செல்ல, பரிகளெல்லாம் நள்ளிரவில் நரிகளாகிக் கானகம் புகுந்தன. அது கண்டு வெகுண்ட பாண்டியன் வாதவூரர் முதுகில் கல்லை ஏற்றி வைகையின் நடுவே நிறுத்த, அதனைப் பொறாத இறைவன் வைகையில் வெள்ளப் பெருக்கினை உண்டாக்கினார். இதனால் வைகை நதியின்கரை உடைப்பெடுத்தது. அரசன் அனைவரையும் உடைப்பைத் தடுக்க அணைகட்ட வருமாறு அழைப்பு விடுத்தான். அனைவரும் அரசன் கட்டளைப் படி அணைகட்டும் பணியில் ஈடுபட்டனர். அங்கு வசித்துவந்த வந்தி என்னும் மூதாட்டியின் பங்கைக் கட்ட பிட்டினைக் கூலியாகப் பெற்று சிவபிரான் கூலியாளாக வந்தார். அவ்வாறு வந்த அக்கூலியாள் வேலை செய்யாதிருப்பதைக் கண்ட பாண்டியன் அவனைப் பிரம்பால் அடித்தார். இறைவன்மேல் பட்ட அந்த அடி எல்லோர் மேலும் பட்டது. பாண்டியன்மேலும் பட்டது. இறைவன் திருவருளே என உணர்ந்த பாண்டியன் தன் பிழையுணர்ந்து வாதவூரரை விடுவித்து மீண்டும் அவரை அமைச்சர் ஆக்கினான். சிவத்தையே நாடும் வாதவூரர் அப்பதவியை வெறுத்து, தலங்கள் பலவற்றிற்கும் சென்று இறைவனுக்குப் பாமாலை சாத்திப் பணிந்து மகிழ்ந்தார். அவ்வாறு பணிந்து வந்த வாதவூரர் ஊமைப் பெண்ணைப் பேச வைத்தமை போன்ற பல அற்புதங்களை நிகழ்த்தினார். இவர் பின்னர் தில்லை வந்தடைந்தபோது இறைவன் அவர் பாண்டிய நாட்டுப் பதிகளில் பாடிய பாடல்களை மீண்டும் பாடுமாறு பணித்தருளி, அவர் பாடிய பாடல்களைத் தம் திருக்கரத்தாலேயே எழுதி வைத்துக் கொண்டார். அதுவே திருவாசகம். அவை மாணிக்கம் போன்றமைந்தமையால் மாணிக்கவாசகர் என்று இறைவன் வாதவூரருக்குப் பெயரிட்டார். பின்னர் பாவை பாடிய வாயால் கோவை பாடுக! என வேண்டி ஏடெழுதிப் பொன்னம்பலத்தில் வைத்துக் கொண்டார். தில்லைவாழந்தணர்கள் அதற்கு உரைகூறுமாறு வேண்ட மாணிக்கவாசகர் அம்பலக்கூத்தரைக் காட்டி, அவரே அதற்குப் பொருளாவார் என்று கூறி இறைவனோடு ஒன்றிக் கலந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VASUKI DEVADAS LAW OFFICE

- Real Estate – Residential / Commercial - Purchase, Sale & Refinancing
- HST - New Housing Rebate And Residential Rental Property Rebate Claims Appeals To CRA
- Immigration – Sponsorship / Super Visa / Work Permits
- Family law – Divorce / Separation / Custody & Support
- Business law – Incorporations / Purchase, Sale & Lease
- Employment Law – Termination / Dismissal Claims
- Last Wills & Estate Planning
- Power of Attorney, Affidavits, Statutory Declaration
- Notarization & Commissioning

Drop in for a free 30 minutes initial consultation

EVENINGS & WEEKENDS CONSULTATION BY APPOINTMENTS

## Vasuki DEVADAS

Barrister, Solicitor & Notary Public

TEL: 416-266-1234

FAX : 416-266-2000

scan me

1415 Kennedy Road, Unit #3
(Next to RBC @ Kennedy & Ellesmere)
Toronto, ON M1P 2L6
www.vdlaw.ca I vasuki@vdlaw.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# God As Guru

Siddhantharatnam, Dr. K. Ganesalingam

Primary God of Saiva religion is Sivam or Siva. He is of perfect knowledge or wisdom. His main attribute is *Arul* or grace which is His immense love towards the souls.

Soul's abilities to know, act and desire are limited by *anava malam* which is in association with it from time immemorial. Anavam is the source of all negative qualities, ignorance, ego etc. Malam means impurity.

By the grace of Siva, the soul moves from birth to birth and gains knowledge in every birth. Ultimately it gains perfection in knowledge, gets liberated from its attachment to anavam which is the cause of ignorance, and realizes Siva who is wisdom personified. All souls move from ignorance to wisdom, from darkness to light, and gain divine enlightenment.

In this movement and enlightenment Guru or teacher plays an important role. He is the source of knowledge t hrough whom God acts. In Saiva tradition Guru is seen as God Siva. Thirumanthiram says, '*Guru is Siva, so said Lord Nandhi*' (**'குருவே சிவமெனக் கூறினன் நந்தி'**).

In bestowing His grace to the souls, Lord Siva manifests Himself in various forms. One such form is Daksnamurthy. Daksna means south. Image of Daksnamoorthy is seen installed, facing south, in the southern side of temples. He instills knowledge and removes the fear of death. Yama, the lord of death, is believed to come from south.

Seated in yoga posture under a banyan tree ('*aala maram*'), Daksnamurthy imparts *jnanam* or knowledge to the souls. He is said to have imparted jnanam first to the four saints, Sanakar, Sananthanar, Sanaathanar, and Sanartkumarar. It was given, without words, through *cinmutra*, and in silent communication. Thiruvilaiyaadal puranam says, 'Siva *spoke* to them without speaking' (**சொல்லாமற் சொன்னவர்**).

Cinmutra is a posture of hand where the palm is opened with the index finger touching the thumb and the other three fingers separated. This posture explains the triple entities of *pathi, pasu and pasam*. Pathi is God, pasu is soul, and pasam is bondage (or entities of bondage). All things known and unknown to us are classified under these categories in Saiva Siddhanta. If one understands the nature of these entities, then he understands everything.

The thumb denotes God Siva and the index finger denotes the soul. The middle finger, ring finger and small finger denote respectively *anava, karma and maya*. Generally, except the thumb, all other four fingers are seen together with no separation. The thumb is seen separated from them. This indicates that the soul is in association with the three malams of anava, karma and maya, and in separation from God.

When the soul moves towards God, the three malams become separated from it. This is indicated by *cinmutra* position of the fingers. The words '*cit*' means *jnanam* or knowledge, and '*mutra*' means symbol. Both

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

words joined together giving '*cinmutra*', meaning symbol of knowledge. With cinmutra, Lord Daksnamurthy explained and imparted the knowledge that the souls must strive for God realisation; move towards God and away from the malams.

Words often becomes inadequate to explain the Divine or Divine experience. This is the reason for the saints, at times, to explain or show the Divine in an indirect manner. While praising Lord Siva, some Thevaram hymns indicate Him as '*You are the mountain, sky etc.,*' and also speak as '*you are not the mountain, not the sky etc.,*' (hymns of Thirunavukkaru Nayanaar).

The saints also speak in silence, because the nature of the Divine is beyond verbal expression. Silence of Daksnamurty indicates it. Manickavasagar explains this nature of Lord Siva as follows:

'சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க')

*Oh see the ancient One who transcends words'*

It is also said that God gave the four Vedas to the four saints. These Vedas are *Rig, Yajur, Sama* and *Atharva* in Sanskrit. Although this belief is prevailing among the Saivites, no mention of it is seen in Saiva literatures.

Thiruvasakam says that God Siva gave the (knowledge of) four virtues, *aram* (righteousness), *porul* (wealth), *inpam* (sensual enjoyment) and *veedu* (liberation) to the noble saints.

'அருந்தவத்தர்க்கு ஆலின்கீழ் அறம்முதலா நான்கினையும்
இருந்தவருக் கருளும்அது எனக்கறிய இயம்பேடி'

'*Explain to me the Grace He showered in teaching, under* aal *(banyan tree), the four virtues of aram etc., to the saints of rare virtue*'.

In Sanskrit these four virtues, *purusarthas,* are called *dharma*, *artha, kama* and *moksa*. These are objectives worthy of human pursuits. Thus, for Manickavasagar the four Vedas are these four virtues.

Thirugnanasambandhar is also telling the same thing in his Thevaram hymns.

" ....... ஐம்புலனும்
அழிந்த சிந்தை அந்தணார்க் கறம்பொருள் இன்பம் வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி மேயதுமுது குன்றே" - சம்பந்தர் 1-53-6

*'Thirumuthukundram is (the sacred temple) where dwells the ancient God with three eyes, who explained aram, porul, inpam, and veedu to the four noble saints whose mind is devoid of sensual attachment'.*

According to Sekizhar, Vedic texts show 'the moral conduct of earthy life' and Saiva Agama shows Sivaneri or the way of Siva.

"உலகியல் வேதநூ லொழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறியதென்பதும்" -(தி.12 திருஞான.பு.820)

*'Vedic conduct relates to earthly life and Agamic way is the way of realising God Siva'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

As the Vedic literatures carry views relating to earthly conduct they become common to all religions. Only Saiva Agamas present views showing realisation of the Divine. Because of this, Thirumanthiram says, 'Veda is of common nature and Agama is of special nature' (வேதம் பொது; ஆகமம் சிறப்பு) to Saivism.

Sivagnanasiddhiyar also gives the same view.

"ஆரணநூல் பொது சைவம் அருஞ்சிறிப்பு நூலாம்
நீதியினால் உலகவர்க்கும் சத்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது"

*'Vedic text ('Arana nool') is common; Agamic text ('Saivam') is special. By divine justice, they are given to those on earth and to those who received divine grace'.*

(ஆரணநூல் - வேதநூல்; சைவம் - சிவாகம நூல் சத்திநிபாதர் - அருளாளர்)

The word 'Veda' means knowledge, but generally seen referring to a collection of Sanskrit literatures which came over a period of time before the Common Era. However, the Tamil saints see it differently.

Saint Sekizhar calls the Tamil devotional works of Thevaram as *Thamizh Vetham*. Vaishnavites call their *Divya prabandham* as '*Senhamizh Vetham*' and '*Dravida Vedam*'.

Arumaga Navalar, in his book '*Saiva Vinavidai*', Book.1, says that Thevaram and Thiruvasagam are *Thamizh Vedam*, and those who chant them with love would enjoy eternal bliss under the feet of Lord Siva. His related questions and answers are as follows:

'சைவ சமயிகள் ஓத வேண்டிய தமிழ் வேதங்கள் எவை?'
'தேவாரம்,திருவாசாம் என்னும் இரண்டுமாம்'.
'தமிழ் வேதத்தை அன்புடனே நியமமாக ஓதினவர் யாது பெறுவர்?'
சிவபெருமானுடைய திருவடிக்கீழ் பேரின்பத்தை அனுபவிப்பர்'.

'What are the Tamil Vedas to be chanted by Saivites?'
*'They are the two called Thevaram and Thiruvaskam'.*
'What is the benefit obtained by those chanting Tamil Vedas regularly?'
*'They will enjoy divine bliss under the sacred feet of Lord Siva'*

Not only the words of saints, but also the words of knowledge of ordinary humans are Vedas. All such words and texts have their origin in God Siva who is wisdom personified. So, Lord Siva sitting as Guru Daksnamurthy and giving out Vedas means that He was imparting knowledge.

So, when the saints speak of God giving out Vedas, it should be understood that He gave knowledge or book of knowledge. The Tamil word *'marai'* for Veda also has to be taken with the same meaning and import. The ancient Tamil book Tholkappiyam says that God, who is devoid of karma, gave the first book of knowledge.

'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாகும்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




The Law Office of

**P. KAYILASANATHAN PROFESSIONAL CORPORATION**

**P. Kayilasanathan**

**416-752-9561**

**1457 McCowan Rd #204 Toronto, ON M1S 5K7**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையருள்

எழுத்தாளர் பசுந்தீவு கோவிந்தன்

இப்பூவுலகில் வாழும் மனிதன், இங்கு கிடைக்கக்கூடிய சிற்றின்ப வாழ்விற்காக ஏங்கி நிற்கிறான். அதாவது, இம்மண்ணுலக வாழ்வில் அனுபவிக்கக்கூடிய இன்பம், சுகபோகம், வசதி வாய்ப்பு, அதிகாரம் என்பவற்றைப் பெரிதாகக் கருதும் மனிதன், "அவை கிடைக்காதா?" என்ற ஏக்கத்துடன் அவற்றை அடைவதற்குப் படாதபாடுபடுகின்றான். இவையெல்லாம் சிற்றின்பமே என்பதைப் புரிந்துகொள்ளவிடாது, அவனுடைய அறியாமை தடுக்கின்றது. அதைத்தானும் அவனாற் புரிந்துகொள்ள முடிவதில்லை. அதற்கு அடிப்படைக் காரணம் அவனோடு கூடப்பிறந்த ஆணவ மலமாகும்.

மனிதன் பெரிதாக எண்ணும் சிற்றின்ப வாழ்க்கையைச் சிறப்புற அனுபவிப்பதற்கும், உண்மையாகவே பெரிதான பேரின்ப வாழ்வைப் பெறுவதற்கும் இறையருள் அவசியம். ஏனென்றால், மண்ணுலகம், இன்பம், துன்பம், இருள் ஒளி, பாவம் புண்ணியம் என்பவபற்றைத் தன்னகத்தே கொண்டது. இதுதான் இம்மண்ணுலகின் இயல்பு. இதை மனிதனால் மாற்றமுடியாது. இவ்வாறான சூழலைக் கொண்ட இம்மண்ணுலகில் மனிதன் நிம்மதியாக, மகிழ்ச்சியோடு வாழவேண்டுமாயின், அதற்கு இறையருள் அவசியம். இறையருள் இன்றேல், மனிதனைத் துன்பமும், இருளும், பாவமும் சூழ்ந்துகொள்ளும்.

மண்ணுலகச் சிற்றின்ப வாழ்விற்கு அப்பால், பேரின்ப வாழ்வைத் தேடிச் செல்பவர்களுக்கு இறையருள் எவ்வளவு அவசியம் என்பதை நான் இங்கு எழுதித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றில்லை. ஆகையால், அதை ஒருபுறம் வைத்துவிட்டு, சிற்றின்ப வாழ்விற்காகத் துடிக்கும் மனிதர்களைப்பற்றிப் பார்ப்போம். நாமெல்லோரும் அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களே.

இறைவன் அருள் வடிவானவர். அதாவது, இறைவன் அருள் மயமயானவர். இதற்கு ஒப்புவமை காட்டுவதாயின், சூரியன் எப்படி ஒளிமயமானதோ அதுபோன்று இறைவன் அருள் மயமானவர். சூரியனிலிருந்து எப்படி வெப்ப ஒளிக்கதிர்கள் இடைவிடாது வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ, அதுபோன்று இறைவனிடமிருந்து அருட்கதிர்கள் இடைவிடாது வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சீவராசிகள் உய்யும்பொருட்டு, மேன்மையுறும் பொருட்டு இறைவன் அருளை இடைவிடாது பொழிந்து கொண்டிருக்கின்றான் என்பதுதான் உண்மை. இறைவன் பொழியும் அருளே சக்தியாகும். இறைவனின் சக்திக்குத் தாயார் வடிவத்தை உவமையாக்கி, அதை அம்மன், அம்பாள், அம்பிகை என்ற பெயர் கொடுத்து அழைக்கின்றோம்.

சைவ மக்கள் இறைவனைச் சிவன் என்றும், இறையருளைச் சக்தி என்றும் அழைக்கும் அதேவேளை, சிவனும் சக்தியும் பிரிக்க முடியாதவை, பிரிக்கக் கூடாதவை என்றும் நம்புகின்றனர். சூரியனிலிருந்து ஒளியை எப்படிப் பிரிக்க முடியாதோ, அதுபோன்றே சிவினிடமிருந்து சக்தியைப் பிரிக்க முடியாது. இதுவே உண்மையாகும். இறைவனுக்கு உருவமோ, பெயரோ கிடையாது. எனினும், மனிதன் ஆயிரம் பெயர்களையும், பல்வேறு உருவங்களையும் கொடுத்து வணங்குகின்றான். அது, அவனுடைய பக்தியின் வெளிப்பாடு; அது தவறாகாது.

எது எப்படியாயினும், இறையருளைப் பெற்றாற்தான் இம்மண்ணுலகச் சிற்றின்ப வாழ்வை நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் அனுபவிக்க முடியும். இதற்கு மாற்றுக் கருத்து இருக்கவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறின் துன்பம், இருள், பாவம் நிறைந்த வாழ்வுதான் எமக்குக் கிட்டும். இறைவன் அருளை விடாது பொழிந்துகொண்டிருக்கும் நிலையில், அதைப் பெற்றுக்கொண்டு ஏன் இன்பமாய் வாழமுடிவதில்லை என்ற கேள்வி எழலாம். இது நியாயமான கேள்விதான். இங்குதான் எம்மைப்பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. உதாரணத்துக்கு அமிர்தம் பொழிந்துகொண்டிருக்கின்றது என்றுசொன்னால், அதை ஏந்திக்கொள்வதற்கு ஓட்டையற்ற பாத்திரம் வேண்டுமல்லவா? அப்பொழுதுதானே, அமிர்தத்தை ஏந்தி அருந்த முடியும்? பாத்திரம் ஓட்டையாயிருந்தால், அருந்த முற்படும்போது பாத்திரத்தினுள் அமிர்தம் இருக்காது.

இறைவன் பொழிந்துகொண்டிருக்கும் இறையருளை ஏந்திக்கொள்ளும் விடயத்தில், நாங்கள் ஓட்டைப் பாத்திரங்களாக இருக்கின்றோம். அதனால், இறையருளைப் பெற்று எம்மால் இன்புற்று வாழ முடிவதில்லை. இறையருளை ஏந்திக்கொள்ள முடியாத ஓட்டைப் பாத்திரங்களாக எப்படி ஆனோம்? இதுதான் எம்மிடையே இருக்கும் முக்கிய கேள்வி. ஓட்டைப் பாத்திரமாய் இருக்கும்வரை, எம்மால் இறையருளைப் பெறமுடியாது என்பது உண்மைதான். எப்படி ஓட்டைப் பாத்திரம்போல் ஆனோம் என்பதற்கு விடை கண்டே ஆக வேண்டும். அசுர குணங்களாகிய - 1. பேராசை 2. பந்தபாசம், 3. பொய், 4. களவு, 5. காமம், 6. கொலை, 7. கோபம், 8. பொறாமை என்பவற்றை எம்முள் வளர்த்து வைத்துக் கொண்டிருப்பதனால், நாங்கள் ஓட்டைப் பாத்திரங்கள் போலாகிவிட்டோம். இந்நிலையில், இறையருள் எம்முள் தங்கமுடிவதில்லை. இவற்றிலிருந்து விடுபடும்வரை, நாம் எதைச் செய்தாலும் அவை பயனளிக்கப் போவதில்லை. எனவே, இறைவனை நோக்கி நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் எம்முடனிருக்கும் அசுர குணங்களைப் போக்குவதற்கு உதவவேண்டும் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இதுவே, இக்கட்டுரையின் நோக்கமாகும். இறைவனை நோக்கிய எமது செயற்பாடுகள் எமது அசுர குணங்களைப் போக்குவதற்கு உதவாத பட்சத்தில், அவை விழலுக்கிறைத்த நீர்போலாகும்.

நாம் பிறக்கும்பொழுதே ஆணவ மலம், ஆன்மாவுடன் சேர்ந்து வருவதனால், அசுர குணங்கள் இலகுவாக எம்முள் வளர்ந்துவிடுகின்றன. அசுர குணங்களைப் போக்குவதற்கு கடவுட் குணங்களாகிய, 1. சத்தியம், 2. தருமம், 3. அறிவு, 4. ஆற்றல், 5. எளிமை, 6. இனிமை, 7. ஆனந்தம் என்பவனவற்றை எம்முள் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஏற்கனவே, அசுர குணங்களை வளர்த்து வைத்துக்கொண்டிருக்கும் மனிதன், திடீரென்று நினைத்த மாத்திரத்தில் கடவுட் பண்புகளை வளர்த்துக்கொள்வதென்பது இலகுவான காரியமல்ல. ஆனபடியால், இரண்டு குணங்களுக்கும் இடைப்பட்ட மனித குணங்களை முதலில் வளர்த்துக்கொள்ள வேண்டும். மனித குணங்களாவன: 1. அன்பு 2. இரக்கம் 3. கடமை, 4.கண்ணியம். 5. கட்டுப்பாடு, 6. தொண்டு, 7. தியாகம், என்பனவாகும். முதலில் மனித குணங்களை வளர்ப்பதன் மூலம், கடவுட் குணங்களை வளர்க்கக்கூடிய தகுதியைப் பெறமுடியும். தொடர்ந்து கடவுள் குணங்களை வளர்க்கும்பொழுது, படிப்படியாய் ஓட்டைகள் அடைபட்டு, இறையருள் எம்முள் தங்க ஆரம்பிக்கும். தொடர்ந்த முயற்சியால் எமது உடலும், உயிரும் உள்ளமும் இறையருளால் நிரப்பப்படும். அப்பொழுது. "வேண்டுவார் வேண்டுவன ஈவான் கண்டாய்" என்ற நிலையை அடைவோம். அவ்வேளையில், இறைவன் எமக்கு வேண்டியதைத் தானே அறிந்து அளிப்பான். அதன் விளைவாக, இம்மண்ணுலகச் சிற்றின்ப வாழ்க்கையை நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் அனுபவிக்க முடியும். இது சத்தியம்.

மேற்கோண்டு, பரலோகப் பேரின்ப வாழ்க்கையை விரும்புபவர்கள் இந்நிலையிலிருந்து முன்னேறி, இடைவிடாது கடவுட் பண்புகளை வளர்த்து, அதனின்று ஒழுகும்பொழுது, இறைவன் குருவடிவில் வந்து அதற்கான வழியைக் காட்டுவான்.

இறையருளைப் பெற்று இன்பமாய் வாழ்வதற்காக நாம் மேற்கொள்ளும் இறைவனை நோக்கிய செயற்பாடுகளான – பக்தி, வழிபாடு, அபிஷேகம், அர்ச்சனை, திருவிழாக்கள், விரதங்கள், காவடி, கற்பூரச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டி, பாற்குடம், பிரதட்டை, அடியழித்தல், காணிக்கைகள், அன்பளிப்பு, அன்னதானம், உபயங்கள், தொண்டு, பிரார்த்தனை, திருமுறை ஓதல், தேர் இழுத்தல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளில் எதுவாயிருந்தாலும், அது எமது தீயமனதை நல்மனமாக மாற்றவும், அதன்மூலம் அசுரப் பண்புகளை அழித்து, மனிதப் பண்புகளையும், தெய்வப் பண்புகளையும் வளர்த்துக்கொள்ளவும் உதவ வேண்டும். தவறின் அவையாவும் உவர் நிலத்தில் பெய்த மழை போலாகிவிடும். ஒவ்வொன்றையும் மேற்கொள்ளும்போது, எம்மிடமுள்ள ஒவ்வொரு அசுரப் பண்பையும் அழித்து விடவேண்டும் என்ற இலட்சியத்தோடு, செய்ய வேண்டும். மனதிலே எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது, வெறுமனே செய்து முடிப்பதனால், எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை.

பாவ காரியங்களையும், புண்ணிய காரியங்களையும் செய்வதற்கு அடிப்படையாயிருப்பது எமது மனமாகும். பாவ காரியங்களைத் தவிர்க்கவும், புண்ணிய காரியங்களைச் செய்யவும் தூண்டும்படி எமது மனதுக்கு இடைவிடாது பயிற்சி அளிக்க வேண்டும். அந்த வகையில், இறைவனை நோக்கிய எமது செயற்பாடுகள் எல்லாம் எமது மனதை நல்மனமாய் மாற்றும் முயற்சிக்கு உதவுவதாயிருக்க வேண்டும். மனதை மாற்றி, நல்வழிப்படுத்தி, நல்ல காரியங்களைச் செய்ய உதவுவதன் மூலந்தான் அசுரப் பண்புகளிலிருந்து விடுபடவும் இறையருளைப் பெறவும் வழிபிறக்கும். இறைவனை நோக்கிய செயற்பாடுகளை இவ்வாறான இலட்சியத்தோடு மேற்கொள்ளாத பட்சத்தில், அதில் செலவிட்ட நேரமும் பொருளும் வீண் விரயமாவதைத் தவிர, வேறெந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. ஒரு மனிதன் தனது மனதைக் கட்டியாளும் பயிற்சியில் சித்திபெறுவதும், வல்லமை பெறுவதுமே ஆன்மீக வளர்ச்சியாகும்.

தெய்வீகமும், ஆன்மீகமும் வரண்டு போனதாலும், சத்தியமும் தருமமும் செயலிழந்து மரணப் படுக்கையில் கிடப்பதாலும், இன்று மனிதன் நிம்மதியற்ற அவல வாழ்க்கை வாழும் நோயாளியாகிவிட்டான். இந்நோயாளிக்கு மருந்து அவசியம் தேவைப்படுகிறது. அதற்குத் தெய்வீகமும் ஆன்மீகமும் துளிர்த்து, செழித்து வளர வேண்டும். சத்தியமும், தருமமும் மரணப் படுக்கையிலிருந்து எழுந்து, இளமைபெற்று, வீரியத்துடன் செயற்பட வேண்டும். அதுவே நிம்மதியற்ற அவல வாழ்க்கைக்கு மருந்தாக அமைய முடியும். அவ்வாறான ஒரு சூழலை ஏற்படுத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்முள் உள்ள அசுரப் பண்புகளை அழித்து, மனிதப் பண்புகளையும், தெய்வப் பண்புகளையும் வளர்க்க இடைவிடாது முயற்சிக்க வேண்டும். இதுவே மனித குலம் உய்வதற்குரிய ஒரே வழியாகும்.

வாழ்க மனித குலம்! வளர்க தர்ம வாழ்க்கை!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிவன்" எனும் சிந்தனை

(பிரம்ம தத்துவம் முதல், பதிக் கோட்பாடு வரை)

கலாநிதி நா.சுப்பிரமணியன்

## தோற்றுவாய்

சமயநெறிகளின் முக்கிய அடிப்படைகளை வழிபாட்டு முறை மற்றும் தத்துவநிலை என இருமுக்கிய வகைகளில் அடக்கலாம். வழிபாட்டு முறைமைகளின் அடிப்படை அம்சம் நம்பிக்கையாகும். சமயமரபுகளில் - குறிப்பாக சைவம், வைணவம் முதலியவற்றிலே இது **'இறை'** என்ற உயரிய பொருள்மீதான பற்றுறுதியாக அமைந்துளது. இவ்வாறான இறை நம்பிக்கையை அறிவுநிலையில் தர்க்கரீதியாக உறுதிப்படுத்திக்கொள்வதான முயற்சிகளே நாளடைவிலே தத்துவங்களாக பல படிநிலைகளில் வளர்ச்சி எய்தின. இவ்வகையில் சைவ சமயத்தின் இறை பற்றிய சிந்தனையானது **'சிவன்'** எனும் முழுமுதலை முன்னிறுத்தியதாகும் இச்சிந்தனையானது பல படிநிலை வளர்ச்சிகளைக் கொண்டதாகும். இவ்வகையில் இருபடிநிலைகள் இங்கு நமது கவனத்துக்கு வருகின்றன. அவற்றுள் ஒன்று, ***அத்வைதம்*** எனப்படும் ***சங்கரவேதாந்த*** தத்துவப் படிநிலை.மற்றொன்று ***சுத்தாத்வைதம்*** எனப்படும் ***சைவ சித்தாந்த*** தத்துவப் படிநிலை ஆகும். இவ்விரு தத்துவ நிலைகளிலும் **சிவன்** எனப்படும் **இறை** தொடர்பாக நிலவிவந்த சிந்தனைகளை மையப்படுத்திய ஒரு ஒப்பீட்டுக் குறிப்பே இங்கு முன்வைக்கப்படுகின்றது. ***சங்கர வேதாந்த***மானது இதனை **'பிரம்மம்'** எனச்சுட்டி விளக்கம் தருகிறது. ***சைவ சித்தாந்தம்*** இதனைப் 'பதி' என வழங்குகிறது. மேற்படி இரு தத்துவங்களுக்கு இடையிலான வரலாற்றுத் தொடர்பை எடுத்துப் பேசும் நோக்கில் அமைந்த கட்டுரை, இது.

## 1. சைவத்தின் இறை நம்பிக்கையும் தத்துவ உருவாக்கமும்:

### - பொதுக்குறிப்பு

சைவ சமயத்தின் இறைவனான **சிவன்** என்ற பரம்பொருள் பற்றிய நம்பிக்கைக்கு நீண்ட வரலாறு உளது. அதனைக் 'கால எல்லை' மற்றும் 'கற்பனை வரம்பு' என்பவற்றைக் கடந்த ஒன்றாகத் தரிசிப்பது சைவ பக்திமரபு. இவ்வகையில் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி' என மணிவாசகரும் (**திருவாசகம்** திருவெம்பாவை:1) 'கற்பனை கடந்த சோதிக் கருணையே வடிவ'மான 'அற்புதன்கோலம்' எனச் சேக்கிழாரும் (**பெரியபுராணம்** : 351) தத்தம் அநுபவ சாரமாகத் தரும் செய்திகள் முக்கிய சான்றுகளாகும். இவ்வாறாக உணரப்படும் இந்த இறை நம்பிக்கையானது பின்வரும் அம்சங்களைக் கொண்டதாகும்.

அ. நமது புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாத உயரிய ஒரு தளத்திலே ஒப்பற்ற பரம்பொருளாக சிவபிரான் உள்ளார் என்பது.

ஆ. அவரே உலகின் அனைத்துப் பொருள்களையும் தோற்றுவித்து இயக்கிநிற்பவர் என்ற கணிப்பு.

இ. வாழ்க்கையின் சகல நிலைகளிலும் அவர் தோன்றாத்துணையாக நின்று உதவுவார் என்ற எதிர்பார்ப்பு.

இவ்வாறான உறுதிநிலையே சைவ பக்தி மரபின் அடிப்படையாகும்.

மேற்சுட்டியவாறான பக்தி என்ற உணர்வம்சத்தை வரலாற்று முறைப்படி விளங்கிக்கொள்ள முற்பட்டால் அது, தொடக்கத்தில் மனிதர்களின் அன்றாட தேவைகளின் அடிப்படையில் பயன்கருதியதாகவே வெளிப்பட்டதாகும். குறிப்பாக பாதுகாப்பையும் உணவு, உடை, உறையுள் மற்றும் சந்ததி விருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றையும் மனங்கொண்டு இறைவழிபாடு முதலில் நிகழ்ந்தது. நாளடைவில் இப்பக்தியானது இறையநுபவம் என்ற உயரிய உளநிறைவை நோக்கியதாக ஆழம் எய்தியது.

சைவ சமயத்தில் இவ்வாறான வரலாற்றின் தொல்நிலைகளை நாம் தெரிந்து தெளிவதற்கு வேதம் மற்றும் சிவாகம மரபுகள் முக்கிய சான்றுகளாகின்றன. தொடக்கநிலையில் மானுட வாழ்வின் உலகியல்சார் தேவைகள் என்ற நோக்கில் பேணப்பட்டுவந்த இவ்வாறான நம்பிக்கைசார்ந்த பக்தியுணர்வானது நாளடைவில் இறையநுபவம் என்ற நிலைக்கு ஆழம் எய்தியமையை **திருமுறைப்** பரப்பிலே – குறிப்பாகத் **திருவாசகப்** பாடற்பரப்பிலே - நாம் உணர்ந்து கொள்ளமுடியும்.

தந்ததுன் தன்னைக் கொண்டதென்தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யானிதற்கிலனோர் கைமாறே.

(**திருவாசகம்** : கோயிற்றிருப்பதிகம்:10)

என்ற பாடற்பகுதி இவ்வாறான இறையநுபவ ஆழத்துக்குப் பொருத்தமான சான்றாகக் கொள்ளத்தக்கது.

இவ்வாறாக நம்பிக்கை சார்ந்து உருப்பெற்றுப் பக்திநிலையில் ஆழம்பெற்று வளர்ந்துவந்த சைவசமய நெறியானது சமகாலத்தில் அறிவுசார்ந்த உறுதிப்பாட்டை நாடி நின்றது. இவ்வகையில் உருவான பல கோட்பாடுகளின் தொடர்ச்சியாக சைவத்துக்கான தத்துவங்கள் பல உருவாயின.

**தத்துவம்** என்பது உண்மை பற்றிய அறிவு எனப் பொருள்தருவது. தமிழில் இதனை 'மெய்யியல்' எனவும் வழங்குவர். இது அறிவுசார்ந்த தருக்கத்தின் அடிப்படையில் நிறுவப்படும் கருத்தியற் கட்டமைப்பாகும். இவ்வாறான கருத்தியற் கட்டமைப்புகள் பல காலத்துக்குக்காலம் உருவாகியுள்ளன. இவற்றுட்சில புலன்களால் உணரக்கூடிய, இவ்வுலக அம்சங்கள் மட்டுமே உண்மைப் பொருள்கள் எனப் பேசுவன. வேறுசில தத்துவங்கள் புலன்களால் அறியப்படாதனவும் இயற்கைக்கு அப்பாலானவையுமான உண்மைகளும் உள என்ற சிந்தனையின் அடிப்படையில் உருப்பெற்றவையாகும். சைவம்சார்ந்து உருவான தத்துவங்கள் மேற்படி இரண்டாவது வகையில் அமைவன. அவற்றுள் முக்கியமாக இங்கு கவனத்துக்குரியவை 'அத்வைதம்', மற்றும் 'சைவ சித்தாந்தம்' ஆகிய இரண்டுமாகும்.

இவற்றுள் ***'அத்வைதம்'*** என்ற தத்துவமானது சைவத்துடன் வைணவம் முதலிய வைதிக சமயங்களையும் உள்ளடக்கியமைந்த பொதுநிலைத் தத்துவமாகும். சைவ சமயத்துக்கான சிறப்புத் தத்துவமாக அமைந்தவற்றுள் முக்கியமானது ***சைவ சித்தாந்தம்*** ஆகும். ***(பாசுபதம், காசுமீர சைவம், வீரசைவம்*** முதலான பல கோட்பாட்டுப் பிரிவுகள் சைவத்தில் உள்ளன. எனினும் சைவ தத்துவம் என்ற நிலையில் தமிழ்ச் சூழலிற் பல்லாண்டுகளாகத் திகழ்ந்துவருவது என்றவகையில் ***சைவ சித்தாந்த***மே என்பதால் அதுவே இங்கு தனிக்கவனத்துக்குரியதாக எடுத்து நோக்கப்படுகிறது)

***அத்வைதம், சைவ சித்தாந்தம்*** ஆகிய இரண்டும் இறை நம்பிக்கையைப்பற்றிப் பேசும் முறைமையிற் காணப்படும் பொதுமை மற்றும் வேறுபாடு என்பன தொடர்பான அம்சங்களை மட்டும் இங்கு சுருக்கமாக நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சைவத்தின் இறைநம்பிக்கையை உறுதிப்படுத்தும் செயற்பாட்டில் அத்வைதமும் சைவ சித்தாந்தமும் - ஓர் ஒப்புநோக்கு

**அத்வைதம்** மற்றும் ***சைவ சித்தாந்தம்*** ஆகிய இரண்டும் இறைநம்பிக்கை என்ற அடித்தளத்தில் முளைகொண்டவை என்றவகையில் பொதுத்தளத்தில் அமைவன. **அத்வைதம்** என்ற வடசொல்லானது ***'உள்ளபொருள் இரண்டு அல்ல, ஒன்று மட்டுமேதான்.'*** என்ற பொருள் தருவதாகும். இவ்வகையில் அது உள்பொருள் என்றவகையில் ***பிரம்மம்*** என்ற நிறைவான பரம்பொருளைப் பற்றிப்பேசும் தத்துவமாகும். புலன்களுக்கும் மனத்துக்கும் எட்டாததும் குணங்குறிகளைக் கடந்ததுமான ஒன்றாக அப்பிரமத்துக்கு **அத்வைதம்** விளக்கம் தருகிறது.

இவ்வாறான ***பிரம்ம***த்தை அது இரு நிலைகள் கொண்டதாகக் காட்டுகிறது. ஒன்று அதன் முழுமையான – பூரணமான - நிலை. அது ***'நிர்க்குணப் பிரம்மம்'*** எனப்படும். அது குணங்குறிகளுக்கு அப்பாற்பட்ட நிலையாகும். மற்றது ***'சகுணப்பிரம்ம'*** நிலையாகும். இந்த இரண்டாவது நிலையிலேயே ***'ஈஸ்வர'*** எனப்படும் 'இறை பற்றிய கருத்தியல்' அமைகிறது. அதாவது **சிவன், விஷ்ணு,** பராசக்தி, **விநாயகர், முருகன்** மற்றும் **சூரியன்** முதலிய பெயர்கள் சுட்டி வடிவ இலக்கணங்களுடன் பேசப்படும் கடவுளர் நிலை அது. இவ்வகையில் **அத்வைத**மானது சிவபிரானுக்கு ***பிரம்ம***த்தை அடுத்துள்ள இந்த இரண்டாவது நிலையையே வழங்கியுள்ளது. அதாவது **அத்வைதம்** சைவத்தின் **'இறை'** எனப்படும் சிவ பரம்பொருளை ***'சகுணப்பிரம்மம்'*** என்பதான ***'ஈஸ்வர'*** நிலைக்கு உட்படுத்தி உறுதிசெய்கிறது. இதற்கு மாறாக ***சைவ சித்தாந்தம்*** அதன் **'பதி'** எனப்படும் சிவபிரானை முழுமுதற் பொருளாகவே கொள்கிறது. அதாவது **அத்வைத** தத்துவம் ***'பிரம்ம'***த்துக்கு அளிக்கும் ஒப்பற்ற உயர் மதிப்பைச் ***சைவ சித்தாந்தம்*** சிவபிரானுக்கு வழங்கியுள்ளது.

இதுவே இவ்விரு தத்துவங்களின் இறைபற்றிய கருத்தியலின் அடிப்படையான வேறுபாடாகும். இந்த வேறுபாட்டுக்கான காரணிகள் இங்கு வரலாற்று நிலையில் ஊகிக்கப்படவேண்டியன.

## 3. அத்வைதமானது நிர்க்குண பிரம்மம் பற்றிப் பேச நேர்ந்த சூழல்.

**அத்வைத** தத்துவத்தின் மூலச்சிந்தனைகள் வேத இலக்கியப்பரப்பின் இறுதிப் பகுதியான உபநிடதங்களில் இடம்பெற்றனவாகும். உபநிடதங்களின் பின் எல்லையாக கௌதமபுத்தரின் காலமாகிய கி.மு.6ஆம் நூற்றாண்டைக் கொள்வது மரபாகிவிட்டது. அவ்வகையில் உபநிடதங்களின் காலம் ஏறத்தாழ கி.மு.1000 - 500 காலகட்டம் எனக் கருதப்படுகிறது. **சாந்தோக்யம், பிருகதாரண்யகம், கேனம், கடம், முண்டகம்** முதலிய பெயர்களிலமைந்த இந்த உபநிடதங்களே புலன்களுக்கும் மனத்துக்கும் அப்பாற்பட்ட **பிரம்மம்** என்ற உயர்பொருளைப்பற்றிய சிந்தனைகளை முன்வைத்தவையாகும்.

மேற்படி உபநிடதங்களுக்கு முற்பட்டவையான **இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்** ஆகிய வேத சங்கிதைகளிலே சிவன் என்ற தெய்வம் பற்றிய சிந்தனைகள் உருவாகிவிட்டன என்பதும் குறிப்பாக முற்பட்ட வேதநூலாகிய **இருக்கு வேத சங்கிதை**யில் இடம்பெற்றுள்ள முப்பத்துமூன்று தெய்வங்களில் சிவபிரானும் ஒருவர் என்பதும் இங்கு நமது கவனத்துக்குரியன. மேற்படி வேத இலக்கியங்களிலே தனித்தனியாகப் பேசப்பட்ட தெய்வங்களின் பண்புகளைத் தத்துவநிலையில் அடையாளப்படுத்தும் சிந்தனை வளர்ச்சியின் ஒருகட்டமாகவே பின்னாளில் உபநிடதங்களில் ***பிரம்மம்*** என்ற உயர்பொருள்பற்றிய கருத்தாக்கம் உருவாக்கம் பெற்றது.

இவ்வாறான சமயநிலைப்பட்ட நம்பிக்கைகள் சார்ந்த செயற்பாடுகளின் ஒருகூறாக அவர் மேற்கொண்ட அறிவுசார்ந்த தர்க்கநிலைப்பட்ட சிந்தனைகளின் வெளிப்பாடே **அத்வைதம்** என்ற தத்துவமாக நிறைவடிவம் எய்தியது. இதன் உருவாக்கத்தில் இவர் புலப்படுத்திய ஆளுமை காரணமாக ***சங்கர வேதாந்தம்*** என்ற பெயரையும் இதுபெற்றது.

இவ்வாறு உபநிடதங்கள் முன்னிறுத்திய ***பிரம்மம்*** தொடர்பான சிந்தனைகளைத் தத்துவநிலைக்குரியதாக தர்க்கநிலையில் விரித்துப் பேசியவர்களில் முக்கியமானவர் கி.பி. 788-820 காலப்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படும் ஆதி சங்கரர் ஆவார். இந்தியாவின் தென்கோடியில் பிறந்த இவர் வடதிசைசென்று பல்வேறு மாநிலங்களுக்கும் பயணம் மேற்கொண்டு அவ்வச்சூழல்களின் சமயமரபுகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுணர்ந்தவர். அம்முயற்சியின் தொடர்ச்சியாக அவ்வப் பிரதேசங்களில் வழக்கிலிருந்த 'ஷண்மதங்கள்' எனப்படும் ***சைவம், வைணவம், சாக்தம்*** (சக்திவழிபாட்டுநெறி), ***காணாபத்யம்*** (விநாயக வழிபாட்டுநெறி), ***கௌமாரம்*** (குமாரவழிபாட்டு நெறி), ***சௌரம்*** (சூரியவழிபாட்டு நெறி) என்பவற்றைக் கோட்பாட்டு நிலைப்படுத்தி நிறுவியவராகவும் இவர் கருதப்படுகிறார். இதனால் 'ஷண்மத பிரதித்தாபகர்' என அவர் அறியப்பட்டுள்ளார். இவர் சிவன், அம்பாள், விஷ்ணு முதலிய கடவுளர்மீது முறையே, **சிவானந்த லஹரி, சௌந்தர்ய லகரி, ஹரிஸ்துதி** முதலான தோத்திங்கள் புனைந்த ஒரு பக்தருங்கூட என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய செய்தியாகும்.

அன்றைய(கி.பி 8-ஆம், 9ஆம் நூற்றாண்டுகளின்) இந்தியச் சூழலின் சமய நம்பிக்கைகளைத் தத்துவமாக அறிவுநிலைப்படுத்தும் முயற்சியில் சங்கரர் ஈடுபட்டிருந்தபோது அவர் தர்க்கநிலையில் மூவகையினரை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. அவர்களுள் ஒருவகையினர் ***சூனியவாதம்*** பேசிய பௌத்தர்கள். இன்னொரு வகையினர் இறைமறுப்புக் கொள்கையினரான உலகாயதர். மற்றொரு வகையினர் வழிபாட்டு முறைமைகளுக்கு மட்டுமே முதன்மைவழங்கி, இறையுணர்வைப் பின்தள்ளியவர்களான மீமாம்சகர் ஆவர்.

***சூனியவாதம்*** என்ற பௌத்தக் கோட்பாடானது உலகில் ஒரு பொருளுமே உண்மையல்ல என்று வாதிப்பது. புலன்களால் உணரப்படும் உலகை மட்டும் உண்மை எனக் கருதுவது உலகாயதம். இறைவன் என்ற கருத்தியலுக்கு இது நேர் எதிரானது என்பது வெளிப்படை. வேதங்கள் சொல்லும் வேள்விப் பண்பாட்டையும் பிற வழிபாட்டு முறைமைகளையும் இறை பற்றிய உணர்வின்றி வெறும் சடங்காசாரமாகவே பின்பற்றிநின்றது ***மீமாம்சை*** என்ற தத்துவம். இது ***பூர்வ மீமாம்சை*** எனவும் சுட்டப்படும். மேற் சுட்டிய முதலிரு தத்துவ சார்பினருக்கும் எதிராக, 'உண்மைப் பொருள் ஒன்று உளது' என்பதையும், 'அது புலன்களால் அறியப்படும் உலகப் பொருட்கள் என்ற எல்லைக்கப்பால் உளது' என்பதையும் வலியுறுத்தி நிறுவுவதே சங்கரரின் குறிக்கோளாக அமைந்திருந்தது. அதேவேளை இறையுணர்வைப் புறந்தள்ளிய ***பூர்வ மீமாம்சை***யின் சடங்காசார அணுகுமுறைகளையும் சங்கரர் வெறுத்தார். வெற்றுச் சடங்காசாரத்தை விட உயர்ந்த ***பிரம்மம்*** பற்றிய உணர்வைத் தருவதான ஞானமே முக்கியம் என அவர் வாதிட முற்பட்டார். இவ்வாறான பன்முகக் குறிக்கோள்களை எய்துவதற்கு அவர் கைக்கொண்ட சிந்தனை ஆயுதமாகவே ***நிர்க்குணப்பிரம்மம்*** என்ற உயரிய பரம்பொருட் கருத்தியல் அமைந்தது.

அவரால் கோட்பாட்டு நிலைப்படுத்தப்பட்டனவாகக் கருதப்படும் 'ஷண்மத'ங்களின் கடவுளர்களான சிவன், விஷ்ணு, சக்தி, விநாயகர், ஸ்கந்தன், சூரியன் ஆகியவர்களுள் எவர் ஒருவரையாவது ***'நிர்க்குணப் பிரம்ம'*** நிலையிலான ஒப்பற்ற உயர்தனிப் பரம்பொருளாக அவர் சுட்டமுயன்றிருந்தால் ஏனைய ஐந்து கடவுளர் மீதும் நம்பிக்கை கொண்டவர்களுடைய எதிர்ப்பையும்கூட அவர் எதிர்கொள்ள நேர்ந்திருக்கும். எனவே இறை நம்பிக்கையாளரான ஷண்மதவாதிகளைத் தனது அணியில் இணைத்துக்கொண்டு பொதுவான எதிர்நிலையினரை அதாவது சூனியவாதிகள், 'உலகாயதர்' மற்றும் 'பூர்வ மீமாம்சகர்' ஆகியோரை எதிர்கொள்வதற்கு அவர் உருவாக்கிக் கொண்ட ஒரு உத்திமுறையாகவே அவருடைய ***'நிர்க்குணப் பிரம்ம'***க் கோட்பாடு அமைந்தது என்பது உய்த்துணரப்பட வேண்டியது. சிவன், விஷ்ணு முதலிய மேற்படி ஷண்மதக் கடவுளரைச் ***சகுணப் பிரம்ம*** நிலைகளாகக் கொண்டு அவற்றுக்கு அப்பாலான ஓர் உயர் தத்துவநிலையாக அவர் உபநிடதங்கள் கூறும் ***பிரம்ம***த்தைக் காட்ட விழைந்துள்ளார். இதுவே ***அத்வைதம்***, சைவத்தின் இறைநிலைக்கு - அதாவது **சிவபிரான்** என்ற கடவுள் நிலைக்கு - மேலானதாக ***நிர்க்குணப் பிரம்மம்*** என்ற நிலையைப் பேசியதற்கான அடிப்படை ஆகும்.

## 4. சைவ சித்தாந்தம் சிவபிரானை முழுமுதற் பொருளாக நிறுவிய சூழல்

சங்கரர் ***அத்வைதம்*** பற்றிப் பேசிநின்ற காலத்திலேயே ***சைவ சித்தாந்தம்*** என்பது ஒரு சிந்தனைப் பிரிவாக உருவாக்கம் பெறத் தொடங்கி விட்டது. அச் சிந்தனையிலே 'தத்துவ நிலைக்கு உரியதான உலகநோக்கு' என்ற மைய அம்சம் கி.பி.8ஆம் நூற்றாணடில் உருவாகத் தொடங்கி விட்டது. இதனை, அந்நூற்றாண்டைச் சார்ந்தவரான சத்திய ஜோதி சிவாசாரியாரின் **அஷ்டப்பிரகரணம்** என்ற நூற்பரப்பில் தெளிந்துகொள்ளலாம். இவ்வாறு தத்துவ நிலை நோக்கி வளரச்சியெய்திவந்த மேற்படி ***சைவ சித்தாந்த***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையானது கி.பி.12-14ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் எழுந்தனவாகிய **மெய்கண்டசாத்திரங்களிலேயே** நிறைவான தத்துவ வடிவத்தை எய்தியது என்பது வரலாறு.

இத்தத்துவம் சிவாகமங்கள் கூறும் சிவவழிபாட்டுமரபில் உறுதியாக வேர்கொண்டு உருவானதாகும். அதேவேளை இது வேதமரபின் சிந்தனைகளையும் உள்வாங்கித் தன்னை வலுப்படுத்திக் கொண்டது. **திருமுறை** என்ற சைவ பக்தியிலக்கியப் பரப்பு இத் தத்துவத்திற்கான உணர்வுத் தளத்தை - அதாவது சிவபிரானே முழுமுதற்பொருள் என்ற அநுபவ வயப்பட்ட உணர்வுத் தளத்தை - திட்டப்பாங்குடன் உருவாக்கியிருந்தது. தமிழகத்தின் கோயில் கலாசாரம் குறிப்பாகச் சிதம்பரம் நடராஜர் ஆலயம் முதல் தஞ்சைப் பெருவுடையார் கோவில்வரையான ஆலயங்களின் நிர்மாணச்சூழல் மற்றும் வழிபாட்டுமுறைச் சூழல் என்பன சமூகநிலையில் சிவபிரானுடைய பிம்பத்தை மிக உயர்நிலைக்கு இட்டுச்சென்றிருந்தன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக முக்கியமாகச் சுட்டப்படவேண்டிய அம்சம், **மெய்கண்ட** சாத்திரங்கள் உருவான சூழலில் தமிழகத்தின் அரசியல் அதிகாரம் சைவத்திடம் இருந்தது. குறிப்பாக சோழப் பேரரசின் பேராதரவுடன் சைவம் பிரகாசித்துக் கொண்டிருந்த காலம் அது.

இத்தொடர்பிலே இங்கு குறிப்பாக நோக்கப்பட வேண்டிய அம்சம் சங்கரர் போல அனைத்திந்திய மட்டத்தில் பௌத்தர், உலகாயதர் மற்றும் மீமாம்சகர் ஆகியோருடன் விவாதங்களை நிகழ்த்தித் தமது இறை நம்பிக்கையை அறிவு பூர்வமாக நிறுவிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த சூழல் அன்றைய சைவ சித்தாந்தருக்கு இருக்கவில்லை என்பதாகும்.

இத்தொடர்பில் ஒரு மேலதிக விளக்கம்: **சிவஞான சித்தியார்** என்ற சைவசித்தாந்த சாஸ்திரம் 'பரபக்கம்' என்ற வகையில் பிற கோட்பாடுகளை மறுக்கின்றது என்பது இங்கு நம் கவனத்துக்குரிய ஒன்றாகும். ஆனால் அது, பிற தத்துவத்தினருடனான ஒருவிவாதச் சூழலில் சைவத்தை நிறுவ மேற்கொண்ட நிர்ப்பந்த நிலையின் வெளிப்பாடன்று. மாறாக அது, 'தத்துவ உருவாக்க முறைமைசார்ந்த உத்தியாகவே - அதாவது தத்துவ ஆசிரியர் தமது சிந்தனை ஆளுமையைப் புலப்படுத்த மேற்கொண்ட ஒரு புலமைசார் செயற்பாங்காகவே கொள்ளப்பட வேண்டியதாகும்.)

ஏற்கெனவே சங்கரர் போன்றோராலும் சைவத்தின் ஏனைய பல கோட்பாட்டுப் பிரிவினர்களாலும் நிறுவப்பட்டுவிட்டதும் பக்திமரபால் மக்களின் மனதிற் பதிவுபெற்று விட்டதுமான சிவ நம்பிக்கையை ஒரு உயர்நிலைத் தத்துவமாக நிலைப்படுத்துவது மட்டுமே அன்றைய – அதாவது **மெய்கண்ட சாத்திரக்கால** - சைவசித்தாந்தரின் முன் நின்ற கடமையாகும். ***சைவ சித்தாந்தம்*** அதன் ***'பதி'*** எனப்படும் சிவபிரானை முழுமுதற்பொருள் ஆக - அதாவது ***அத்வைதம்*** கூறும் ***நிர்க்குணப் பிரம்மம்*** என்ற உயர்நிலைத் தத்துவப் பொருளுக்கு நிகராக - நிறுவியமைக்கான வரலாற்றுச் சூழலை இவ்வாறுதான் நாம் தெளிந்துகொள்ளவேண்டும்.

**நிறைவாக...**

சைவத்தின் இறை நம்பிக்கை தத்துவ வடிவம் எய்தியமை தொடர்பான ஒரு குறிப்பு மட்டுமே இங்கு முன்வைக்கப்பட்டது. ***அத்வைத***த்தால் ***'சகுணப் பிரம்மம்'*** என்று இரண்டாவது நிலையிற் பேசப்பட்ட சிவபிரான், ***சைவசித்தாந்த***த்தில் பரம்பொருள் என்ற ***நிர்க்குணப்பிரம்ம*** நிலைக்கும் இட்டுவரப்பட்டமை தொடர்பான சூழ்நிலைப் பின்புலம் என்ற ஒரு அம்சமே இங்கு கருத்திற் கொள்ளப்பட்டது. மேற்சுட்டியவாறு இவ்வரலாற்றுச் செல்நெறியை நாம் தெளிந்து கொள்ளும் பொழுது ***அத்வைதம்*** எனப்படும் ***சங்கர வேதாந்த***த்துக்கும் ***சைவசித்தாந்த***த்திற்கும் இடையிலே வரலாற்று நிலையிலான ஒரு சிந்தனைத் தொடர்ச்சியைத் தெளிந்துகொள்ள முடியும்.

(இக்கட்டுரை, 2012இல் வெளிவந்த **நகுலநாதம்** - கீரிமலை நகுலேஸ்வர கும்பாபிஷேக மலரிலே இத்தலைப்பில் இடம்பெற்ற கட்டுரையின் செப்பனிட்ட வடிவமாகும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய நூல்கள் நல்கும் நன்னெறி

திருமதி. மங்களாம்பாள் பரஞ்சோதி

நவீன உலகில் வளமாக வாழ பல சமயங்கள் நிலவுகின்ற போதிலும் தொன்மையான சைவ சமய நெறியில் நிற்போர் பல்கோடி மக்களாவர். சைவம் ஒருவரால் ஒரு இடத்தில் ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்படாத பழமையும் பெருமையும் மிக்கதாகும். சைவசமயம் தத்துவத்தோடும் கலைகளோடும் பண்பாட்டோடும் வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்துள்ளது. உயர் தத்துவமாகிய சைவ சித்தாந்தம் தனிமனிதனும் ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கான வழியைத் தெளிவாக விளக்கி நிற்கின்றது. கலைகள் அனைத்தையும் தெய்வீகமாகவே காண்கின்றது. இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம் என்பன ஆலயங்களினூடாக மக்கள் வாழ்வினைச் செம்மைப்படுத்தி, சிறப்படையச் செய்கின்றன. இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை கலைகள் என்று சைவ மக்கள் கருதுகின்றார்கள். ஒழுக்கம், பக்தி, புலனடக்கம் என்பன மனிதனுக்கு அவசியம் எனப் புரிய வைக்கின்றது. கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், பொய் ஆகிய குற்றங்களைப் பஞ்சமா பாதகங்கள் என சைவ சமய நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன. சமய தீட்சையின் அவசியத்தையும், உடலை சிவபோகமாக மாற்றி, சிவ மந்திரத்தை உச்சரித்து, திரிபுண்டரமாக திருநீறு அணியவும் வேண்டும் என வலியுறுத்துகின்றது. 'வெண்ணீறணிகிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே'' என மணிவாசகரும், திருநீற்றுப் பதிகம் வாயிலாக சம்பந்தரும், திருநீற்றின் மகிமை பற்றித் தெளிவுபடுத்துகின்றனர். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும், ஒவ்வொருவரும் அறமுடையவர்களாக வாழ வேண்டுமென்றே சைவத் திருநூல்கள் கூறுகின்றன.

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவமாகும். இறை, உயிர், தளை, (பதி,பசு, பாசம்) எனும் முப்பொருள் உண்மையை விளக்கிநிற்கிறது. இவற்றினை ஆராய்வதன்மூலம் மூன்று பொருள்களின் இலக்கணமும், தொடர்பும் உயிர்களுக்குக் கிடைக்கும் பயனும் தெளிவாக அறிய முடிகின்றது. இவ்வுண்மையை ஆராயும் அறிவு, சங்ககாலத்திற்கு முற்பட்டதெனினும், முறையாகவும், முழுமையாகவும் கணித்துக் கூறப்பட்ட காலம் 12–14ஆம் நூற்றாண்டிற்கு உட்பட்ட காலமாகும். இக்காலத்தில் எழுந்தனவே சைவ சித்தாந்த சாத்திரங்கள் எனப்படும் மெய்கண்ட நூல்கள் ஆகும். அவை பதின்நான்கும் பின்வருமாறு.

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞானபோதம்
4. சிவஞான சித்தியார்
5. இருபா இருபது
6. சிவப்பிரகாசம்
7. திருவருட்பயன்
8. வினாவெண்பா
9. போற்றிப் ப∴றொடை
10. கொடிக்கவி
11. நெஞ்சுவிடுதூது
12. உண்மைநெறி விளக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சங்கற்ப நிராகரணம்
14. உண்மை விளக்கம் என்பனவாம்.

இவையனைத்தும் இறைவனை முதன்மையாகக் கொண்டு வளர்ந்த உபதேச பரம்பரையில் வந்தனவாகும். இவற்றுள் உமாபதி சிவாச்சாரியாரால் அருளிச்செய்யப்பட்டதே திருவருட்பயனாகும்.

திருவருளைப்பற்றியும், அதன் பயன்பற்றியும் விளங்கக் கூறலின் திருவருட்பயன் எனப் பெயர்பெற்றது. இந்நூல் பத்து அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. முதல் மூன்று அதிகாரங்களும், இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள் இலக்கணங்களைக் கூறுவனவாகும். நான்காம் அதிகாரம் இறைவனின் திருவருளே உலகில் சிறந்ததும் உயர்ந்ததும் என்கிறது. ஐந்தாம் அதிகாரம் உயிர்கள் மேல் வைத்த கருணையால் அருளே வந்து உறுதியை அளிக்கிறது என்று கூறுகின்றது. ஆறாவது அதிகாரம் அறிவிக்க அறியும் உயிர் அறியும் நிலையை விளக்குகின்றது. ஏழாம் அதிகாரம் உயிர்பெறும் விளக்கத்தைக் கூறுகின்றது. எட்டாம் அதிகாரம் விளக்கம் பெற்ற உயிர் இன்புறுமாற்றை விரித்துரைக்கின்றது. ஒன்பதாம் அதிகாரம் பெற்ற இன்பத்தை நெகிழ விடாது தொடர்ந்து நின்று பயன்பெறுவதற்கு திருவைந்தெழுத்தை ஓதவேண்டும் எனக் கூறுகின்றது. படிப்படியாக உயர்ந்த உயிர் இறைவன் திருவடிக்கண் அணுகிய பின், எவ்வாறு இருக்கும் என்பதனை பத்தாம் அதிகாரம் அணைந்தோர் தன்மையை விளக்குகின்றது.

இவற்றைவிட நம்பியாண்டார் நம்பியடிகள் வகுத்தளித்த பன்னிரு திருமுறைகளும் சைவத்திற்குப் பெருங்கொடையாக விளங்கி நிற்கின்றது. ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய நாயன்மார் பாடிய தேவாரப் பதிகங்கள் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. எட்டாந் திருமுறையான திருவாசகமும், திருக்கோவையாரும் மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பட்டவை. திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பர். 'பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக' என்று இறைவனை வேண்ட, மணிவாசகர் திருக்கோவை பாடினார் என்பர். ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டுமாகும். பத்தாந் திருமுறை திருமூலரது திருமந்திரம். 3000 பாடல்கள் கொண்ட எமது சமய தத்துவங்களைக் குறிக்கும் மிகப் பழைய தமிழ் நூல் இதுவே. நாற்பது தோத்திர நூல்களின் தொகுதியே பதினொராம் திருமுறையாகும். இவை தவிர, பட்டினத்தடிகள், காரைக்கால் அம்மையார், நக்கீரர், நம்பியாண்டார் நம்பி என்போர் உட்படப் பதினொருவர் பாடிய நூல்கள் இத்திருமுறையில் உள்ளன. சேக்கிழார் அருளிச்செய்த பெரியபுராணம், பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது. இறை வழிபாட்டின்போது ஆலயங்களிலும், சைவ சமய நிகழ்ச்சிகளின்போதும் திருமுறை ஓதுதல், சைவ மரபு. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் எனும் பஞ்ச தோத்திரங்கள் ஓதினால் பன்னிரு திருமுறைகளை ஓதிய பயன் கிடைக்கும்.

திருமந்திரம் யோக, வைத்திய தத்துவ வாழ்க்கை நூலாக விளங்குகின்ற ஞானத்திருநூல் ஆகும். மனிதன் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வாழ்வியல் கருத்துக்கள் திருமந்திரத்திலேயே காணப்படுகின்றன.

எங்களது ஆன்ம ஈடேற்றத்திற்காக நாள்தோறும் இறைவனை வழிபட வேண்டும். பூவும் நீரும் கொண்டு இறைவனைத் துதிக்கவேண்டும். 'புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு' எனும் அடிப்படை அறங்களைத் திருமந்திரம் எடுத்து இயம்புகின்றது.

"யாவர்க்குமாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைபிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தமிழ் மந்திரமாம் திருமந்திரம் கூறும் எளிய வாக்கு. இதனைக் கிரமமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறது.

நல்லொழுக்கம், அற வாழ்க்கை, யோகப் பழக்கம், மந்திர நுட்பம், சமய ஒழுக்கம், குருநெறி நிற்றல், அகப்புற உணர்வு, அருள் நுகர்வு, பேராப் பெருவாழ்வு எனும் ஒன்பது பொருள்களை விளக்குகின்றன. அன்றியும் மழை, செல்வம், ஆட்சி, கல்வி, கேள்வி, உடலோம்பல், ஆயுள்வகை, மருத்துவ முறை, மூச்சொழுங்கு, மனவொருமை முதலான நல்வாழ்வுக் குறிப்புகள் திட்ப நுட்பமாகக் கூறப்பட்டுள்ளன.

நல்லவர் வாழ, நல்லுணர்வுகள் பரவும்; நுண்ணிய பொருள்களை இயக்க மழை பொழியும். நாடு செழிக்கும், அரசு ஓங்கும், மறம் தேயும், அறம்பெருகும், அருள் சிறக்கும். உலகத் துயர் நீங்கும் என்று கூறுகின்றது. சைவ சித்தாந்த அடிப்படைத் தத்துவங்களான முப்பொருள், மூவகை உயிர்கள், மும்மலம், நால்வகை நெறிகள், திருநீறு, திருவைந்தெழுத்து, திருக்கூத்து முதலியவை இந்நூல் முழுதும் விளக்கப்பட்டுள்ளன. அன்பே சிவம் என்பது திருமந்திரத்தின் பிழிந்த ஞான உரையாகும்.

"அன்பே சிவமானது ஆரும் அறிந்தபின் அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்பது சைவ சமயம் இட்டுச் செல்லும் முடிவான இலக்கு என்ற திருமந்திரம் கூறுகின்றது.

இந்நூலை இயற்றிய திருமூலர் பெரியபுராணம் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராவர். இவர் பல்லாண்டு தவமிருந்து தெளிந்த ஞானம் பெற்று 3000 பாடல்களாக எமக்குத் தந்துள்ளார். திருக்கயிலையில் திருநந்தி தேவரிடம் மெய்ப்பொருள் கேட்டவர். அட்டமாசித்திகளும் கைவரப் பெற்றவர். திருவாவடுதுறையில் ஆனிரைகளின் துயர் போக்க, மூலன் உடலில் புகுந்து அவைகளை மகிழ்வித்து, தன் உடல் தொலைத்து திருமூலர் என்னும் பெயரும் கொண்டு அங்கேயே தவத்தில் அமர்ந்தார். "நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனும் ஆர்வத்தால் திருமந்திரப் பாடல்களை அருளிச் செய்தார்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்  
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

கடவுள் நம்மைப் படைத்தது, நன்று செய்து இறையருள் பெறவே என்று நாயனார் கூறுகின்றார். அனுபவ ஞானத் திருநூலாம் திருமந்திரத்தை நாடோறும் படித்து வாழ்வாங்கு வாழ்ந்து இறைநிழல் அடைவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் வழிபாடு



'பெரியபுராணப் பெருநாவலர்', 'நற்றமிழ் நாயகர்',
துரை நமசிவாயம் எம்.ஏ.பி.டி. தமிழ்நாடு.

"ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் - அதை
அன்னை எனப்பணிதல் ஆக்கம்"

என்று மகாகவி பாரதி பாடியிருக்கிறார். ஆதிப்பரம்பொருள் என்பது சிவமும் சக்தியும் இணையாக இருக்கும் நிலையேயாகும். சக்தி சொல் வடிவமாகவும், சிவம் அந்தச் சொல்லின் பொருள் வடிவமாகவும், இருந்து உலகத்தார்க்கு ஊக்கமளிக்கிறார்கள்.

சொல்தான் சக்தி; பொருள்தான் சிவம்.

## சொல்லும் பொருளும்

திருவிளையாடற் புராணம் என்ற ஒரு நூல், அந்நூலில் இடைக்காடன் பிணக்கு தீர்த்த படலம் என்று ஒரு பகுதி உண்டு. இடைக்காடன் என்பவன் புலவன். அவன் மதுரையை ஆண்ட குலசேகர பாண்டியனிடம் சென்று தனது புலமையைக் காட்டி பரிசில் பெறச் சென்றான். பாண்டிய மன்னன் புலவனது பாட்டுத் திறத்தைப் புகழாவிட்டாலும், தலையை ஆட்டுவித்தாகிலும் அங்கீகாரம் செய்திருக்கலாம்; பரிசுகளை அள்ளிக் கொடுத்திருக்கலாம். அவற்றைச் செய்யவில்லை. மன்னனது பாராமுகம் புலவரைக் கோபத்தின் கோபுர உச்சிக்கே கொண்டு போயிற்று. அதன் விளைவாக, புலவர் சொக்கநாதப் பெருமானிடம் தனது துயரத்தைக் கூறி, குறை தீர்க்குமாறு முறையிட்டார். தமிழ்ப்புலமையும், சிவனடிமைத் திறமும் உடையாரை அவமதித்த மன்னனது நகரில், தொடர்ந்து சிவபெருமான் இருக்க விரும்பவில்லை. ஆதலால், தனது இலிங்கத் திருவுருவத்தோடு நகரின் எல்லைக்கருகில் எழுந்தருளினார். மறுநாள் மன்னன் இலிங்கத் திருமேனியைக் காணாது தேடி, வருந்தி இறுதியாக அதன் இருப்பிடம் சென்றான். தன் பிழை உணர்ந்து, வணங்கித் திருந்திய பாண்டியன் புலவரைப் போற்றிப் பாராட்டிப் பரிசளித்து மகிழ்ந்தான் என்ற ஒரு செய்தி வருகிறது. புலவன் இறைவனிடம் முறையிட்டபோது, இறைவா! தமிழறியும் பெருமானே! பாண்டிய மன்னன் மானக்குறை செய்தது என்னையல்ல; சொல்வடிவாக விளங்கும் அம்மையையும், சொற்பொருளான உன்னையும் சேர்த்து அல்லவா அவமதித்துவிட்டான் என்று பாடல் இயற்றி வேண்டியதாகப் பாடல் வரிகள் இருக்கின்றன.

"என்னை இகழ்ந்தனனோ சொல்வடிவாய்
நின்னிடம் பிரியா இமயப் பாவை
தன்னையும் சொற்பொருளான உன்னையுமே
இகழ்ந்தனன் என்தனக்கு யாது என்னா?"

இப்பாடலிலிருந்து சக்தியும், சிவமும் சேர்ந்ததே ஆதிப்பரம் பொருள் என்று விளங்குகிறது. மேலும் சொல்லே செயலுக்குக் காரணமாவதால், அச்சொல்லின் வடிவமாய் சக்தி இருப்பது தெரியவருகின்றது அல்லவா? பிறக்கும் குழந்தைக்கு 'இவர்தான் உன் அப்பா' என்று அறிமுகப்படுத்தி, அப்பா என்ற சொல்லை உச்சரிக்கச் செய்ய உதவுபவள் தாயல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்து சக்திகள்

பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என்னும் ஐந்து சக்திகளின் வெவ்வேறுபட்ட கோலங்களே நாம் காணும் நூற்றுக்கணக்கான தெய்வ வடிவங்கள்.

பராசக்தியின் இயல்பு என்ன? பல்லாயிரம் கோடிக்கணக்கான ஒளிப் பிரகாசத்தோடு இருப்பதுதான். நம்மால் ஒரு சூரிய ஒளியையே நெடுநேரம் முழுவதுமாகப் பார்த்துக் கொண்டிருக்க இயலாது. அப்படி மீறிப் பார்க்க முயற்சித்தால் சூரிய ஒளி வெள்ளம் கண்ணில் அனலாகப் பாய்ந்து கண்ணைக் குருடாக்கிவிடும். இந்நிலையில், பல்லாயிரக் கணக்கான சூரிய ஒளியைத் தரிசிக்க இயலாது. உலகம் தாங்காது என்பதால், தன்னை மட்டுப்படுத்திக்கொண்டு பராசக்தி பல்வேறு நிலைகளில் இந்நிலவுலகிற்கு இறங்கி வருகிறாள். பராசக்தியின் ஆயிரத்தில் ஒரு பங்காக ஆதி சக்தி வெளிப்படுகிறாள். ஆதிசக்தியின் ஆயிரத்தில் ஒரு கூறாக ஞானசக்தி வெளிப்படுகிறாள். ஞானசக்தியின் ஒரு அம்சமாக கிரியாசக்தி, வெளிப்படுகிறாள். இப்படி புதிய நிலைகளுக்குத் தன்னைத் தள்ளி வெளிப்படுத்திக்கொள்வது சக்தியின் வெளிப்பாடு.

## மாரியம்மன்

ஆகம கருத்துக்களின்படி அம்பிகை, மகாமாரி, முத்துமாரி, கனகாம்பிகை, துர்க்கை, உமை, கௌரி, ஆதிசக்தி, பராசக்தி என பல பெயர்கள் மாரியம்மனுக்கு உண்டு. சமுதாயத் தெய்வங்களில் மாரியம்மனுக்கு ஒரு தனிச்சிறப்பான இடம் உண்டு. தமிழ்நாட்டில் சமயபுரம் மாரியம்மன், பன்னாரி மாரியம்மன், மாங்காடு மாரியம்மன் ஆகிய அம்மன்களின் ஆற்றல் பக்தர்களால் பெரிதும் போற்றி வழிபடப்படுகின்றன. இலங்கை வாழ் தமிழர்களுக்கு மாத்தளை என்னுமிடத்தில் குடிகொண்டு அருள்பாலிக்கும் அம்மன் ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். பொதுவாக மாரியம்மனின் திருவுருவ அமைப்பு எப்படி இருக்க வேண்டும்?

அமைதி தவழும் முகப்பொலிவு மூன்று கண்கள், இளமைப் பொலிவு, செந்நிறம், வாள், கபாலம், பாசம், உடுக்கை, ஆகியவற்றை ஏந்தியுள்ள கைகள், மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட தோற்றம், காலுக்குக் கீழே அரக்கனை மிதித்து நிற்கும் நிலை. இத்தகைய தோற்றத்தில் மாரியம்மன் வழிபாடு செய்யும்போது மனத்திற்கு உற்சாகமும், உத்வேகமும் பீறிட்டு வருதல் இயல்பே.

மாரி என்ற சொல்லுக்கு மழை என்று ஒரு பொருள் உண்டு. மாரி என்ற சொல்லிற்கு குளிர்ச்சி என்ற மற்றொரு பொருளும் உண்டு. சீதளாம்பிகை என்றும் மாரியம்மனுக்கு ஒரு பெயர் உண்டு; அதாவது குளர்ச்சியைத் தருபவளாக மாரியம்மன் போற்றப்படுகிறாள். நெருப்பும் அவளே; நெருப்பைக் குளிர்விப்பவளும் அவளே. ஆகவேதான் மனதில் பல்வேறு குழப்பங்களால் உள்ளம் வெப்படைகின்றபோது - அம்மை கண்டபோது ஆருயிர்த்தாயாம் மாரியம்மனை நாடி நடைபோடுகிறோம். அவள் சன்னிதியில் அடிபணிந்து வணங்கி அங்கேயே சிறிது நேரம் வீற்றிருந்து வெப்பத்தைத் தணித்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடுகிறோம்.

## பச்சைப் பட்டினி விரதம்

உலக மக்களுக்காக மாரியம்மன் தெய்வம் ஒரு மாதம் விரதமிருக்கிறாள். நாம் நமது தாயை நினைத்து விரதமிருக்கிறோமோ இல்லையோ; நமக்காக நமது தாய் மாரியம்மன் விரதம் இருக்கிறாள். இவ்விரதம் 'பச்சைப் பட்டினி விரதம்' என்று அழைக்கப்படுகிறது. இவ்விரதத்தை தமிழ்நாட்டின் சமயபுரம் மாரியம்மன் மேற்கொள்வதை இன்றும் காணலாம்.

ஒவ்வொரு ஆண்டும் மாசித் திங்கள் கடைசி ஞாயிறு அன்று மாரியம்மன் தன் விரதத்தினைத் தொடங்கிவிடுகிறது. பங்குனி கடைசி ஞாயிற்றுக் கிழமை விரதம் முடிகிறது. இந்த நோன்பு நாட்களில் வெண்பொங்கல் சர்க்கரைப் பொங்கல், இவற்றை விலக்கியே பூஜைகள் நிகழ்த்தப்படுகின்றன. தாளிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படாத உணவே நைவேத்தியத்தில் இடம்பெறுகின்றது. மேலும், உயிர்களாகிய பயிர்கள் செழிக்க விரதம் இருக்கும் அன்னையின் கருணைப் பிரவாகத்திற்கு எல்லையில்லை அல்லவா?

## சந்திப்பவர்க்கு எளிது

தேசுடைய திருடிகளையுடையவள். உலகாளும் தாய். மாசில்லா மனத்தவர் போற்றும் அம்மை. எத்திக்கிலும் யாவினிலும் நிறைந்து நிற்கும் இறைவி. அந்த அம்மையை, சக்தியை தேவர்கள், அசுரர்கள் யாவரும் வணங்குகின்றார்கள். பிரம்மனும், விஷ்ணுவும் தியானிக்கிறார்கள். மனதில் கட்டி வைத்திருப்பவர் சிவபெருமான். தாயே! உன்னை வந்திப்பவர், சிந்திப்பவர், பந்திப்பவர் ஆகிய இவர்களுக்கெல்லாம் உனது கருணை இருக்கிறது. உன்னைச் சந்திப்பவராக இருக்கும் எங்களுக்கு உனது கருணை இருக்கிறது என்பதனை நினைத்து உன்னைப் பணிகிறோம் என்கிறது அபிராமி அந்தாதி பாடல் ஒன்று.

"வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க் கெளிதாம் எம்பிராட்டி நின்தண்ணளியே".

---

## பொன் மொழிகள்

- மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது ஒருபெரும் தர்மமாகும்.
- உங்கள் முன்னேற்றத்தில் கூடிய நேரத்தைச் செலவிடுங்கள்; அப்போது மற்றவரை விமர்சிக்க நேரமிருக்காது.
- வாழ்க்கையின் இனிமையைச் சுவைப்பதற்கு உங்களுக்கு, கடந்த காலத்தை மறப்பதற்கான சக்தி இருக்கவேண்டும்.
- சிரிக்கும்போது நீங்கள் சந்தோஷமடைவது மட்டுமல்ல, மற்றவர்கள் வாழ்க்கையிலும் ஒளிக்கீற்றைக் கொண்டு வருகிறீர்கள்.
- எல்லாச் சந்தர்ப்பத்திலும் சமநிலையுடன் இருப்பதுதான் மகிழ்ச்சிக்குத் திறவுகோலாகும்.
- பலர் உங்களிடம் சச்சரவிடவும், சண்டைபிடிக்கவும் விரும்புவார்கள். புன்னகையும் அன்பான மனப்பாங்குமே உங்களுக்குத் தேயையான ஆயுதங்கள் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.
- சில வேளைகளில் புன்னகையானது, பாலைவனத்தில் ஒரு துளி நீரைப் போன்றதாகின்றது.
- நேர்மையுடனும், உண்மையான இதயத்துடனும் இருப்பவன் இலேசாகவும், மன அழுத்தமின்றியும் இருப்பதை எப்போதும் உணர்வான்.
- உண்மையான வெற்றி என்பது, புலன் அங்கங்களின் மீதுள்ள பூரண கட்டுப்பாடாகும்.
- உங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமெனில் உங்கள் தேவைகள் அதிகரிக்காதிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- எதிர்கால நிகழ்வுகள் என்று எதுவுமில்லை. வாழ்க்கைப் பூந்தோட்டத்தில் உள்ள ஒவ்வொரு மரமும் உள்ளர்த்தத்தினை வெளிப்படுத்தும்.
- அனுசரித்து நடக்கத் தெரிந்தவனே பிழைக்கத் தெரிந்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Destiny, Simply Explained

Palendira Swaminathan
Sydney, Australia

Is there something called as destiny? A good Hindu will answer yes, there is something called destiny. So, what is destiny? How does it arise? Is it something fixed and unalterable? Let us examine these questions in some detail.

Most of us know Newton's third law of motion. For every action, there is a reaction. That reaction is equal to that action. It takes place in the opposite direction (or, it comes back). This is true not merely for the physical world. This is a Universal truth that is applicable to all activities in the Universe including all activities of all living beings. This Universal application is destiny. Destiny is not a matter of faith. It is a matter of fact.

Destiny is the result of what is called as 'karma' which literally means action. Incidentally, the doctrine of karma is considered to be the highest contribution of Indian thought to the philosophy of life. This karma or action could be something that happened a few minutes ago, a few days, a few weeks, months or years ago. It could even have happened in one of the previous lives! Is there something called as a previous life? We shall come to that question later.

The word karma broadly refers to one of three things. In its simplest meaning, it refers to any act or deed. More broadly it refers to the principle of cause and effect (what you sow, you reap) and expanded further, it refers to the consequence and fruit of action or after effect, which sooner or later returns upon the doer. What we sow, we shall reap in this or future lives. There is no escape from this. Selfish, hateful acts or simply bad acts are called 'papakarma' which will bring suffering. Meritorious actions or 'punyakarma' will bring good or loving reactions.

Karma is a neutral, self-perpetuating law of the inner cosmos just like the law of gravitation which is an impersonal law of the outer cosmos. The law of karma acts impersonally but its results can be interpreted either as positive (punya) or negative (papa), terms describing actions leading the soul either toward or away from the spiritual goal. Actions will not be always totally pure or totally impure. So, they are graded to be of four types, namely white (good or punya), black (bad or papa), mixed or neither white nor black. The last of these categories are actions performed with total detachment that could be performed only by spiritually advanced souls or Jnaanis. All spiritual aspirants should aim towards such actions.

Karma has three components. The total stock of ALL deeds, good and bad in ALL previous lives of an individual is called 'Sanchita Karma'. A portion of this is set aside for each birth or life span. That portion is called 'Prarabdha Karma'. This prarabdha karma is mostly unalterable but yet there are means to overcome its ill effects. It is this prarabdha karma that decides where a soul is reborn, in which country, in which family etc., etc. The choice is made in such a manner to experience the effects of the apportioned prarabdha karma. What we should bear in mind here is that neither the sanchita karma nor the prarabdha karma is imposed on us by God or anybody else. It is nothing but our own seeking on the basis of our own past deeds, both good and bad.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

There is also a third component of karma called 'Kriyamaana Karma' which is the result of our actions and deeds in the current birth. A portion of this kriyamaana karma comes back to us to experience in this birth itself and the balance goes to the stock of sanchita karma the fruits of which to be experienced in future lives. Herein lies the hope of at least partially overcoming the ill effects of prarabdha karma which is pre-destined. This could be achieved by continuing to be good to others and doing good and charitable deeds.

A question is often asked as to why there is so much inequality among people at birth itself? A few people are born rich but many are born poor. Some are born with good health whereas some others are born with poor health or with deformities. Some are born intelligent and smart children while others not so smart and intelligent.Some have talents while others are not so talented. Like this there are so many inequalities at birth itself. Why all this? Are all this due to God's will? Could that all pervading, all knowing, all powerful God be so impartial with his creations? No! God will never ever be so partial! There is only one way of explaining all this. That is past karma and nothing else. That necessitates rebirths!

Again, we see often so many good people suffering a lot and so many wicked people enjoying the comforts of life. How do these things happen? The only possible explanation is that they are having these experiences due to their respective prarabdha!

Is there a way of overcoming the ill effects of prarabdha? There are two ways. The first one as mentioned above is continuing to be good to others and doing good and charitable deeds. The other step is to constantly pray to God who alone in His infinite mercy could soften ( not wipe out) the impacts of bad prarabdha. We need God's Grace for that.

Are there ways to wipe out all Sanchita karma? Yes, there are ways that could be achieved through severe austerities and penance by advanced souls or Jnaanis. These are not easy steps for ordinary mortals.

What matters most is individual karma or in other words the effect of past deeds good or bad performed by each individual. But there are also partial effects of other karmas such as family karma, community karma, national karma and even global karma. These are called collective karma. So it is the duty of every individual not only to be good but also to help or persuade others to be good. That will be to the benefit of all.

There could be a final question. Isn't there a God's will at all? God's will is also there in apportioning the prarabdha karma for each life span and in showering His infinite mercy to those who pray to soften the ill effects of prarabdha karma.

Is destiny fatalistic? No, not at all! What we have to bear in mind is that our destiny is our own seeking and so there is no need to have any ill will towards any other for same. In a way it gives us comfort that it is our own seeking and so we can seek means to amend our destiny. So with charity for all and malice toward none, let us always make efforts to seek progress, both materially and spiritually!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள்

திருமதி கலையரசி சின்னையா
அவுஸ்திரேலியா

திருமூலரின் திருமந்திரம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவது திருமுறையாக அமைந்துள்ளது.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

எனக் கூறித் திருமந்திரப் பாடல்களில் இறைவன் புகழைப் பாடி, இறைவனுடன கலந்து பேரின்பத்திலே திளைத்திருந்தவர் திருமூலர்.

இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே.

என அந்நிலையை அவர் விளக்குகின்றார். 'தாம் பெற்ற இன்பத்தை உலக மக்களும் பெறவேண்டும் என்று திருமூலர் விரும்பினார். "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நோக்குடன் "மூலன் அருள்செய்த மூவாயிரம் தமிழ்" பாடல்களே திருமந்திரம்.

பன்னிரு திருமுறைகள் என்றதும் அவை பக்தி இலக்கியங்கள், சமயம் சார்ந்தவை, ஆன்மீகம் சார்ந்தவை என்று மட்டும் கருதுவதுண்டு. இவற்றுக்கப்பால் அவை வாழ்வியல் சார்ந்தனவாக, சமூகம் சார்ந்தனவாக மக்களை வழிப்படுத்துகின்றன; சிந்திக்க வைக்கின்றன என்பதையும், நாம் மனங்கொள்ள வேண்டும். இவ்வாறு பல்வேறு கோணங்களில் இவற்றை நோக்கும்பொழுது, காலங்கடந்து நிற்கும் இவற்றின் சிறப்பை - பயன்பாட்டை உணரமுடியும். எமது இளைய தலைமுறையினரிடையே இவற்றைக் கொண்டு செல்லவும் முடியும். இவ்வடிப்படையிலே திருமந்திரம் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகளைச் சுருக்கமாகச் சுட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

திருமூலர் மனிதப்பிறவியை "பெறுதற்கரிய பிறவி' எனப் போற்றுகின்றார். அப்பர் சுவாமிகள் "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" – வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' என்று கூறியுள்ளார். இத்தகைய பெருமைக்குரிய பிறவியைப் பெற்ற நாங்கள் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து வினைகளை அறுத்து, கடவுளின் அருளைப் பெறவேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். ஆனால், நாம் அதற்கேற்ற வகையில் வாழ்கின்றோமா? வாழும் வழிவகைகளைச் சிந்திக்கின்றோமா? சிந்தித்தாலும் செயற்படுத்துகின்றோமா? எல்லாவற்றையும் மறந்து வசதியாக வாழவேண்டும் என்று மனம்போன போக்கில் வாழ்கின்றோம். திருமூலர் தமது காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலை நன்கு அவதானித்துள்ளார்.

"பெறுதற்கரிய பிரானடி பேணார்'

'அன்பால் அவனை அறியகிலாரே'

'சோறொடு கூறையென்று துன்பத்துளே நின்று தூங்குகின்றார்களே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கடன்கொண்டு நெற்குத்துக் கையரை ஊட்டி
உடம்பினை ஓம்பி உயிராத் திரிவர்'

'அரும்பொருள் பிச்சு அதுவாய்ப் பின்தொடர்வுறும்'

இன்பம் இடரென்று இரண்டுற வைத்தது
முன்புஅவர் செய்கையி னாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம் அறியாரே.

'பிறவித் தொழிலே நின்று
துன்புறு பாசத்து உழைத்து ஒழிந்தீரே'

'பொய்தான் புலம்பும் மனிதர்காள்'

'போது சடக்கெனப் போகின் றது கண்டும்
வாதுசெய்து என்னோ மனிதர் பெறுவது'

இறைவனை அன்புடன் வணங்கி, அவன் அடிசேரும் நோக்கில்லாமல் இவ்வுலக இன்பங்களைப் பெரிதாக மதித்து, கடன்பட்டு உடம்பை வளர்த்து, பொருளாசையால் அலைந்து, குடும்ப பாசத்தில் அலைந்து அழிந்து, பிறவி எடுப்பதையே தொழிலாகக் கொண்டு, அறம்செய்யாது, பொய்பேசி, வாதிட்டு, வறுமையுற்றுத் துன்பமடைந்த மக்கள் நிலையை மேற்கண்டவாறு பல இடங்களில் திருமந்திரத்தில் திருமூலர் எடுத்துக் காட்டியுள்ளார். இவற்றுக்கு இன்று வாழும் நாங்களும் விதிவிலக்கானவர்கள் அல்லர். இத்தகைய நிலையிலிருந்து விடுபட்டு, நல்வாழ்வு வாழவும், திருமந்திரத்திலே பல வழிகளைக் காண்கின்றோம். மனித வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை உணர்ந்து இறைபக்தியுடனும், அன்புடனும், பண்பாட்டுடனும், மனித நேயத்துடனும் மக்கள் வாழத் திருமூலர் உணர்த்திய வழிமுறைகளைச் சிந்திப்போம்.

**நிலையாமை**

வாழ்க்கையின் நிலையற்ற தன்மையினை மக்கள் சிந்திக்காது, சிந்தித்தாலும் அதனைப் பொருட்படுத்தாது, இவ்வுலக வாழ்விலே பொருள், புகழ் என்பனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அவற்றை அடைய எத்தனையோ முறையற்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். விரும்பியவை கிடைக்காதபோது அமைதியிழந்து தவிக்கின்றனர். அதனாலேதான் நிலையாமையை யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை என்னும் பகுதிகளிலே திருமூலர் தெளிவாக விளக்கியுள்ளார். எடுத்துக்காட்டாக இரண்டு பாடல்களை நோக்கலாம். இறப்பு எப்பொழுது வரும் என்பது எமக்குத் தெரியாது; இறந்தபின் நடப்பதும் தெரியாது.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே

மனைவி உணவு சமைத்து வைத்தார்; கணவன் உணவை உண்டார்; மனைவியுடன் இன்புற்று இருந்தார்; இடப்பக்கம் சிறிது நோகிறது என்றார்; படுத்தார். வாழ்வு முடிந்தது. பின்னர் எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதார்கள். பிணம் என்று பேரிட்டுச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோய் எரித்தார்கள். குளித்துவிட்டு, இறந்தவரின் நினைப்பொழிந்தனர். இவற்றை விளங்கிக் கொண்டால் நாம் வாழும் குறுகிய காலத்தில் நல்லனவற்றைச் செய்து இன்பமாக வாழலாம் எனத் திருமூலர் எம்மைச் சிந்திக்க வைக்கின்றார்.

அன்பு - இறை வழிபாடு

இறைவன் கண்காணியாக - எமது செயல்களைக் கவனிப்பவனாக – எங்கும் எல்லாவற்றிலும் உள்ளான். அதனை அறியாதபடியால், மக்கள் கள்ளத்தனமான – கீழ்த்தரமான செயல்களைச் செய்கின்றனர். இறைவன் எங்கும் இருக்கின்றான் என்பதை உணர்ந்து அவனை அன்புடன் வழிபட்டால் நல்வாழ்வு வாழலாம் எனத் திருமந்திரம் விளக்குகின்றது.

'கண்காணி இல்லையென்று கள்ளம்பல செய்வார்
கண்காணி இல்லா இடமில்லை'

'அன்போடு உருகி அகம் குழைவார்க்கன்றி
என்போல் மணியினை எய்த ஒண்ணாதே'

'உச்சியும் காலையும் மாலையும் ஈசனை நச்சுமின்'

'அன்பு உருக்கி இறைவனை ஏத்துமின்'

என்றெல்லாம் கூறும் திருமூலர்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்'

என 'அன்பே சிவம்' என்ற மந்திரத்தை நம் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு மந்திரமாகத் தந்துள்ளார். அன்புப் பிணைப்பினால் ஏற்படும் மனநெகிழ்ச்சியை ஒருமையுணர்வினைத் திருமந்திரப் பாடல்கள் தெளிவாகக் காட்டுகின்றன. அன்பு நிறைந்து, கனிந்த உள்ளத்திலே ஆணவம், பகைமை, வேற்றுமை, தன்னலம் என்பன கிடையாது. இறைவனை உண்மை அன்புடன் வழிபட்டால் நம்மைச் சூழவுள்ள எல்லோருடனும் நாம் அன்பு செலுத்தி வாழலாம்.

அன்பு உருகி, இறைவனை வழிபடுவதற்குரிய பல வழிபாட்டு முறைகளும் திருமந்திரத்தில் உள்ளன. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என அகவழிபாட்டினைப் போற்றிய திருமூலர், அதற்கேற்பத் தியானம், யோகம் என்பனவற்றையும் விரித்து விளக்கியுள்ளார். சாதாரண மக்கள் இத்தகைய அக வழிபாட்டு முறையினைக் கடைப்பிடிப்பதற்கு பெருமுயற்சி தேவை என்பதனை உணர்ந்து எளிமையான வழிபாட்டு முறைகளையும் திருமூலர் கூறியுள்ளார்.

'யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை'
'புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு'
'நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின்'

இவற்றுடன் அமையாது, "ஊழி முதல்வனை எப்பரிசாயினும் ஏத்துமின்" என, நீங்கள் எப்படி வழிபட விரும்புகின்றீர்களோ அப்படி வழிபடுங்கள் என்றும் சொல்லியுள்ளார். எமது வாழ்வியலில் இறைவழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானது. திருமூலர் வழிநின்று எமக்கேற்ற வழிபாட்டு முறையினைப் பின்பற்றி, இறைவனை அன்புடன் வழிபட்டு, அதே அன்பை எல்லோருடனும் காட்டினோமானால் நாம் அடையும் இன்பம் பெரிதாகும்.

குரு இயல்பு

இறைவனுடன் கலந்திருப்பதற்கான ஞான நிலையை அடைவதற்கு குருவருள் தேவை. இறைவனே குருவாக வந்து பக்குவப்பட்ட ஆன்மாக்களை ஆட்கொள்வார் என்பது சைவ சித்தாந்தக் கருத்து. 'குருவே சிவம் எனக் கூறினான் நந்தி' எனக் கூறும் திருமூலர் பிழையான வழிகளைக் காட்டும் அறிவற்ற குருமார்கள், வேடதாரிகள் தொடர்பான கருத்துகளையும் தெரிவித்துள்ளார்.

'குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்'

'வேடநெறி நில்லார் வேடம்பூண்டு என்பயன்'

குருநிலைக்குத் தகுதியில்லாதவர்களை வழிபடும் நிலை இன்று எம்மிடையே இருக்கின்றது. பணம் சேர்ப்பதையே கருத்திற்கொண்டு, சமயத்தின் பெயரால் எத்தனையோ போலி வேடதாரிகள் நம் மக்களை ஏமாற்றுகிறார்கள். இந்நிலையில், திருமூலர் கூறும் 'அசற்குரு' (குருவாக இருக்கத் தகுதியற்றவர்) பற்றிய கருத்துகளைச் சிந்தித்து நாம் நடக்க வேண்டும்.

அறம்

அறம் செய்வதே வாழ்க்கையின் பயன் எனக் கூறுகிறது திருக்குறள். "தம்பேரிடர் ஆக்கை அழிந்தன கண்டும் அறம் அறியாரே" என ஏங்கும் திருமூலர், அறம் செய்வதன் சிறப்பினைப் பலவிடங்களிலே தெளிவுபடுத்தியுள்ளார்.

'யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே'

இறைவனை ஒரு பச்சிலையால் வழிபடுவதும், பசுவிற்கு ஒரு வாய் இரை கொடுப்பதும், நாம் உணவு உண்கின்றபொழுது வருகின்றவர்களுக்கு ஒரு கைப்பிடி உணவை வழங்குவதும், பிறருடன் உரையாடும்பொழுது, அவர்கள் மகிழத்தக்க வகையில் இனிய மொழிகளைக் கூறுவதும் எல்லோராலும் செய்யத்தக்க அறச் செயல்கள் எனத் திருமூலர் கூறியுள்ளார். இறைவழிபாடும், உயிர் இரக்கமும், மனித நேயமும் அன்பும் இங்கு பொதுவாகக் கூறப்பட்டுள்ளன. சிவனடியார்கள், ஞானிகள் ஆகியோருக்கு உணவு அளிப்பதன் மேன்மையைத் திருமந்திரம் விதந்துரைத்துள்ளது. 'மகேசுவர பூசை' என்ற பகுதியிலுள்ள பாடல்கள் குறிப்பாக நோக்கத்தக்கன. கோயிலில் இறைவனுக்குப் படைக்கும் அமுது முதலானவை, நடமாடித் திரிகின்ற ஏழைகளான அடியார்களைப் போய்ச் சேராது. மாறாக நடமாடித் திரியும் அந்த ஏழை அடியார்களுக்கு உணவு கொடுத்தால் அதனால் இறைவன் திருப்தி அடைவான் என்கிறார் திருமூலர்.

படமாடக் கோயில் பகவற்கு ஒன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றீயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படமாடக் கோயில் பகவற்கு அதாமே

என்பது பாடல். இன்னுமொரு பாடலில் மெய்ஞ்ஞானி ஒருவருக்கு ஒரு பகல் உணவு கொடுப்பது ஆயிரம் கோவில்களைக் கட்டுவதிலும் மேலானது எனக் கூறியுள்ளார்.

அகரம் ஆயிரம் அந்தணர்க்கு ஈயிலென்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்
பகரும் ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயம் தானே.

கோயில்களில் பூசை, வழிபாடுகள் என்பனவற்றை ஒழுங்காகச் செய்யவேண்டும். கோயில்களைப் பாதுகாக்க வேண்டும். இவற்றை ஆடம்பரமில்லாது அளவுடன் செய்து, அல்லற்படும் மக்களுக்கும், பசியால் வாடுபவர்களுக்கும் உதவுவதையே முதன்மை நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

இன்று கோயில் வழிபாட்டில் ஈடுபடும் பொதுமக்களும், கோயில் புனரமைப்புப் பணிகளுக்கு உதவுவோரும், கோயில் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்துவோரும் இவற்றைச் சிந்தித்து மனித நேயத்துடன் செயற்பட வேண்டும்.

**ஒற்றுமை**

சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றார். திருமூலர் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின்' என்று கூறியதுடன் தீண்டாமைக்கும் எதிர்க்குரல் எழுப்பியுள்ளார்.

'ஆசூசம் ஆசூசம் என்பர் அறிவிலர்
ஆசூசம் ஆமிடம் ஆரும் அறிகிலார்'

இவ்வாறாக எமது வாழ்வியலில் நாம் சிந்தித்து வாழத்தக்க எத்தனையோ கருத்துகளை எளிமையான தமிழில் திருமந்திரம் தந்துள்ளது. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் திருமூலர் கூறியவற்றை நாங்கள் இன்றும் சிந்தித்துக் கடைப்பிடிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். 'அன்பே சிவம்' என்ற திருமூலரின் மந்திரத்தைப் போற்றிய யோகசுவாமிகளின் அருள்வாசகம் நினைவுக்கு வருகின்றது.

**"எத்தனையோ முறைகளில் பெரிய பெரிய அவதாரங்கள் வந்து எவ்வளவோ வேலைகளைச் செய்தும், மீட்டும் இந்த உலகம் அப்படியே இருக்கின்றது. இது ஒரு பெரிய இரகசியம்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயமும் பிரார்த்தனையும் மனிதப் பிறவியின் உயர் நோக்கத்தை நிறைவு செய்கின்றன

சிவாகம விசாரத – கலைமாமணி முத்தமிழ்க் குருமணி வில்லிசைக் கலாநிதி
சாம்பசிவ-சோமாஸ்கந்த குருஜி (நல்லூர் குருஜீ சோதிட நிலையம்)

ஆலயம் ஆண்டவனின் சந்நிதியாகும். இறைவனின் ஆலயம் ஆன்மீகத்தை விளங்கவைக்கின்றது. ஆன்மீகம் மனித வாழ்க்கையுடன் கலக்கும்போதே வாழ்க்கை செழுமையும், சீரும் பெறுகின்றது. இதனாலேயே 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும், 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும் சான்றோர்கள் கூறிவைத்துள்ளனர்.

சைவப் பண்பாட்டின் சிகரமாகத் திருக்கோயில்கள் திகழ்கின்றன. கோயில் என்றால் இறைவன் உறையும் இல்லம் எனப் பொருள்கொள்ளப்படுகின்றது. இறைவன் உயிர்க்கு உயிரானவன். எம்மையெல்லாம் படைத்துக் காத்து, அருள் பாலிப்பவன். இப்பிரபஞ்சம் முழுவதற்கும் கருத்தாவாக உள்ளவன். எங்கள் யாவரினதும் ஒப்பற்ற தலைவன். அவன் எம் இறைவன். திருவருட் சக்தியோடு கூடியிருப்பதால், 'சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்' என்கிறார் உமாபதி சிவம்.

சைவம் சிவ சம்பந்தமுடையது; சிவம், சக்தி சம்பந்தமுடையது. சிவம் இன்றேல் சக்தி இல்லை; சக்தி இன்றேல் சிவம் இல்லை. சிவசக்தி இணைப்பு சைவத்தின் சிறப்பு. இதனை விளக்குவது அர்த்த நாரீஸ்வர மூர்த்தம். அம்மையே அப்பா எனத் தீர்க்கமாகக் கூறுகின்றார் மாணிக்கவாசகப் பெருமான். சிவபெருமானைத் தோடுடைய செவியனாகவே திருஞானசம்பந்தர் தரிசித்துள்ளார். கண்டதைக் கண்டபடி, உள்ளதை உள்ளபடி சொல்லும் இயல்பு மூன்று வயதுக் குழந்தையுடையது. தோடு, பெண்கள் அணியும் ஆபரணம். குண்டலம் ஆண்கள் காதில் அணியும் ஆபரணம் என்பது குழந்தையின் அறிவுக்கு எட்டிவிட்டது.

ஆலயங்கள், ஆகமங்களில் விதிக்கப்பட்ட விதிமுறைகளை ஆதாரமாகக் கொண்டே அமைக்கப்படுகின்றன. நித்திய, நைமித்தியக் கிரியைகள், வழிபாடுகள் என்பனவும், ஆகம விதிப்படியே நடத்தப்படுகின்றன. தெய்வ சாந்நித்தியம் ஆலயங்களில் பேணப்படுவதற்கு இவையே அனுசரணையாக உள்ளன.

ஆலயங்கள் தனிமனித நல்வாழ்விற்கும், நாட்டின் வளம் மற்றும் ஆட்சி மேம்பாட்டிற்கும் உலகத்தவர் நன்மைக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் சமூக கலாச்சார விருத்திக்கும் நிலைக்களனாக விளங்கி வருகின்றன. ஆன்மீகப் பண்பாட்டின் ஊற்றுக்கள் ஆலயங்களேயாகும்.

அண்டங்கள் அனைத்திலும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து, எல்லாவிடமும் வியாபகமாய் உள்ள பரம்பொருளுக்கு நான்கு பக்கங்களிலும் எல்லைகள் வகுத்து, சுவர்கள் அமைத்து ஒரு சிறிய நிரப்பரப்புக்குள் கோயில் நிறுவி, அதனையே இறைவனின் இல்லமாகக் கொள்ளுதல் எவ்வாறு அறிவிற்குப் பொருந்தக் கூடியதாகும் என வினா எழுப்புகின்றார்கள் சிலர். அவர்களுக்குத் தக்க பதில் அளிக்க வேண்டியது நம் கடமையாகும்.

கடவுள் என்னும் பதத்தின் பொருளை நாம் அறிந்துகொள்ளல் வேண்டும். மனம், வாக்கு, காயம் என்பவற்றிற்கு எட்டாததும், அவற்றின் எல்லையைக் கடந்ததும், அவற்றிற்கு உள்ளும் நிற்கும் பொருள் என்பதால் அப்பொருள் கடவுள் எனப்படுகின்றது. அவ்வாறிருந்தும் கடவுள் எவர் கண்ணிற்கும் புலபடக்கூடிய பொருள் அன்று. அதுவே கடவுளின் இயல்புமாகும். கடவுளின் சுயநிலை அருவம் அதாவது உருவமற்றது. உரையற்றது. குணங்குறிகள் அற்றது. நாமமற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவமாக எங்கும் எதிலும் நிறைந்துள்ள கடவுளைத் தியானிக்கவோ அதனுடன் உறவு கொள்ளவோ பேசவோ ஞானிகளுக்கு மட்டுமே முடியும். எம்மில் மிகப் பெரும்பான்மையினர் ஞானிகள் அல்லர். நாம் சிற்றறிவும், சிதறிய எண்ணங்களும் உடையவர்கள். ஒரு கணமேனும் சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கின்ற திறன் அற்றவர்கள். அந்த வகையில் நாம் கடவுளுடன் பேசுதல் வேண்டுமாயினும் சரி, கடவுளை வேண்டுதல் செய்யினும் சரி ஏன் கடவுளை நினைப்பதற்கும் தியானிப்பதற்கும் கூட நமக்கு எம் முன்னோர் ஒன்றை உருவமாக முன்னிலைப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

ஆரம்பக் கல்விகற்கும் பிள்ளைகளுக்கு மலையைப்பற்றிய எண்ணக் கருவை ஏற்படுத்துவதற்கு, ஒன்றில் மலையை நேரடியாகக் காண்பிக்கவேண்டும். அல்லது மலையின் மாதிரி உரு ஒன்றைக் காட்ட வேண்டும். முதிர்ச்சி குறைந்த பிள்ளைகள் தூலமாக ஒரு பொருளைப் பார்க்காமல் அதுபற்றிய விளக்கத்தைப் பெறமாட்டார்கள். ஒன்றை விளங்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு நேரடி அனுபவம் தேவையாகும். அவ்வாறே சாதாரண மக்களுக்கும் கடவுளை அருவமாகத் தியானிப்பதற்கோ, அருவ நிலையிலான கடவுளுடன் பேசுவதற்கோ சிரமமாக உள்ளது. இந்த நிலையில் ஒன்றில் உருவம் தேவைப்படுகிறது. அன்றேல், உருவத்தின் சாயல் வேண்டப்படுகின்றது. இவற்றுள் ஒன்றையேனும் முன்னிலைப்படுத்தாமல் சாதாரண மக்களுக்குக் கடவுள் பற்றிச் சிந்திக்கவோ தியானிக்கவோ அல்லது கடவுளுடன் பேசவோ உறவாடவோ இயலாமற் போய்விடுகின்றது. ஆகமங்களின் தோற்றம், எமக்கு எந்த வகையில் இப்பரிசோதனையைத் தீர்ப்பதற்கு உதவிற்று என்பது சிந்திக்கற்பாலது.

ஆலயங்கள் அமைப்பதற்கும், தேவப்பிரதிட்டைக்கும், நித்திய நைமித்தியக் கிரியைகள் வழிபாடுகள் மூலம் தெய்வ சாந்நித்யத்தை ஏற்படுத்துவதற்கும் சிவாகமங்களே வழிவகுத்தன. உருவ வழிபாட்டை அதிகாரபூர்வமாக்கிய பெருமை ஆகமங்களைச் சாரும். கடவுளை உருவமாக முன்னிலைப்படுத்தித் தியானிக்கவும், வழிபடவும் கடவுளுடன் பேசவும், உறவாடவும் சாதாரண மக்களுக்கு இயலுவதாயிற்று. ஆலயங்கள் ஏன் என்பதற்கு இப்பொழுது விடை கிடைத்துள்ளதல்லவா?

**ஆலயத்தில் அமைதியும் தூய்மையும்**

அமைதி, தூய்மை ஆகிய இரண்டும் தெய்வீகம் பொருந்தியவை. அவை ஆலயத்திற்கு சாந்நித்தியத்தை ஏற்படுத்துபவை. அதனால், ஆலயத்தில் அமைதியையும், தூய்மையையும் நிலவச்செய்ய வேண்டியது, வழிபாட்டிற்குச் செல்லும் அடியார்களின் கடமையும் பொறுப்புமாகும். "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" ஆலயத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு அங்கமும் தொழுது வணங்குதற்குரியவை. வணக்கத்திற்குரிய இடத்தைத் தூய்மையாக வைத்திருத்தலும் ஆங்கு அமைதி பேணப்படுதலும் அவசியமாகும்.

ஆலயங்களில் இறை சிந்தனையோடு மனதை ஒருமுகப்படுத்தி வழிபாடுசெய்வதற்கு ஆலயச் சூழலில் அமைதி காக்கவேண்டியது முதல் நிபந்தனையாகும். கவனக்கலைப்பான்கள் காணப்படின் மன அடக்கம், புலன் அடக்கம் இரண்டுமே கலைந்துவிடும்.

ஆலயங்களில் சுவாமி தரிசனம் செய்யும்முறை, மற்றும் ஒழுங்கு விதிமுறைகள் எல்லாமே சைவர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால், அங்கு அவர்களில் பெரும்பாலோர் நடந்துகொள்ளும் விதம் அவை யாவற்றையும் மீறுவதாகவே காணப்படுகின்றது. தெரிந்துகொண்டு செய்யும் குற்றங்கள் மகாபாவம் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். அத்தகைய பாவங்களுக்கு விமோசனம் கிடையாது. குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளுதலுக்கு இது சமமாகும்.

கோயிலுக்குள் கோபுர வாயிலினூடாகவே செல்லுதல்வேண்டும். அவ்விடத்தில் சிலர் கூடிநின்று பேசிக்கொண்டும், வீண் வார்த்தைகளை உதிர்த்துக்கொண்டும் ஒருவரையொருவர் குசலம் விசாரித்துக்கொண்டும் இருந்தால் பிறருக்கு இடையூறுகளை விளைவித்தவர்கள் ஆகின்றனர். அத்துடன் அமைதிக்குப் பங்கமும் ஏற்படுகின்றது. இதைப் பலர் சிந்திப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி தேடி ஆண்டவன் சந்நிதிக்கு வந்தும் அங்கேயும் அமைதியில்லையென்றால் வேறெங்குதான் அமைதியைக் காணமுடியும்? இவ்வாறு கேட்டு எத்தனையோ அடியார்கள் கவலை கொள்கின்றார்கள்.

சில கோயில்களின் உட்பிரகாரங்களில் ஒலிபெருக்கிகளை அமைத்து அடிக்கடி ஒலிபரப்புச் செய்கின்றனர். பக்திப் பாடல்கள் என்ற பெயரால் ஒலியை உரக்கக் கிளப்புகின்றனர். இத்துணை சத்தங்கள் இரைச்சல்களின் மத்தியில் மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை வழிபாடுசெய்வதென்பது எப்படிச் சாத்தியமாகும்?

அமைதி, சாந்தி, நிம்மதி, இவைதான் இன்று எமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுபவை. இவை வீட்டில் இல்லை; வேலைத்தலத்தில் இல்லை; வாழும் சமூகத்தில் இல்லை; ஏன் நாட்டிலும் இல்லை. இவற்றை ஆலயங்களில் அடைவதற்கு நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைக்கவேண்டியது அவசியமாகும்.

அமைதி பேணல், தூய்மை பேணல், வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல், பிறருக்கு இடையூறுகள் தொல்லைகளை ஏற்படுத்தாதிருத்தல், ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்பதை உறுதிப்படுத்துதல் என்பவற்றின் மூலம் திருவருட்துணை கொண்டு திருக்கோயில்களில் தெய்வ சாந்நித்யம் நிலைபெறச் செய்தல் வேண்டும்.

## செய்யத் தகாதன

திருக்கோயில்கள் ஆகம விதிப்படி அமைக்கப்பட்டு, நித்திய நைமித்தியங்கள் நடத்தப்பெற்று வருகின்றன. கும்பாபிஷேகம் மூலம் தெய்வ விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்று, தெய்வ சாந்நித்யம் நிலவ வழிசெய்யப்படுகின்றது. அத்தகைய திருக்கோயில்களில் ஆகமங்களில் விதிக்கப் பெற்றிருப்பவற்றிற்குப் புறம்பாக எதுவும் நடைபெறக்கூடாது; நடைபெற அனுமதித்தலும் ஆகாது.

சுவாமி விக்கிரகங்களை அர்ச்சகர்களைத் தவிர, வேறெவரும் தீண்டுதல் ஆகாது என்பது விதி. ஆனால், வழிபடுவோர் சிலர் விக்கிரகங்களைத் தொட்டுத் தீண்டுவதையும் கைகளால் அளைவதையும் காண்கிறோம். வேறு சிலர் பூக்களைக் கொண்டுவந்து வீசி எறிகிறார்கள். சிவாச்சாரியார் பூசை செய்யும்போது வழிபடுவோர் மலர்களையும் பத்திரங்களையும் விக்கிரகங்கள் மீது தாமும் போடுகின்றனர். சிலர் கோயில் மணிகளைத் தாம் நினைத்த நேரங்களில் அடித்துவிட்டுச் செல்கின்றனர். சுவாமி திருவுலா வருவதற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள், ஊர்திகள், பல்லக்குகள் என்பவற்றின் மீது சிலர் ஏறி உட்காருகிறார்கள். பிள்ளைகளை அவற்றின்மீது இருத்திப் புகைப்படங்கள் எடுக்கிறார்கள். இவை யாவும் இன்றைய புதுக் குழப்பங்கள். இவ்வாறு செய்வதைப் பார்த்துவிட்டு பலர் செய்ய முற்படுகிறார்கள்.

விபூதிப் பிரசாதங்களை அலட்சியமாக வாங்கி நிலத்தில் சிந்தியும் விடுகின்றார்கள். சுவர்கள், தூண்கள், வாகனங்கள் என்பனவற்றில் பூசியும் விடுகின்றார்கள். பூக்கள், பத்திரங்கள், வில்வதளங்களைக் கீழே போட்டுவிடுவதால் பிறர் கால்களால் அவை மிதிக்கப்பட்டுவிடுகின்றன. பழங்களை உண்டுவிட்டு, அவற்றின் தோல்களை ஆங்காங்கு போட்டுவிடுவதால், பிரகாரங்களில் அசுத்தம் ஏற்படுகின்றன. இவை, யாவும் பாவச் செயல்களாகும்.

விபூதிப் பிரசாதங்களை இரண்டு கைகளாலும் சிவாச்சாரியாரிடம் பணிந்து வாங்கி, அண்ணாந்து, ''சிவ சிவ'' என்று சொல்லி, நெற்றியில் அணிதல் வேண்டும். நெற்றியை நீட்டி, விபூதியை அணிந்துவிடும்படி சிவாச்சாரியாரைக் கேட்பது முறையன்று. தீர்த்தத்தை இரு கைகளாலும் வாங்கித் தலையிலே பூசிக்கொள்ளலாகாது. சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறும்போது கோமுகியில் வடிந்து வரும் நீரைச் சிலர் எடுத்துத் தீர்த்தமாகப் பருகுகிறார்கள். அதுவும் முறையன்று.

கூந்தலை விரித்துவிடுதல், மூக்குநீர் சிந்துதல், எச்சில் துப்புதல், காறி உமிழ்தல், தும்முதல், இருமுதல் என்பனவற்றையும் ஆலயங்களில் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும். ஆசௌசம் (தீட்டு) உள்ளவர்களும், வீட்டுக்கு விலக்கானவர்களும், மரணக்கிரியைகளில் கலந்துவிட்டும் ஆலயத்திற்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லுதல் ஆகாது. இவை யாவும் பாவச் செயல்கள் ஆகும். இச்செயல்களால் தெய்வ சாந்நித்யம் பாதிப்படைகின்றது.

### பிரார்த்தனை

சைவசமயிகள் கடவுள் பிரார்த்தனைக்கு முக்கியத்துவம் வழங்குவார்கள். ஆலயங்களிலும் வீடுகளிலும் பிரார்த்தனைகளைச் செய்யும் வழக்கமே பொதுவாக உள்ளது. பிரார்த்தனைக்கு நேரம், இடம், என்பன இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காகவே "நின்றும், இருந்தும், எவ்விடத்திலும் அவன்தாள் நினை" என்று பெரியோர் நமக்கு அறிவுரை பகன்றுள்ளார்கள். இறைவனுடன் நாம் கொள்கின்ற தொடர்பு பிரார்த்தனையாகும்.

பிரார்த்தனைகள், கடவுள் சிந்தனையைப் பிரார்த்திப்பவர்களின் மனங்களில் நிறைகின்றன. அதனால் மனத்தூய்மை, மொழித் தூய்மை, செயற்றூய்மை என்பன ஏற்படுகின்றன. அப்படியானவர்களின் வாழ்க்கையும், தூய்மைபெற்றுவிடுகின்றன. வாழ்க்கையில் தூய்மை ஏற்பட்டுவிட்டால் அவர்கள் எண்ணியவற்றை எண்ணியாங்கு எய்தப் பெறுவர். தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மைகள் கிட்டுகின்றன.

பிரார்த்தனைகள் காமியம், நிஷ்காமியம் என இரண்டு வகைகளாக உள்ளன. பயனை எதிர்பார்த்துச்செய்யப்படும் பிரார்த்தனை காமியம் எனவும், அவ்வாறு பயனை எதிர்பார்க்காது செய்வது நிஷ்காமியம் என்றும் அழைக்கப்படுகின்றன. பிரார்த்தனைக்கு என ஒருமைப்பாடும் பக்தியும் முக்கியம். இறைவன் மீது கொள்கின்ற அன்பே பக்தியாகும்.

உண்மையான பக்தி என்பது இறைவனிடம் எந்த ஒன்றையும் கேட்காது அவனைப் பிரார்த்திப்பதும், அவனுக்குப் பணிந்து நடத்தலும், அவன் எமக்குத் தருவனவற்றை மனமார ஏற்று மகிழ்வதுமாகும். பிரார்த்தனையின் அதி உச்ச நிலை இறைவனிடம் எம்மை முழுமையாக ஒப்படைத்து விடுதலேயாகும். இதுவே பூரண சரணாகதி.

கடவுள் எங்கும் நிறைந்தவர் எல்லாம் அறிபவர். எல்லாம் வல்லவர். எமது தேவைகளையும் விருப்பங்களையும் கடவுள் அறிவார். ஆயினும், எம்மில் பலர் உலகில் ஆசையெல்லாம் பூர்த்தி செய்யவேண்டியே பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றோம். எம்முடைய வேண்டுதல்கள் நிறைவேறாதவிடத்துக் கடவுளை வைது தீர்க்கின்றோம். இவ்வாறு நடந்துகொள்ளுதல் பிரார்த்தனையைக் கொச்சைப்படுத்துவதாக அமையும். எனவே, பிரார்த்தனை செய்வதே எமது பணி. மிகுதியைக் கடவுள் பார்த்துக்கொள்வார். "என்கடன் பணி செய்து கிடப்பதே". 'இறைவன் கடன் என்னைத் தாங்குதல்' என்கிறார் அப்பரடிகள்.

பிரார்த்தனையை நாம் ஆன்மீகப் பயிற்சியாகக்கொள்ளுதலே முறையாகும். ஆலய தரிசனம், நாம சங்கீர்த்தனம், கூட்டு வழிபாடு, தியானம், செபம், விரதமனுட்டித்தல், தேவார பாராயணம், பூசை, வழிபாடு, சைவ ஒழுக்க வாழ்வு என்பன பிரார்த்தனையின் அங்கங்கள் ஆகும். "பொன் வேண்டேன் பொருள் வேண்டேன், உன் திருவருள்தான் வேண்டும்" என்கிறார் ஓர் அருளாளர். மனம், மொழி, மெய்த் தூய்மை வேண்டும். அதேவேளை பிரார்த்தனைகள் நம்மை மேலும் தூய்மையுடையோராக்குகின்றன.

மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறுதல் என்கிறார் நாவலர் பெருமான். ஆலயமும் பிரார்த்தனையும் இவ்வுயர் நோக்கத்தை நாம் அடையப் பெறுதலுக்கு, உறுதுணையாக விளங்குகின்றன என்பதை உணர்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the best compliments of*

# MJ LAWYERS LLP

Barristers, Solicitors & Notaries Public

## Manuel Jesudasan

Barrister, Solicitor & Notary Public
Areas of Practice: Residential and Commercial Real Estate;
Immigration; Criminal; Power of Attorney
Email: manuel@mjlawyers.com

## Belinda P. Jesudasan, B.A.(Hons.), JD

Barrister, Solicitor & Notary Public
Areas of practice: Family Law
Email: belinda@mjlawyers.com

## Veluppillai Indrasigamany

Barrister, Solicitor & Notary Public
Formerly of Immigration and Refugee Board.
Areas of Practice: Immigration; Civil Litigation;
Real Estate
Email: Indrasigamany@mjlawyers.com
Email: belinda@mjlawyers.com

---

80 Corporate Drive, Suite #210
Scarborough, ON M1H 3G5
Tel: 416 444 8070
Fax: 416 444 9105

**www.mjlawyers.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசனும் ஆண்டியும்

குமார் புனிதவேல்

அந்த நாட்டில் அனைத்துமே தவறாகப் போவதாகப்பட்டது அந்த அரசனுக்கு. அரசன் எவ்வளவு முயன்றபோதும் அமைதி அமையவில்லை. மக்கள் குடும்பங்களுக்கு இடையில் சண்டைபிடித்தனர். அயல் நாட்டவர்களும் எந்த வேளையிலும் படையெடுக்கலாம் என்ற நிலையில் இருந்தது. நாட்டில் மட்டுமல்ல; அரசனின் வீட்டிலும் அமைதியில்லை. இரண்டு பிள்ளைகளும் சண்டை பிடித்தவண்ணம் இருந்தனர்.

அரண்மனை மந்திரியாரும் ஒற்றுமையில்லாது தமக்குள் பிரச்சினைப்பட்டார்கள். நாட்டிலோ மக்கள் கவலையீனத்தால் பயிர்ச்செய்கை கெட்டுப்போனதுடன், மக்கள் மன்னனுக்கு இராசி இல்லை, அதுதான் நாடு கெட்டுப் போகிறது என்று கதைக்கத் தொடங்கிவிட்டார்கள். ஊர் வாயை மூட உலைமூடி ஏது? அரசன் எவ்வழி, மக்கள் அவ்வழி என்பார்கள். இராசி இல்லாத அரசனின் நாடும் இராசி இல்லாது இருந்தது. ஒரு சிலர் அண்டை நாடுகளுக்குச் சென்று தம் வாழ்க்கையைத் தொடர முற்பட்டனர்.

அரசனுக்கு அறிவுரை வழங்கும் மந்திரிமார்களும் அவருக்குத் தக்க வழி காட்டுபவராய் இல்லை. உண்மையில் அவர்கள் தங்கள் வாழ்க்கையை வளர்த்துக் கொள்வதற்காக அரசன் செவிக்கு இனிமையாகப்படும் விடயங்களையே அவருக்குச் சொன்னார்கள். வைத்தியம் பார்க்கும் வைத்தியர் மருந்து கசக்கும் என்று கொடுக்காது இருந்தால், நோயாளி சுகமாவது எப்படி? மேலும் அறிவுரை கூறுபவர்கள் அரசன் கேட்க விரும்பியதைச் சொன்னார்கள் அன்றி, கேட்கவேண்டியதைச் சொல்லவில்லை.

வேறு வழி தெரியாது இறுதியில் சாத்திரம் சொல்பவர்களையும், யாகங்கள் செய்பவர்களையும் நாடினார். நாம் அனைவருமே கஷ்டம் வரும் வேளையில் இவர்களை நாடுவது இயல்புதானே!

அவர்கள் அனைவருமே அவர் பிறந்த வேளை கோள், நட்சத்திரங்கள் எல்லாமே மிக நல்ல இடத்தில் இருந்ததால் கட்டாயம் அவர் ஒரு சரித்திர புருஷராக வருவார் என்று தெம்பு ஊட்டினர். மந்திரங்கள், யாகங்கள் செய்பவர்கள் இன்ன இன்னவற்றைச் செய்தால் வாழ்வு சிறக்குமென்று ஆசை காட்டினார்கள். அரசனும் அவர்கள் சொன்ன பூசைகள், யாகங்கள் யாவற்றையும் செய்தான். ஆனால், நிலைமை மாறவில்லை.

காலப்போக்கில் அரசனுக்கு ஒன்றுமட்டும் புரிந்தது - ஏதோ தான் தவறாகச் செய்வதும், அதை இவர்கள் மூலம் அறிந்து திருந்தி நடக்க முடியாது என்று! இவை யாவற்றாலும் மனமுடைந்த மன்னன் ஆழ்ந்த சிந்தனையுடன் தன் விதவைத் தாய் இருந்த அறைக்குச் சென்றான். அம்மாவுடன் சற்று ஆறுதலாகக் கதைத்துக் கொண்டிருந்தால் மனதுக்கு சற்று அமைதி தருமென்று.

தன் மகனைப் பார்த்த மாத்திரத்திலேயே அந்தத் தாயுள்ளத்திற்குப் புரிந்துவிட்டது, மகன் மனம் குழம்பிப்போய் இருக்கிறான் என்று.

"மகனே! இந்திரா, ஏன் மனம் குழம்பிப்போய் இருக்கிறாய்? எப்போதும் கலகலப்பாக அனைவரையும் உற்சாகப்படுத்துவாய். இப்போது என்ன நடந்தது?

"அம்மா, நீங்கள் கூறுவது உண்மையே. எனது மனம் பெரிதும் குழப்பமடைந்துள்ளது. எனது முன்னையோர்கள் கட்டியெழுப்பிய இந்த அரச பரம்பரை என்னுடன் அழிந்துவிடுமோ என்ற அஞ்சுகிறேன்" என்றான்.

தாயும் பதிலுக்கு "உனது கவலைக்குக் காரணம் என்ன மகனே? நான் இப்போதெல்லாம் அரண்மனைக்குள்ளே ஒதுங்கி இருப்பதனால், நாட்டில் நடப்பது ஒன்றும் தெரியாது. நீ சொன்னால், ஏதும் வழி எனது நினைவுக்கு வந்தால் கூறுவேன்" என்றார்.

"அம்மா, நாட்டில் சாகுபடிகள் குறைந்துவிட்டது. களஞ்சியங்கள் வெறுமையாய் உள்ளன. மக்கள் தமக்குள் சண்டையிடுவதுமல்லாமல், தமது வறுமைக்கு அரசனின் அதிர்ஷ்டமின்மை என்று கதைக்கிறார்கள். எனது இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரர்களும் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால், இராச்சியம் சின்னாபின்னமாகிவிடும். எனக்குப் பின் எங்கள் ஆண்ட பரம்பரை தொடர்ந்து இருக்குமா என்பது சந்தேகம்" என்று வேதனையுடன் தாய்க்குச் சொன்னான் அரசன்.

அரசன் கூறியவற்றைக் கேட்ட தாய் பெரிதும் வேதனைப்பட்டாள். அந்தத் தாய் தன்னை ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு, "மகனே! நான் கூறுவதைக் கவனமாகக் கேள். எமது நாட்டின் கிழக்கு எல்லையில் ஒரு பெரும் மலைத்தொடர் எமக்கு அரணாக வானோக்கி இருப்பதை நீ அறிவாய். நீ சிறுவனாக இருந்தபொழுது, உனது தகப்பனான எனது இறந்துபோன கணவர் முன்பொருவேளை உன்னைப் போலவே மனம் குழம்பிப்போய் இருந்தார். அத்தருணம் அவர் அந்த மலைத் தொடருக்கு நிம்மதியைத் தேடி மாறுவேடத்தில் சென்றார். அங்கு ஒரு இளைஞனை ஆண்டிக் கோலத்தில் கண்டு கதைத்தபின், அவர் வாழ்க்கையே மாறிவிட்டது. அவர்கள் எதனைப்பற்றிக் கதைத்தார்கள் என்று உன் அப்பா சொல்லவில்லை. நானும் கேட்க யோசிக்கவில்லை. என் மனம் சொல்கிறது, யாராவது உண்மையான ஞானியிடம் அறிவுரை பெற்றால் உனக்கு நன்மை பயக்கும் என்று."

தாயின் அறிவுரையை ஏற்றுக்கொண்டு முயன்று பார்க்க எண்ணம் கொண்டான். உண்மையான ஞானிகள் ஒரு பொல்லாப்பும் இல்லை என்று நம்புவதால் எங்காவது சிவனே என்று இருந்துவிடுவார்கள். அவர்களை தாம்தான் தேடிப்போகவேண்டி வரும் என்று எண்ணினான். தனது தேடலை எங்கு தொடங்குவது என்று மலைத்த வேளை, அவன் தந்தை சென்ற மலைத் தொடர் ஞாபகத்திற்கு வந்தது.

ஆட்சிப் பொறுப்பை மூன்று மந்திரிகள் கொண்ட ஒரு குழுவிடம் விட்டுவிட்டு, மாறுவேடத்தில் இரண்டு மெய்க் காவலர்களையும் அழைத்துக்கொண்டு அந்தப் பயணத்தைத் தொடங்கினான் மன்னன்.

கிழக்கு மலைத் தொடர் நெடுந்தூரத்தில் உள்ளது. அதை அடைவது பலநாள் பயணம். இரவு நேரங்களில் வெட்டவெளியில் படுத்தபோது, மன்னனுக்கு பஞ்சு மெத்தையில் படுத்ததிலும் பார்க்க அதிகமாகவே தூக்கம் வந்தது. காலையில் பறவைச் சத்தம் அவரைத் துயில் எழுப்பிய வேளை, புது உற்சாகத்துடன் நாளை எதிர்நோக்கினான். அரண்மனைக்கு வெளியில் வந்து சுதந்திரமாக மாறுவேடத்தில் திரிந்ததே உற்சாகமான மறுவாழ்வு கிடைத்தது போலிருந்தது. மூன்றாம் நாள் மாலை மலை அடிவாரத்தை மூவரும் அடைந்தனர்.

காலை விழித்ததும், அரசன் ஒரு முடிவுக்கு வந்தவனாக தன் சேவகர்கள் இருவரையும் மலையடிவாரத்தில் இருக்கும்படி அறிவித்துவிட்டு, தனது விதியைத் தேடி மலையில் ஏறினார். அடுத்த நாளும் திரும்பாவிட்டால் அவர்களை தன்னைத்தேடி வரும்படி சொன்னார்.

ஆரம்பத்தில் ஒரு தெளிவான பாதை தெரிந்தாலும் விரைவில் மறைந்துவிட்டது. ஏறுவதற்கு வசதியாக மலையின் பக்கவாட்டில் ஏறத் தொடங்கினார். மிக உயரத்தில் ஒரு குகை தெரியவே அதை நோக்கி நடக்கத் தொடங்கினார். இலக்கில்லாமல் ஏறுவதிலும், இலக்கை நோக்கி ஏறுவது இலகுவாக இருந்தது. மதியத்திற்கிடையில் அந்தக் குகையை அடைந்துவிட்டார். ஆனால், அங்கு ஏமாற்றமாகவே இருந்தது. யாரோ நடமாடியது போன்ற அறிகுறிகள் இருந்தாலும் ஒருவரும் அங்கு வசிக்கவில்லை.

திரும்பி இன்னுமொரு திசையில் நடக்கத் தொடங்கினார். தூரத்தில் ஒரு மரம் தெரிந்தது. அதன் அடியில் வேரில் யாரோ அமர்ந்து இருப்பதுபோலத் தெரிந்தது. அதை நோக்கி விரைந்தார் அரசன்.

அவர் முயற்சி வீணாகவில்லை. அங்கு ஒரு வயோதிப ஆண்டி இருந்தபடி ஏதோ முணுமுணுத்தபடி தன்னை நோக்கிப் பார்ப்பதைக் கண்டார். ஆனால் அவர் முகத்தில் தன்னைக் கண்டுகொண்டதற்கான சலனம் ஏதும் தெரியவில்லை.

இதுதான் தான் தேடிவந்த ஆண்டியாக இருக்கவேண்டும் என்று அரசன் மனதுக்குத் தோன்றவே, அவர் முன் அரசன் முழங்காலில் நின்றபடி தனக்கு அறிவுரை வழங்கும்படி வேண்டினார்.

ஆனால், அந்த ஆண்டியோ சலனம் ஏதுமில்லாமல் அரசனைப் பார்த்தபடி முணுமுணுப்பைத் தொடர்ந்தார்.

அரசனோ தான் அரசன் எனவும், தனக்கு அறிவுரை வழங்கும்படியும் கெஞ்சினார். ஆனால், ஆண்டியில் சலனம் ஏதுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் சலித்த மன்னன் திரும்பிச் செல்ல எழுந்தான். தற்செயலாக அவன் கவனித்தபோது அந்த ஆண்டி மரவேரில் இருந்து சில அங்குல உயரத்தில் மிதந்தபடி அமர்ந்திருந்ததைக் கவனித்தான். கட்டாயம் ஆண்டிக் கோலத்தில் காணப்பட்டது ஒரு பெரும் ஞானி என்று புரிந்துவிட்டது. உடனே மன்னன் நெடுஞ்சாணாக விழுந்து வணங்கி, "சுவாமி, நீங்கள்தான் தஞ்சம். செல்லும் வழி அறியாது வந்துள்ளேன். எனது மக்கள் அவஸ்தையை தொடர்ந்தும் என்னால் சகிக்க முடியவில்லை. எனது நாட்டை எப்படி ஆட்சி செய்வது என்று நீங்கள்தான் கற்றுத் தரவேண்டும்" என்றார்.

"எனக்கு உலகை ஆட்சிசெய்வது பற்றி ஒன்றும் தெரியாது. என்னை நான் எப்படி ஆட்சி செய்வது என்பதை மட்டுமே அறிவேன்" என்றார் அந்த ஞானி. அதைத் தொடர்ந்து மீண்டும் சலனமில்லாமல் முணுணுக்கத் தொடங்கிவிட்டார் அந்த ஞானி.

"எனக்கு நாட்டை ஆட்சி செய்யவேண்டிய கடமை உண்டு. எம் முன்னோர்கள் என்னை மன்னிக்க மாட்டார்கள். மேலும் அறச் செயல்கள் யாவையும் நின்றுவிடும். எனக்கு எத்தனையோ பொறுப்புகள் உண்டு. எனது குடிமக்கள் அவர்களைக் காத்து, வழிநடத்துவதற்கு என்னை நாடியிருக்கிறார்கள். எனது முன்னோர் எப்படி ஆட்சி செய்தார்கள் என்ற படித்தேன். ஆனால் எதனைச் செய்வது என்று தெரியவில்லை. நீங்கள்தான் எனக்கு வழிகாட்ட வேண்டும்" என்றார்.

சற்று நேரம் முணுமுணுப்பை நிறுத்திவிட்டு, அரசனை சலனமில்லாது பார்த்துவிட்டு, "ஒரு நாட்டைக் கட்டி ஆட்சி செய்வதற்கு முன் தன்னை அறிந்துகொள்ள வேண்டும். உன்னை அறிந்து உன்னை ஆட்சி செய்ய முடியாத வேளை எப்படி முழு நாட்டையும் ஆட்சி செய்ய முடியும்?" சற்று மௌனத்திற்குப் பின், "என் முன்னே சந்தேகமும் கவலையும் நிறைந்த ஒரு மனிதனைக் காண்கிறேன். இச்சந்தேகம், கவலை எல்லாம் மற்றவர்களால் இடப்பட்டவையே. நான் உன்னிடம் ஒரு கேள்வி கேட்பேன். ஆட்டசி செய்பவன், தன் சொந்த வாழ்க்கையை முதல ஆட்சி செய்யவேண்டும். உன்னை மற்றவர்கள் ஆட்சி செய்தால் நீ எப்படி மற்றவர்களை ஆட்சி செய்யலாம்?

அங்கு ஒரு நெடும் அமைதி நிலவியது. அரசன் ஆழ்ந்த சிந்தனையுடன் அந்த ஆண்டியை நோக்கினான். அமைதியாக இருந்த ஆண்டி, திடீரென்று "சுயநலம் கூடாது என்பார்கள். ஆனால், பிழையான சுயநலம்தான் கூடாது. நல்ல சுயநலம் இருப்பதால்தான் இந்த உலகமே அழியாமல இருக்கிறது. நன்மை செய்தால் நன்மை வரும் என்பதால் தானே நன்மை செய்கிறோம். எனவே நல்ல சுயநலத்தால் தானே நன்மை செய்கிறோம். உலகில் நமக்கு அனைத்துமே சுயநலமே. சுயநலத்துக்காக நன்மையைச் செய். அதனால் நன்மை அடைவாய். இனியும் மற்றவர்கள் கூற்றை நம்பியிராமல், சொந்தமாக செயற்படு. அதுவும் தன்நெஞ்சறிவது பொய்க்காமல் பார்த்துக்கொள்." என்றான் அந்த ஆண்டி.

திரும்பி வந்த மன்னன், வாழ்க்கையே மாறியது. தன் சுய சிந்தனையுடன், தாமாக செயற்பட முன்வந்தான். அவன் வாழ்க்கை வெற்றிக்குத் திசை திரும்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Different Perspective on Hindu Religious Sects By T.M.P.Mahadevan – A Critical Analysis

T. Selvamanoharan
Asst. Lecturer, Hindu Civilization, University of Jaffna

Professor. T.M.P.Mahadevan stands out as one of the few scholars who put Indian Philosophy and Religion on the world map. As a University scholar, speaker and author he took Indian Philosophy to the western world through English. This paper attempts to evaluate the principles outlined by T.M.P. Mahadevan in his book *Outlines of Hinduism*.

In the evolution of Man the concept of religion had formed almost simultaneously with the capacity for language and the use of tools. Religious consciousness is discernible at every stage of human development. Adherents of Religion vehemently reject Freud's assertion that "Religion is neurosis". These who approach Religion from the plane of instinct assert that a religious attitude is essential to human existence. Religious experience is an integral part of life "It justifies itself. It is the witness – a self – luminous entity"[1]. Such experiences need not and cannot be the same for everyone. The object of Experience is the One – the real thing [2]

India is the home of Hinduism which is one of the oldest religions of the world. It is also referred to a *Sanāthana dharma* or *Vaitheeha dharma*. The Vedas, the basic texts of Hinduism are considered the ultimate authority. However, Hinduism does not restrict man to a single code of conduct. It is an arrangement formulated to suit the manifold facets of human life and the various stages of man's spiritual development. In the Indian context Religion and Philosophy have had a Parallel development[3]. According to TMP the Hindu Philosophers ensured that Philosophy was not reduced to an arid exercise or Religion to a blind groping[4]. The *vedas*, *smiruthis*, *ithihāsas*, *purānas* and *āgamas* are considered the basic sacred texts of Hinduism while the various sub texts that derived from them are special texts in the regional languages.

Although Hinduism is the oldest religion of India, it consists of many divisions each of which, in turn, has sub-divisions. It was Sankara who categorized these religions into six- the sanmathas. In the context of many religious philosophies, he put forward the theory of ēkānmavatha – the One or *advaitha*. He is called the *sanmatha prathisthāpaka*[5]. The sanmathas he established are *saivam, vaishnavam, sāktham, gānāpdyam, kaumāram* and *sauram*. Although, Sankara accepted the vedas as supreme authority, the six religions have accepted the āgamās too as authorities.

1. Radhakrishnan.Dr.S, An Idealist View of life. p. 92
2. Rg. Veda – 1, clxiv : 46
3. Havell. E.B - *The History of Aryan Rule in India* (George G.Harrap &Co.Ltd, London, no date), p.170
4. Mahadevan T.M.P, *Outlines of Hinduism,* Chetana Ltd, Bombay. 1971.p. 13
5. Ramaratnam. N - Sangara and Shanmatha - M.L.J.Office, Madras. p. 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is obvious that TMP. Mahadevan was very much attracted by Sankara's vedantha philosophy. It is clear that he rates advaitha philosophy higher than the other branches. At the same time, he records that each of the other five philosophies has its own form of worship. He reiterates that man needs religious practice for his spiritual development[6]. It is curious that TMP Mahadevan who mentions the six vedic philosophies as propounded by Sankara, develops only Saivam, Vaishnavam, Sāktham, Gānāpadyam and Souram. He does not mention Kaumāram.

Did not TMP Mahadevan consider Kaumāram as a religion? Or did he think that in the course Indian history took; Kaumāram has ceased to be a religion? These questions deserve our attention. It is all the more strange that TMP Mahadevan, born and bred in Tamilnadu, the home of Murugan's six *padaiveedus*, chose to omit Kaumāram.

The following statements by TMP Mahadevan are worth quoting:-

> "The technique by which this is done has come to be called *Tantra* in India. The *Tanras* are the books which initiate the devotee into this technique of worship. They are also known as the āgamas. And the cults which are based on these Scriptures are usually referred to as Tāntrika cults"[7].

Further, he declares:

> [8]According to the orthodox Hindu tradition, the *Tantras* or *āgamas* are founded on the Vedas, and there is no divergence of doctrine as between Veda and āgama. In the *Kulārnava – tantra*, Siva tells Pārvthī that there is no difference between the religious philosophy of *Tantra* and the truth of the Veda" [3].
>
> "The special type of Scripture that is applicable to the present age of *Kali* would, thus seem to be *āgama* or *tantra*"[9].

is his assertion in the chapter "The Cults" in "*Outlines of Hinduism*"

The following inferences could be made:-

- āgamas are known as tantras.
- The tantric system developed out of the āgamas.

The vedas and the agamas are said to be God's utterances. The six religions mentioned by Sankara accept the vedas and the āgamas. Although the term 'tantra' is synonymous with the term 'āgama', it is difficult to come to the conclusion that *tantras* evolved out of the āgamas. Sankara who speaks of the veda – agama synthesis goes on to explain it through *Kulārnavatantra*. Researchers maintain that agama is different from *Kulārnava* tantra. On another occasion Sankara reiterates that āgamas and tantras are suited for the kaliyuga. It flows from this that Sankara considers āgamas and tantras to be different. I shall now consider this question in detail.

---

[6] . Mahadevan T.M.P .Op.cit. p. 179

[7] Loc.Cit.

[8] Ibid. pp.179 – 180

[9] Ibid.p.180

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Agamas are called tantras but tantric tantras are different from agāmic tantras. It is said that the number of Siva agāmas is 28 and the upa agamas 207. Vaishnava āgamas are referred to as vaikāsanas and pancharathram. The sāktha āgamas enjoy a special status as tantras. This may be the reason why the tantric religions give a pride of place to sāktham. But tāntrika tantras fall into three groups, namely, vishnugrāntham, rathagrāntham and asvagrāntham and each is said to contain 64 tantras[10] .

Agamas are referred to as mahātantram and tantram. Kāmika and Maguda āgamas proclaim:-

"They are called tantras since they explicate the truths embedded in philosophies and mantras and protect those who seek refuge in them" [11]

Further Agora Sivachariyar in his commentary to Tatuvaprakāsam declares: "Mahamantra is one which can pronounce the four avenues, Sariya, kriya, yoga, and gnana and the three entities pathi, pasu and pāsa" [12]

Mahamantra means the mūla agama. At the same time, the tāntric tantras do not have a common basis. They lay down their own limits and structure themselves for their purposes. Mahānirvāna Tantra[13] , Sārada Tantra[14], Vāmakēsvara Tantra[15] are some of the examples.

In the moola āgamas the first patalam is tantra avatara patalam. While it traces the origin of the particular āgama, it follows the convention of referring to the āgamas as tantras. Examples of this are krata tantra and veera tantra. Following this convention Tirumoolar divides his work Tirumantra into 1st tantra, 2nd tantra and so on.

Tantrikas appear to embody rituals and kriyas contrary to the agama tradition. Forms of worship differ in the two systems. While the tāntrika system uses alcohol, meat and sex[16] in its ritual, āgamas reject them totally.

It is therefore clear that agamas are distinct and different from tāntrika 'tantra'. This being the case, what is the 'tantra' referred to by TMP.Mahadevan in the Chapter 'The Cults'? Setting out to define the term 'tantra', he uses both 'agama' and 'tantra' alternatively and, at one stage, declares, "In Hinduism, the names of five Tantrika cults are generally mentioned. Gānāpadya, Saura, Vaisnava, Saiva and Sāktha". Of these adherents of Gānāpadya and Saura systems are fewer. Saiva and Vaisnava are the two major systems. The Sāktha religion followed the Tāntrika form of worship closely but in due course it declined and was absorbed into Saivism, says T.M.P. Mahadevan. From the above it is clear that he has mistaken the Tāntrikas for Tantras[17].

---

[10] Woodroffe sir John , Principals of Tanra . pp. 72 – 74
[11] Sabaratnam.S.P – Saivāgamas – An Introduction , Madras.1989. p. 9
[12] அகோர சிவாச்சாரியார் (உரை) – தத்துவப் பிரகாசிகா – ப. 5
[13] Mahānirvāna Tantra, Khemraj Shrikrshnadas, Bombay. 1929
[14] Sārada Tantra. JaiKrishndas Haridas Gupta,Benares City. 1934.
[15] Vāmakēsvara Tantra.other Details are not available. 1935
[16] Woodroffe sir John , Op.cit. pp. 376 – 422
[17] Mahadevan T.M.P – Op.cit. 13 .p.181

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Kaumāra form of worship will not fit into the Tāntrika system because it does not follow the Tāntrika tantras. Kaumāram is not mentioned in the Tantrika texts either. Kumaran is merely mentioned as the son of Siva and Sakthi[18]. Likewise, vaithika smarthās follow five of the sanmathas excluding Kaumāram[19].

Citing the messages given in the puranās and the ithihāsas of Gānāpadya and Saura, TMP Mahadevan evaluates the popularity enjoyed by the two religions. He goes on to elaborate their tantrika basis.

Discussing Vaishnavaism, he mentions its sub divisions, the purāna – ithihāsa aspects, the vaikāsana and panchārathra traditions, the five manifestations of Vishnu described by them, the concept of avatara liberation (mukti) and prabhakthi on the basis of āgamas. He follows it with an explanation from the tantrik point of view. He elaborates the kāpālika, kālāmukha, Pāsupatha and māviratha tantric manifestations. Thereafter he lists the avenues including rituals available for spiritual liberation. This is followed by an explanation as to how Sāktam falls within the tantric cult. He thus presents the salient features of tantrika through Sāktam. Further he cites kundalini as a mystic device. Hence, it is clear that TMP Mahadevan views the five religions and kundalini yoga from thetāntrik plane.

It is therefore clear that TMP.Mahadevan means Tāntrika by the term tantra. Probably he was unsure about the distinctions between the terms tantra, āgama and tantrika, for, in the chapter 'Scriptures' he defines āgamas as "theological treatises and manuals of worship"[20] [1]. He lucidly explains the saivāgama, pāncharāthra, Vaikāsana and sāktha tantra traditions. But in the chapter "The Cults" he maintains that the purpose of this form of worship is "to lift the aspirant from the level of sensibility to that of divinity by making proper – use of his very senses". These scriptures are also known as āgamas[21] [2]. Forms of worship based on these scriptures are tantrika forms of worship, generalizesTMP Mahdevan. It is this stance that is confusing. If his purpose was to elucidate the tantrika form of worship, why should he, in a footnote to Ganāpadya mention that there is a separate form for skanda – karthikeya that is called kaumāram and move on to purānic stories about Murugan?.[22] It is perhaps the proof of TMP Mahadevan's inability to bypass Kaumaram.

It is surprising that TMP Mahadevan who did a lot of research into advaiṯa darṣana, chose to avoid the sub – divisions of Sankara's sanmathas and rely on the tantrika basis for propounding the five systems. Further, by his assertion of the āgama tradition as a tāntrika one, he probably found consolation in the belief that āgamas and tantras are more suitable for today's kaliyuga.

---

[18] Woodroffe sir John,Op.cit . pp. 381 – 383

[19] Raghavan.V. Snkara and Sanmatha, Ganesh & Company, Madras.1986. p.7

[20] Mahadevan T.M.P – Ibid – Page 31

[21] Ibid . p.179

[22] Ibid, p.182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனே முழு முதற் கடவுள்

சிவதொண்டன் தில்லையம்பலம் சிவயோகபதி
உலக சைவப் பேரவை, கனடா.

பன்னிரு திருமுறைகளை அருளிச்செய்த அருளாளர்கள், சிவபெருமானது முழுமுதல் தன்மையை நிலைநிறுத்தியிருக்கிறார்கள். அடியார்களுக்கு எளியவன் சிவபெருமான். ஆன்மாக்களுடன் கலந்திருப்பவன். உலகில் நிறைந்துள்ள மெய்ப்பொருளாக விளங்குபவன். அண்டங்களுக்கு எல்லாம் வித்தாக இருப்பவன் சிவபெருமான். நூறுகோடி நான்முகர் அழிந்தனர். ஆறுகோடி நாராயணர்களும் அழிந்தனர். கங்கையாற்று மணல்போன்று எண்ணிலடங்கா இந்திரர்களும் மாண்டனர். முடிவும் அழிவும் இல்லாதவராய் விளங்குபவன் சிவபெருமானே என்பதை நிறுவும் அப்பர் பெருமானின் பாடல்:

நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறுகோடி நாரணர் அங்ஙனே
ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே!

சிவனே நமக்குத் தாயாகவும், தந்தையாகவும் விளங்குகிறான் என்பதை "ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்", "அப்பன் நீ அம்மை நீ" என்று நாவுக்கரசரும், "அன்னையே என்னே அத்தனே என்னே அடிகளே அமையும் என்று இருந்தேன்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே", "பால்நினைந்தூட்டும் தாயினும் சால" என்று மணிவாசகரும் அருளிச் செய்துள்ளனர்.

**மணிவாசகர்:**

"நான் புற்றில் வாழும் பாம்புக்கும், பொய்யர் கூறும் சொற்களுக்கும் அஞ்சமாட்டேன்; சிவனின் திருவடிகளே நம்மைக் காக்கும் என்று தெரிந்திருந்தும், வேறு ஒரு தெய்வம் உண்டு என்று கூறுபவர்களைக் கண்டே நான் அஞ்சுகின்றேன்" என்ற பொருளில் மணிவாசகரும் பாடுகின்றார்.

புற்றில்வாழ் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம்நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்கு
அற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. (அச்சப்பத்து)

மேலும் அவன் உலகத்தைத் தாங்கும் ஆகாய வடிவமாகவும், அக்னி, சூரியன், சந்திரன் என்னும் முச்சுடர்களாகவும், வருணனுக்கு ஆணையிட்டு மழையைப் பெய்விக்கும் திருவருட் சக்தியாகவும், வாயுவுக்கு ஆணையிட்டுத் தென்றல் வீசச் சொல்பவனாகவும், மலையாகவும், கடலாகவும் இருப்பவன் என்பதை,

பூதங்கள் ஐந்தாகி புலனாகிய பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய் பேதமிலாப் பெருமையனை
கேதங்கள் கெடுத்தாண்ட கிளர் ஒளியை மரகதத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்கள் தொகுத்து ஏத்தும் வணங்குதில்லை கண்டேனே!

- என்று அருளிச் செய்துள்ளார்.

திருமூலர்:

அடியார்களின் இதயக் கமலத்தில் குடிகொண்ட சிவனுக்குச் சமமான தெய்வம் எங்கும் இல்லை. அவனுக்கு ஒப்பார் யாவரும் இல்லை. சிவனேயல்லாமல் வேறு எந்தத் தேவரும் இல்லை. அப்பெருமான் அண்டத்தையும் கடந்து நின்று, பொன்போல் ஒளிர்ந்து விளங்குபவன். செந்நிறமான தாமரையில் விளங்குபவனும் அவனே என்று திருமூலரும் பாடுகின்றார்.

சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடொப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடை முடித் தாமரையானே!

(திருமந்திரம்)

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரையும் கடந்து நிற்கும் சிவபெருமான், பற்றற்ற ஞானிகளுக்கு மட்டுமே வெளிப்பட்டு நிற்கிறான். அவன் முப்புரங்களை எரித்தவன்; அட்ட வீரச் செயல்களைப் புரிந்தவன்; பிறப்பும், இறப்பும் இல்லாதவன். எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பவன் சிவனே என திருமுறைகள் பேசுகின்றன. அவனுக்கு எண்குணங்கள் உண்டு என்று சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. தூய உடம்பினன் ஆதல்; இயற்கை உணர்வினன்; முற்றுணர்வு உடையவன்; இயல்பாக பாசம் இல்லாதவன்; பேரருள் உடையவன்; முடிவில் ஆற்றல் உடையவன்; வரம்பில் இன்பம் உடையவன்; தன் வயத்தன் ஆதல் என்னும் எட்டுக் குணங்களை உடையவன் சிவபெருமான் என்பதைத் திருவள்ளுவரும் -

"கோள் இல்பொறியில் குணம் இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" - என்று குறிப்பிடுகிறார்.

தனக்கு ஒப்புமை இல்லாதவனும், ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியாய் நிற்பவனும், மெய்யன்பர்களுக்கு திருவடிப் பேற்றை அளித்து, இன்பத்தை அளிப்பவனும் ஆகிய முழுமுதல் கடவுளாகிய சிவபெருமானின் கழல் பணிந்து, அவனருளாலே அவன்தாள் வணங்குவோம்! ஓம் நமசிவாய!

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாதம் மங்கையர் மாதம்

சி.நம்பியாரூரன்

மாதங்களில் மகிழ்ச்சிக்குரியது மார்கழி. தமிழ்நாட்டிலும் தமிழர்கள் வாழும் இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் மாரி மழை நனைக்க, இயற்கை விழித்தெழும் காலம். பச்சை பரந்திட உயிரினங்களும் பல்கிவிடும் பருவம். மார்கழி மாதம் முன்பனிக் காலமும் கூட. மழையில்லா விடியல்களில், மலர்களிலும், இலைகளிலும் புற்களிலும் பனி முத்துக்கள் கண்களைப் பறிக்கும். காலையில் துயில்விட்டெழ, கண்கள் மறுக்கும். படுக்கையின் சொகுசினை விட்டெழ உள்ளமும் உடலும் மறுக்கும்!

ஆனால், மார்கழியின் முப்பது நாட்களிலும் ஊருடன் சேர்ந்து, அனைவரும் அதிகாலையில் எழுந்தேவிட வேண்டும் - ஏனென்றால், மார்கழி சைவர்களுக்கு திருவெம்பாவை, வைஷ்ணவர்களுக்குத் திருப்பாவை உற்சவ காலம். பாவையர் நோன்புக் காலம். இறைவனைத் தலைவனாகக் கொண்டு பாவையர் அவனை அடைய வழிபடும் காலம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் இருந்த ஒரு சிறு கிராமத்தைக் கற்பனை செய்யலாம். காலையில் முன்னெழுந்துவிடும் கன்னியொருத்தி, அக்கம் பக்கமாக உள்ள தனது தோழியை எழுப்புவாள். இப்படி இருவராய், மூவராய்க் கூடி, பெண்கள் கூட்டம் அமர்க்களமாகிவிடும். இவர்கள் ஊர்க் குளத்திற்கோ, கேணிகளுக்கோ சென்று நீராடி கோயில்களில் தரிசனம் செய்தல் மார்கழி வழக்கம். தோழியரைத் துயில் எழுப்பச் செல்லும் பெண்கள், பாட்டுகள் பாடி, அவர்களை எழுப்புவதும் வழக்கம். இப்படி ஒரு காட்சியைக் காட்டும் திருப்பாவைப் பாடல் ஒன்றை இங்கு பார்க்கலாம்:

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலி கடைதிறவாய்
வந்துஎங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்துஆர் விரலிஉன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளைஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

அடங்கா மதம் கொண்ட யானையின் வீறு கொண்டவன்; பகைவருக்கஞ்சி ஓடிவிட வேண்டா தோள் வலிமை உடையவன். நப்பின்னையே, கோபாலனை அடைய விரும்பும் நீ அவனுடைய முறைமருமகள் போன்றவளே, நறுமணம் வீசும் கூந்தலை உடையவளே, வந்து கதவைத் திறவேனடி! விடியல் வந்ததென்று சேவல்களும், குயில்களும் கூவுகின்றனவே, உனக்குக் கேட்கவில்லையா? பந்தை எறிந்து பிடிக்கும் மென் விரல்களை உடையவளே, கோபாலன், உன் மைத்துனனின் கோயில் போய் அவன் புகழ்பாடும் நேரமல்லவா இது! செந்தாமரையை ஒக்கும் உன் கையால், உன் வளையல்கள் ஒலிக்க வந்து, கதவைத் திறக்க மாட்டாயா? பாட்டின் பொருள் இது. பாட்டு ஆண்டாள் பாடிய திருப்பாவை தொகுப்பில் ஒன்று. ஆண்டாள் முப்பது திருப்பாவைப் பாட்டுகளைப் பாடியிருக்கிறாள்; மார்கழித் தினங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பாட்டு என்றாற்போல், ஆலயம் செல்ல தோழியரை அழைத்து விடுவதற்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிப் பெண்கள், தம்மைப் போற்றியும், தாங்கியும், பாதுகாத்துக் காக்கும் தம் மனம் விரும்பும் கணவனை அடைய வேண்டும் என்று இறைவனை வேண்டி நோன்பிருக்கும் மாதம் மார்கழி. நோன்பின் இந்த நோக்கம், பக்தி மார்க்க காலத்தில் எல்லை மீறி, சிலரிடம் இறைவன்மேல் பாய்ந்து அவனையே கணவனாக அடைய முற்பட்டது.

இதற்கு உதாரணம்தான் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆண்டாள் (725-755) கதை. ஆண்டாள் வைஷ்ணவி. விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டவள். வைஷ்ணவத்தின் பன்னிரு ஆழ்வார்களுள் பிரபல்யமானவள். ஒரேயொரு பெண் ஆழ்வார் என்ற பெருமையும் அவளுக்குண்டு. இவள் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள். நந்தவனத்தில் அவரால் கண்டெடுக்கப்பட்டவள். இறைவனே தன் கணவனாவான்; மனிதன் அல்ல என்ற திடமான உறுதி கொண்டவள் என்பதைக் காட்டும் அவளுடைய பாட்டு ஒன்றினைக் காண்க.

ஊரிடை ஆழ்சங்க உத்தமர்க்கு என்று
உன்னித்து எழுந்தன வெண்தட முலைகள்
மானிடர்க் கென்று பேசப்படின்
வாழ்கிலேன் கண்டாய் என் மன்மதனே.

இறைவனே தன் மன்மதன் என்றாள் ஆண்டாள். விஷ்ணு பற்றிய சிந்தனை அவள் உள்ளத்துக்கு மட்டும் உவகை அல்ல; அவளது உடலையே சிலிர்க்க வைக்கிறது. மனிதனை மணம்கொள்ள வேண்டுமென்றால், எனக்கு இந்த வாழ்க்கையே வேண்டாம் என்கிறாள். அவள் விரும்பியபடியே அவளின் காதல் நிறைவேறுகிறது. பாண்டிய நாட்டில் பிறந்த இவள், பெரியாழ்வாருடன் சோழநாடு போகிறாள். அங்கே காவேரி, கொள்ளிடம் ஆறுகளால் அணைக்கப்பட்ட கடல்சார் தீவில் உள்ள ஸ்ரீரங்கத்தில் ஆதிசேஷ ஐந்தலை நாக மஞ்சத்தில் சாய்ந்திருந்த ஸ்ரீரங்கநாதனுடன் உடலோடு உடலாக இரண்டற அவள் கலந்துவிட்டாள் என்பது கதை. இதனை, நாம் பக்தியால் உயிரும் பேருயிரும் இணைந்தமைக்கான உருவகம் என்று கொள்ளலாம்.

இப்படி தனக்கு நிகழவிருந்த திருமணக் காட்சியை ஆண்டாள் முன்னரே கனவில் கண்டிருக்கிறாள். அதைப் பாட்டாய்ப் பாடியும் இருக்கிறாள். பக்தி பரவசத்தால் ஏற்படக்கூடிய ஒரு பிரம்மைக்கு இது ஆதாரம். முத்துத் தோரணங்கள் நிறைந்த பாரத்தால் பந்தல் சற்றே தாழ்ந்ததாம்!

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிறைதாழ்ந்த பந்தர்க்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழிநான்.

வைஷ்ணவர்களின் உயிர், பேருயிர் அல்லது ஆத்மா, பரமாத்மா பற்றிய நம்பிக்கையைப் பார்க்கலாம். எமது உயிர் தெய்வீகமானதால் அது பேருயிரைப் போன்றது. ஆனால், உயிரும் பேருயிரும் சமமானவை அல்ல. உயிரின் உயர்வு இறைவனுடன் கலத்தலால் வருகிறது. ஆனால், கலந்துவிட்ட நிலையிலும் தன் இயல்பினை மாற்றிக் கொள்வதில்லை. அந்தமில்லா காலமும் அது இறைவனுடன் தோழமையே கொண்டிருக்கலாம். இறைவனின் அருளில் நீந்தும்போதும், இறைவனின் வல்லமையை நாம் பெறமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் ஒருவனே இந்தப் பிரபஞ்சத்தைப் படைக்க முடியும். அவன் அதில் எம்மை எங்கு இடுகின்றானோ, அங்கே நாம் சில காலம் தரிப்போம். அவனுடன் மீண்டும் மீண்டும் கலப்பதற்கு.

முடிவுரையாக, 'இந்து' என்ற சொல் ஒரு தவறான சொல் வழக்கு. 'சிந்து' என்ற சொல் பாரசீகர்களால் தவறாக உச்சரிக்கப்பட்டதால், ஆதியில் இருந்த 'சிந்து', 'இந்து' ஆகியது. சிந்து நதிக்குக் கிழக்கே உள்ளவர்களை 'சிந்துக்கள்' என்றார்கள் பாரசீகர்கள். பின்னர் மேலை நாட்டவர் இந்திய உபகண்டத்தினரை இந்துக்கள் என்றும், அவர்கள் சமயத்தை 'இந்து' என்றும் பெயரிட்டனர்.

மேலும், இந்து சமயம் என்றொரு தனிச்சமயம் இல்லை. இந்தியாவின் எண்ணற்ற சமயப் பிரிவுகள் அனைத்தையும் குறிக்கும் சொல்லாகவே உள்ளது 'இந்து சமயம்' என்ற பெயர். பல பவள முத்துக்கள் பொதிந்த மாதுளம் பழத்திற்கு அதை ஒப்பிடலாம். பழத்தின் ஒவ்வொரு முத்தும் ஒவ்வொரு சமயப் பிரிவு என்றாற்போல், பல சமயப் பிரிவுகள் சேர்ந்த தொகுப்பிற்கு "இந்து சமயம்" என்று பெயராகியதால், அதற்கு வரைவிலக்கணம் ஆக்க இயலாது. பல பிரிவுகளையும் பெரும் பிரிவுகளாக்கின், அவை வைஷ்ணவம், சைவம், சாக்தம் என்பவற்றில் அடங்கும். இவற்றில் வைஷ்ணவத்தைச் சார்ந்தவர்களே இந்தியாவின் பெரும் தொகையினர்.

"இந்து மதம்" என்பது உலகின் மிகப் பெரிய ஒழுங்கமைப்பு இல்லாத சமயம் எனலாம். இதனால் ஒரு இந்து சமயியின் நம்பிக்கைகளும், தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும், மற்றொரு இந்து சமயியினது நம்பிக்கைகளுடனும், தெய்வங்களுடனும் வழிபாட்டு முறைமைகளுடனும் இணங்கிவிடும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. விக்கிரக வழிபாடு செய்யாத வேதாந்தியும் ஒரு இந்து சமயிதான். சகல சமயங்களையும், சமயப் பிரிவுகளையும் மதித்திடும் சமயம் இந்து சமயம் எனலாம்.

**இராமலிங்க அடிகளார் பாடல்**

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள் ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேச வேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண் ஆசையை மறக்கவே வேண்டும் உனை
மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணைநிதி வேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண் முகத்துய்ய மணி உண் முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Maari: The Goddess of Infectious Diseases and Drought

Dr. Bala Sivakadadcham
Retired Senior Lecturer and Head of Department
Faculty of Agriculture, University of Jaffna, Sri Lanka

*'Bhuta Vidya'* is one of the branches of Ayurveda that deals with diseases the causes of which are directly not visible and have no direct explanation. Commentators on ancient medical texts believe that *Bhuta-vidya* deals with psychiatric and infectious problems. Physical and mental disorders the causes of which were unknown at that time were believed to be caused by angry divine spirits. The treatments for such diseases included performing rituals aimed at pacifying the particular deity which would usually be a female. In addition to the rituals, some selected herbs were also employed to prevent the disease from aggravating or spreading to others.

In Tamil Nadu and Sri Lanka smallpox has been associated with the mother goddess from ancient times. This female deity is respectfully referred to as *'Maari Amman'* or Mother Maari. Smallpox is called *Periammai* (big mother) and chickenpox is referred to as *Sinnammai* (little mother). The Tamil names for different types of hepatitis also carry in part the name of Marri. The names *SengkanMaari* (red eyed Maari) and *Manchadkan Maari* (Yellow eyed Maari) refer to the mild and severe forms of hepatitis. Cholera is known as *Vayitru maari*. The Tamil term *Vayiru* refers to the stomach.

Since Goddess Maari is also considered a protector of the village there is no village in Tamil Nadu that exists without a temple for this Goddess. The worship of Maari amman has spread to many countries where Tamils migrated to and settled down in significant numbers. These countries include Malaysia, Singapore, Indonesia, Vietnam and Thailand. In recent years Maari amman temples have appeared in North America and in a few European countries to which thousands of Sri Lankan Tamils have migrated in the last three decades.

*Neem* leaves, turmeric and camphor are the most significant items associated with Maari amman rituals. Maari amman temples can be easily identified by the presence of these items together with the characteristic sounds emanating from special drums. The priest starts the daily ceremony bathing the idol of the Goddess with substances such as coconut water, milk, yogurt and water. Maari is adorned with garlands of *neem* leaves or lime fruits.

Female devotees participate in the procession of Amman carrying fire pots on the head while male devotees roll on the ground following the deity. It is a common sight to see at least one or two devotees acting or dancing possessed by the deity and often making predictions. Male devotees submit themselves to body piercing and carrying *Kavadi* and sometimes hanging from a chariot with nail hooks pierced into their back skin. Such an act of self-inflicting is usually performed in gratitude to the Goddess for what they believe the blessing they received to recover from a serious illness or to escape from a precarious situation.

In many village temples of South India and Sri Lanka a rooster or goat is sacrificed to please the deity. In urban temples, prayers and *Yakgna* are held to appease Maari.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Goddess Maari is reverently called as *Maha Maari* (the great Maari), *Karumaari* (The black Maari) or *Muththu Maari* (Goddess of measles). Maari in Tamil also refers to heavy rain. During the hottest season coupled with drought and an epidemic of infectious diseases villagers prayed to the goddess Maari for rain and protection from pestilence.

Beliefs and rituals surrounding goddess Maari, however, are amazingly similar to those of Sitala, the small pox goddess of North India. Sitala is also a village goddess worshiped as one who punishes sinners with smallpox and protects children from such diseases (Babagrahi Misra, 1969). The priests of these temples are not Brahmins. There is enough evidence to prove that in ancient days a form of inoculation was performed against smallpox virus at Sitala temples. Often the priest himself carried out the inoculation. The procedure involved *'scarifying an area of skin just above the wrist and rubbing in a paste that contained water and dried attenuated smallpox crusts'* (Minsky, 2009). The inoculated patient was quarantined for twenty one days to prevent the spread of the disease. This practice possibly contributed to the eradication of smallpox in Punjab during the British Colonial period.

The name Sitala, however, is unknown in South India. Common people of Tamil Nadu and Sri Lanka generally identify goddess Marri with Umadevi, the wife of the supreme deity Lord Shiva and the mother of Lord Karthikeya. Scholars have pointed out that certain tribes in ancient Tamil Nadu worshipped a mother Goddess of war in the name of Kottavai and her son Muruga. Later Kottavai became identical to the Brahamnical Goddess Uma and Muruga was identified as Karthikeya, the son Lord Shiva. According to some scholars Maari Amman is a later version of Kottavai.

Although there is no firm evidence to identify the Hindu village Goddess'Maari' with the Christian Virgin Mary, the similarity of the names cannot be dismissed as just a coincidence. One of the common names of Goddess Maari in South India is Kanniamman. Surprisingly this name can be directly translated either as virgin mother or big-eyed mother. Apparently the worship of Kottavai, the goddess of war of ancient Tamils, Sitala, the smallpox goddess of North India and the worship of Virgin Mary introduced by Europeans in the sixteenth century probably evolved into a cult of mother goddess Maari who punishes the sinners of the village with infectious diseases and protect the devotees.

Worship of mother goddess or *Saktham* belongs to one of the six ancient religious sects of Hinduism. In philosophical terms she is known as Athisakthy or Parasakthy. Unlike Maari worship that is localized in South India, Sakthi worship has spread as a popular cult around the world recently. However, the symbols of Maari Amman such as Neem leaves, turmeric and red clothes have become part of this cult which has its origin in Melmaruvathur, a suburb of Chennai in Tamil Nadu. People from all over the globe visit the 'Amma' (Mother) of Melmaruvathur in the hope of finding a cure for their problems. Unlike in other Maari Amman temples, women are allowed to perform Poojas in this temple at Melvaruvaththoor. The devotees, both men and women, are asked to wear red clothes when they participate in the rituals. The Guru of Melmaruvaththoor is believed by the followers of this cult to be an incarnation of the Mother. This is not the only instance when an ordinary human being is worshipped as Mother incarnate. Unfortunately there are many others who exploit the gullible devotees of the Mother for financial gains by pretending to be Mother incarnate. As long as there are people who suffer and who do not see help coming from anywhere else they will be there for the imposters to exploit. Proper religious education only will help these poor people from marauding imposters claiming to be avatars showing the way for salvation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகுந்த ஏகாதசி

அமிர்தி புவனேந்திரா



“வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு” என பரந்தாமனை பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றார் பெரியாழ்வார். காத்தற் கடவுளான மஹா விஷ்ணுவை, புருஷோத்தமனை, சங்கு சக்கரதாரியை முகுந்தனை, ஆராஅமுதனை போற்றித்துதித்து வழிபடுவதற்கு மிகவும் உன்னதமான விரதம் மார்கழி மாதத்து சுக்கில பட்சத்து வைகுந்த ஏகாதசியாகும்.

நமது வாழ்நாளில் ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகிறது. சூரியனுடைய சுற்று வட்டப்பாதையை இரண்டு விதமாகப் பிரித்திருக்கின்றார்கள். அதில் தை முதல் ஆனி முடிய உள்ள ஆறு மாதம் உத்தராயணம் (பகல்) என்றும் ஆடி முதல் மார்கழி முடிய உள்ள ஆறுமாதம் தட்ஷிணாயனம் (இரவு) என்றும் உள்ளது. இரவுக் காலத்தில் அதிக இருட்டும் மழையும் பனியும் குளிரும் பகல் பொழுது குறைந்தும் காணப்படுகின்றது. இத்தருணத்தில் மார்கழி மாதத்தின் தேவ இருட்டுப் பொழுதில் அதாவது அதிகாலை நான்கு மணி முதல் ஆறு மணி (பிரம்ம முகூர்த்தம்) உள்ள காலப்பகுதியில் நாராயணனின் வைகுந்த வாசல் திறக்கப்படுகின்றது. இப்பிரம்ம முகூர்த்தமே வழிபாட்டுக்கு ஏற்ற காலமாகும். இந்த நேரத்தில் ஓசோன் வாயு, நில உலகத்தில் மென்மையாகப் படர்ந்து பரவுகின்றது. இது உடலுக்கு நலமும், புத்துணர்ச்சியும் உள்ளத்துக்கு இதமும் புதுக்கிளரச்சியும் தரும். மார்கழி விடியற் காலையில் ஓசோன் வாயு சற்று அதிகமாகவே பரவுகின்றது இதன் காரணமாகவே எமது நாயன்மார்களும், ஆழ்வார்களும் மார்கழி விடியற் காலையில் நோன்பிருந்து இறைவனை வணங்கினர். மணிவாசகப்பெருமான் சிவபெருமானை நினைந்து திருப்பள்ளி எழுச்சியும் திருவெம்பாவையும் பாடி, மார்கழி நோன்பின் தத்துவத்தை எமக்கெல்லாம் விளக்கினார். “மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன் நாளால்” என்று திருவேங்கடரமணனுக்கு நற் பாமாலை சூட்டினாள் சூடிக்கொடுத்த ஆண்டாள்.

அமாவாசைக்கு அடுத்த நாள் முதல் பூரணை ஈறாக உள்ள காலம் சுக்கில பட்சம் எனப்படும். வளர்பிறைக் காலத்தின் பதினோராம் நாள் பூரணையை அடுத்து வரும் நாளிலிருந்து அமாவாசை முடிய உள்ள காலம் கிருட்ணபட்சம் எனப்படும் தேய் பிறைக்காலத்தின் பதினோராம் நாளுமாக இரண்டு முறை ஏகாதசித் திதி வரும் என்றும், அமாவாசையை அடுத்து வரும் எகாதசியை சுக்கில பட்சத்து எகாதசி என்றும் அழைக்கின்றோம். ஏகாதசி என்ற சொல்லுக்கு பதினொராம் நாள் எனப்பொருள்படும். ஒரு வருடத்தில் இருபத்தைந்து ஏகாதசி விரத நாட்கள் வருகின்றன. இவ்விருபத்தைந்து ஏகாதசி விரதத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிக்காவிட்டாலும் மார்கழி உதய காலத்தில் வரும் வைகுண்ட வாசல் திறக்கும் ஏகாதசியே மிகவும் புனிதம் வாய்ந்தது; மிகவும் உன்னதமானது.

திருமாலின் உன்னத கருணையைப் போல் விரதங்களில் சிறந்ததாக விளங்குவது, இவ் வைகுந்த ஏகாதசி விரதமாகும். "காயத்திரிக்கு நிகரான மந்திரமுமில்லை; ஏகாதசிக்கு நிகரான விரதமுமில்லை" என்பார்கள் முன்னோர்கள். இதனால்த்தான் படிகளில் சிறந்தது வைகுண்ட வாசற்படி என்றும் "ஆலின் இலை பாலகனாய் அன்றுலகம் உண்டவனான" மால்வண்ணனின் விரத மகிமையை, "படியாய்கிடந்து உன் பவள வாய் காண்பேனோ" என்று பெருமையாகப் பாடி புருஷோத்தமனை வருணிக்கின்றார் குலசேகர ஆழ்வார்.

வைகுந்த ஏகாதசி அன்று பரந்தாமன் வைகுந்தத்திலிருந்து சொர்க்க வாசல் வழியாக (வடக்கு வாசல்) நமக்காக கருணை மழை பொழிகின்றார். (தெற்கே பாற்கடலில் பள்ளி கொண்டுள்ளவர்) இக் காணத்தக்க அற்புத கோலத்தை சொர்க்க வாசல் திறப்பு அல்லது பரமபத வாசல் என்றும் அழைப்பார்கள். மூன்று கோடி ஏகாதசி விரதமிருந்த பலனை தரக்கூடிதென்பதால் வைகுந்த ஏகாதசி, முக்கோடி ஏகாதசி என்றும் போற்றப்படுகின்றது. பூலோக வைகுந்தம் என்னும் பேறுபெற்ற ஸ்ரீரங்கத்தில் இந்த வைகுந்த ஏகாதசி விரதம் மிகச்சிறப்பாக நடைபெறும். எமது மனித உடல் ஏழு தாதுக்களால் ஆனது. இத்தத்துவ அடிப்படையில்த்தான் ஸ்ரீரங்கத்தில் ஏழு பிராகாரங்களின் நடுவே, அனந்தசயனன் அருள்மழை பொழிந்து கொண்டிருக்கின்றார். இந்த வைகுந்த வாசல் வழியாக பரமபத பெருமாள் காட்சி கொடுப்பதும், அப்போது அவனை சேவிக்க அந்த வைகுந்த வாசற்படி வழியாக நாமும் வந்தால் பரம பதமான சொர்க்கத்தை அடையலாம்,

உடலாலும் உள்ளத்தாலும் பெருமாளுடன் ஒன்றியிருப்பதே உபவாசமாகும். வைகுந்த ஏகாதசி விரதமிருப்பவர்கள் பூரண உபவாசம் இருக்க வேண்டும். இவ்விரதம் மார்கழி மாதக்குளிர் காலத்தில் வருவதால் உடலுக்கு வெப்பம் கிடைக்க துளசி நீர் அருந்துவது சாலச்சிறந்தது. (பட்டினி இருப்பதால் ஜீரண உறுப்புகளுக்கு பூரண ஓய்வு கிடைக்கிறது.) பரந்தாமனின் நாமங்களை பாடி அவன் திருவுருவைத் தியானித்து, அவனது திவ்விய பிரபந்தங்களைப் படித்து, இப்பிறப்பின் பிறவியைப் பயனுள்ளதாக்கிக் கொள்ளவேண்டும். இந் நாளில் உபவாசமிருந்து, நித்திரை விழித்து, வைகுந்தவாசனைத் தரிசிப்பவர்களுக்கு மோட்சம் கிடைக்கும். வைகுந்த ஏகாதசிக்கு மறு நாள் துவாதசியன்று அதிகாலையில் நீராடி நாராயண நாமத்தை ஜெபித்து பாரணை என்னும் உபவாசத்தைப் பூர்த்திசெய்தல் வேண்டும்

கலியுகம் பிறந்ததும் ஒரு நாள் வைகுந்தத்தின் துவார பாலகர்களாகிய ஜெய, விஜய என்னும் இருவரும் வைகுந்த வாசலை மூடினர். இதனைக்கண்ட பெருமாள் காவலர்களிடம் 'வைகுந்த வாசலின் கதவை ஏன் மூடினீர்கள்' என்று கேட்டார், அதற்கு 'கலியுகத்தில் பாவங்கள் பெருகி அதர்மமே தலை விரித்தாடுகின்றது எனவே யாருமே வைகுந்த வாசலை அடையமாட்டார்கள்; ஆதலால்த்தான் மூடினோம்' என்று பதிலுரைத்தார்கள் காவலர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமன் நாராயணன் அதற்கு 'அவ்வாறு நடக்க சாத்தியமில்லை கலியுகத்தில் பாவங்கள் பெருகினாலும் பக்தியும் ஆத்மீகமும் புண்ணியங்களும் பெருகும். எனவே வைகுந்த வாசல் கதவை திறந்து வையுங்கள்' என்று அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனான மதுசூதனன் அருளிய இத்தினமே மார்கழி மாத சுக்கில பட்ச ஏகாதசி என புராண வரலாறுகள் கூறுகின்றன. ஏகாதசியன்று சாஸ்திர சம்பிரதாயப்படி விரதம் கடைப்பிடித்து பெருமானை வைகுந்தம் ஏகியவர்கள் நம்மாழ்வார்கள். இவர்கள் முத்தியடைந்த அன்று திறக்கப்பட்டதே வைகுந்த வாசலாகும். 'எமக்கு மட்டும் வைகுந்தம் திறந்தால் போதாது தங்கள் மீது பக்தி செலுத்தும் அனைத்து பக்தர்களுக்கெல்லாம் வைகுண்ட வாசல் திறக்கப்பட வேண்டும்' என ஒப்பில்லாத பெருமானிடம் விண்ணப்பிக்க ஒப்புதல் தந்திருக்கின்றான் அச்சுதன்.

முன்னொரு காலத்தில் முரன் எனும் அரக்கன் தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்தி வந்தான். அவர்கள் ஸ்ரீவிஷ்ணு பகவானிடம் சென்று முறையிட, பகவான் முரனுடன் போரிட்டு அவனது படைகளை அழித்தார். பின்னர் பத்ரிகாசிரமம் சென்று அறிதுயில் கொண்டார். அவரைத் தேடிச் சென்ற முரன், பள்ளிகொண்டிருந்த பெருமாளைக் கொல்ல வாளை ஓங்கியபோது, அவர் தன் உடலிலிருந்து ஒரு மோகினியைத் தோற்றுவித்தார்.

அவள் ஒரு ரீங்காரம் செய்ததில் முரன் எரிந்து சாம்பலானான். முரனை எரித்த மோகினிக்கு "ஏகாதசி" என்று பெயர் சூட்டிய திருமால், அன்றைய தினம் ஏகாதசி என வழங்கப்படும் என்றும், அன்று தன்னை வழிபடுவோர்க்கு வைகுந்தப்பதவி அளிப்பதாகவும் கூறி அருளினார். அந்த தினமே வைகுந்த ஏகாதசி என்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்வாறாக புராண வரலாறுகள் கூறுகின்றன.

"சிற்றம் சிறு காலே வந்துன்னைச் சேவித்துன் பொற்றாமரை அடியேபோற்றும்" கிரியேந்திய மாதவா! கமல நயனா!! தாமரை போன்ற உன் திருபாதங்களை வணங்குவதற்காக நாம் உன்னிடம் சரணாகதி அடைகின்றோம் கேசவா!!!

'எத்தனை பிறவி எடுத்தாலும் உன் தாள் போற்றும் வரம் தா' எனப் பிரார்த்திக்கின்றோம். இந்தப் பிரார்த்தனை ஏகாதசி விரதத்தால் பூர்த்தி செய்யப்படுகின்றது. பீஷ்மர் அம்புப் படுக்கையில் இருந்து ஏகாதசி நாளில் தான் விடுபட்டு மோட்சம் அடைகின்றார். எனவே வைகுந்த ஏகாதசி விரதம் இருந்த பலன் கிடைக்கும் என பரமபத சோபனம் விவரிக்கின்றது. ஆதிஷேசன் மீது அறிதுயிலும் அனந்தனின் திவ்விய மங்கள வடிவத்தை வைகுந்த சொர்க்க வாசல் சந்நதியில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்புரிவார். உள்ளத்தின் பக்தி உணர்வுகளையும், உடலின் ஆரோக்கியத்தையும் இணைப்பது விரதம். இதனால் உள்ளத் தூய்மை, உடலின் அகத்தூய்மை முதலிய பல நன்மைகள் உண்டாகின்றன. எனவே, இந்த மார்கழி மாதம் வைகுந்த ஏகாதசித் திருநாளில் விடியற்காலையில் திருக்கோயிலை அடைந்து, பரமபத வாசல் வழியே நமக்கு அருளும் அவனைச் சேவித்து பரமன் துதி பாடி நாமும் அந்த வைகுந்தம் அடையும் நற்பேற்றைப் பெறுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் தமிழ்

நீலா நகுலேசபிள்ளை

"உலகெ லாம்உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்".

சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்தைப் பாடுவதற்கு இறைவனால் "உலகெலாம்" என்று அசரீரி வாக்காக அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்ற இப்புராணம், "மன்றுளார் அடியாரவர் வான்புகழ் நின்றது எங்கும் நிலவி உலகெலாம்" என நிறைவு பெற்றது. உலகெலாம் என்ற சொல்லைப் புராணத்தின் தொடக்கத்திலும் நடுவிலும் இறுதியிலும் அமைத்து சிறப்பாகப் பாடிமுடித்தவர் சேக்கிழார் பெருமான். பெரிய புராணம் அடியார்களின் வரலாற்றைக் கூறும் ஒரு பெருங்காப்பியமாகும். சிவதொண்டின் பெருமையை இந்நூல் கூறுகிறது. உலகியல் வாழ்க்கை, சைவநெறி இரண்டும் கலக்கும் பான்மையை அடியார்களின் வாயிலாகச் சேக்கிழார் காட்டியுள்ளார்.

இரண்டே வார்த்தைகளில் தலைப்பு அமைந்துள்ள போதிலும் அதன் கனதி, செறிவு, விசாலம் மிகப் பாரியது. திருத்தொண்டர் புராணம் எனச் சேக்கிழாராலேயே பெயரிடப்பட்டது. அது மட்டுமல்ல "உலகெலாம்" என்று இறைவனாலே அடியெடுத்துக் கொடுக்க இத்திருத்தொண்டர் புராணத்தை அருளிய சேக்கிழாரே, விநாயகர் துதியில் "எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்" என தான் பாடப்போகும் திருத்தொண்டர் புராணம் மாக்கதை அதாவது பெருமையுடைய அடியார்களது வரலாறு எனவும் அடியார் மீதும், மக்கள் மீதும், உயிர்களின் மீதும் காட்டும் அன்பின் பெருமையையும், அடியார்களின் தொண்டின் மகிமையையும் விரித்துக்கூறியுள்ளமையை நாம் சிந்திக்க வேண்டும். அடியார்களின் வாழ்வின் உளவியல் நுட்பங்களையும், அறிவின் திறன்களையும், செயலாற்றல்களையும், சிவபரம்பொருளின் மீது கொண்ட சீரிய பக்தி வைராக்கியத்தையும் நுணுகி ஆராய்ந்து அருளியுள்ளார். எனவே 'சேக்கிழார் தமிழ்' ஒரு மாக்கதை என்பதை அவர் வாயிலாகவே நாம் அறிகிறோம்.

சைவசமயத்தின் உயிர்நாடியாக விளங்கும் திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளையும் பாடியவர்களை தேவாரமுதலிகள், மூவர் முதலிகள் எனப்போற்றப்பட்டனர். இவர்களுள் திருஞானசம்பந்தர் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சுந்தரர் எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர். திருஞானசம்பந்தருக்கு வயதால் மூத்தவர், சம காலத்தில் வாழ்ந்தவர் திருநாவுக்கரசர். இவர் ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஏழாம் நூற்றாண்டின் பெரும்பகுதி வரை வாழ்ந்தவராவார் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். 4286 பாடல்களை உடைய பெரிய புராணத்தில் 63 தனியடியார்கள் பற்றியும் 9 தொகையடியார்கள் பற்றியும் கூறியுள்ளார் சேக்கிழார். இதில் திருஞானசம்பந்தர் அந்த 63 அடியார்களுள் ஒருவர். ஆனாலும் திருஞானசம்பந்தருக்கு 1256 பாடல்களைச் சேக்கிழார் பாடியுள்ளார். திருஞான சம்பந்தர் தேவாரப் பதிகங்கள் கருத்துச் செறிவும், பக்திச் சுவையும், தத்துவ விளக்கமும், இறைவன் திருவருள் விளக்கமும், இயற்கை வருணனையும், இசைச்சிறப்பும் சந்தம் யாப்பு அணிநலங்களும் மிகுந்து விளங்கி தமிழை அணிசெய்வன. மூவர் முதலிகளுடைய தேவாரப் பதிகங்களிலே தோய்ந்து மூழ்கியவர் சேக்கிழார். திருஞானசம்பந்தர் சைவத்தை நிலைநிறுத்தி விபூதி, உருத்திராட்சம், ஆகிய சிவசின்னங்களை அணிவதன் பெருமையையும், அன்புடையவராகி திருவைந்தெழுத்தோதுவதுமே உண்மைச் சைவசமயமென்பதை விளக்கியவர். வாக்கிற்கு அரசரும், திருநாவலூரரும் மணிவாசகரும் இதனையே வலியுறுத்தி தத்தம் பதிகங்களில் பாடியுள்ளனர். இவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக சம்பந்தருக்கு முற்பட்ட காரைக்காலம்மையார் இதற்கு வித்திட்டவர் என்பதனையும் மனங் கொள்ள வேண்டும். சம்பந்தர் தாழ்வுற்று மறைவை நோக்கிச் சென்று கொண்டிருந்த தமிழப்பண்பாட்டையும், தமிழர் சமயத்தையும், தமிழ் மொழியையும் மீண்டும் தலைதூக்கச் செய்தவர். தனது பதிகங்களில் 'தமிழ் மாலை, சம்பந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுரைகள், தமிழாரம், கலிக்கோவையால் சந்தமே பாடவல்ல தமிழ் ஞானசம்பந்தன், உரைக்குள் தமிழ் ஞானசம்பந்தனொண் மாலை' எனப் பலவாறு தன்னையும் தமிழராகப் பதிந்தவர். இவர் பாடல்களில் மயங்கித் திளைத்த சேக்கிழார், திருத்தொண்டர் புராணத்தில் சம்பந்தருக்கு மூன்றில் ஒரு பகுதிப் பாடல்களைப் பாடி பெருமைப்படுத்தியுள்ளார். இது கருதியே "பிள்ளை பாதி புராணம் பாதி" எனவும் பெரியபுராணத்தை வர்ணிக்கப்படுவதும் உண்டு.

இந்தப் பெரிய புராணத்தை அதாவது 'சேக்கிழார் தமிழை' பாடவேண்டிய தேவை சேக்கிழாருக்கு ஏன் ஏற்பட்டது?

12ம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழாருக்கு முன்பாகவே 7 ம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தரும் நாவுக்கரசரும் நலிவுற்றிருந்த சைவத்தையும் தமிழையும் நிலைநிறுத்தியவர்கள். எனவே சைவத்தை நிலைநிறுத்த வேண்டிய தேவை சேக்கிழாருக்கு இருக்கவில்லை. சேக்கிழாருக்கு முற்பட்ட காலத்திலேயே திருமுறைகளை ஓதும் மரபு இடம் பெற்றுள்ளது. நம்பியாரூரரின் திருத்தொண்டத்தொகையில் இடம் பெற்ற அடியார் பலருக்கும் திருக்கோயில்களில் படிமங்கள் வைத்து வழிபடும் பழக்கம் இருந்துள்ளது என அ.ச. ஞானசம்பந்தர் கூறியுள்ளார். இடைக் காலத்தில் சோழர் ஈடுஇணையின்றிப் பெற்ற வெற்றிகளால் தமிழ் நாட்டில் பாலும் தேனும் பெருக்கெடுத்தோடிற்று. பசியும் பிணியும் பகையுமின்றி வசியும் வளனும் நிரம்பிய வாழ்க்கையை மக்கள் வாழ்ந்த காலம் அது. ஆயினும் எல்லையற்ற செல்வம் மக்களைக் குறிக்கோளற்ற வாழ்க்கை வாழுமாறு செய்துவிட்டது எனலாம். மக்கள் உண்மையான சமய வாழ்க்கையில் ஈடுபடாமல் போலியான மேலோட்டமான சமய வாழ்வில் ஈடுபடுகின்றனர் என்பதனை சேக்கிழார் உய்த்துணர்ந்துள்ளார் போலும்.

சங்ககால நூல்கள் சங்கம் மருவியகால நூல்கள் ஐம்பெருங்காப்பியங்கள் தோன்றியிருந்தகாலம். அக்கால மன்னர்களும் மக்களும் இலக்கிய ஆர்வத்துடன் இலக்கியத்தைப் படிப்பதில் ஈடுபாடுடையவர்களாக வாழ்ந்த காலம். சேக்கிழார் முதலமைச்சராக இருந்த மன்னன் அனபாயசோழனும் ஐம்பெருங் காப்பியங்களில் முதன்மையாகத்திகழும் சமணகாப்பியமாகிய "சீவகசிந்தாமணி"யைக் கற்றும் கேட்டும் பாராட்டி மகிழ்ந்து இன்புற்றுக்கொண்டிருந்தான். இதனைக் கண்ட சேக்கிழாரின் மனம் பதைபதைத்தது. துடிதுடித்தது. "இச் சமண காப்பியமாகிய சீவகசிந்தாமணி சைவராகிய நமக்கு இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தராது. ஆதலின் அதனைப் படிப்பது வீண்" என அரசனின் மனம் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் மிகவும் பவ்வியமாக எடுத்துரைத்தார். "அங்ஙனமாயின் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரக்கூடியதும் வீட்டின்பம் தரக்கூடியதுமான சைவ இலக்கியம் ஏதாயினும் உண்டோ? என மன்னவன் கேட்டான்.

அதற்குச் சேக்கிழார், தம்முடைய திருத்தொண்டர்களது அடிமைத்திறத்தை ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு சிவனாலேயே "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடி எடுத்துக் கொடுக்க, சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை எனும் பதினொரு பாடல்களைக் கொண்ட பதிகத்தையும், அத்திருத்தொண்டத்தொகைக்கு திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப் பிள்ளையார் பொருள் சொல்ல அவரிடத்தில் ஓதியுணர்ந்த நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியாகிய 89 கட்டளைக் கலித்துறை பாடல்களிலும் கூறப்பட்டுள்ள திருத்தொண்டர்களின் வரலாற்றினைத் தெளிவாகவும் இனிமையாகவும் பொருள் விரித்து உரைத்தார். இதனைக் கேட்டு அனபாய சோழ மகாராசாவும் "இந்தச் சரித்திரத்தை யாவருக்கும் தெளிவாய் விளங்கும் பொருட்டு, இலக்கண விதிப்படி அமைந்த பெருங்காப்பியமாக விரித்துச் செய்து தரும்படி கேட்டுக் கொண்டான்.

அனபாயசோழ மன்னனுடைய வேண்டுகோளின் பேரில் அவரிடமிருந்து எண்ணரிய திரவியங்களையும் அனுமதியையும் பெற்றுச் சிதம்பரம் சென்று சிவனை வேண்டி, சிவன் திருவருளினாலே 'உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்' என்ற அசரீரி வாக்குக் கேட்கப்பெற்றார். சேக்கிழார் தேவார முதலிகளை வழிபட்டு, விபூதி உருத்திராட்சங்களை விதிப்படி தரித்து ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து 'உலகெலாம்' எனத்தொடங்கி புராணம் பாடஆரம்பித்தார். சிலகாலத்திலே புராணத்தைப்பாடி முடித்து "திருத்தொண்டர் புராணம் எனப் பெயரும் சூட்டி இறைவனின் பீடத்திலே வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனபாய சோழனும் புராணம் முற்றுப்பெற்றமையை அறிந்து சேக்கிழாரைச் சந்திக்க விரும்பி சிதம்பரம் சென்றான். அங்கே அவரது சிவவேடப் பொலிவைக் கண்டு மனமகிழ்ந்து தலைமேற் கைகுவித்து அவரது திருவடிகளிலே விழுந்து வணங்கினான். சேக்கிழாரும் தில்லைவாழ் அந்தணர்களோடும் மற்றையோருடனும் இறைவனையும் மன்னனையும் விழுந்து வணங்கி எழுந்து தோத்திரம் பாடினார். அப்பொழுது,

"சோழனே, நாம் "உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்" என்று அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழான் நம் தொண்டர்களது அடிமைத் திறத்தை விரித்துப் பாடி முடித்தான். நீ அதைக் கேள்" என்று ஓர் அசரீரி வாக்கும் திருச்சிலம்பொலியும் கனகசபையிலே நின்ற அனைவரும் கேட்க எழுந்தன. இதனைக் கேட்ட மன்னன் மிக மகிழ்ந்து சேக்கிழார் வாயிலாகக் கேட்க விழைந்து நன்னாளைக் குறித்து மக்கள், அறிஞர் பெருமக்கள் அனைவரையும் தில்லையம்பதிக்கு வருமாறு அழைத்தான். இதனை சேக்கிழார் புராணம் பாடிய உமாபதிசிவாச்சாரியார்,

"தொண்டர் தொண்டுசெய் புராண காதைமதி சூடுநாதர் திருவருளினால்
விண்ட நீதிபுனை சேக்கி ழார்முனி விரித்துரைத்தகதை கேட்பதற்கு
அண்ட வாணர்அடியாரெலாங் கடுக வருக" என்றுதிசை தொறும்
எண்டயங்கரசன் ஏடெடுத் தெழுதி ஆளும் ஓலைகளும் ஏவினான். பாடல் 66

"வாழிதிருத் தொண்டர்புரா ணத்தை நீரேவாசித்துப் பொருள்அருளிச் செய்வீர்"என்று
சோழர்பெரு மான்முதலாம் அடிய ரெல்லாஞ் சொலக்கேட்டுக் குன்றைமுனி மன்றுளாடும்
தாழ்சடையான் அடிஎடுத்துத் தரத்தாஞ் செய்த சைவகதையினை விளங்க விரித்துச் சொல்லச்
சூழஇருந் தம்பலவர் அடியாரெல்லாம்" சுருதிமொழி இது" எனக்கை தொழுது கேட்டார். பாடல் 79

பெரிய புராணவிரிவுரை சேக்கிழாரால் சித்திரைத் திருவாதிரை நாள் தொடங்கி அடுத்த சித்திரைத் திங்கள் திருவாதிரை நாள் வரை நடந்தது. வந்திருந்து கேட்ட அனைவரும் அனபாயசோழமன்னனும் பெரிதும் மகிழ்ந்து வேதமொழி எனப்பாராட்டி திருத்தொண்டர் புராணம் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அனபாயசோழ மன்னனால் "தொண்டர்சீர் பரவுவார்" என்னும் திருநாமம் சேக்கிழாருக்கு வழங்கப்பட்டது. அருண்மொழித்தேவர் என்னும் இயற்பெயரையுடைய சேக்கிழாரின் தந்தையார் வெள்ளியன்கிரி முதலியார், தாயார் பெயர் அழகாம்பிகை, தம்பியார் பெயர் பாலறாவாயர். சேக்கிழாரின் சமய வாழ்க்கை ஈடுபாட்டின் பின்னர், அனபாய மன்னன் பாலறாவாயருக்கு "தொண்டைமான்" என்னும் நாமகரணத்தைச் சூட்டி தனது அமைச்சராக்கிக் கொண்டான்.

இதுவரை சேக்கிழார், திருத்தொண்டர் புராணத்தைப் பாடவேண்டியதன் அவசியத்தைப் பார்த்தோம். சேக்கிழாரின் தமிழுக்குள் புகுந்து ஊறினோமானால், தமிழ் என்னும் சொல்லைத் தம் செய்யுளில் அமைக்க வேண்டுமெனின், அதற்கு அடைஇல்லாமல் எழுதியதை நாம் காணமுடியாது. "செந்தமிழ், இன்றமிழ்,வண்டமிழ், தண்டமிழ், அருந்தமிழ், செழுந்தமிழ், தீந்தமிழ், உயர்தமிழ், கோதில்தமிழ், தேன் பொழியும் செந்தமிழ்" என்றெல்லாம் யாழினும் இனிதிசைப்பர். இனி தேவாரங்களைப் பாடினார் எனும் பொருளில் 'தமிழ் பாடியறைந்தார்', 'தமிழ் மாலைகள் சாற்றினார்' என்றே தமிழுக்கு அடைசேர்த்து மகிமைப் படுத்துவதில் அவரது தமிழ் பற்றுதலும் அவர் தமிழைப் போற்றும் பாங்கையும் நாம் உயத்துணர வேண்டியது அவசியமாகும்.

சுந்தரர் ஒரு அடியாருக்கு ஒரு வரியில் பெயரைக் கூறிச் சென்றுள்ளார். நம்பியாண்டார் நம்பி சுந்தரரை அப்படியே அடியொற்றி ஒவ்வொரு அடியாருக்கும் ஒவ்வொரு பாடலைப் பாடியுள்ளார். ஆனால் சேக்கிழாரோ சுந்தரரின் திருத்தொண்டத் தொகையை முதனூலாகக் கொண்டும் நம்பியாணடார் நம்பியின் நூலிலிருந்து சிறிது விலகி, மூவர் முதலிகளின் தேவாரங்களின் துணை கொண்டும், தாமே பல ஊர்களுக்கும் சென்று தேடல்களைச் செய்தும் பெரியபுராணத்தைப் பாடியுள்ளார். முதலமைச்சராக இருந்தமையால் பல ஊர்களுக்குச் செல்லவும் பல அறிஞர்களுடன் தொடர்புகொண்டு தேடல்களைச் செய்யவும் அவருக்கு வாய்ப்புகள் கிடைத்திருக்கலாம். சேக்கிழார் பெரியபுராணத்தை இரு காண்டங்களாகவும், பதின்மூன்று சருக்கங்களாகவும் வகுத்து, சுந்தரரின் ஒவ்வொரு பாடலின் முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியையே சருக்கத்தின் தலைப்பாக இட்டு அவர் கூறிய நாயன்மார்கள் ஒவ்வொருவருக்கும் அச் சருக்கத்தின் கீழ் புராணமாக விருத்தப்பாக்களால் பாடியுள்ளார். ஒவ்வொரு சருக்கத்தின் ஈற்றிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதியாக ஒவ்வொரு பாடலைப் பாடியுள்ளமை காப்பியத் தலைவனுக்குக் கொடுத்த சிறப்பிடம் எனவும், முதனூலைத் தந்த சுந்தரரை சேக்கிழார் வழிபட்டு அவரை நினைவு கூருவதாக சிந்திக்க இடமுண்டு. காப்பிய மரபுக்கேற்ப 'சருக்கம்' காண்டம் போலப் பெரிய பிரிவாகவும், 'புராணம்' படலம் போல உட்பிரிவுகளாகவும் அமைத்துள்ளமை அவதானிக்கத்தக்கது. சுந்தரர் காப்பியத் தலைவன் என்பதினாலோ, பெரியபுராணம் என்ற பெருங்காப்பியமான தேசிய இலக்கியம் கூறும் திருத்தொண்டர் வரலாற்றினை இவ்வுலகுக்கு அளிக்க அவதாரம் செய்ததினாலோ சுந்தரர் புகழை ஐந்து இடங்களில் கூறியுள்ளார். திருமலைச்சிறப்பு, தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரர் வரலாறு தொடங்கப் பெற்று, ஏயர்கோன் கலிக்காமர் நாயனார் புராணத்திலும், கழறிற்றிவார் புராணத்திலும் விரிவடைந்து வெள்ளானைச்சருக்கத்தில் சுந்தரர் கயிலையை அடைவதுடன் நிறைவெய்துகிறது.

பல்வேறு வாழ்க்கை முறைகளை மேற்கொண்டு தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்த நாயன்மார்களின் வரலாற்றைக் கூறிய சேக்கிழார் - அடியார்களின் வாழ்க்கையின் அடித்தளத்தில் நிற்பது தொண்டுள்ளமே என்பதனை விளக்குகிறார். எல்லா உயிர்களிலும் இறைவன் உறைகின்றான். இறைவன் மீதுள்ள அன்பை மட்டுமன்றி எல்லா உயிர்களின் மீதும் ஏன், பகைவன் மீதும் அன்பு செலுத்துவதையும், சிவசின்னங்களையே சிவனாகவே நோக்கும் பக்குவத்தையும் பல நாயன்மார்களின் வாழ்க்கையுடன் பிணைத்துக் கூறுகிறார். ஒரு சில உதாரணங்களை நோக்குவாம். அப்பருக்கு நஞ்சமுதாயது இதனைச் சேக்கிழார், "பசுபதியார் தம்முடைய அடியார்க்கு நஞ்சமுதம் ஆவதுதான் அற்புதமோ?" . இயற்பகை நாயனார் தன் மனைவியை வேதியராக வந்த சிவனுக்குக் கொடுத்த போது சேக்கிழார், "விதிமணக்குலமடந்தைஇன்று உனை இம் மெய்த்த வர்க்கு நான் கொடுத்தனன்" என்றும், அந்த அம்மையார் "மாதவன் சேவடி பணிந்து திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள்" என்றும் பாடியுள்ளார். இவ்விதம் பல் வேறு எடுத்துக்காட்டுகள் புராணம் எங்கும் நிறைந்துள்ளன.

இன்னும் சில பாடல்களை "சிவபெருமான் திருத்தொண்டர்களின் பெருமையைச் சுந்தரர்க்கு எடுத்துக் கூறி அவ்வடியார்களைச் சென்றடைவாய்" என்பதை சேக்கிழார் வர்ணிக்கிறார்.

"பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய்" என்று - 342

"சுந்தர மூர்த்திநாயனாரது திருஅவதாரமே அடியார்களாகியதிருத்தொண்டர்களை உலகு அறியச் செய்வதாம். இதனைச் சேக்கிழார்,

"நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகை முன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல் வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்" - 1270

காரைக்காலம்மையார் புராணத்தில் -- கணவனாகிய பரமதத்தன் தன் குடும்பத்துடன் வந்து புனிதவதியாரைவணங்கி இவர் மானுடம் இல்லைத் தெய்வம். ஆகையால் நான் வணங்கினேன், நீங்களும் வணங்குங்கள் என்று மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுமுகமாக, இதனைச் சேக்கிழார் பரமதத்தன் கூறுவதாகப் பாடுகிறார்.

"மற்று அவர் தம்மை நோக்கி மானுடம் இவர் தாம் அல்லர்
நற்பெருந் தெய்வம் ஆதல் நான் அறிந்து அகன்ற பின்பு
பெற்றஇம் மகவு தன்னைப் பேரிட்டேன் ஆதலாலே
பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின்" என்றான். – 1768

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்காலம்மையார் என்பு வடிவம் கேட்டுப் பெற்றுத் தலையால் நடந்து திருக்கயிலாயமலையைச் சென்றடையும் போது, அம்பிகையின் திருவுள்ளத்தில் அதிசயம் தோன்ற, அம்பிகை சிவனிடம் "எம்பெருமானே தலையால் நடந்து இக்கயிலை மலையின் மீது ஏறும் எலும்பு வடிவம் கொண்ட உடம்பின் அன்பு தான் என்னே?" என்று கேட்கிறார். அதற்கு ஈசன் தன் திருவாயால் கூறுமாற்றை சேக்கிழார்

"வரும்இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே! மற்றிப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்" என்று பின்றை
அருகுவந் தனைய நோக்கி "அம்மையே" என்னுஞ் செம்மை
ஒருமொழி உலகம் எல்லாம் உய்யவே அருளிச் செய்தார். - 1779

இங்கே சிவன், உமையே என அம்பிகையை அழைத்தார். ஆனால் எலும்புருவுடன் புனிதவதியார் இறைவனுக்கு அண்மையில் வர 'அம்மையே' என செம்மை திகழும் சொல்லால் அழைத்தமையை சேக்கிழார் வர்ணித்தமை அடியார்களின் அன்பும், பக்தி வைராக்கியமும் புலப்படுகின்றது. உமையம்மையாரை விட காரைக்காலம்மையாருக்கு சிவபெருமான் முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்றவாறு நோக்குக.

காப்பியத்தின் மையக்கருத்து நல்ல குறிக்கோளுடன் அமைதல் வேண்டும். உடலுக்கு உயிர் போல காப்பியத்தில் எங்கும் நிறைந்திருப்பது மையக்கருத்தாகும். எடுத்துக்காட்டாக "பிறனில் விளைவோர் கிளையொடும் கெடுப", என்பது, ராமாயணத்தினதும், "பொறையில் சிறந்த கவசமில்லை" என்பது மகாபாரதத்தினதும், "வாய்மையிற் கடியதோர் வாளியில்லை" என்பது அரிச்சந்திர புராணத்தின் மையக்கருத்துகள் ஆகும். இந்த வகையில் சேக்கிழாரின் காப்பியமான திருத்தொண்டர் புராணத்தின் மையக்கருத்துக்களாக தொண்டு செய்யும் நோக்கும், அடியார்கள் யாவரும் இறைவனை தூய்மையான பக்தியுடன் வழிபட்டு பிறப்பறுத்தலே தவிர வேறொன்றும் வேண்டாத மனவுறுதி அதாவது ஆன்மீக வீரமுமே பொதுப் பண்பு ஆகும். அடியார்களின் பக்தி வைராக்கியமும், ஆன்மீக வீரமுமே மையக்கருத்தாகும்.

தமிழ்க்காப்பியங்களை ஆழ்ந்து நோக்கினால் பல்வேறுவகையான யாப்புக்களில் பாடப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். தொடர்நிலைச் செய்யுட்களாகவும், நிலைமண்டில ஆசிரியப்பா, வெண்பா, விருத்தப்பா யாப்புகளில் பாடப்பட்டுள்ளமையைக் கற்றறிந்து கொள்ளமுடியும். இசையில் அலுப்பு ஏற்படாதிருக்கவும், கதையைச் சொல்லுவதற்கும் நிகழ்ச்சிகளை விரித்துக் கூறுவதற்கும் ஏற்ற இசைவான முறையில் பாடியுள்ளமை படிப்போர் மனதைக் கொள்ளைகொள்ளும் தன்மையது. இலக்கியங்க ளில் பல்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்த விருத்தப்பாவே ஏற்றது என்ற கொள்கை வளர்ந்ததால் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருத்தக்க தேவர் சிந்தாமணியை விருத்த யாப்பிலே பாடியுள்ளார். பின்னர் 12 ம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பரும், சேக்கிழாரும் தமது படைப்புக்களை அவரை அடியொற்றி விருத்த யாப்பிலே படைத்துள்ளனர். தம்முன்னோர்களின் படைப்புக்களை நன்கு கற்று அவற்றிலுள்ள கருத்துக்களையும், அரிய தொடர்களையும் அங்கங்கே பொன் போலப் பொதிந்து வைத்துள்ள னர். இதனையும் அவர்கள் வாயிலாகவும், காப்பியங்களைக் கற்பதன் மூலமாகவும் எம்மால் அறிந்து உணரமுடிகிறது. சைவ சித்தாந்த நூல்களின் தெளிவு திருமுறைக ளாகிய தோத்திரங்களை விளங்கிக் கொள்ள இலகுவாயிருக்கும், என்பதைப்போல சேக்கிழார் மொழியின் தெளிவும் தேவாரங்களைத் தெளிவு பெறச்செய்யும் என்பது திண்ணம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதமும் இன்தமிழ் மொழியும் நின்று நிலைக்குமா?

கனக மனோகரன்
துணை முதல்வர், கனடா இந்து மாமன்றம்

சைவ சமயிகளாகிய நாங்கள் திரிபுரம் எரித்த விரிசடையனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு தொழுபவர்கள். அடி, முடி அறியமுடியாத அவன் அடிகளில் விழுபவர்கள். ஆறு தலையில் உள்ளவனிடம் ஆறுதலை பெறுபவர்கள். ஆதியும் அந்தமும் இல்லாத அந்த பிறவா யாக்கைப் பெரியோனின் பெரும் புகழைச் சொல்பவர்கள். அவன் சமய நெறியில் செல்பவர்கள்.

### இருகண் அனையவை இணை பிரியாதவை

முக்கண்ணனைத் தொழும் சைவத் தமிழர்களுக்கு இரு அகக் கண்கள். பேசும் மொழியாம் தமிழ் ஒரு கண். பின்பற்றும் சமயமாம் சைவம் மறுகண். இரண்டு கண்கள் இரண்டு காட்சி காணமுடியுமா? கவியரசு திரையிசையில் எழுப்பிய வினா இது. இரு கண்கள் இரு காட்சிகளைப் பிரித்து பார்க்க முடியாதது போல் எம் இரு கண்களனைய செந்தமிழ் மொழியையும் சிவநெறியையும் பிரித்துப் பார்க்க இயலாது.

தமிழை சைவம் சால்புற வளர்த்தது. சைவமும் தமிழால் தகவுற வளர்ந்தது. இன்தமிழை சைவசமயம் இறைத் தமிழாக்கியதால் இறைமொழி என்ற அழைபேரும் அதற்கு உண்டு. தேவாரம் என்ற பாவரமும் அன்னைத் தமிழின் அழகிற்கு மேலும் அழகு சேர்த்தது. தமிழிற்கு முருகு சேர்ப்பதில் மூவர் தமிழுடன் முனிமொழியும் இணைந்து கொண்டிருக்கிறது. எழுது மறை களாகிய திருமுறைகளாலும் திருத்தமுற வளர்ந்த தமிழுக்கு திருநெறிய தமிழ் என்ற பேர் கூட உண்டு. தகைசான்ற தமிழ் வாழ்வு மதம் சார்ந்தது. எனவே தான் சேக்கிழார் பெருமான் ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ் என்றனர்.

### முரண்பாடுகள் கடந்த உடன்பாடுகள்

சைவம் காலம் கடந்தும் ஞாலம் அளந்தும் நிலை பெற்று வாழக் காரணங்கள் பல. எம் மதம் அறிவு பூர்வமானது (Rational); அறிவியல் பூர்வமானது (Scientific); நெகிழ்ச்சித் தன்மை நிறைந்தது (Adaptable); நடைமுறைக்கு உகந்தது (Practical); முற்போக்கானது (Progressive); தாராளவாத தன்மை உடையது (Liberal); தர்க்க நெறியைத் தன்னகத்தே கொண்டது ( Logical);

இந்து மதம் சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய ஆறு உட்பிரிகளை உடைத்து. அவற்றுள் முதன்மையிடம் பெற்றிருப்பது சைவம். ஆதியில் ஆதி சிவன் மட்டுமே சைவர்களின் ஏக தெய்வம்.

தேவாரங்கள் அனைத்தும் இந்த தேவாதி தேவனையே ஏற்றிப் போற்றின. மகாதேவனின் அடி தொழும் சைவர்களும் மாதவனைத் தொழும் வைஷ்ணவர்களும் முட்டி மோதிய காலம் ஒன்றிருந்தது. சாக்த மதத்தவர்களோ அன்னை சக்தியை மட்டும் ஆராதித்தார்கள். சக்தி இன்றி சிவம் இல்லை என்றே வாதிட்டார்கள். சிவம் இன்றி சக்தி இல்லை என்போரில் சினம் கொண்டார்கள். காணாபத்திய மதத்தினர் கணபதியை மாத்திரமே நித்தியம் தொழுதார்கள். கௌமார மதத்தினர் கௌமாரனாம் முருகன் சிவமைந்தன், மால் மருகன், உமைபாலன் பிள்ளையாரின் பின்னையான் என்ற உண்மைகளை ஒப்புக்காகக் கூட ஒப்புக்கொள்ள தயங்கினர். சௌர மதத்தினர் சூரிய நாமஸ்காரிகள். ஆகாய வீதியில் உலவி வரும் ஆதித்தனே அவர்தம் ஏக அன்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முரண்பாடுகள் கடக்க உடன்பாடுகள்

இன்றைய நடைமுறை உலகில் இந்து மதத்தையும் சைவ சமயத்தையும் இடைபிரிக்கும் எல்லைக்கோடு இல்லாது அழிந்த நிலை. இன்றைய இந்து ஆலயங்கள் பல்பொருள் அங்காடியை நிகர்த்தது. முகாநிதியை ஒத்தது. இன்றைய நிலையிலும் சைவர்கள் சிவ வழிபாட்டை மட்டுமே செய்யவேண்டும் என்ற பேதம் பேசுகின்ற பேதைகளும் உளர். **வாயுடையார்க் கெல்லாம் வார்த்தை தரும் வண்டமிழே! சேயுடையார் வீட்டில் செழித்து வரும் செந்தமிழே.** இவை கவியரசின் கவிதை வரிகள். இன்றைய நிலையில் கனடாவில் வதிகின்ற பல அடுத்த தலைமுறைத் தமிழர்களில் சிரசுகளில் தமிழ் நுழைகுதில்லை. கரங்களோ தமிழை எழுதுவதில்லை. காதுகளோ தமிழ்ச் சொற்களைக் கேட்டு கிரகிக்குதில்லை. கண்களோ தமிழ் எழுத்தை இனம் காண்பதில்லை. இந்த நிலையிலும் தனித்தமிழே பேசவேண்டும், எழுத வேண்டும் என்று வாதிடுகின்ற வரட்டுவாதிகளும் எம்மிடையே வாழத்தான் செய்கிறார்கள்.

வாதம் என்ற பேரில் வேண்டாத விதண்டா வாதத்திலும் தர்க்கம் என்ற பேரில் கூடாத குதர்க்கத்திலும் தொடர்ந்தும் நாம் ஈடுபடுவோமெனில் இந்த ஞாலத்தில், எதிர்காலத்தில் சிவன் மொழியும் பரனருள் நீறும் நிச்சயம் நின்றும் நீண்டும் நிலைக்கப் போவதில்லை. நாம் எதிர்கொள்ளும் சவால்களை எங்களால் சமாளிக்க இயலாதிருக்கும்! சவால்கள் பற்றி பின்னர் பார்ப்போம்.

### தென்மொழிகளில் தொன்மொழியும் ஏற்புடைய எம் நன்னெறியும்

அண்டங்களைக் கடந்து வாழும் எங்கள் ஈசன் இன்று கண்டங்களையும் கடந்து வாழ்வது கண்கூடு. ஈழ தேசத்தின் குணதிசையில் திருமலையில் உள்ள **இராவணன் வெட்டு** ஒரு சிவ வழிபாட்டுச் சின்னமே. அமெரிக்க மண்ணில் இருக்கின்ற **சிவதிட்டு** ஆங்கு சிவவழிபாடு முன்னாளில் இடம்பெற்றமைக்கு சீரிய சான்று. இந்து ஆலயக் கட்டிடக்கலை நுட்பங்களை எகிப்திய பிரமிட்டுகளில் கண்டு ஆய்வாளர்கள் பிரமித்திருக்கிறார்கள். 'ஹரப்பா' மட்பாண்டங்களிலும் கல்வெட்டுகளிலும் காட்சி தரும் மதுரை மீனாட்சி அம்மனின் மீன் நட்சத்திர சின்னங்கள் வியப்பை ஊட்டுகின்றன; கூட்டுகின்றன. கொடுங்கோலன் ஹிட்லர் கொண்டிருந்த Swastika சின்னங்கூட ஓர் இந்து மத வழிபாட்டுச் சின்னம் என்பது ஓர் உவர்ப்பானதும் உவப்பானதுமான உண்மை.

1992 இல் பிரித்தானியாவில் இயங்கும் பிரசித்தி பெற்ற B.B.C ஸ.தாபனம் வெளியிட்ட, மைக்கல் வூட் என்ற ஆராச்சியாளனால் வெளியிடப்பட்ட Legacy - A Search for the Origin of Civilization என்ற நூலில் அந்த அறிவியல் மேதை இன்றைய ஈரான் தேசத்திற்கு உட்பட்ட நிலப்பரப்பில் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் ஈழம் என்றொரு நாடு இருந்தது என்றும் அங்கு தமிழ் மொழி பேசப்பட்டது என்றும் குறிப்பிடுகின்றார். பேசப்பட்ட மொழி தமிழ் எனில் பின்பற்றப்பட்ட மதம் இந்து மதமாக இருந்திருக்கின்ற வாய்ப்புகள் இல்லையா?

மதம் சார்ந்த, மகிமை சேர்ந்த எங்கள் தமிழும், ஒண்தமிழை சார்ந்தே உய்கின்ற சைவமும் நெகிழ்ச்சித் தன்மைக்கு இடம் கொடுத்தே உயர்ச்சியையும் விரிந்த உலக வியாபகத்தையும் பெற்று நிலை பெற்றிருக்கின்றன. நெகிழ்ச்சித் தன்மை கொண்ட எங்கள் சமயத்தில் நாம் வழிபாட்டை வயிற்றில் பசி கொண்டும், வயிறார உண்டும், கண் விழித்தும், வழமை தவறாது துயின்றும், நின்றும் இருந்தும், கிடந்தும், தவன்றும், உருண்டும், நீரினில் அமிழ்ந்தும் செய்ய முடியும். **பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையினானே** என்றறைகிறது நன்னூல் எனும் தொன்நூல். **மாற்றமாம் வையகத்தே வெவ்வேறே வந்தறிவாம்** எனக் கூறி இக் கூற்றுக்கு ஒப்புறுதி சேர்க்கின்றது சிவபுராணம். எங்கள் சிவன் கூட **முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையனே பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப் பெற்றியனே** என்றறைகின்றது திருவெம்பாவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம் மாறக்
## கருத்தும் மாறணும்

கருத்துகளுக்காக காலங்கள் அல்ல, காலங்களுக்காக கருத்துக்கள். காலங்கள் கருத்துகட்கு கால்க் கட்டுகள் போடக்கூடாது. **காலம் மாறுது கருத்து மாறுது.** நாமும் மாறவேண்டும் நாடும் **மாறவேண்டும்.** - இது திரையிசை இலக்கியம்.. ஏற்றம் தரும் மாற்றங்களுக்கு நாம் இடம் தரவில்லையேல் சைவத்தமிழின் எதிர்காலம் ஏறுமாறான மாற்றத்தை - ஏமாற்றத்தை எதிர் கொள்ளலாம்.

எங்கள் தாய்மொழி தமிழ் அனைத்து மதங்களையும் அணைத்து - அரவணைத்து தன்னகத்தே வைத்திருக்கின்ற 'தாயிற் சிறந்த தயவான தத்துவம்'. தமிழில் சைவத்தின் ஏற்றத்தை இயம்ப இருப்பவை தேவார திருவாசகம் போல்வன. வைணவத்தின் பெருமையை பேச விஷ்ணுபுராணம், பிரபந்தங்கள். சமணத்தின் சால்புடைமையைச் சாற்ற சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களும், பௌத்தத்தின் பாங்கினைப் புகல மணிமேகலை அன்ன மணியான இலக்கியங்களும், இஸ்லாத்தின் நல் இயல்புகளை இயம்பிட சீறாப்புராணமும், இயேசு மதத்தின் சிறப்பினைச் செப்பிட தேம்பாவணியும் பிந்நாளில் இயேசு காவியம் என்பன போன்ற இறவா இலக்கியங்களும் இருக்கவே இருக்கின்றன.

மனிதனை மனிதனாக வாழவைக்கவே மதங்கள். அன்பைப் போதிப்பதையே அத்தனை - அனைத்து மதங்களுமே மையக்கோடாகக் கொண்டவை. **அன்பின் வழியது உயிர்நிலை** என்றறைகின்றது தெய்வத் தமிழ் மறையாம் திருக்குறள். **அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்** என்கின்ற அறிவியலாளர் திருமூலர். **கண்ணிலே அன்பிருந்தால் கல்லிலே தெய்வம்** வரும் - இது கவியரசின் கவிதை வரி.

ஆனால், இன்றோ தனி மனித வாழ்விலும் அன்பிற்கு தட்டுப்பாடு. இன்று மதங்களின் பேராலேயே கட்டுப்பாடற்ற கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், பொய்கள், புரட்டுகள் என்ற மாபாவங்கள் நடைபெறுவது அவற்றின் அன்றாட நிகழ்ச்சி நிரலில் இடம்பெறுகின்றன. இன்றைய கால கட்டத்தில் வானொலிகளும் தொலைக் காட்சிகளும் அடிக்கடி வாய்திறந்து தருகின்ற செய்திகளில் சில .......

ஒரு மனித வெடிகுண்டு வெடித்ததால் 160 பொதுமக்கள் உயிரிழப்பு.

பத்து வயதுப் பாலகன் மனித வெடி குண்டாக்கப்பட்டான்.

ஒரே நாளில் பெஷாவார் நகரில் 132 பள்ளிச் சிறார்கள் உட்பட 145 பொதுமக்கள் படுகொலை

தகாத உறவு கொண்ட பெண்ணின் தலை துண்டிப்பு.

(தலை எடுப்பவர்களால்) கடத்திச் செல்லப்பட்ட பள்ளி மாணவிகள் கற்பழிக்கப்பட்டார்கள். விபச்சார விடுதிகளுக்கு விற்கப்பட்டார்கள்.

அகிம்சையை போதிக்கும் மத குருவால் அடுத்த மதத்தவரின் ஆலயம் இடிக்கப்பட்டது.

பெண் பிள்ளைகளுக்கு பயிற்றிய காரணத்தால் ஆசிரியர்கள் சுடப்பட்டு மரணம்.

பெண்கள் பாடசாலைகள் வெடி குண்டுகளால் தகர்ப்பு.

வறிய நாட்டில் போலியோ தடுப்பு மருத்துவத்தில் ஈடுபட்ட வேற்று நாட்டுத் தூய தொண்டர்கள் கடத்தப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். அவர்களுக்கு பாதுகாப்பாகச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் கூட சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கிழக்கிலங்கையில் அகதிகள் புனர்வாழ்வில் ஈடுபட்ட கணக்காளர் பதினான்கு போராளிகளால் கற்பழிக்கப்பட்டு, கொல்லப்பட்டு புதைக்கப்பட்டார்.

தன் மரணசாசனத்தையே தீர்க்க தரிசனத்துடன் எழுதிவைத்த ஊடகவியலாளர் கடத்தப்பட்டார். உடலும் காணாமல் போயுள்ளது.

ஆழ் கடல் மீனினங்களையும் மனிதன் வகை, தொகையின்றி துவசம் செய்கின்றான்.

அடர்ந்த காட்டு விலங்கினங்களை கொன்று குவிக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்புகளுக்காக காண்டா மிருகங்கள் கொல்லப்படுகின்றன.

மனித விலங்குகளுக்கு பயந்து ஆபிரிக்கக் காட்டு யானைகள் பகலில் மட்டுமல்ல இரவிலும் நடுக்கத்தோடு பற்றைக் காட்டுக்குள் பதுங்கிக் கிடக்கின்றன.

கூண்டுக் கிளி ஒன்று பாவேந்தன் பாரதிதாசன் ஊடாக எழுப்பிய வினா **சிறையில் அடைந்து கிடப்பதற்கோ இறைவன் சிறகுகள் இரண்டை தந்து வைத்தான்?** இன்று ஆனை எழுப்பக்கூடிய அர்த்தமுள்ள வினா **எந்தன் உயிரை இழப்பதற்கோ இறைவன் தந்தம் இரண்டைத் தந்து வைத்தான்?**

பாபர் மசூதி எரிக்கப்பட்ட வேளையில் ரொறன்ரோவில் உள்ள ஹரிகிருஷ்ணா கோவில், ஜெரார்ட் வீதியில் India Centre இல் அன்று இயங்கிய திரைப்பட அரங்கம் உட்பட நான்கு இடங்களை ஒரே நாளில் தகர்க்கும் நோக்குடன் முஸ்லீம் பயங்கரவாதிகள் அமெரிக்க எல்லையை கடக்க முற்பட்டார்கள். பவலோவில் Peace Bridge இல் கடமை புரிந்த சுங்க அதிகாரிகள் அவர்களின் வாகனத்தில் தேடுதல் செய்கிறார்கள். இலக்கு வைக்கப்பட்ட நான்கு இடங்களைக் குறித்து தயாரிக்கப்பட்ட வரைபடத்தைக் கைப்பற்றிய அவர்கள் மேற்கொண்ட விசாரணைகள் காரணமாக அன்று அந்த பயங்கரவாதிகளின் திட்டம் தகர்ந்தது. இல்லையேல் இந்துக்கள் அடர்ந்திருக்கும் நிலையில் 4 கட்டிடங்கள் தகர்ந்திருக்கும். 300, 400 (பெரும்பான்மையாக) இந்துக்கள் கதை முடிந்திருக்கும். காக்கும் கடவுள் ஹரி கிருஷ்ணா எம்மை காத்தருளி இருக்க வேண்டும்.

### மனிதருக்கு பிடித்த மதமா?
### மதம் பிடித்த மனிதரா?

ஆயுதம் தாங்கிய பகைவனைக் கொல்வது யுத்த அதர்மம் ஆகிவிடாது. ஆயின், ஆயுதம் தரிக்காத அப்பாவியரை, எப்பாவமும் அறியாத பாலகரை, முதியோரினை, தாயர் தமை, கர்ப்பிணி மாதரை, அங்கவீனரை முள்ளி வாய்க்காலில் எரித்து, கரித்து, புதைத்த செயற்பாடுகள் மனு நீதிக்கோ மனித தர்மத்திற்கோ ஏற்புடையவை ஆகா!

மனிதனுக்கும் பிடித்த மதம் இருக்கலாம். இன்று மதம் பிடித்த மனிதர் தாம் நிறையவே இருக்கிறார்கள்.

குடிநீர் விடநீர் ஆவதால் யாழ்நகர் பாழ்நகராக மாறுகின்றது. பொறுப்பற்ற மனித செயற்பாடுகளால் ஓசோன் துவாரங்கள் வியாபகம் பெறுகின்றன.

**அமெரிக்கப் பாவிகளின் ஆயுதங்கள்**
**அடுத்திருக்கும் சீனாவின் ஆள்பலங்கள்**
**படை படையாய் பிணக்குவியல்**
**காட்டுதம்மா**
**உலகத்து பொதுச் சபையோ**
**தூங்குதம்மா?**

கண்ணதாசனின் ஏக்கம் மிகு, தாக்கம் உள இந்த வரிகளை எண்ணிப் பார்க்கிறேன். இன்றோ, அந்த உலகப் பொதுச்சபை பச்சைத் துரோகங்களுக்கும் படுகொலைகளுக்கும் துணை போகின்ற அளவிற்கு மேலும் தரம் தாழ்ந்து விட்டிருக்கின்றது.

கருத்தை கருத்தால் (கரத்தால் அல்ல) எதிர் கொள்ள வேண்டும். கருத்துக்கு மறுப்பு 'கழுத்தறுப்பு' ஆகிவிடல் ஆகாது. இந்தியத் தமிழகத்தில் இந்து மதத்திற்கு ஏற்படும் குந்தகங்கள் களையப்பட வேண்டும் என்று எழுதிய, பேசிய சமயப் பற்றாளர்களின் பட்டியலை சூசகமாக வெளியிட்டு அவர்கள் கொல்லப்படுவார்கள் என்ற குறிப்புடன் ஒரு அநாமதேய துண்டுப்பிரசுரம் வெளிவந்தது. பட்டியலில் இருந்தவர்களின் பட்டான உயிர்கள் அடுத்தடுத்து பலி கொள்ளப்பட தமிழகமே கிலி கொண்டது. கைதான இஸ்லாமிய தீவிரவாதிகள் இவை தங்கள் திட்டமிட்ட செயல்கள் என திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவில் யூதப் பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்படுகின்றன. பள்ளிக்கூடங்களுக்கு பாதுகாப்புகள் வழங்கப்படுகின்றது. கருணையற்ற பயங்கரவாதத்தின் நீண்ட கரங்கள் இன்று கனடியப் பாராளுமன்றம் வரை நீண்டு விட்டிருக்கின்றன.

அறிஞர் டால்ஸ்டாய் உருவாக்கிய ஒரு அறிஞன் பட்டப்பகலில் கை விளக்கோடு மனிதனைத் தெருத் தெருவாகத் தேடினான். நாமும் தேட வேண்டிய நிலைக்கு 'மனிதம்' மேலும் மலினப்பட்டு விட்டிருக்கின்றது. மளிகைக் கடைகளில் இடையிடையே மலிவு விலைப் பொருட்களின் பட்டியல் பார்வைக்கு வைக்கப்படும். இன்றைய நிலையில் அன்றாடம் மலிவு விலையில் விற்பனையாகும் பண்டங்கள் மனித முண்டங்கள் தாம்.!

மனிதனை மனிதனாக முன்னிலைப் படுத்த வேண்டிய - அவனை விலங்கிலிருந்து அந்நியப்படுத்த வேண்டிய மதங்கள் தோற்றுக் கொண்டிருக்கின்றனவா என்ற கேள்வி பிறக்கிறது இன்று. இல்லை, இல்லவே இல்லை என்ற பதில் கிடைப்பது என்று?

**அமுதம் எமது மொழி**
**அன்பே எமது வழி**

கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்களின் கவிமொழி, கனிமொழி கூட இதுவாகும். வலிந்து எதிர்வரும் வன்முறைகட்கும் முகம் கொடுத்து எங்கள் சைவத்தை உய்ய வைக்கும் காலகட்டத்தில் நாம் வாழ்கின்றோம்.

**மரம் கொத்திகள் அல்ல,**
**மதம் கொத்திகள்!**

மாற்றார் மனங்களை மாற்றுவதும், அவர்கள் மதங்களை மாற்றுவதும் எம் மதத்திற்கு சம்மதம் இல்லாத செயற்பாடுகள் ஆகும். ஆனால் சீருடை அணிந்து ஊதியம் பெற்றுக் கொண்டு ஊழியம் புரிபவர்கள் இந்துக்களை குறிவைத்து அவர்களை மதம் மாற்றுவதில் கரிசனை காட்டுகிறார்கள். கருத்து சுதந்திரம் மிகையாக உள்ள கனடிய மண்ணில் மதப் பிரசாரம் ஓர் அபசாரம் ஆகிவிடாது. ஆனால், எம்மவர்களை நிர்ப்பந்திப்பதும் அவர்களின் இல்லாமை, அறியாமையைப் பயன்படுத்துவதும், ஆசை காட்டுவதும் அங்கீகரிக்கக் கூடிய செயற்பாடுகள் ஆகா. குடும்பப் பிரச்சினையைப் பயன்படுத்தி மதம் மாற்றுநர்கள் இம்மண்ணில் குலைத்த குடும்பங்களின் பட்டியல் மிக நீண்டது. தொழில் ரீதியாக சில குடும்பச் சட்ட வழக்குகளில் யானும் சம்பந்தப்பட்டிருக்கிறேன். இம் மண்ணில் 'அரசனை நம்பி புருசனை இழந்தவர் போல்' அவல நிலையில் இருக்கும் அபலைகள் தொகை அனந்தம்!

ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் இருவர் வந்தார்கள். அன்போடு பேசி அவர்களை நான் வழியனுப்பினேன். நான் அன்பு நெறியை வாழ்வாங்கு வாழும் வழியாகக் கொண்ட இந்து. இல்லையா? அவர்கள் அடுத்த கதவைத் தட்டினார்கள். அதில் தவறில்லையே! வந்தவர்களை இனம் கண்டதும் அந்த வீட்டு அப்கானிஸ்தானிய இளம் பெண்ணின் வார்த்தைகளில் நெருப்பு. கையினில் அவளது ஒரு செருப்பு. அவளது அரைகுறை ஆங்கில அருச்சனைக்கு பயந்த இருவரும் வேகமாக அவ்விடத்தை விட்டகன்றார்கள்.

மரங்கொத்திகள் தேக்கு மரங்களைத் தேடிப் போவதில்லை, கொத்துவதற்கு. சோத்தி மரங்களையே அவை கொத்துவது வழக்கம். இந்துகளாகிய நாம் தாம் மதங்கொத்திகட்கு இலக்காகின்ற இலகுவான சோத்தி மரங்கள்!

ஒரு புறம் வன்முறை புரியுநர் மறுபுறம் வற்புறுத்தினர். **ஒரு புறம் நாகம் ஒரு புறம் வேடன் இரண்டுக்கும் நடுவில் அழகிய கலைமான்** (இது சினிமா பாவரிகள்) என்ற நிலையில் இந்துக்கள் நாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிசிவன் மதம்
## சாசுவதம் பெறுமா?

இலங்கையில் ஆளும் இனம் பௌத்தத்தை அரச மதமாக்கி அழகு பார்க்கிறது. அந்த இனம் ஒரு சிவாச்சாரியரை உயிருடன் தீயில் பொசுக்கியது இன்று நேற்றல்ல, 1958ம் ஆண்டு தமிழ் விரோத கலவரத்தில். இதுகாறும் இடிக்கப்பட்ட இந்துக் கோயில்களின் எண்ணிக்கை சில ஆயிரங்கள். முகமதியரின் படையெடுப்பிற்கும் இந்திய இந்துக்கள் முகம் கொடுத்துள்ளார்கள்.

ஐரோப்பியர்கள் எம் மதத்திற்கு இழைத்த கொடுமைகள் கூட கொஞ்ச நஞ்சமல்ல. அவர்கள் தமிழ் மொழியைவிட சைவ மதத்தில்த்தான் கூடிய காழ்ப்பையும் வெறுப்பையும் காட்டினார்கள். ஏழு தமிழிலக்கிய வரலாற்றுக் காலங்களில் ஒன்றான ஐரோப்பியர் காலத்தின் கடைக் கூறில் நல்லை நகர் நாவலரால் சோர்வுற்ற சொல்லு தமிழும் சுருதியும் புத்துயிரை - புனர்வாழ்வைப் பெற்றன. நாவலர் பூத்து 41 ஆண்டுகளின் பின்னர் அவதரித்த சுவாமி விவேகானந்தரால் இந்து மதப் பெருமைதனை இந்த ஞாலமே அறிந்தது, வியந்தது. இந்து மதம் பற்றி பரவலாகப் பேசப்படவும் பற்பலரால் அது பின்பற்றப்படவும் அமெரிக்க நாட்டில் சிக்காக்கோ மாநகரில் சர்வமத பாராளுமன்றத்தில் இன்னவர் அடுத்தடுத்து ஆற்றிய ஆறு சொற்பொழிவுகள் காத்திரமான காரணங்களாயின.

உலகளாவிய வகையில் சைவம் வாழ்வும் வளமும் வழிபாடும் கொண்டிருக்க வகை செய்யும் உன்னத நோக்குடன் உருப்பெற்ற ஓர் உயர் ஸ்தாபனம் உலக சைவப் பேரவை. அதன் 7வது உலக சைவ மாநாட்டை எங்கள் இந்து மாமன்றம் பொறுப்பேற்று கனடாவில் இயங்கும் அனைத்து இந்து மத அமைப்புக்களையும் அணைத்து - இணைத்து 30-07, 31-07, 01-08-1999 ஆகிய மூன்று தினங்களில் அதி விமரிசையாக நடத்தியிருந்தது. பல நாடுகளிலிருந்தும் வந்திருந்த ஆதீனத் தலைவர்கள், அறிவாளர்கள், அறவாணர்கள், அபிமானிகள் பலரும் இதில் பங்கெடுத்தனர். அன்றைய ரொறன்ரோ மாநகர முதல்வர் மெல் லாஸ்ட்மன் அவர்கள் கனடிய கொடியையும் அடுத்து எங்கள் சமயக்கொடியான நந்திக்கொடியை ஏற்றி எங்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத்து எமக்கு மகிமை சேர்த்திருந்தார். அந்த விழாவை ஒட்டி புலவர் வி. வ. நம்பி அவர்கள் வெளியிட்ட சிறப்பு மலரையும் 'சிவஞானம்' என்ற துணை மலரையும் மீளவும் புரட்டிப் பார்த்தேன். சிறப்பு மலரின் துணைத் தலைவர் என்ற முறையில் எனக்குத் தரப்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்தி **மனிதம் நிலைக்க வேண்டின் மதம் செழிக்க வேண்டும்** என்ற மகுடத்தில் ஒரு கட்டுரையையை தீட்டியிருந்தேன். பதினைந்து ஆண்டுகளில் மனிதத்தை சில மதங்களே சிதைக்கின்ற அவல நிலையை அவதானிக்க முடிகின்றது. மறு மலரில் இந்து மாமன்ற பெற்றோர் ஆசிரியர் சங்க சம்மேளனத் தலைவர் என்ற வகையில் வரைந்த கட்டுரைக்கு நான் கொடுத்த தலைப்பு **ஆதிசிவன் மதம் சாசுவதம் பெறும்.** அந்த நம்பிக்கையை இன்றும், இன்னும் நான் இழந்தவன் அல்ல.

**மேன்மை கொள் சைவம் மேதினில் செழிக்கட்டும்!**

**தேன் அனைய தமிழ் தேசமெலாம் ஒலிக்கட்டும்!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்காப்பியர் காலச் சமயமும் அதன் படிமுறை வளர்ச்சியும்

செல்வநாயகி ஸ்ரீதாஸ்
விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கனடா.

சமயம், சங்க காலத்தின் பிற்பகுதியில் தான், சமூக வாழ்க்கையின் ஒரு அங்கமாக இடம் பெற ஆரம்பித்தது. பின், பல்லவர் காலத்தில் சமயம் சமூகத்தின் இன்றியமையாத பகுதியாக ஆகிவிட்டது. சங்க காலத்தில் அகமும் புறமுமே வாழ்க்கையின் அடிநாதமாக இருந்து வந்தது. அக்காலத்தில் சமயத்துக்கு அடிப்படையான கோட்பாடுகள் இருந்தன, ஆனால் அவை யாவும் சமயம் உருவாவதற்கான தொடக்க நிலை என்றே கொள்ளலாம். சமயத்தை முன்நிறுத்திப் போருக்குச் செல்லுதல் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளைத் தொடக்கி வைக்கும் வழக்கத்தை வடநாட்டிலிருந்து வந்த ஆரியரே முன்வைத்தார்கள். படிப்படியாக மன்னர்கள், தமது போர் வெற்றிக்கு அடையாளமாக, யாகம் முதலிய சடங்குகளில் ஈடுபடுத்தப்பட்டனர். மன்னர், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போன்ற பெயர்களால் தம்மை யாகத்துடன் தொடர்புபடுத்திக் கொண்டதன் பலனாக, யாகம் சமயத்திலும் சமூகத்திலும் ஓர் அங்கமாகியது.

சங்ககாலத்தில் முல்லைக்கு மாயோனும், குறிஞ்சிக்குச் சேயோனும், மருதத்திற்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும் என்று திணை நிலத் தெய்வங்களாக நாலவகை நிலங்களிலும் வழிபடப்பட்டிருக்கிறார்கள் என்று தொல்காப்பியம் கூறுகிறது. திணைக்குரிய தெய்வங்கள் தவிரக் கொற்றவை தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களும் தெய்வமாகப் வழிபடப்பட்டிருக்கிறாள்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே." – தொல்காப்பியம், அகத்திணையியல் 5.

சமயம் என்று ஒன்று சங்ககாலத்தில் இருந்ததா? அப்படி ஒன்று இருந்திருக்குமானால், சங்ககாலத்துச் சமயம் எது? சமயக் கருத்துக்களைச் சங்க இலக்கியங்கள் எவ்வளவுக்கு எடுத்து வந்திருக்கின்றன? சமயம் என்றதும், அது எந்தச் சமயமாக இருந்தாலும், எமது நினைவுக்கு வருவது, கடவுள். கடவுள் என்றால் என்ன? கடவுள் என்று ஒருவர், நமது அறிவுக்குப் புலனாகும் காலத்தில், தமிழ் நாட்டில் தமிழர்களால் வழிபடப்பட்டவராக இருந்திருக்கிறாரா இல்லையா என்பதெல்லாம் வாதங்கள், காரண காரியங்களை முன்வைக்கும் வாதங்கள்.

சமயச் சார்பற்ற இலக்கியம் சங்க காலத்திற்கே உரியதாக இருந்திருக்கிறது. சங்ககாலத்தில் காதலும் வீரமும் பெற்ற இடத்தைச் சங்ககாலப் பிற்பகுதியில் சமயம் சிறிது சிறிதாக பெறத் தொடங்கியது. இத்தகைய ஒரு காலகட்டத்தில் தான் பரிபாடல் பாடப்பட்டிருக்கவேண்டும். இதனை, 'மரபு மாற்றம்' என்று நாம் கூறுகிறோம். ஆனால் அது மரபின் தொடர்ச்சியையே குறித்து நிற்கிறது. சங்க காலத்தில் காதலைப் பாடக் கையாண்ட அகத்திணை மரபு சங்ககாலப் பிற்பகுதியில் மாறத் தொடங்கிப் பல்லவர் காலத்தில் பக்தியைப் புலப்படுத்தக் கையாளப்பட்டது.

சமயம் என்பதும் கடவுள் என்பதும் மனிதனது நம்பிக்கையே. கடவுள், மனிதனது நம்பிக்கையில், மனிதனால் உருவாக்கப்பட்டவன் என்பதை அறிவியல் உறுதி செய்கிறது. சமயம் → கடவுள் → வழிபாடு → சடங்குகள் என்று இந்தப் படிமுறையில் கடவுள் பற்றிய நம்பிக்கை வளர்ந்து வந்திருக்கிறது. சமயம் கடவுளை அடியாகக் கொண்டது, கடவுளை முன்னிறுத்தி வழிபாட்டு முறைகளும், அதனையொட்டிச் சடங்குகளும் வளர்ந்ததால் சமயம் வளர்ந்தது. கடவுளை ஒப்புக் கொண்டு, கடவுளை வழிபடும் வழிபாட்டு முறைகளை அறிந்து அதன்படி ஒழுகுவது சமயம்.

கடவுளைக் கட + உள் எனப் பிரிக்கலாம். கட என்றால் கடந்து நிற்பது, இடம், காலம், அறிவு முதலிய கட்டுப்பாடுகளைக் கடந்து நிற்பவன் கடவுள். மேலே கூறப்பட்ட திணைக்குரி தெய்வங்கள் தம் எல்லைகளைக் கடந்து சென்றிருக்கிறார்களா? எல்லைகளைக் கடந்த கடவுள் பற்றிய கருத்துப் பழங்காலத்தில் இருந்ததா? இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்காப்பியர் கடவுள் என்ற சொல்லைக் 'கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' என்று புறத்திணையியலில் (27) கூறியிருக்கிறார்.

கடவுள் என்ற சொல், பரவலாக அனைத்துச் சங்க இலக்கியங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. காடாயிருந்த இடங்களெல்லாம் கடவுள் உறையும் கோயில்களாயின என்று பதிற்றுப்பத்தும் (13:20). 'புற்றுடைச் சுவர புதல்இவர் பொதியில், கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து' என்று அகநானூறும் (307: 11-12), என்று இவ்வாறு சங்க இலக்கியங்கள் கடவுள் என்னும் சொல்லைப் பொதுப்படத் தெய்வம் என்னும் பொருளில் கையாண்டிருக்கின்றன.

இந்தக் கடவுளுக்குத் தொல்காப்பியர் பெயர் கொடுக்கவில்லை, திணைக்குரிய தெய்வங்களுக்கு மேலாக எல்லாவற்றையும் கடந்ததாக, முழுமுதலாக இருக்கின்ற ஒன்றைக் கடவுள் என்கிறார். இந்த முழுமுதலை, சிறந்தது என்ற சொல்லாலும் குறிக்கிறார்.

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே." – கற்பியல் 51.

எல்லாவகையாலும் சிறந்தது, முதியது, முழுமுதல் என்று பொருள்படும். சிறந்த அந்த ஒன்றை வழிபடுவது தான் இதுவரை வாழ்ந்ததன் பயன் என்கிறது இந்நூற்பா. கடவுள் சிறந்தது என்னும் தொடர்களால் திணைக்குரித் தெய்வங்களைத் தாண்டி முழுமுதற் கடவுள் பற்றிய சிந்தனை தொல்காப்பியர் காலத்தில் இருந்திருக்கிறது.

சைவம், சைவசமயம், சைவநெறி என்பவை யாவும் ஒன்றையே குறிக்கும். இவை யாவும் சிவனோடு தொடர்புடையது. சிவனுடைய தொடர்புடையது. சிவன் என்னும் சொல் சங்க இலக்கியத்தில் எங்கும் கையாளப்படவில்லை. முதன்முதலாக மணிமேகலையில் தான் சிவன் பற்றிக் கூறப்படுகிறது.

நமக்கு மிக மிகப் பழக்கமான ஒன்றைப் பற்றிப் பேசும்போது அதனோடு தொடர்புடைய ஒன்றன் தன்மையைக் குறிப்பிட்டால் போதும் அதனை அடையாளம் காண்பதற்கு. சிவனைப் பற்றிக் கூறும் இடங்களில் எல்லாம் சிவன் என்பதற்குப் பதிலாக அவன் இயல்புகள் தான் கூறப்பட்டிருக்கின்றன.

"பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே." – புறநானூறு 6: 17-18.

இப்பாடல், 'முனிவர் வணங்கும் முக்கட் செல்வர் நகர்வலம் செய்யும் ஒரேயொரு வேளையில் மட்டும் நின் குடை தாழட்டும்' என்று பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்குக் காரிக்கிழார் அறிவுரை கூறுவதாக அமைகிறது. இங்கு முக்கட் செல்வர் என்னும் சொல் முழுமுதற் கடவுளாகிய சிவனைக் குறிப்பதாக அமைகிறது. இங்கு சிவன் என்னும் சொல்லால் குறிப்பிடப்படவில்லை. ஆனால், சிவனுக்குரிய முக்கண் பற்றிக் குறிப்பிடப்படுவதால் இது சிவனையே குறிக்கிறது என்பதும், மக்கள் மத்தியில் சிவன், சிவனது தோற்றம் பற்றிய அறிவு பரவலாக இருந்திருக்கிறது என்பதும் தெளிவு.

'ஆலமர் கடவுளன்னநின் செல்வம்' என்று ஒரு தொடர் புறநானூற்றில் (198: 9) வருகிறது. சிவன் ஆலகால விடமுண்ட கதையைக் குறிகும், மறுமிடற்று அண்ணல், கறைமிடற்று அண்ணல், நீலமணிமிடற்று அண்ணல் என்னும் சொற்றொடர்களும் புறநானூற்றில் பேசப்படுகிறன. மக்களால் அதிகம் அறியப் பட்டமையாலேயே உவமையாக இத் தொடர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. 'நீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே.' (புறநானூறு 91: 6-7) என்று அதியமானை ஔவையார் வாழ்த்தியிருக்கிறார். இங்கு, சிவன் என்னும் பெயரோ குறிப்போ இல்லை. எனவே, சிவன் என்னும் பெயரால் குறிப்பிடப்படாவிட்டாலும், சங்ககால மக்களால் சிவன் மிகவும் அறியப்பட்ட தெய்வமாக இருந்திருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

புறநானூற்று 56 ஆம் பாடலில் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர், எரிமருள் அவிர்சடை மணிமிடற்றோனாகிய சிவனையும் அடர்வெந் நாஞ்சில் பனைக்கொடியோனாகிய பலராமனையும் விண்ணுயர் கருடக் கொடியுடைய திருமாலையும் மாறா வென்றிச் சேயோனையும் அவரவர் அடைகளால் குறிப்பிட்டிருக்கிறார். பாடல் வரிகள் வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏற்றுவல னுயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்
கடல்வளர் புரிவளை புரையுமேனி
அடர்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்
மணிமயி லுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி ஒண்செய் யோனுமென" – புறநானூறு 56: 1-8

'முதுமுதல்வன்' என்னும் சொல் புறநானூற்றில் வருகிறது. சிவன் முழுமுதற் கடவுளாகக் கருதப்பட்டான் என்பதற்கு, மதுரைக்காஞ்சியில் (455 ஆம் அடி) 'மழுவாள் நெடியோன் முதல்வனாக' என்று ஒரு அடி வருகிறது. இதனால் எல்லாம் சிவன் முழுமுதற் கடவுளாகக் ஏற்றுக் கொள்ளப்பட்டான் என்று அறிகிறோம். சிலப்பதிகாரம் 'பிறவாயாக்கைப் பெரியோன்' என்றும், 'நுதல்விழி நாட்டத்து இறையோன்' என்று மணிமேகலையும் கூறுகிறது. இவற்றை எல்லாம் பார்க்கும் பொழுது சங்க இலக்கிய காலத்தில் சிவன் கோயில்கள் புகார், காஞ்சி, மதுரை ஆகிய நகர்களில் இருந்தன என்று தெரிகிறது. சிவபெருமானடைய இயல்புகளாக, "தொடங்கற்கட் தோன்றிய முதியவன் முதலா' என்னும் கலித்தொகைப் (2) பாடலில் இராவணன் கயிலையைப் பெயர்த்த போது சிவன் தனது பெருவிரலால் அழுத்தி அவனை நிலைகுலையச் செய்த கதை கூறப்படுகிறது. ஆக, சிவன் பற்றிய கதைகளை மக்கள் அறிந்திருந்தனர், சிவன் பற்றிய புரிதல் மக்கள் மத்தியில் பரவலாக இருந்திருக்கிறது.

முழுமுதற் கடவுள் என்ற ஒரு கோட்பாடு: முழுமுதற் கடவுள் சிவன் என்ற எண்ணம், சிவனை வழிபடவேண்டும் என்ற எழுச்சி, சிவனுக்குக் கோவில்கள் கட்டவேண்டும் என்ற எண்ணம், அதனால் கோவில்கள் கட்டப்பட்டமை, மக்கள் கோவிலுக்குச் சென்று வழிபட்டமை இவை அனைத்தையும் சங்க இலக்கியங்கள் மூலமும் பின்வந்த இலக்கியங்கள் மூலமும் அறிகிறோம். ஆக, சிவவழிபாடு என்பது தமிழ் நாட்டில் மிகத் தொன்மையானது.[23] சங்கமருவிய காலத்து இலக்கியங்களும் இதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

சங்க காலத் தமிழர், இவ்வுலக இன்பம் கருதியே கடவுளை வழிபட்டனர். கடவுளருக்கு உருவம் அமைத்ததும், விழா எடுத்ததும், வேண்டுதல் செய்ததும், யாவுமே இம்மை இன்பம் வேண்டிய செயலாகவே காணப்படுகிறது. மறு பிறவி எண்ணத்துடன் சங்கத் தமிழர் கடவுளரை வழிபட்டதற்கான சான்று காணப்படவில்லை. சங்க காலப் பிற்பகுதியில் பிற மதக் கொள்கைகளும் பிற மத ஆதிக்கமும் ஏற்பட்டதன் பின்னரே, தமிழர், மறுமை இன்பம் வேண்டிக் கடவுளை வழிபடத் தொடங்கினார்கள் எனலாம். சங்கத் தமிழர் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்னும் நோக்கில் வாழ்ந்தவர்கள்.

கி. பி. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து 6 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதி தமிழர் வரலாற்றில் இருண்ட காலமாகும். இந்தக் காலகட்டத்தில் மக்கள் பௌத்தம், சமணம் ஆகிய புதிய மதங்களின் கொள்கைகளால் கவரப்பட்டார்கள், மதமாற்றம் விரைவாக நடந்தது. மக்கள் மதமாற்றத்திற்கு, அக் காலத்தில், இம் மதங்களுக்கு அரசர்களிடையே இருந்த செல்வாக்கும் பிறிதொரு காரணம். தமிழரது மொழி, இனம், பண்பாடு பெரிதும் பாதிக்கப் பட்டது. தமிழரின் பாரம்பரிய கோவில்கள் பராமரிப்பாரின்றிப் போயின. வழிபாட்டு முறைகளும் அற்றுப் போயின.

இப்படியானதொரு நாட்டுச் சூழலில், கி. பி. 6 ஆம் நூற்றாண்டளவில் சமயகுரவர்களும் ஆழ்வார்களும் தோன்றித் தமிழ் நாட்டில் அழியும் நிலையில் ஊசலாடிக் கொண்டிருந்த மதஉணர்ச்சியைத் தட்டி எழுப்பினார்கள். இதனைப் பக்தி இயக்கம் என்றும் சொல்வார்கள். அழிந்து போகும் நிலையில் இருந்த கோவில்கள் தோறும் அப்பரும் சம்பந்தரும் சென்று பதிகங்கள் பாடிச் சிவ வழிபாட்டிற்குப் புனர் வாழ்வு கொடுத்தனர், கவனிப்பாரற்றுக் காடு மண்டிக் கிடந்த சைவக் கோயில் பிரகாரங்களை அப்பர் உழவாரத் தொண்டு செய்வதன் மூலம் மக்கள் நடமாட்டத்திற்குரியவையாக்கினார். இது மக்கள் இயக்கம் ஆக்கப்பட்டது. கோவில்கள் மீண்டும் மக்கள் சென்று வழிபடுவதற்கு வாய்ப்பான தலங்களாக மாற்றி அமைக்கப்பட்டன. அவர்களைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் பக்தி இயக்கம் மிகப் பெரிய அளவில் வளர்ந்தது. குறிப்பாகச் சொல்வதாக இருந்தால் கவனிப்பாரற்று மூடிக்கிடந்த தலங்கள் எல்லாம் பாடல் பெற்று அடியார்கள் தினமும் வழிபடுவதற்கு வாய்ப்பாகக் அமைக்கப்பட்டன.

அப்பரும் சம்பந்தரும் சுந்தரரும் பக்தி இயக்கத்திற்குத் தலைமை தாங்கி நாடு முழுவதும் சமய எழுச்சியை உண்டாக்கினார்கள்.

[23] சிவலிங்கையா, பேரா. தி. ப., இணையத்தளக் கல்வி, தமிழ் இணையக் கல்விக் கழகம், www.tamilvu.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பழைய கோயில்கள் திருத்தி அமைக்கப்பட்டன.
- மகேந்திரவர்மன் போன்ற பல்லவ மன்னர்கள் புதிய கோவில்களைக் கட்டி எழுப்பினார்கள்.
- மக்கள் மனம் கொள்ளும் வகையில் வழிபாட்டு முறைகள் மாற்றியமைக்கப்பட்டன, உருவாகின.
- அடியார்கள் கோவில்களில் தொண்டாற்றத் தொடங்கினார்கள். கோவிலைப் பெருக்கிச் சுத்தம் செய்தல், மாலைகட்டுதல், நந்தவனம் அமைத்தல் முதலாய கோவில் தொண்டுகளில் மக்கள் ஈடுபட்டனர்.
- கோவில்களில் தேவாரப் பதிகங்களைப் பண்ணோடு பாடினார்கள். மக்கள் மனம் கவரும்படியான இறைவனைப் பாடி வழிபடும் வழக்கம் தொடங்கியது. அப்பரும் சம்பந்தரும் அடியார்களுடன் கோவில்கள் தோறும் சென்று பதிகங்களைப் பாடினார்கள். இதனால் தலங்கள், பாடல் பெற்ற தலங்கள் சிறப்புப் பெற்றன. தலங்களுக்கு ஓர் அடையாளம் உண்டாயிற்று. அவர்கள் பாடிய பதிகங்கள், கோவிலை ஒரு முறை சுற்றிப் பாடுவதற்கு வாய்ப்பான முறையில் பத்துப் பத்துப் பாடல்களாக அமைந்திருந்தன. முத்தாய்ப்புப் பாடல், பாடுகின்ற பக்தனுக்குப் பலன் சொல்வதாக அமைந்திருந்தது மக்களுக்குப் பிடித்திருந்தது.
- இசை, நடனம் முதலாய கலைகளுக்கு எதிரான சமண பௌத்த மதங்களுக்கு எதிராகப் பண்ணோடிசை பாடியது மக்களைப் பெரிதும் கவர்ந்தது.
- நாயன்மார்கள், அன்புவழியால் இறைவனை அடையலாம் என்று மக்களுக்கு எடுத்துக் கூறினார்கள். பௌத்த, சமண மதங்களின், துறவுவழியே இறைவனை அடையும் வழி என்னும் கருத்துக்கு மாறாகச் சம்சாரியாக இருந்தும் அன்புவழியில் இறைவனை அடையலாம் என்ற கருத்து மக்களுக்குப் பிடித்திருந்தது.
- பெண்களே உலகின் அனைத்துத் தீமைகளுக்கும், பாவங்களுக்கும் தொடக்கம் என்று கூறிப் பெண்களை வெறுத்து ஒதுக்கிய சமண பௌத்த மதங்களின் கொள்கைகளுக்கு மாறாக ஒருவன் சம்சாரியாயிருந்தே இறையன்பை அடையலாம் என்ற கொள்கை மக்களுக்கு மிகவும் பிடித்திருந்தது.
- இவற்றால் எல்லாம் மக்கள் தாம் இழந்த வாழ்க்கையைப் பண்பாட்டை மீளப்பெற்றனர்.

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலங்கள் 219. இவர் பாடல் பெற்ற பெருநிலப் பிரிவுகள், சோழ நாட்டுத் தலங்கள் (காவிரிக்கு வடக்கேயும், தெற்கேயும்), ஈழநாட்டுத் தலங்கள், பாண்டிய நாட்டுத் தலங்கள், கொங்கு நாட்டுத் தலங்கள், நடு நாட்டுத் தலங்கள், தொண்டை நாட்டுத் தலங்கள், துளுவ நாட்டுத் தலங்கள், வடநாட்டுத் தலங்கள் ஆகியவை. இவற்றில் ஈழத்தை, சம்பந்தர் தமிழ் நாட்டிலிருந்தே பாடினார். அவ்வாறே வடநாட்டுத் தலங்களையும் பாடியிருக்கலாம். ஏனைய தலங்களை அவர் நேரடியாகவே சென்று பாடியிருக்கவேண்டும்.

கி. பி. 6 ஆம் நூற்றாண்டளவில் சம்பந்தர் பாடிய 219 கோயில்களும் கவனிப்பாரற்ற நிலையில், ஆனால் அழியாமல் இருந்திருக்கின்றன. இந்த 219 கோவில்களும் பக்தி இலக்கிய காலத்தில் கட்டப்பட்டவை அல்ல. நிச்சயமாக, சமண பௌத்த ஆதிக்கம் பெற்று அன்னியர் ஆதிக்கத்தில் இருந்த சங்க மருவிய காலத்தில் கட்டப்பட்டிருக்க முடியாது. இதன் மூலம் நாம் அறியக் கிடப்பதாவது, சங்ககாலத்தில் மக்களின் வழிபாட்டுத் தலங்களாக இருந்த ஏராளமான கோவில்கள் சங்ககாலத்தின் பின் பராமரிப்பார் அற்று, அழிவுற்ற நிலையில் தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் இருந்திருக்கின்றன.

சங்ககாலத்தில் கோவில்கள் பல இருந்தன, அவை மன்னர்களால் ஆதரிக்கப்பட்டன என்பதைச் சங்க இலக்கியம் பதிவு செய்திருக்கிறது என்பதனை இங்கு உறுதி செய்து கொள்ளலாம்.

பரிபாடல், சொல்லமைதியாலும் பொருளமைதியாலும் வடமொழிப் புராணக் கதைகளைக் கூறிச் செல்லும் தன்மையாலும் எட்டுத்தொகை நூல்களுள் காலத்தால் பிந்தியது என்று துணிந்து கூறலாம். இந் நூல் வழி நாம் காணும் சமூக நிலையும் சங்ககாலத்தின் கடைக்கூற்று வாழ்க்கை முறையைத் தான் காட்டி நிற்கிறது.

பரிபாடல் காட்டும் பக்தி மரபு:

தொல்காப்பியர், பரிபாட்டு என்னும் பாவகை, அகத்திணையைப் பாடுவது என்று கூறியிருக்கிறார், இன்று எமக்குக் கிடைத்திருக்கும் பரிபாடல் பாடல்களில் (22), திருமாலுக்கு 6, முருகனுக்கு 8 என்று மொத்தம் 14 பாடல்கள் இறைவனைப் பாடுவதாக அமைந்திருக்கின்றன. வையையைப் பாடும் 8 பாடல்கள் மட்டுமே அகத்திணை சார்ந்து காணப்படுகின்றன. இறைவனைப் பாடும் மரபு தொல்காப்பியர் காலத்திற்குப் பிந்தியது. அண்மைய ஆய்வு தொல்காப்பியத்தை கி. மு. 7 ஆம் நூற்றாண்டிற்கு இட்டுச் செல்கிறது. தொல்காப்பியர் காலத்திற்குக் கூறப்பட்ட பா இலக்கணத்தை ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளின் பின் வந்த பக்தி இலக்கியத்திற்குப் பொருத்திப் பார்த்தல் ஏற்றதாகாது. தொல்காப்பியர் அகத்திணை பாடுவதற்குரியதாக வகுத்த ‘கலி பரிபாடல்’ என்னும் பாவகைகளில் வேறான ஆசிரியப்பாவிலேயே சங்க இலக்கியங்களிலே பெரும்பாலானவை பாடப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியர் காலத்தின் பின், சிறிது சிறிதாக மாறத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய பா மரபு சங்க காலப் பிற்பகுதியில் பக்தியை நோக்கித் திசை திரும்பியது. பா வகைகள், மக்களின் தேவைக்காகவே தவிர, மக்கள், பா வகைகளின் தேவகைகாக அல்ல. எதையும் தீர்மானிப்பது காலமும் கருத்தாவுமே. பக்தி இலக்கிய காலத்தில் தேவார, திவ்யப் பிரபந்தங்கள் பரிபாடலைப் பின்பற்றியே பாடப்பட்டன.

பரிபாடல், பிற சங்க இலக்கியங்கள் போலல்லாமல் வடமொழிப் புராணக் கதைகள், வடநாட்டு வழிபாட்டு மரபுகள் முதலியவற்றை மிகுதியாகக் கொண்டுள்ளது. வடநாட்டார், பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் சிறுகச் சிறுக, பண்பாட்டுத் தாக்கத்தை ஏற்படுத்தி வந்திருக்கிறார்கள். அவர்கள் செல்வாக்கின் உச்சம் பரிபாடலில் வெளிப்பட்டிருக்கிறது.

பாடல் மரபும் பெருமளவுக்குப் பரிபாடலில் மாறியிருக்கிறது. மனிதக் காதலுக்குப் பதிலாகக் தெய்வக் காதல் பெருமளவுக்குப் பாடு பொருளாக அமைந்திருக்கிறது. இன்று கிடைத்திருக்கும் பரிபாடல் பாடல்களுள், திருமால், முருகன் மேல் பாடப்பட்ட 14 பாடல்களும் சங்க இலக்கியப் பாடுபொருள் மரபுக்கு மாறாகப் பக்தியைப் பாடுபொருளாகக் கொண்டு பாடப்பட்டவை.

ஆரியக் கலப்பால், "மாயோன் மேய காடுறை உலகமும்' என்று முல்லைக்குக் கடவுளாகக் கூறப்பட்ட மாயோனே காலக் கிரமத்தில், வடமொழிக் கதைகளின் கூட்டுச் சேர்க்கையால் திருமாலாகி, வடநாட்டுக் கதைகள் அனைத்தையும் தனதாக்கிக் கொண்டவராகக் காணப்படுகிறார். இயல்பு வாழ்வில், சங்ககாலத்தில் ஒரு மன்னனை அலங்கரித்த, ஆயுதங்கள், படை, போர், கொடி, கோவில் முதலியன திருமாலுடன் இணைக்கப்பட்டு, திருமால், சங்கு சக்கரங்களுடன் தனியான வாகனம், கொடி முதலியனவும் உடையவராக ஆக்கப்பட்டார். திருமால் பற்றிய வடநாட்டு மரபுக் கதைகளும் அற்புதங்களும் மாயோனுடன் இணைக்கப்பட்டு அவை மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. திருமால் பக்தி நன்கு வளர்ந்திருந்த ஒரு காலகட்டத்தில் தான் பரிபாடல் பாடல்கள் பாடப்பட்டிருக்க வேண்டும் என்பதை நாம் பதிவு செய்து கொள்ளலாம்.

சங்ககாலத்தில், முருகனுக்கும் திருமாலுக்கும் குன்றின் மேல் திருக்கோவில் அமைத்து வழிபாடு செய்திருக்கிறார்கள். இது குன்றவர்களுக்கும் இத் தெய்வங்களுக்கும் இடையிலான தொடர்பைக் காட்டுவதாக அமைகிறது. தென்னவர் வழிபாட்டில் பண்ணோடிசை பாடி வழிபடும் மரபைப் பரிபாடல் ஆரம்பித்து வைத்திருக்க வேண்டும் அல்லது அத்தகைய மரபுகளைக் காட்டி நிற்கும் நூல்களில் பரிபாடலே எமக்குக் கிடைத்திருக்கிறது என்று கொள்ளக் கிடக்கிறது.

சங்ககாலத்தில் குறிஞ்சிக் கடவுளாக இருந்த மாயோன் பரிபாடலில் திருமாலாகிப் பெற்ற மாற்றங்களுள் சில கீழே தரப்படுகின்றன.

- தொழுவதற்கும் அவன் அருள் வேண்டும், எனவே அவன் அருளை வேண்டியும்,
- தீமையை அழித்து உயிரினங்களைக் காப்பவனாகிய திருமாலின் (காத்தற் கடவுளாகிய) படை, கொடி, சங்கு முதலியவற்றைப் போற்றுவனவாகவும்,
- கருடன், பனை, கலப்பை, யானை என்னும் இவற்றைக் கொடிகளாகக் கொண்டாலும், இவற்றுள் சிறந்து விளங்கும் கருடக் கொடியைப் போற்றுவதாயும்,
- பஞ்சபூதங்களுக்கும் முதல்வனாகியும், அவையே தானாகியும், அவற்றைக் கடந்து தனித்து நிற்பவனாகியும் விளங்குபவன் திருமால் ஒருவனே (ஒப்பற்ற ஒரே கடவுள்) என்றும்,
- திருமாலே, கண்ணனாகவும் பலராமனாகவும் அவர்களுக்கும் முற்பட்டவனாகவும், அவரவர் நினைப்புக்கு ஏற்பத் தோன்றி அருள்பவனாயுமுள்ள அவனுக்குக் குறிப்பிட்ட உருவெல்லாம் மாயத் தோற்றமே எனவும்,
- 'கோட்டிற் கொண்டு நிலமகளை மணந்த காலத்து, மார்பில் மறுப்போலச் செய்யவளைக் கொண்டிருந்த சிறப்பாகுமோ?' என்றும்,
- திருமால் சாதாரண மக்களுக்குச் சிலை வடிவாகவும், அந்தணருக்கு வேள்வித்தீச் சுடரிடையிலும், யோகிகட்கு அவர் உள்ளத்திலும், சித்தர்களுக்கு எங்கும் எதனிடத்ததுமாக நின்று காட்சியளிப்பான் என்றும், அவரவர் எண்ணங்களுக்கும் நிலைகளுக்கும் ஏற்ப அவ்வவ் வடிவினனாகத் திகழ்தலன்றித் தனக்கென வடிவமாக ஏதும் இல்லாதவன் திருமால் என்றும்,
- உலகின் தோற்றத்திற்கு ஆதி காரணமானவன், மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடி என்றும்,
- உலகு மீண்டும் தோன்றும் காலத்தே 'தாமரைப் பூவினுள் பிறந்தோனும், தாதையும், நீயென மொழியுமால் அந்தணர் அருமறை' என்னும் புராணக்கதையையும், தாயின் அடிமைத் தளையை அறுக்கக் கருடன் தேவரை வென்று அமுதத்தைக் கொணர்ந்தான் என்னும் கருடபுராணக் கதையையும், வாமனனாகி மாவலியிடம் மூவடி இரந்து பெற்றதையும், ஊழிக் காலத்திதே, 'ஊழி ஆழிக்கண் இருநிலம் உருகெழு, கேழலாய் மருப்பினால்' எடுத்து வந்ததையும், ஊழிப் பெருமழை வெள்ளம் வற்றும்படியாக, அன்னச் சேவலாகிச் சிறகினால் விசிறிக் காத்தமை பற்றியும், இன்னும் இவை போன்ற திருமால் பற்றிய பல வடநாட்டுக் கதைகளைக் கூறியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 'நடுவுநிலை திறம்பிய நயமில் ஒரு கை' என்று, தேவர் அசுரர் என்னும் இருசாராருக்கும் அமுதத்தைச் சமமாகப் பகிர்ந்து கொடாது தேவர்களுக்கே கொடுத்து நடுவுநிலை திறம்பிய கை பற்றியும்,
- 'அன்னையென நிலைஇ நின்னடி தொழுதனெம்,
  பன்மாண் அடுக்க இறைஞ்சினெம் வாழ்த்தினெம்,
  முன்னும் முன்னும்யாம் செய்தவப் பயத்தால்,
  இன்னம் இன்னுமெம் காமம் இதுவே.' – பரிபாடல் 13.

தொல்காப்பியத்தில் 'சேயோன் மேய மைவரை உலகமும்' என்று பாடப்பட்ட முல்லை நிலத்துத் தமிழ்க் கடவுளான சேயோனது வடிவமும் வரலாறும், வடநாட்டார் தாக்கத்தால் சிறிது சிறிதாக மாற்றுருப் பெற்று மக்கள் மத்தியில் செவ்வேளாகி வடநாட்டுச் சுப்பிரமணியருக்குரிய கதைகளைத் தாங்கி நிற்பதைப் பரிபாடல் காட்டுகிறது. சேயோன்,

- அவுணரை அழித்த வெற்றி வேலையுடையவன், எனவே எம்மைக் காக்க வல்லவன் எனவும்,
- ஊழிக்காலத்தின் முடிவில் அனைத்தையும் அழித்துத் தானே தனியனாக நிற்கும் கடவுளாகிய சிவனது குமாரனே எனவும், செம்மேனியனே எனவும்,
- 'வேலவன் ஏத்தும்' வெறியாட்டு களத்தில் நீ பூசாரியிடம் தோன்றி வருதல் உண்மையல்ல, ஏனெனில் நீ அவற்றை எல்லாம் கடந்த பரம்பொருள், ஆதலால் நீ தான் அங்கும் தோன்றி அவர்க்கும் அருளுவதால் அவை பொய்யானவையும் அல்ல, வேலன் அழைப்புக்கு இணங்கித் தோன்றி அருள் புரிபவன் என்றும், (இங்கு சங்க காலத்தில் பெரு வழக்காக விளங்கிய வேலன் வெறியாட்டிற்குப் புதிய வடிவம் கற்பிக்கப்படுகிறது.)
- திரிபுவனத்தானாகிய சிவன், சினம் தணிந்து உமையுடன் கலந்து உண்டாகிய சிசுவை, இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்கிச் சிவன் சிதைத்ததையும், சிவகரு முடிவில் வளர்ந்து ஆறு குமாரர்களாகிப் பின் அறுவரும் ஓர் உருவாகி முருகனாகிய, முருகனின் பழம் பிறப்புப் பற்றிய செய்தியும்,
- போரில் தோற்றோர், வென்றவனுக்குத் திறை கொடுத்துத் தமது அடிமைத் தன்மையைப் புலப்படுத்துவர். அவ்வாறே தேவர்கள் முருகனுக்குச் சேவலும் மயிலும் அளித்தார்கள் என்பதையும் (சங்ககாலத்துப் போரும் போரின் இறுதியில் திறை செலுத்தலுமாகிய மரபு இங்கு இறைவன் மேல் ஏற்றிக் கூறப்படுகிறது.)
- உயிர்க் கொலை செய்வோரும், அறனில் வாழ்க்கை வாழ்வோரும், தவ ஒழுக்கத்தை நீத்தவர்களும் உன்னை மறந்தவர்களும் உன்னை ஒருக்காலும் அடையமாட்டார்கள் என்றும் (இங்கு நல்லொழுக்கம் வலியுறுத்தப்படுகிறது.)
- அறநெறியில் நின்று, முருகன் பால் அன்பு செலுத்தி, அவனருளைப் பெற்று நிலையான பேரின்பத்தைப் பெற விரும்புபவர்கள் அவற்றை முறையே வேண்டிநிற்பர் என்றும்,
- '..................யாம் இரப்பவை
  பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்,
  அருளும் அன்பும் அறனும் மூன்றும்' – பரிபாடல் 5 (செவ்வேள்). திருக்குறள் கருத்துக்கள் இங்கு காணப்படுகின்றன.
- திருமால், சிவன், நான்முகன், ஆதித்தர் பன்னிருவர், தேவ மருத்துவர்கள் இருவர், பதினொரு உருத்திரரும், திசைகளைக் காக்கும் இந்திரன் முதலாய எண்மரும், மற்றுமுள்ள தேவர்களும், வேதங்களைக் கற்ற சிறந்த தவமுதல்வர்களாகிய எழுவரும், உன்னைக் கண்டு போற்றும் பொருட்டு திருப்பரங்குன்றத்திற்கு வருவர். ஆதலினால், இப் பரங்குன்றம் சிவன் குடிகொண்டிருக்கும் இமயமலையாகிய திருக்கயிலாயத்தை ஒத்து விளங்குகின்றது என்றும்,
- சரவணப்பொய்கையுடன் திருப்பரங்குன்றத்திலுள்ள அருவி ஒப்பிடப்படுகிறது என்றும்,
- சேயோனுக்குத் தந்தை, தாய், மனைவி என்று உறவுகள் பெருகின என்றும்,

இவை போன்ற இன்னும் பல செய்திகளும் சேயோனுடன் இணைக்கப்பட்ட நிலையைப் பரிபாடலில் காண்கிறோம். வரலாறு, மனிதக் காதல் என்னும் அகத்திணை மரபைக் கடந்து தெய்வக் காதல் என்னும் பக்தி மரபுக்கு அடியெடுத்து வைக்கும் ஒரு திருப்புமுனையாகத் தான் பரிபாடலைக் காணக்கூடியதாக உள்ளது.

பரிபாடல் வையைப் பாடலிலிருந்து சங்ககாலப் பிற்பகுதியில், அக்கால மேட்டுக்குடி மக்களிடையேயும் ஓரளவுக்குப் பொது மக்களிடையேயும் நிலவிய பண்பாட்டு விழுமியங்களைப் பிரித்து எடுக்கக் கூடியதாக இருக்கிறது. அக்காலத்தில் சமயம் மக்களின் அன்றாட வாழ்வில் இடம்பெற்றுவிட்ட நிலையைப் பரிபாடல் காட்டுகிறது. நல்லந்துவனார் பாடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையைப் பாடல் ஒன்றில் தைநீராடலும் ஆதிரை நாள் விழாச் சிறப்பும் பாடப் பட்டுள்ளன. நல்வழுதியாரது பாடலிலும் அம்பா ஆடல் பற்றிய குறிப்பொன்று வந்துள்ளது.

ஆதிரை நாளில், பனிப் பெய்யும் விடியற்காலையில் கன்னிப் பெண்கள், காமக் குறிப்பற்று, தமது தோழிமாருடன், புலன்களை அடக்கித் தவம் செய்வது போலத் தம் தாய்மார்கள் அருகில் நின்று வையையில் நீராடித் திருவாதிரை நோன்பு நோற்பதாகக் கூறப்படுகிறது.

"கணவன் பிரியாது இருக்க வேண்டும்.
இளமை நீங்காது இருக்க வேண்டும்.
வான்முகில் வழாது பெய்ய வேண்டும்.
மலிவளம் சுரக்க வேண்டும்."

என்பன போன்ற பல வேண்டுதல்களை நோன்பிருக்கும் அம் மகளிர் தைநீராடலின் போது செய்வார்கள். "வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன் கோன்முறை அரசு செய்க" என்னும் பக்தி இலக்கிய காலப் பாடல் அடிகள் நினைவிற்கு வருகின்றன.

பெண் தன் காதலைக், குறிப்பாலன்றி வெளிப்படையாகக் கூறமாட்டாள், கூறக் கூடாது என்பது தொல்காப்பியர் கால மரபு. "தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல், எண்ணுங் காலை கிழத்திக்கில்லை" (களவியல் 28). இந்த மரபு பக்தி இலக்கிய காலத்தில் மீறப் படுகிறது. ஆண்டாள் திருவரங்கநாதன் மேல் கொண்ட ஒருதலைக்காதலை வெளிப்பாடாக வாய்விட்டு வெளிப்படுத்துகிறாள். அரங்கநாதர் வந்து தன்னைத் திருமணம் செய்து கொள்வதாகப் பாடும் ஆண்டாள் பாடலில் இருவகை மரபு மாற்றங்களைக் காணலாம்.

1. காதலைத் தலைவி தானே கூறலாகாது என்ற தொல்காப்பியர் மரபுக்கு எதிராக ஆண்டாள் தன் காதலை வாய்விட்டுக் கூறுகிறாள்.

2. திருமணச் சடங்கு மாற்றம்.:

"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன்வந்து என்கைத்
தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழிநான்."

கண்ணனைத் தான் அடைய முடியாத நிலையில், 'நந்தகோபாலன் கடைத்தலைக்கே நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின்' என்று தன்னைக் கண்ணன் இல்லுக்கு இரவில் இட்டுச் செல்லும்படி வேண்டுகிறாள்.

"தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத் தனிவழி போயினாள் என்னும் சொல்லு
வந்தபின்னைப் பழிகாப்பரிது மாயவன் வந்து உருக் காட்டுகிறான்
கொந்தளமாக்கிப் பரக்கழித்துக் குறும்பு செய்வானோர் மகனைப் பெற்ற
நந்தகோபாலன் கடைத் தலைக்கே நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின்" – நா.தி.பி. 619.

தலைவன் வீட்டிற்குச் செல்வது, அந்த வகையில் உடன்போக்கு, ஆனால் தலைவனுடன் போவதில்லை, அந்த வகையில் உடன்போக்கில்லை. இவ்வாறாகத் தமிழ்க் கவிதை மரபு பல்லவர் காலத்தில் தெய்வக் காதலாக மலர்ந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. வரலாற்று நீரோட்டத்துடன் செல்வதே கவிஞனின் இயல்பு. இதற்குப் பக்தி இலக்கிய ஆசிரியர்களும் விலக்கல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆக்கங்கள்

## தெள்ளு தமிழின் சிறப்பு

தனுஷ்காந் யோகேஸ்வரன்
தரம் 6, ஸ்ரீவரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

தமிழ்மொழி உலகிற் தோன்றிய தொன்மையான மொழிகளில் ஒன்று. தமிழ்மொழி பைந்தமிழ், தீந்தமிழ், தேன்தமிழ், நற்றமிழ், செந்தமிழ் எனப் புலவர்களால் போற்றப்படும். தமிழ்மொழி பிறமொழிகளின் துணையின்றி இயங்கக் கூடிய செம்மொழி.

தமிழ்மொழி திராவிட மொழிக் குடும்பத்திற்கு மூலமொழி என மேற்கத்தைய மொழி ஆய்வாளரான கால்டுவெல் நிரூபித்துள்ளார். தமிழ்மொழியினை முழுமையாக கற்று ஆய்வு செய்த மேற்கத்தைய அறிஞர்கள் பலர், தமிழ்மொழியின் சிறப்புகள் கண்டு வியந்துள்ளனர். அத்துடன் பல தமிழ் நூல்களைத் தமது மொழிகளுக்கு மொழிபெயர்த்து உலகறியச் செய்தனர். அத்தோடு பல புதிய நூல்களையும் தமிழ்மொழியில் இயற்றியுள்ளனர். இலைமறை காயாக இருந்த நல்ல தமிழ் நூல்களையும் உலகறியச் செய்தவர்கள் மேற்கத்தைய அறிஞர்களே.

“தெள்ளுற்ற தமிழ் அமுதின் சுவை
கண்டார் இங்கு அமரர் சிறப்பு கண்டார்”

என்ற பாரதியின் கூற்றிற்கமைய, மேற்கத்தைய அறிஞர்கள் தமிழ்மொழி மேல் கொண்டிருந்த அளவு கடந்த பற்றினை அவர்கள் தமிழ்மொழிக்கு ஆற்றிய பணிகள் உணர்த்துகின்றன.

இலங்கை, தமிழ்நாடு தமிழழரின் பூர்வீக நாடுகளாகும். இலங்கை, தமிழ்நாடு, சிங்கப்பூர், மொரிசியா ஆகிய நாடுகளில் தமிழ்மொழி ஆட்சிமொழியாக உள்ளது. தமிழராகிய நாம் வாழும் தேசமெங்கும் தமிழ்மொழியைப் படிப்போம். தமிழ் மொழியின் பெருமை தனை உணர்வோம்.

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ்” என முழங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல்

தீபனா தேவதாஸ்
12ஆம் வகுப்பு

“பொங்கலோ பொங்கல்” தமிழரது பண்பாட்டில் பொங்கல் விழா மிகவும் முதன்மையானதும், பழைமையானதும் ஆகும். 2500 ஆண்டுகளுக்கு மேல் பொங்கல் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இதற்கு அக்காலத்தில் இருந்து எழுதப்பட்டு வருகின்ற தமிழ் நூல்கள் சான்றாகின்றன. தைப்பொங்கல் தமிழர்களது முக்கிய பண்டிகைகளில் ஒன்று. தைப்பொங்கல் இலங்கை, மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலும் மேலும் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது.

பொங்கல்விழா நன்றி செலுத்தும் விழாவாகும். உழவுத் தொழிலுக்கு இன்றியமையாத ஒளியையும், மழையையும் வழங்குபவன் கதிரவன். மாடுகளும் உழவுத் தொழிலுக்கு உதவுகின்றன. இவற்றிற்கு நன்றி செலுத்தவே பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. நாம் உண்ணும் உணவிற்குக் காரணமாக இருப்பவன் கதிரவன். தை பிறந்ததும், பயிர்களும் மரங்களும் வேறு பல தாவரங்களும் வளர்ந்து நிற்கும். நெற்கதிர்களை அறுவடை செய்து, அதிலிருந்து வரும் அரிசியைக் கொண்டே பொங்கல் பொங்கி, உண்டு மகிழ்வர். மக்களின் வாழ்விற்கு ஒளியைத் தரும் கதிரவனுக்கு நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம். அதனால், பொங்கல் விழாவை வருடத்தின் ஆரம்ப நாளாகக் கொண்டாடுகிறோம்.

பொங்கல் விழா தொடராக ஐந்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. மார்கழிக் கடைசி நாள், பொங்கல் விழாவின் முதலாம் நாள் போகிப் பொங்கல் ஆகும். இந்நாளில், வீட்டைத் தூய்மைப்படுத்துவதற்காக வீட்டிலுள்ள அழுக்குகளைப் போக்குவதற்காகச் சுத்தமாக்குவார்கள். புதிய பொருட்களை வாங்குவர். புதிய சமையற் பொருட்களை வாங்கி, சிற்றுண்டிகள் செய்வர். தை முதலாம் நாள், பெரும் பொங்கல் ஆகும். அன்று காலை மக்கள் எழுந்து, நீராடி, புது ஆடையை அணிவர். கோலமிட்டு, நிறைகுடம் வைத்து, மரங்கள் நடுவர். புது மண்பானையில், பசுப்பால் பொங்கி, பால் பொங்கி வரும்பொழுது அரிசி இட்டு, பொங்கல் பொங்கி வழியும்பொழுது, அனைவரும் சுற்றி நின்று “பொங்கலோ பொங்கல்” என்று இன்ப ஒலி எழுப்புவர். பொங்கல், மற்றும் முக்கனிகளையும் கதிரவனுக்குப் படைப்பர். பின் அனைவரும் இருந்து உண்பர். தை இரண்டாம் நாள், பொங்கல் விழாவின் மூன்றாம் நாள், பட்டிப் பொங்கல் ஆகும். இந்நாள், மாடுகளுக்கு நன்றி செலுத்துவதற்கு உரிய முக்கிய நாளாகும். அன்று மாடுகளை நீராட்டி, அழகுபடுத்தி, மாலை அணிவிப்பர். பொங்கல் பொங்கி வழியும்பொழுது, ‘பட்டி பொங்கிவர, பாற்பானை பொங்கிவர’ என்று ஒலி எழுப்புவர். பின்பு பொங்கல், மற்றும் பல உணவு வகைகளையும் மாடுகளுக்கு உண்ணக்கொடுத்து, நன்றியைத் தெரிவிப்பர். அன்று மாடுகளுக்கு ஓய்வு நாளாகும். பொங்கல் விழாவின் நான்காம் நாள், தை மூன்றாம் நாள் ‘காணும் பொங்கல்’ ஆகும். மக்கள், அவர்கள் வீட்டில் செய்த பொங்கல் சிற்றுண்டிகள் மற்றும் பல உணவு வகைகளைக் கொண்டு, பொது இடங்களுக்குக் கொண்டு செல்வர். மற்றவர்களுடன் பகிர்ந்து உண்பர். மாலையில், கலை நிகழ்வுகள் நடைபெறும். மற்றும் வீர தீர விளையாட்டுகளும் நடைபெறும். பொங்கல் விழாவின் இறுதி நாள், தை நான்காம் நாள், சிற்றில் பொங்கல் நாளாகும். இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த பெண்கள் இளைய பெண்களுக்கு சமையல் கற்றுக் கொடுப்பர். சிறுமியர்கள் பொங்கிய பொங்கலையும், சமைத்த உணவையும் எல்லோரும் பாராட்டி உண்பர். இத்தோடு பொங்கல் விழா நிறைவுபெறும்.

இன்றும் தைப்பொங்கல் தமிழ் மக்களால் ஒரு முக்கிய பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. தைப் பொங்கலை தமிழ்ப் புது வருடமாகவும் கருதுகிறார்கள். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பதைப்போல், புது வருடத்தை ஆவலோடு மக்கள் எதிர்பார்ப்பர். தைப் பொங்கல் திருநாளை, தமிழ் மக்கள் வாழும் எல்லா நாடுகளிலும் கொண்டாடுகிறார்கள். தாய் நாட்டில், பொங்கல் பானையை முற்றத்தில் வைத்துப் பொங்குவர். ஆனால், புலம் பெயர்ந்தோரின் நிலைமைகள், அவர்கள் வாழும் நாடுகளின் காலநிலை காரணமாக, அவர்கள் வீட்டுக்குள்ளே வைத்து பொங்கல் பொங்குகிறார்கள். புலம்பெயர்ந்த மக்கள் வாழும் நாடுகளில், உள்ள கோவில்களில் தைப்பொங்கல் பண்டிகை மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தமிழ் நாட்டில் மூன்று நாட்கள் மக்களுக்குப் பொது விடுமுறை உள்ளது. இலங்கையில் ஒரு நாள், அதுவும் தைப்பொங்கல் நாளில் விடுமுறை உள்ளது. பொங்கலின் பெருமையைப் பாராட்டுவதற்காக அமெரிக்க 'நாசா' நிறுவனம் செவ்வாய்க் கோளில் உள்ள ஒரு பாறைக்கு 'பொங்கல்' என்று பெயரிட்டார்கள். பொங்கலுக்காக மக்கள் தமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து, வாழ்த்து மடல்களும் அனுப்புவர். எமது தாய்நாட்டில் பட்டாசு வெடித்து, மகிழ்ச்சி ஆரவாரம் செய்வார்கள். பொங்கல் பொங்கி, பானையிலிருந்து வழிவது போல மக்கள் மனதிலும் இன்பம் பொங்கி வழியட்டும்!

## அகரமுமாகிய இறைவன்

கார்த்திகன் - சபேஸ்வரன்

**அ**னைத்திலும் தெய்வம் துணையிருப்பின்
**ஆ**னந்தம் வாழ்க்கையில் அடைந்திடுவோம்
"**இ**ல்லை" என்ற வார்த்தையினை
**ஈ**ரேழுலகிலும் மறந்திடுவோம்
**உ**யர்ந்த எண்ணத்துடனே நாம்
**ஊ**ர் தேசம் புகழ வாழ்ந்திடுவோம்
**எ**ல்லா இன்ப துன்பங்களையும்
**ஏ**ராளமாய் நாம் ஏற்றிடுவோம்
"**ஐ**யோ!" என்ற குரலின்றி
**ஒ**ற்றுமை உலகம் படைத்திடுவோம்
"**ஓ**ம்" எனும் மந்திரத்தை வாழ்வினிலே
**ஔ**டதமாக்கி வாழ்ந்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saraswathi Devi

Nirahulan Puvanenthira



Saraswathi Devi, is known by many names like Maha Vaani, Kalai-vaani, Sakalakalaavelli or Kalai-magal to mention a few. Saraswathi Devi is the goddess of knowledge, arts, creation, and wisdom. She is also known for being the Goddess of sixty four kalais (64 arts).

Saraswathi is mainly portrayed adorning a white sari, personifying pure knowledge. She sits on a white lotus due to the fact that she is a representation of supreme knowledge and supreme reality. Her four arms represent her ultimate power, and her presence anywhere. The front right arm represents the mind, the front left arm represents intelligence (holding a book), the back left arm represents consciousness (playing Veena), and the back right arm represents concentration (holding a beaded necklace). Saraswathi is the consort of Lord Brahma, who is the creator of the universe, and is also known to have given the four Vedas; Rig, Yasur, Saama, and Atharva. She is seen riding a swan, which is her main vahanam (Vehicle).

We pray to her with much earnest during the last three days of Navarathiri. Even though we mainly devote Saraswathi Devi on the last three days, the Sakalakalavelli Mallai (song all-about Saraswathi Devi) is sung throughout all 9 days. On the 9th night (Maha Navami) of Navarathiri, an event known as "Ayuda Puja" is performed. Here all academic (school, musical instruments, etc.) is placed in front of her and is prayed. On the next day, an auspicious time period known as Vijayathasami (Vidyarambam) arrives. During this time, students will go to their gurus and begin new classes, children will learn the alphabet, and students already enrolled in classes will receive blessings from their gurus and learn new songs. Also on this day, we pray and receive Saraswathi's blessings. There after we retrieve our musical instruments, or study materials, and begin to use them in front of our beloved Devi. Usually music students will sing, or play their instrument in front of her for a few minutes. Musicians usually pray to her before a major concert, and students pray to her before righting a test or exam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் ஒரு வழிகாட்டி நூல்

கஜானன் சக்திதரன்
தரம் 7

திருக்குறள் ஒரு வழிகாட்டி நூல்.

"அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி
குறுகத் தறித்த குறள்"

என்று ஔவையார் திருக்குறளின் சிறப்பினைக் கூறியுள்ளார்.

திருக்குறள் இவ்வுலகில் மனித குலம் இன்பமுடனும், நலமுடனும் வாழ்வதற்குத் தேவையான அடிப்படைப் பண்புகளைக் கூறுகிறது. குறள் கடவுள் வழிபாடு, மாமிசம் உண்ணாமை, வன்முறையைத் தவிர்த்தல் என்பவற்றை உலகிற்குக் கூறுகிறது.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்"

அதாவது ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்தியவர்களைப் பின்பற்றுபவர்களின் புகழ் என்றும் நிலையானதாக இருக்கும். இது ஒழுக்கத்தினைப் பற்றிக் கூறும் குறளாகும்.

அறத்தின் வழிநின்று, பொருளைத் தேடி இன்புற்று வாழும் வழிதனைத் திருக்குறள் அழகுறக் கூறுகிறது. குறள், நாம் எப்படி மற்றவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும் என்பதனை மிகவும் அழகாக எடுத்துக் கூறுகிறது.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"

அதாவது அன்பு உடையவர்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் பிறருக்கென எண்ணுவார்கள். ஆனால், அன்பிலாதவர்கள் எல்லாம் தமக்கென எண்ணுவார்கள். இதன் மூலம் குறள் அன்பைப்பற்றிக் கூறுகிறது.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்ற வாழ்வியலின் பண்புகளை இன, மத, மொழி, பாலின பேதங்களின்றிக் கூறுவதால், இதனை உலகப் பொதுமறை என்று அழைப்பார்கள்.

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

திருக்குறள், நாம் எவ்வாறு உலகில் மற்றவர்களுடன் சேர்ந்து எமது வாழ்வைச் சிறப்பாக வாழ வேண்டும் என்பதனை மிகச் சுருக்கமாகக் கூறுகின்றது. திருக்குறள் சிறப்புடையது. ஆகையால், அது உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இது போன்ற பல குறள்களைக் கொண்ட திருக்குறள் உலகிற்கு ஒரு வழிகாட்டி நூல் என்பதனை உறுதி செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்

துஷான் கேதாரன்
தரம் 7

திருக்குறள் உலகப் புகழ்பெற்ற தமிழ் இலக்கியமாகும். இதனை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல் ஆகும். இவ்வுலகில் மனித குலம் இன்பமுடனும், நலமுடனும் வாழ்வதற்குத் தேவையான அடிப்படைப் பண்புகளைக் கூறுகிறது. திருக்குறளில் இருக்கும் பல பாக்கள், நமது வாழ்க்கையில் எவ்வாறு வாழ வேண்டும் என்ற பல கருத்துக்களைக் கூறுகின்றது. இதனை வெளிப்படுத்தும் முகமாக நான் மூன்று பாக்களைத் தெரிவுசெய்துள்ளேன்.

ஒரு மனிதன் தன் வாழ்வில் அவசியம் கொண்டிருக்கவேண்டியது கல்வி. கல்வியினைச் சிறப்பித்துப் பல அறிஞர்கள் பாடியுள்ளனர். கல்விச் செல்வத்தை நம் தெய்வப் புலவர் வள்ளுவர் தன்னுடைய 40ஆவது அதிகாரத்தில் பாடியுள்ளார்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" - (குறள் 391)

இக்குறளுக்கான பொருள் விளக்கம், "கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்குத் தக்கவாறான நெறியில் நிற்க வேண்டும்." என்பதே ஆகும். இதன்வழி, வள்ளுவப் பெருந்தகை பிழையறக் கற்றதை வாழ்க்கையில்ட ஒழுக வேண்டும் என்று விளம்புகின்றார். ஆதலால் இக்குறள்வழி நாம் நடப்பது உசிதமாம்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" - (குறள் 392)

எனும் குறள் அமைகின்றது. பொய்யாமொழிப் புலவன் இக்குறள்வழி கூறும் கருத்து யாதெனில், "எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்" எனப் பொருள் விளங்க தன் நூலில் தெளிவுரை அமைத்திருக்கிறார்.

"கண்உடையார் என்போர் கற்றோர்: முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" - (குறள் 393)

கண்ணுடையவர் என்று உயர்வாகக் கூறப்படுபவர் கற்றவரே: கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்கள் உடையர் ஆவர்" என்ற பொருள் ஏற்று வருகிறது. இதன்வழி, நம்மால் அறியப்படுவது என்னவெனில், கற்றவரே பூரணமானவர்; மாறாக, கல்லாத பேதையர் கண்களற்ற குருடர்களாய், ஊமையானவர்களாக விளங்குவர் என்று தெரியவருகின்றது. கல்வி கற்காதவர்கள் என்றுமே சமுதாயத்தின் உயர்ந்த நிலையில் அறியப்படமாட்டார்.

இவ்வாறு வள்ளுவப் பெருந்தகையின் ஒவ்வொரு திருக்குறள் பாவும் மக்கள் எவ்வாறு இந்த உலகத்தில் வாழ வேண்டும் என்று சொல்லுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி விபுலானந்தர்

தர்ஷனன் சக்திதரன்
தரம் 4



சுவாமி விபுலானந்தர் இலங்கையில் உள்ள காரைதீவு என்னும் ஊரில் 1892 ஆம் ஆண்டு பிறந்தார். இவரின் தாயார் பெயர் கண்ணம்மை, தந்தையார் பெயர் சாமித்தம்பி. இவரது இளமைப் பெயர் மயில்வாகனன். இவர் இயல், இசை நாடகம் எனும் முத்தமிழிற்குப் பெரும் பணி ஆற்றியவர். இதனால், இவர் முத்தமிழ் வித்தகர் என்னும் பெயர் பெற்றார். சுவாமி விபுலானந்தர் ஆசிரியராக அதிபராக, பேராசிரியராகப் பணிபுரிந்து தமிழிற்கும், சமயத்திற்கும் பெருந்தொண்டாற்றினார். இவர் யாழ்நூல், மதங்க சூளாமணி என்னும் நூல்களை இயற்றினார். சுவாமி விபுலானந்தர் இலங்கையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய தமிழ்ப்பகுதிகளில் இராமகிருஷ்ண சங்கத்தின் பெயரில் பல பாடசாலைகளை அமைத்தார். இவரது சமாதி மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் அமைந்துள்ளது.

## முருகப் பெருமானும் கந்தசட்டியும்

ஆருதி அகிலேஸ்வரன்
தரம் 5

முருகனைப் பற்றி நாம் அறிவோம். அவர் மிகவும் அழகும் அன்பும் உடையவர். என்றும் இளமையானவர். அறியாமையை நீக்கி, அறிவை வளர்ப்பவர். முருகனை விசேடமாக வழிபடும் நாள் கந்தசட்டி விரதமாகும். இவ்விரதம் ஐப்பசி மாதம் வரும். இவ்விரதம் ஆறு நாட்கள் கொண்டாடப்படும். சிலர் உபவாசம் இருப்பர். சிலர் ஒரு நேரம் உணவு அருந்துவார்கள். ஆறாவது நாள் சூரன்போர் விழா நடைபெறும். ஏழாவது நாள் பாரணை செய்து விரதத்தை நிறைவுசெய்வர். முருகன் கோவில்களில் கந்தசஷ்டி சிறப்பாகக் கொண்டாடப்படும். முருகன் வள்ளி, தெய்வயானையுடன் வீற்றிருந்து எமக்கு அருள் செய்கின்றார். அவர் தேவர்கள் துயர் துடைத்து, அசுரர்களை அழித்தவர். தன்னை வணங்குபவர்களுக்குத் துன்பத்தை நீக்கி, இன்பத்தை அருள்வார். நாமும் முருகப் பெருமானை வணங்கி அருள்பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேச்சரம்

கோபிசன் வினோதரூபன்
ஸ்ரீவரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தலைநகரமான திருக்கோணமலையில் உள்ள ஒரு சிவன் கோவில் ஆகும். இலங்கையில் உள்ள இரண்டு தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் இதுவும் ஒன்று. கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழந்த திருஞானசம்பந்தர் இக் கோவிலின் மீது ஒரு பதிகம் பாடியுள்ளார். வருடாவருடம் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவனின் விக்கிரகம் ஊர்வலம் வருவதும் குறிப்பிடத் தக்கது. இது இலங்கையின் புகழ் பெற்ற தலங்களில் ஒன்றாகும். உலகில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் மிகப் பழமையான இவ்வாலயத்தை இலங்கையை ஆண்ட மனு மாணிக்கராஜா என்ற மன்னன் கி. மு. 1300ம் ஆண்டிற்கு முன்னரே கட்டுவித்தான் என்று சான்றுகள் கூறுகின்றன.

# தைப்பொங்கல்

சுருதி பாலகுமார்
ஸ்ரீவரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

தை மாத முதல் திகதியில் உலகெல்லாம் உள்ள தமிழர்களால் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. அதிகாலையில் முற்றத்தில் நீர் தெளித்து மெழுகி மாவினால் அழகிய கோலமிட்டு அதன் நடுவில் பொங்கல் பானையை அடுப்பில் வைத்துப் பொங்குவார்கள். பால் பொங்கி கிழக்குத் திசையில் விழும்போது அனைவரும் "பொங்கலோ பொங்கல்" என்று சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தி வணங்குவார்கள். பட்டாசு கொழுத்தி மகிழ்வார்கள். பிள்ளைகள் பெற்றோரிடமும், பாட்டா, பாட்டியிடமும் ஆசீர்வாதம் பெறுவார்கள். பொங்கலைச் சூரியனுக்குப் படைத்து தேவாரம் பாடி வணங்குவார்கள். பின்பு பொங்கலைத் தாமும் உண்டு உற்றார் உறவினர்களுக்கும் கொடுத்து மகிழ்வார்கள். தமிழர்கள் ஆகிய நாம் எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துபவர்கள். நாம உண்ணும் முன்பு சிறிதளவு உணவை இலையில் வைத்து காகம் போன்ற பறவைகளுக்கும் கொடுப்போம். அதைப் பறவைகள் உண்ட பின்பு அணில் போன்ற சிறிய விலங்குகளும் உண்டு மகிழ்வடையும். கோலத்தில் உள்ள மாவை இடுவது எறும்பு போன்ற சிறிய உயிரினங்கள் உண்பதற்காக ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருந்தோம்பல்

அஷ்வின் வசந்தராசன்
தரம் 6, ஸ்ரீவரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

தமிழர் பண்பாட்டில் முக்கியமான பண்புகளில் ஒன்று விருந்தோம்பலாகும். விருந்தோம்பல் என்றால் நம் வீட்டுக்கு வரும் புதியவர்களுக்கு உணவு பரிமாறுதல் என்று பொருள்படும். விருந்த என்றால் புதுமை என்றும் பொருள். திருக்குறளில் விருந்தோம்பல் என்னும் அதிகாரமும் உண்டு.

விருந்தோம்பலின் போது எமது வீட்டுக்கு வரும் உறவினர்கள், நண்பர்களை இனிய முகத்துடன் எழுந்து நின்று வரவேற்க வேண்டும். அவர்களுடன் இனிமையாக பேச வேண்டும். அதாவது உணவு பரிமாறும் போது அறுசுவை உணவுடன் தமது அன்பையும் சேர்த்து பரிமாறுதல் வேண்டும். விருந்தினரை மகிழ்விக்கக் கூடிய வகையில் இனிய முகத்துடனும், பண்புடனும் பரிமாறுதல் வேண்டும்.

எமது குடும்பங்களில் கணவன் மனைவி இருவருக்குமே உரிய கடமையாகும். இல்லறம் நல்லறமாக விளங்க பெண்கள் இப்பண்பை பேணிக் காக்க வேண்டும். விருந்தினர் மனம் நோகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். விருந்தினர் போகும் போது வாசல்வரை வந்து அவர்க்ளை வழி அனுப்புதல் தமிழர்களுக்கே உரிய சிறந்த பண்பாகும். எமது வாழ்வில் நாமும் இச்சிறந்த பண்பினைக் கடைப்பிடித்து வாழ்வோம்.

## சிவபெருமான்

வர்ஷினி ரமேஸ்
ஸ்ரீவரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

சிவபெருமான் எமது முழுமுதற் கடவுள். அவர் எங்கும் இருப்பவர். எல்லாம் அறிபவர். எல்லாம் வல்லவர். சிவபெருமானின் சக்தி உமாதேவியார். சிவனும் சக்தியும் பிரிக்க முடியாதவை. உலகில் உள்ள உயிர்கள் அனைத்துக்கும் சிவபெருமானே தாயும் தந்தையும் சுற்றமும் துணையுமாக உள்ளார். நாம் கடவுளின் குழந்தைகள். உயிர்கள் மீத நாம் அன்பு செலுத்த வேண்டும். சிவபெருமான் அதனையே விரும்புகிறார். நாம் வாழும் இந்த உலகம் சிவமயம் ஆனது. எல்லாம் சிவமயமே என நாம் நினைத்தல் வேண்டும். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. அன்பும் சிவமும் ஒன்று என்றார் திருமூலர். இறைவன் நமக்கு அற்புதமான உடலைத் தந்துள்ளார். அவர் படைத்த உலகத்தைக் கண்களால் பார்க்கின்றோம். அவர் புகழைக் காதால் கேட்கிறோம். அவரது கோயில்களைக் கால்களால் வலம் வந்து வணங்குகிறோம். அவர் படைத்த உயிர்களிடத்து நாம் அன்பு செலுத்துவோம். சிவபெருமானை பல பெயர்கள் கொண்டு அழைப்பர். சிவன், சங்கரன், மகேஸ்வரன், நடராசன், உருத்திரன் எனப் பல நாமங்களால் அழைப்பர்.

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமா தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. (திருமூலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி

காவியா இராசகுமார்
ஸ்ரீவரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

நமது தாய்மொழி தமிழ்மொழி. தமிழ்மொழி பிறமொழிகளின் துணையின்றி இயங்கக் கூடிய செம்மொழி. திராவிட மொழிகளின் மூலமொழி தமிழ்மொழி. மேற்கத்தைய அறிஞர்கள் பலர், தமிழ் மொழியின் சிறப்புகள் கண்டு விளந்துள்ளனர். திராவிட மொழிகளை ஆய்வு செய்த அறிஞர் கால்ட்வெல் ஆவர். இவர் தமிழ்மொழி திராவிட மொழிக் குடும்பத்திற்கு மூலமொழி என நிரூபித்துள்ளார். தமிழ்மொழி ஒரு பண்பட்ட மொழி என அறிஞர்கள் கூறுகின்றனர். தமிழ்மொழியில் உள்ள எழுத்துக்கள், சொற்கள், வாக்கிய அமைப்புக்கள் கற்றுக் கொள்வதற்கு மிகவும் எளிமையாக அமைந்துள்ளது. தமிழராகிய நாம் எமது தாய்மொழியை புலம்பெயர்ந்த நாடுகளிலும் வளர்க்க வேண்டும்.

## தமிழ்மொழி கற்றலின் அவசியம்

திருநீறன் ஸ்ரீபதி பாலமுரளீதரன்
ஸ்ரீவரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

தமிழ் எங்கள் எல்லோருக்கும் தாய்மொழி ஆகும். மொழியானது எங்கள் தாய்நாடு, உறவுகள், கலாச்சாரம் என்பவையோடு பிணைந்துள்ளது. தமிழ் பழம்பெரும் மொழி. ஆதலால் நிறைய நூல்கள் மற்றும் வரலாறுகள் உள்ளன.

எங்களுக்கு மொழி தெரியாவிடில் அவைகளை அறிய முடியாது போய்விடும். எமது பெற்றோர் இங்கு புலம் பெயர்ந்து வந்ததால் நாம் இங்கு பிறந்தோம். தாய் நாட்டில் எங்கள் எல்லோருக்கும் இரத்த உறவுகள் உள்ளனர். எஞ்சிய வாழ்வில் அவற்றிற்கு மதிப்பளித்து உறவு, உணர்வு பேணி மகிழ மொழி தெரியவேண்டும். ஆதலால் தான் கனடாவில் தமிழ் மொழி கற்றல் அவசியமாகும்.

பாடசாலையில் ஆங்கிலத்தில் கற்று ஆங்கிலத்தில் கதைக்கிறோம். வீட்டில் கூட சகோதரர்கள், நண்பர்களிடத்தில் ஆங்கிலத்தில் தான் கதைக்கின்றோம். இங்கு பிறந்த எம்மில் ஒரு பகுதியினரே தமிழ் கற்கிறோம். நாம் இரண்டாவது மொழியாக பிரெஞ்சு மொழியைக் கற்கிறோம்.

என்னைப் பேன்றோர் இங்கு உயர்கல்வி கற்று, நல்வாழ்வு அமைத்து, தாய் மொழியை மறப்பது எதிர்காலத்தில் எமது வேர்களைத் தேடித் திரிய வழி வகுக்கும். அது தாய்நாடு, சரித்திரங்கள், உறவுகள் உணர்வுகளைக் கைவிடுவதாகும். ஆதலால் கனடாவில் தமிழ்மொழி கற்றல் என்பது அவசியம் ஆகும். இன்னும் தமிழ் மொழியினை எழுத, வாசிக்க கதைக்க கற்பது மிக அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை விளக்கீடு

கிருத்திகா ராகவன்
ஸ்ரீவரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

கார்த்திகை விளக்கீடு நமது சமயம் சார்ந்த பண்டிகைகளில் ஒன்று ஆகும். பண்டிகைகள் என்றால் சிறுவர்களுக்கு நல்ல கொண்டாட்டம். புத்தாடை அணிந்து, ஆலயங்களுக்குச் சென்று, சுவையான பண்டங்களை உண்டு, உறவினர்களது வீடுகளுக்குச் சென்று, நல்வாழ்த்துக்ளைக் கூறி, விருந்தினர்களை உபசரித்துப் பண்டிகைகள் கொண்டாடப்படுகிறது.

கார்த்திகை மாதத்தில் வரும் திருக்கார்த்திகை தீபத் திருநாளாகக் கொண்டாடுவோம். இதைக் கார்த்திகை விளக்கீடு என்பர். இந்நாளில் சைவ மக்கள் ஆலயங்களிலும், வீடுகளிலும் விளக்கேற்றி கடவுளை வணங்குவர். இறைவனை சோதிவடிவில் வழிபடுதலையே இது குறிக்கிறது.

முருகன் ஆலயங்களில் கார்த்திகை மாதத்தில் வரும் திருக்கார்த்திகை என்ற நாளில் தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்வர். தினைமாவும் தேனும் கலந்து மாவிளக்குப் போடுவர். அதில் நெய் விட்டுத் தீபம் ஏற்றுவர். முருகன் ஆலயங்களில் நடைபெறும் தீப வழிபாட்டினைக் குமராலயதீபம் என அழைப்பர்.

தமிழ் நாட்டில் தீபவிழா என்றொரு விழா நடைபெறும். அங்குள்ள திருவாண்ணாமலை மலையுச்சியில் தீபம் ஏற்றப்படும். இது பிரம்மா, விஷ்ணு இருவரும் அடிமுடி தேடிய வேளையில் இறைவன் சோதி வடிவாய் நின்றதைக் குறிக்கும் என்பர். சிவாலயங்களிலும் ஏனைய ஆலயங்களிலும் வீடுகளிலும் சர்வாலய தீப தினத்தன்று தீபங்கள் ஏற்றி வழிபடுவர். விஷ்ணு ஆலயங்களில் ஏற்றப்படும் தீபம் விஷ்ணு ஆலயதீபம் எனப் பெயர்பெறும்.

கார்த்திகை விளக்கீடு நாளன்று சொக்கப்பானை எரிப்பர். கமுகு மர ஓலைகளால் கூடு அமைத்து அதன் நாலுபுறமும் அகல் விளக்கு ஏற்றுவர். அக்கினி மூட்டிச் சொக்கப்பானைக் கொழுத்துவர். அது கொழுந்து விட்டு எரியும். அத்தீயை இறைவனின் சோதி உருவாகக் கருதி வழிபடுபவர். தீப ஒளியானது இருளை அகற்றுகின்றது. அதேபோன்று நமது மன இருளை அகற்றி அன்பு, கருணை ஆகிய தீபங்களை உள்ளத்தில் ஏற்ற வேண்டும். தீப ஒளி ஏற்றுவதன் உள்பொருள் இதுவே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைப்பொங்கல்

தர்ஷனா சக்திதரன்
வகுப்பு 4

தைப்பொங்கல் தை மாதத்தில் கொண்டாடப்படும். இது சூரியனுக்கும், உழவர்களுக்கும் நன்றி கூறும் நாளாகும். இது தமிழரின் பண்பாட்டு விழாவாகும். தைப்பொங்கல் அன்று முற்றத்தில் பொங்கி சூரியனுக்குப் படைத்து, நன்றியைத் தெரிவிப்பார்கள். பால் பொங்கிவரும்போது, "பொங்கலோ பொங்கல்" என்று மகிழ்வுடன் ஒலியெழுப்பி, பட்டாசு கொழுத்துவார்கள். தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் உழவருக்கு உதவும் மாட்டுக்கு "பட்டிப் பொங்கல்" கொண்டாடப்படும். தைப்பொங்கல் விழா நன்றி செலுத்துதல், பெரியாரை மதித்தல், பகிர்ந்து உண்ணல் போன்ற பண்பாடுகளை வெளிப்படுத்துகின்றது.



## எனது சமயம்

அஸ்வின் அகிலேஸ்வரன்
தரம் 3

எனது சமயம் சைவசமயம் ஆகும். எனது சமயம் மிகவும் பழமை வாய்ந்தது. நாங்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வணங்குவோம். காலையும் மாலையும் கடவுளை வணங்க வேண்டும். விபூதி, உருத்திராக்கம் என்பன சிவ சின்னங்களாகும். தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி, தீபாவளி என்பன மக்கள் கொண்டாடும் சைவ சமயக் கொண்டாட்டங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 Kids Contest Winners

## Malalaikal

**Pannisai**

1st Place Maanasa Sethuraman
2nd Place Shuruthy Ganeeswaran
3rd Place Uthaya Nithakaran

**Speech**

1st Place Uthaya Nithakaran
2nd Place Shuruthy Ganeeswaran
3rd Place Vithuna Pathmanathan

## Aarampam

**Pannisai**

1st Place Mathanki Thirugnanasambanthar
2nd Place Pavishalini Ramachandran
3rd Place Elinie Elilthas

**Speech**

1st Place Saathana Premananth
2nd Place Shimmahi Rajakumar
3rd Place Aburvan Mohan

## Group 1

**Pannisai**

1st Place Athvika Gagendraprasad
2nd Place Aboorvaa Vasuthevan
3rd Place Anushan Kidnapillai
3rd Place Asven Lingeswaran

**Speech**

1st Place Kaaviya Nithakaran
2nd Place Aaravalan Thivankaran
3rd Place Aathirai Rajamohan

## Group 2

**Pannisai**

1st Place Swadana Devadas
2nd Place Sahana Premananth
2nd Place Priyanki Kulenthirarasa
3rd Place Agshayaa Suresh

**Speech**

1st Place Shajilaasha Rameshkumar
2nd Place Arathanie Rajakumar
3rd Place Swadana Devadas

## Group 3

**Pannisai**

1st Place Durga Sivakumar
2nd Place Thulasi Thavarajah
3rd Place Yathavi Prasshanna
3rd Place Dilaksha Sutharjan

**Speech**

1st Place Thulasi Thavarajah
2nd Place Syayandan Kaneshalingam
3rd Place Suevetha Ketharan

## Group 4

**Pannisai**

1st Place Asvin Vasuthevan
2nd Place Shaaranki Kulenthirarasa
3rd Place Kuberaka Kumareswaran

**Speech**

1st Place Kuberaka Kumareswaran
2nd Place Shaaranki Kulenthirarasa
3rd Place Jenakan Senthuran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Group 4 (cont.)

Saiva Knowledge
1st Place Jenakan Senthuran
2nd Place Kuberaka Kumareswaran
2nd Place Dharrshanan Sakthitharan
3rd Place Shaaranki Kulenthirarasa

Group 5

Pannisai
1st Place Karthik Sivakumar
2nd Place Vithiya Vijayakumar
3rd Place Aishvini Partheepan

Speech
1st Place Dulasi Yogeswaran
2nd Place Karthik Sivakumar
3rd Place Vithiya Vijayakumar
3rd Place Theebana Thavarajah

Saiva Knowledge
1st Place Vithiya Vijayakumar
2nd Place Sankar Jeyachandran
3rd Place Theebana Thavarajah

Group 6

Pannisai
1st Place Aarabie Rajamohan
2nd Place Dushaan Ketharan
2nd Place Anuram Thirumoli
3rd Place Abera Senathirajah
3rd Place Luxshmi Nageswaran

Group 6 (cont.)

Speech
1st Place Bavisha Thavarajah
2nd Place Danushkanth Yogeswaran
3rd Place Dushaan Ketharan

Saiva Knowledge
1st Place Gajaananan Sakthitharan
2nd Place Danushkanth Yogeswaran
2nd Place Bavisha Thavarajah
3rd Place Pooranee Amarasenapathy

Group 7

Pannisai
1st Place Sujany Vythieswaran
2nd Place Arruny Ravindran
3rd Place Thushanth Sriskandarajah

Speech
1st Place Nishanthi Kaneshalingam
2nd Place Thushanth Sriskandarajah

Saiva Knowledge
1st Place Nishanthi Kaneshalingam
2nd Place Thushanth Sriskandarajah
3rd Place Arruny Ravindran

Group 8

Pannisai
1st Place Nirahulan Puvanenthira
2nd Place Umaiyahl Nageswaran

Saiva Knowledge
1st Place Nirahulan Puvanenthira

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிக் கலசம்

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்தும், வணக்கமும் உரித்தாகுக!

''நன்றி மறப்பது நன்றன்று'' என்பது வள்ளுவர் வாக்கு.

- 2015 ஆம் ஆண்டு ''சைவநீதி'' புதுமையுடனும், பொலிவுடனும் மலர, தரமான ஆக்கங்கள் தந்துதவிய பெரியோர்களுக்கும், மாணவர்களுக்கும்;
- வருடாவருடம் புதிய புதிய அட்டைப் படங்களை அழகுற வடிவமைத்துத் தரும் சித்திரத்தில் கைதேர்ந்த எமது நிர்வாக உறுப்பினர் திரு.கண்ணன் அவர்களுக்கும்,
- மிகக் குறுகிய காலத்தில் கணனி அச்சுப் பதித்துத்தந்த திருமதி கௌரி சதானந்தன் அவர்கட்கும்,
- புத்தக வடிவில் உருப்பெற வைக்கும் விவேகா அச்சகத்தினருக்கும்,
- சைவநீதி மலரின் செலவினங்களுக்கு உதவிசெய்யும் முகமாக விளம்பரங்கள் தந்துதவிய அனைத்து உள்ளங்களுக்கும்;
- முதற் பிரதிகளை வெளியீட்டு விழாவில் பெற்றுச் சிறப்பித்தவர்களுக்கும்,
- சைவநீதி மலர் வெளிவர பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கிவரும் இந்துமாமன்ற உறுப்பினர்களுக்கும்,
- தாயகத்திலிருந்தும் வேறு பல இடங்களிலிருந்தும் பல சிரமங்களுக்கும் மத்தியில் கட்டுரைகளை எழுதியும், சேகரித்தும உரிய நேரத்தில் அனுப்பிவைத்தவர்களுக்கும்;
- எமது மன்றத்தின் சார்பில் நடாத்தப்படும் பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, சமய அறிவுப் போட்டி ஆகியவற்றில் பங்குபற்றிய மாணவர்களுக்கும், அவற்றிற்கு ஊக்கமளித்த பெற்றோர்களுக்கும்,
- சைவநீதியை வாங்கி, வாசித்து மகிழும் வாசகர்களுக்கும், வாசக வட்ட ஆய்வினருக்கும்,
- மற்றும் மன்ற வளர்ச்சியை விரும்பும் அனைவருக்கும்.

**எங்கள் இதயம் நிறைந்த நன்றி உரித்தாகட்டும்!**

**''நவில்தொறும் நூல் நயம்போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு''**

**வணக்கம்.**

**சைவநீதி - 2015**
**கனடா இந்து மாமன்றம்,**
**2015 தை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




We're proud to support initiatives that help make our community a better, safer place for everyone.

Proud sponsor

the co-operators
A Better Place For You™

Home Auto Life Investments Group Business Farm Travel

**Vel Insurance Services Inc.**
**Senthooran Punithavel**
201-1265 Morningside Ave Scarborough, ON M1B 3V9
(416) 396-0707

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசை தொறும் சைவநீதி தேசுற்று வாழ்க! மேலும்
தீந்தமிழ் உலகமெங்கும் திருப்பொலிவுடனே வாழ்க!!
வாழிய! வையகம்


# Rainbow Village Dental Office

## சகல பல் வைத்திய சேவைகளும் கிளிப்போடுதலும்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல்
பல் வைத்திய சிகிச்சையில்
அனுபவம் பெற்ற உங்கள் நம்பிக்கைகுரிய

## டாக்டர். அ. சண்முகவடிவேல்

குடும்ப பல் வைத்தியர்

## DR. A. Shan Shanmugavadivel

General Dentistry including

•ORTHODONTICS •IMPLANT DENTISTRY •ROOT CANAL THERAPY •WISDOM TOOTH EXTRACTIONS
•CEREC CROWNS & INLAYS



திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில்

**Tel: (416) 266-5161**

**Rainbow Village Dental Office**
2466 Eglinton Ave. East, Unit 7
Scarborough, Ontario M1K 5J8
(near Kennedy Subway)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org